# மகாஜனர்கள்



2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனர்கள் 95

1982 தொடக்கம் 95 வரை மாணவர்களின்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உனை நீ அறி

Know thyself



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கங்கள்

# மலரின் உள்ளே...


03 நூல் பற்றி
09 கல்லூரிக்கீதம் & பாடசாலை சின்னம்
11 கொடிக்கீதம் & பாடசாலை கொடி
13 ஸ்தாபகர் திரு தெ . துரையப்பாபிள்ளை
15 மகாஜன சிற்பி திரு தெ. து. ஜெயரத்தினம்
17 எமது காலத்து நான்கு அதிபர்கள்
19 1982 – 95 காலவரிசையில் நமது கல்லூரி
22 பாடசாலை முகப்பு புகைப்படம்
24 சமகாலத்து அதிபர் திரு. மணிசேகரன் அவர்களது வாழ்த்துரை
26 எமது காலத்து ஆசிரியர்கள்


**ஆசிரியர்களின் கட்டுரைகள்**


37 அரை சகாப்த காலமும் ஆசிரியர் மாணவர் கோலமும் – திருமதி கோகிலா மகேந்திரன்
42 நினைவுகளுடன் கலந்த வாழ்த்துச் செய்தி – திரு. செல்லத்துரை சத்தியமூர்த்தி
46 திரும்பிப் பார்க்கின்றேன் – திரு. செல்லையா இராஜகுலேந்திரன்
48 மகாஜன மாதாவின் இடப்பெயர்வுகளும் 1995 க.பொ.த. உயர்தர மாணவர்களும் – திரு. பொன்னையா சுந்தரலிங்கம்
51 ஆசானாக என் ஆசிகள் – திரு. நடராஜா காளிதாசன்
52 காலத்தை வென்றவர்கள் – திருமதி சாந்தி கரன்
53 தன்னிலை குலையாத மகாஜனா – திரு. சிற்றம்பலம் கணேசலிங்கம்
56 A/L 95 மாணவர்களின் ஒன்றுகூடல் மலருக்கான வாழ்த்துக்கள்... – திரு. சுப்பிரமணியம் சயந்தன்
58 அற நெறிக் கல்வி – திருமதி அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்
60 பணிக்கோர் கணிப்பு – செல்வி விமலாதேவி நாகேஸ்வரன்
61 ஆசிரியர் சேவையில் நான் சந்தித்த கல்லூரி – திரு. ஜெகநாதன் குமாரதேவன்
63 A Trip Down Memory Lane – திருமதி சந்திராதேவி இரத்தினம்
66 My first Best class at Mahajana – திருமதி இந்திரமதி இராமச்சந்திரா


**மாணவர் ஆக்கங்கள்**


70 மகாஜனாவுடன் பயணித்த நாட்கள் (1982 தொடக்கம் 1995 வரை) – உமா தம்பிஐயா
86 மகாஜனாவின் ஒளி விளக்கு எங்கள் அதிபர் அமரர் கதிர்காமத்தம்பி நாகராஜா – முருகையா கிரிதரன்
89 என் நினைவில் நீங்கா இசை மேதைகள் – பாமினி மகிந்தன்
94 நினைவில் நீங்காதவை – யமுனா நந்தகுமார்
97 மகாஜனா தந்த பாடம் – கந்தரட்ணம் இராதேயன்
103 மகாஜனாவுடனான எனது பயணம் ... – தம்பிராசா பிரகாசன்
109 "வானமே எல்லை" – மிதுலாகரன் பாலசிங்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

114 அடித்தளம் / அத்திவாரம் (Foundation) – தங்கராஜா பகிதரன்
117 ஆசிரியர்களும் நாமும் – ஒரு மீள் பார்வை – தர்சினி எமில்டன்
122 செல்லையா தியாகராஜா 1927 – 2019 ஓவிய ஆசிரியர், சாரண ஆசிரியர் – ஒழுங்கமைப்பு VP. வாசுகன்
127 எமது காலத்தில் சரணியம் 1982 – 95
129 நாகேந்திரம் போஜன் 1949–2011 வடமாகாண சாரண ஆணையாளர் – காலவரிசை ஒழுங்கமைப்பு: தங்கராசா கிருஷ்ணராஜா & VP. வாசுகன்
131 எனது கல்லூரி வாழ்வில் மறக்க முடியாத ஆசிரியப் பெருந்தகைகள் – சியாமளா செந்தில்நாதன்
134 என் வாழ்வின் அடித்தளம் – விஜயா சனாதனன்
136 மடத்தடியில் மகாஜனா – கௌசல்யா சூசைராஜா
140 மகாஜனாக் கல்லூரியின் நாடகப் பாரம்பரியம் – பொன்னுத்துரை பகீரதன்
142 ஆசிரியர் விநாயகரத்தினம் அவர்கள்... – தர்சினி எமில்டன்
145 பசுமையான நினைவுகள் – தயாசுகி பத்மநாதன்
147 என் நினைவில் நீங்கா ஆசான்கள் – சிவாஜினி கிரிதரன்
148 கல்லூரியில் ஒரு விடுதி – VP. வாசுகன்
152 பாடசாலை இல்லக் கொடிகள்
154 வலைப்பந்தாட்டத்தின் அறிமுகம் – ஜெயந்தி லம்போதரன்
159 விளையாட்டுத்துறை – சின்னையா சுபாஸ்கரன்
174 நானும் ஒரு மகாஜனன் – சந்திரராஜா ஜீவாகரன்
175 மகாஜனா வரைபடம் – இடப்பெயர்வு 95 மருதனார்மடம்
176 மருதனார்மட மகாஜனா ஓர் அனுபவப் பகிர்வு – வேலாயுதபிள்ளை செவ்வேள்குமரன்
180 மகாஜனாவின் இடப்பெயர்வு – தங்கராசா கிருஷ்ணராஜா
182 1993 காலப்பகுதியும் மாணவர்களின் நெறியாழ்மையும் 1995 ஆண்டு மாணவர்களுக்கு கிடைத்த வரபிரசாதமும். – சிவராசா பிரபாகரன்
184 நாமும் எமது இளவல்களும்! – 1994 உயர்தரப் பிரிவு மகாஜனர்கள்!
188 மகாஜன அன்னைக்கோர் வாழ்த்து
191 நினைவுகளின் நினைவுகள் – VP. வாசுகன்
200 பாடசாலைக்காக வாழ்நாளை அர்ப்பணித்தவர்கள்
201 பாடசாலைக்காக வாழ்நாளை அர்ப்பணித்து உயிர் நீத்த பணியாளர்கள்
202 மரணித்த 95ஆம் ஆண்டு மாணவர்கள்
204 நிதி விபரம்
207 நெறிப்படுத்துதல் குழு – மலர்க்குழு
208 மகாஜனர்கள் 95 மலரில்...
212 95ம் ஆண்டு மாணவர்கள் விபரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலர் வகுப்பு - 1982 தொடக்கம் உயர்தரம் 95 வரை காலப்பகுதிகளில் கல்வி கற்ற மாணவர்களின் நினைவலைகள்.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரந்துவாழும் எமது சக மாணவர்களினதும் எமது ஆசிரியர்களினதும் ஒரு கூட்டு முயற்சியின் வெளிப்பாடே இம்மலர். இளவயதினிலேயே உயிர் நீத்த சக மாணவர்களினதும் எம்மை ஆளாக்கி மகாஜனாவிற்கு பணிபுரிந்து காலமான எமது ஆசிரியர்களினதும் அதிபரவர்களினதும் நினைவுகளோடு ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்லூரிக் கீதம்

(ஜன காண மன என்ற மெட்டு)

ஜயஜய மாஜன ஜயசுப மாதா
ஜயஜய மாஜன ஜயகே

கல்லூரித் தாபகர் கல்விக் கலைஞன்
துரையப் பாபுகழ் துதிப்போம்
மாண்புறு மகனாம் மகாஜன சிற்பி
ஜயரத் தினம்பணி நினைவோம்

வில்லுறு விளக்கு வியன்மறை எழுத்து
விளங்கிடு தாமரை யுடையோம்
உனைநீ அறியென் றுரையை
நினைவுறு தொண்டிற் கண்டு
புனைமல ராகவே பெய்வோம்

வெல்லுக வெல்லுக மாஜன மாதா
வெல்லுக மாஜன தலைவர்
நல்காய் நல்காய் நல்காய்
நல்லறம் பொருளின்பம் நல்காய்
வெல்லுக மாஜன மாதா

புலவர் நா.சிவபாதசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொடிக்கீதம்

கொடி பறக்குது கொடி பறக்குது
கொடி பறக்குது பாரடா
கோல முற்ற கோலில் எங்கள்
கொடி பறக்குது பாரடா

சரணம்

தீர முற்றுத் திருவடைந்த
தெய்வ துரை யப்பரது
தீர்க்கமான தியான மதில்
தேறிவந்த மகாஜனாவின்
(கொடி)


மலர் மலிந்து மறையுரைத்து
மறுவிலாத சுடர் விரித்து
தவம் பொலிந்த மகாஜனாவைத்
தாங்கு கொடியின் தாள் பணிவோம்
(கொடி)

தன மளித்துத் தவம் மிகுந்து
தாவியாடும் கொடியிது
மன மகிழ்ந்து மலர்கள் தூவி
வாழி என்று வணங்குவோம்
(கொடி)


புலவர் நா.சிவபாதசுந்தரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஸ்தாபகர் திரு.தெ. துரையப்பாபிள்ளை 1872-1929


அதிபராகக் கடமையாற்றிய காலப்பகுதி 1910 -29



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மகாஜனா சிற்பி திரு. தெ. து. ஜெயரட்ணம் 1913-76

அதிபராகக் கடமையாற்றிய காலம் 1948-70

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Mr.P.Somasundaram
1980 - 1983



Mr. T. Shanmugasuntharam
1983 - 1984



Mr.V. Kanthaiya
1984 - 1985



Mr. K.Nagaraja
1985 - 1998

*எமது காலத்து அதிபர்களும் கடமையாற்றிய காலங்களும்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1982 - 95 காலவரிசையில் நமது கல்லூரி

1982 95ம் ஆண்டு மாணவர்களின் பாலர் வகுப்பு ஆரம்பம்..

1983 அதிபராக திரு.த.சண்முகசுந்தரம் பதவியேற்றல்.

1984

- அதிபராக திரு.வே.கந்தையா பதவியேற்றல்.
- கோவில் கும்பாபிஷேகம் ஆசிரியர் திரு.ச.விநாயகரத்தினம் அவர்களின் வழிகாட்டலில் நடாத்தப்பட்டது.

1985

- அதிபராக திரு.க.நாகராசா பதவியேற்றல்.
- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி: பழைய மாணவர் சங்க ஆண்டுவிழா 1985/86
- மாவட்டச் சாரணர் கிளைச்சங்கத்தின் 5ஆவது சாரணர் பாசறை விழாவில் 1ஆம் இடத்தை பெற்றது.
- திரு.செ. தியாகராஜா குழுச் சாரணத் தலைவர் தலைமையில் பேடன் பவல் தினம் கொண்டாடப்பட்டது.
- 3 சாரணர் ஜனாதிபதி விருது பெற்றனர்.

1986

- நடராசப்பெருமானுடன் மாணிக்கவாசகர் சிலை வைக்கப்பட்டது.
- Mahajana College: Scout Golden Jubilee 1936-1986
- ஆறுசாரணர்கள் ஜனாதிபதி விருது பெற்றனர்.

1987

- பழைய மாணவர் சங்கம் பிரித்தானியாவில் உருவாக்கப்பட்டது.
- மகாஜனன் 1987–1997 – பாடசாலை மலர் வெளியீடு யா/ மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐக்கிய இராச்சியம்)

1988

- தேசிய பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட முன்மொழியப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.
- மகாஜனாக் கல்லூரியின் இலக்கியப் பாரம்பரியம் – நூல் வெளியீடு ஆசிரியர் நா. சண்முகலிங்கன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1989

- அகில இலங்கை ரீதியில் 100 மீ ஓட்டம் முதலாம் இடம் செல்வி. தில்லானா சுமங்கலியா
- பழைய மாணவர் சங்கம் கனடாவில் உருவாக்கப்பட்டது
- ஈழத்துத் தமிழ் நாடக மரபில் மகாஜனக் கல்லூரி – நூல் வெளியீடு ஆசிரியர் சி. மௌனகுரு
- மகாகவியின் 'புதியதொரு வீடு' நூல் வெளியீடு ஆசிரியர் – மஹாகவி உருத்திரமூர்த்தி
- சாரணர் பாசறை விழாவில் முதலாம் இடத்தைப் பெற்றது.

1990

- அகில இலங்கை ரீதியில் சகல வசதி களும் கொண்ட பாடசாலையாகத் தரமுயர்த்தப்பட்டுள்ள 100 பாடசாலைகளில் மகாஜனவும் ஒன்றாகத் தெரிவு செய்யப்பட்டது
- வடமாகாணத்தில் தெரிவு செய்யுப்பட்ட 3 பாடசாலைகளில் எமது பாடசாலை முதலிடம் பெற்றது.
- இந்து கலாசார அமைச்சு நடாத்திய சமய பேச்சு, கட்டுரை, பண்ணிசை போட்டிகளில் 6 தங்கப்பதக்கங்களை பெற்றது வழிகாட்டியாக அமைந்தவர் ஆசிரியர் திரு.ச.விநாயகரத்தினம் ஆவார்.
- விகாரைமகாதேவி பூங்காவில் நடைபெற்ற சாரணர் ஜம்போறியில் எமது சாரணர்கள் கலந்துகொண்டனர்.
- போர்ச் சூழலினால் பாடசாலை அருணோதயக்கல்லூரிக்கு இடம் பெயர்ந்தது

1991

- பழைய மாணவர் சங்கம் பிரான்ஸ்இல் உருவாக்கப்பட்டது.
- பாடசாலை பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கு இடம் பெயர்ந்தது.
- 4 சாரணர்கள் ஜனாதிபதி விருதினைப் பெற்றனர்.

1992

- க.பொ.த உயர்தர பெறுபேற்று அடிப்படையில் 30 தலை சிறந்த பாடசாலைகளில் ஒரு பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டது.
- செல்வி. வா.தமிழினி கணிதத்துறையில் 4A எடுத்து யாழ்மாவட்டத்தில் 2ம் இடம் பெற்றார்.

1993

- க.பொ.த உயர்தர பெறுபேற்று அடிப் படையில் 20 தலை சிறந்த பாடசாலைகளில் ஒரு பாடசாலையாகத் தெரிவு செய்யப்பட்டதுடன் மாவட்டத்துள் 5 பாடசாலைகளில் ஒன்றாகவும் தெரிவு செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மகாஜனன் 1993 – பாடசாலை மலர் வெளியீடு யா/ மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (பிரான்ஸ்)....
- Mahajana classes are conducted at Kondavil Niru (private) Tuition Centre
- வருடாந்த சாரணர்பாசறை விழாவில் 1ஆம் இடம்

1994

- கொழும்பு பழைய மாணவர் சங்கம் மீளமைப்பு செய்யப் பெற்றது.
- மருதனார்மடத்தில் கொட்டகை அமைத்து பாடசாலை இயங்கத் தொடங்கியது.
- தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் Open Day.
- மகாஜனன் 1994 – பாடசாலை மலர் வெளியீடு – யா/ மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (கனடா)
- சாரணப் பாசறை விழாவில் 1ஆம் இடம்

1995

- 57 மாணவர்கள் பல்கலைக்கழகம் தெரிவாயினர்.
- மகாஜனன் 1995 – பாடசாலை மலர் வெளியீடு யா/ மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (பிரான்ஸ்)
- யா/ மகாஜனக் கல்லூரி: மகாஜன தீபம் சிறப்பு மலர்
- யாழ்ப்பாணத்தை விட்டு வெளியேறியமை

*மகாஜன மலர்கள், இணையத்தளங்களில் இருந்து*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்லுரி பற்றோடு செயல்படும்
1992 O/L 1995 A/L பிரிவு பழைய மாணவர்கள்

மகாஜனா அன்னைக்கு உதவி செய்யவேண்டும் என்ற ஆசை கொண்டு செயல்பாட்டுக் கொண்டிருக்கும் இந்த பழைய மாணவ அணியின் ஒன்றுகூடல் சிறக்க கல்லூரி அதிபர் என்ற வகையில் எனது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்,

இவர்கள் தமது அணியின் 45 வது அகவை ஆண்டை பூர்த்தி செய்தமையை மகிழ்ந்து கொள்ளவும் தமது கல்லூரிகால செயட்படுகளை மீட்டுப் பார்க்கவும் ஒன்று கூடுகின்றமை சிறப்புக்குரியதாகும் .தமது கல்லுரிகால நிகழ்வுகளை திரும்பிப்பார்க்கும் வகையில் ஒரு சஞ்சிகையை தயாரித்து வழங்குவது பாராட்டுக்குரியது .

இந்த அணியினர் கல்லுரியை நோக்கி தமது உதவி கரங்களை நீட்டியிருப்பதனை நினைவு கூருகின்றேன்.பழைய மாணவர் சங்கங்களுக்கு அப்பால் படித்த வகுப்பு அணிகளாக ஒன்று கூடுவதும் உதவிகள் புரிவதும் தக்காலத்தில் அதிகரித்து வருகிறது . இவர்கள் அணிகளாக ஒன்று சேர்வதுடன் தங்கள் தங்கள் நாடுகளில் இருக்கும் எமது கல்லூரி பழைய மாணவர் சங்கங்களிலும் அங்கத்துவதைப் பெற்று பழைய மாணவர் சங்கங்களையும் பலப்படுத்த வேண்டும் என இவ்விடத்தில் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

இந்த ஒன்று கூடல் சிறக்கவும் சஞ்சிகை சிறந்த முறையில் அமையவும் கல்லுரியில் குடிகொண்டிருக்கும் சிவகாமி சமேத ஆனந்த நடராஜ பெருமானை வேண்டி , எனது வாழ்த்துரையா நிறைவு செய்கின்றேன்.

அதிபர் திரு. மங்களம் மணிசேகரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# J/Mahajana College Tellippalai

T.P 021 321 4004
021 205 9293

E.Mail :jayamahajana2010@gmail.com
WEH : WWW.Mahajana College.lk


24.06./2022..

Principal

கல்லூரிப் பற்றுடைச் செயற்பாடும்.

1992 O/L - 1995 A/L பிரிவு பழைய மாணவர்கள்

மகாஜனா அன்னைக்கு உதவி செய்ய வேண்டும் என்ற ஆசை கொண்டு செயற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த பழைய மாணவ அணியின் இன்று நடைபெறும் இந்நிகழ்வுக்கு கல்லூரி அதிபர் என்ற வகையில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இவர்கள் தமது அணியின் 45வது அகவை ஆண்டை பூர்த்தி செய்வதையிட்டு மகிழ்ந்து கொள்வதும் தமது கல்லூரிக் கால செயற்பாடுகளை மீட்டுப் பார்க்கவும் இன்று கூடுகின்றமை சிறப்புக்குரியதாகும். தமது கல்லூரிக்கால நினைவுகளை இரைமீட்டிப் பார்க்கும் வகையில் ஒரு சஞ்சிகையை வெளியிட்டு வைப்பது பாராட்டுக்குரியது.

இந்த அணியினர் கல்லூரியை நோக்கி தமது உதவிக்கரங்களை நீட்டியிருப்பதனை நினைவு கூருகின்றேன். பழைய மாணவர் சங்கங்களுக்கு அப்பால் பழக்க வகுப்பு அணிகளாக இன்று கூடுவதும் உதவிகள் புரிவதும் தற்காலத்தில் அதிகரித்து வருகின்றது. இவ்வாறான அணிகளாக இன்று செயற்படும் நீங்கள் காலத்தில் இருக்கும் எமது கல்லூரி பழைய மாணவர் சங்கங்களுடனும் இணைந்து பழைய மாணவர் சங்கங்களையும் பலப்படுத்த வேண்டும். என இவ்விடத்தில் அன்புரிமையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.


இந்த இன்று நடைபெறும் நிகழ்வும் சஞ்சிகை சிறந்த முறையில் அமையவும் கல்லூரியில் குடிகொண்டிருக்கும் ஞான வைரவ பெருமானை வேண்டி, எனது வாழ்த்துக்களை நிறைவு செய்கின்றேன்.

(signature) 24/06/2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது காலத்து ஆசிரியர்கள்



திரு. அமிர்தலிங்கம்
வாமதேவன்



திருமதி ஆனந்தி
சிவஞானசுந்தரம்



திருமதி அன்னபரிபூரணம்
ஞானேஸ்வரன்



திருமதி அருள்நாயகி
சண்முகரட்ணம்



திரு. பாலகிருஷ்ணர்
இராஜசேகரன்



திருமதி பாலசுந்தரி
வாமதேவன்



செல்வி டெய்சி
தெய்வநாயகி போல்



திருமதி இந்திரமதி
இராமச்சந்திரா



திரு. ஜெகநாதன்
குமாரதேவன்



திருமதி ஜெயகௌரி
பாபு



திருமதி கல்யாணி
விக்கினேஸ்வரமூர்த்தி



திருமதி கனகரத்தினம்
அப்பாத்துரை



திரு. கனகசபை
காராளசிங்கம்



திரு. கனகசபாபதி
தாமோதரம்பிள்ளை



திரு. கனகசுந்தரம்
புவனச்சந்திரன்



திரு. கணபதிப்பிள்ளை
முத்துலிங்கம்




திருமதி யாழினி
ஞானபரன்



திரு. கந்தையா
யோகலிங்கம்



திரு. கந்தையா
மயில்வாகனம்



திரு. கார்த்திகேசு
சுப்பிரமணியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திருமதி கேதீஸ்வரி
தியாகராஜா


திருமதி கோகிலா
மகேந்திரன்


திருமதி லோகேஸ்வரி
சுபேந்திரன்


திருமதி மேகலா
இராஜ்குமார்


திரு. நடராஜா
காளிதாசன்


திரு. நாகலிங்கம்
அரியபுத்திரன்


திருமதி நல்லநாயகி
யோகநாதர்


திருமதி நிர்மலாம்பிகை
இராஜதுரை


திருமதி பரமேஸ்வரி
சண்முகரட்ணராஜா


திருமதி பத்மஜா
லோகநாதன்


செல்வி பத்மலோஜினி
வேலுப்பிள்ளை


திரு. பொன்னையா
சுந்தரலிங்கம்


திரு. பொன்னுத்துரை
கமலசிங்கம்


திரு. இராஜரட்ணம்
ஜெயமனோகர்


திரு. இராஜரட்ணம்
மோகனதாஸ்


திருமதி. இராஜேஸ்வரி
சண்முகரட்ணம்


திருமதி இராஜலக்சுமி
கெங்காதரன்


திரு. இராமுப்பிள்ளை
செல்வராஜா


செல்வி இரஞ்சிதமலர்
சம்பந்தர்


திருமதி இரஞ்சினி
நகுலேஸ்வரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


திருமதி ரேணுகாதேவி
கேசவன்


திருமதி ஞானசுந்தரம்
சகுந்தலாதேவி


திருமதி சந்திராதேவி
இரத்தினம்


திருமதி சீத்தாதேவி
தேவதாசன்


திரு. செல்லையா
இராஜகுலேந்திரன்


திரு. செல்லத்துரை
சத்தியமூர்த்தி


திருமதி செல்வகுமாரி
துரைசிங்கம்


திருமதி செல்வி
விஜயன்


திருமதி சாந்தி கரன்


திரு. சின்னத்தம்பி
யோகநாதர்


திரு. சிதம்பரம்
சிற்றம்பலம்
சுப்பிரமணியம்


திரு. சிற்றம்பலம்
கணேசலிங்கம்


திருமதி புஸ்பவதி
அகிலலோகநாயகம்


திருமதி சிவனேஸ்வரி
பரமசிவம்


திருமதி சிவரூபி
சொக்கலிங்கம்


திருமதி சிவசக்தி
சயந்தன்


திருமதி சௌபாக்கிய
கௌரி பத்மநாதன்


திருமதி சௌமியா
விசுவலிங்கம்


திரு. சுப்பிரமணியம்
சயந்தன்


திருமதி சுகுணாதேவி
குமாரவேல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி தனபதி
பாலசுப்பிரமணியம்



திருமதி தங்கம்மா
சண்முகநாதன்



திருமதி தர்மாம்பிகை
லிங்கோற்பவநாதர்



திரு. துரைரட்ணம்
இந்திரசிங்கம்



திருமதி உமா




திருமதி வடிவாம்பாள்
நடராஜன்



திரு. வைத்திலிங்கம்
குணரட்ணம்



திரு. வல்லிபுரம்
சனகரத்தினம்



திரு. வேலுப்பிள்ளை
தனபாலசிங்கம்



திரு. வேல்நாயகம்



திருமதி விஜயகுமாரி
முருகேசப்பிள்ளை



திருமதி விமலாதேவி
நாகேஸ்வரன்



திருமதி ஜெகதீஸ்வரி
இளையதம்பி



திரு. கதிரவேலு
திருவருள்நேசன்



திருமதி உதயமலர்
பக்தவற்சலன்



திரு சின்னத்துரை
தேவகுமார்



திருமதி சிவமலர் அனந்தசயனன்
எமது காலத்தில் ஆசிரியராக
பணியாற்றி பின்
மகாஜனாவின் முதலாவது
பெண் அதிபராக 2006 – 2011
வரை கடமையாற்றினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


1. செல்வி ஞானமலர் அமிர்தநாயகம்
2. திருமதி ஞானேஸ்வரி பாக்கியகுமார்
3. திரு. கனகரட்ணம் நவரட்ணம்
4. திரு. கதிரேசு வேலாயுதநாதன்
5. திருமதி வாசுகி குகநாதன்
6. திருமதி நாகேந்திரா
7. திருமதி நந்தினி பிரபாகரன்
8. திருமதி பத்மா இராமச்சந்திரன்
9. திரு. பொன்னுத்துரை விஜயகுமார்
10. திருமதி செல்வகுமாரி கனகசபாபதி
11. திரு. சுப்பிரமணியம் மகாலிங்கம்
12. திரு. தவரட்ணசிங்கம்
13. திருமதி திரிபுரசுந்தரி சிவசுப்பிரமணியம்
14. திருமதி விமலா டுவைற்
15. செல்வி விமலா கந்தையா

இம் மலரில் தவறுதலாக பெயர் குறிப்பிட மறந்த எமது காலத்து ஆசிரியர்களை நினைத்து கைகூப்பி மனம் வருந்துகிறோம்.

## பகுதிநேர ஆசிரியர் விபரம்



திரு. பாலகிருஷ்ணன் முகுந்தன்



திரு. கிருபாதரன் ஜெகன்



திரு. சிவானந்தம் ரங்காதரன்



திரு. நடராஜர் பகிரதன்



திருமதி. சிவரதி கேதீஸ்வரன்



திரு. ரமேஷ் ஸ்கந்தவரதர்



திரு. வைத்தியநாதன் தனநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரத்துவம் எய்திய எமது காலத்து ஆசிரியர்கள்



திரு.இளையதம்பி
பஞ்சநாதன்



செல்வி ஜெகசோதி
செல்லப்பா



திருமதி கமலா
செல்வராஜா



திரு. கந்தையா
குலசேகரம்



திருமதி கங்கு
செல்வமலர்
இந்திரசிங்கம்



திரு.கந்தசாமி
தர்மேசன்



திருமதி மரகதவல்லி
சர்வானந்தராஜா



திரு. முத்துத்தம்பி
வசந்தகுமார்



செல்வி. நாகம்மா
கதிர்காமர்



திருமதி பரமேஸ்வரி
குலசேகரம்



திரு. கந்தையா
ஞானசேகரன்




திருமதி. ராஜமலர்
சத்தியமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருமதி றோகினி
இரத்னவேல்



திருமதி சரஸ்வதி
கனகேஸ்வரன்



திரு. சரவணமுத்து
விநாயகரத்தினம்



திரு. சரவணமுத்து
செல்லர்
அருட்பிரகாசம்



திருமதி சாவித்திரி
துரைச்சாமி



திரு. செல்லையா
தியாகராஜா



திரு. சின்னத்தம்பி
கயிலைமான்



திரு. சுப்பிரமணியம்
சரவணபவன்



திரு. அ. திலகேஸ்வரன்



திருமதி புனிதவதி
சபாரத்தினம்



திருமதி சரஸ்வதியம்மா
(தவமணி)
பொன்னுத்துரை



திரு நடராஜாமணி
நடேசு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் ஆக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரை சகாப்த காலமும் ஆசிரியர் மாணவர் கோலமும்

கலாபூஷணம் திருமதி கோகிலா மகேந்திரன்



"கல்வி என்பது எதிர்காலத்துக்கான ஆயத்தம்" உண்மையான கற்றலின் விளைவு மனித சமூகத்தில் நிகழும் நேரான மாற்றங்களே! ஆயினும் இன்று கல்வி மதங்கொண்ட யானைகளின் கையில் சிக்கிய வாழைக் குருத்தாகத் திணறிக் கொண்டிருக்கிறது.

நாங்கள் மாணவர்களாயிருந்த 1950கள், 60களிலிருந்து இன்றுவரையான அரை சகாப்தத்திற்கும் மேற்பட்ட காலத்தில் மாணவர்கள் மோசமாகிப் போனார்கள் என்றும் நாங்கள் ஆசிரியர்களாயிருந்த 1970கள் தொடக்கமான காலப்பகுதியிலிருந்து அவதானித்தால் இப்போதைய ஆசிரியர்கள் எல்லா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையிலும் தரம் குறைந்து போனார்கள் என்றும் ஒரே முடிவாக நான் சொல்லப்போவதில்லை நிச்சயமாய்!

நினைவுத் தடங்களில் கொஞ்சம் பிற்பக்கம் பயணம் செய்து திரும்புவோம். அன்னம், ஆ (பசு) ஆகியவற்றுடன் ஒப்பிடப்பட்ட தலை மாணாக்கர் எக்காலத்திலும் இருந்தார்கள். இருக்கிறார்கள். மண், கிளி என்று பேசப்பட்ட இடை மாணாக்கரே எண்ணிக்கையில் அதிகம். இல்லிக்குடம், ஆடு, எருமை, நெய்யரி போல இருக்கும் சில கடை மாணாக்கர் பின்வாங்கில் (பின்னர் மதவில்) எப்போதும் காணப்படுபவர்கள் தான். (அதற்காக அவர்களை எருமை என அழைத்தால் தவறுதானே!)

நன்னூல் வரைவிலக்கணம் காலத்தால் அழியாதது. நன்னூல் தரும் நல்லாசிரியர் வரைவிலக்கணத்தையும் உலகிலுள்ள அனைத்து ஆசிரியர்களும் பார்க்க வேண்டும். தமிழின் பெருமை இன்னொரு படி உயரும். நிற்க. மனித வரலாற்றோடு சேர்ந்து நடந்து பார்க்கிறபோது, கல்வி வளர்ச்சி கண்டுள்ளதை யாரும் ஒப்புக்கொள்வர். எல்லை இல்லாத தேடலுக்கு உதவும் ஆசிரிய மாணவ உறவு இப்பாதையின் வைரக்கல் வீச்சு! விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புகளால் மட்டுமில்லை, தொழில்நுட்ப வளர்ச்சிப் பெருக்காலும் அறிவு எல்லை இல்லாது விரிந்துவிட்டது. மனித நடத்தைகளிலும் கணிசமான மாறுபாடுகள் தோன்றிவிட்டன. உலகெங்கும் கட்டாயக்கல்வி கட்டாயமாகிவிட்டதால் பாடசாலை காணாதவர்கள் இல்லையென்றாகிவிட்டது. முன்னர் எப்போதையும் விட இப்போது பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்வியில் அதிக அக்கறை கொள்கின்றனர்.

மனம் பின்னே திரும்பிப் பார்க்கிறது. அப்போது எமது ஆசிரியர்கள் பெருமளவு அதிகாரத்தைத் தம்வசம் வைத்திருந்தனர். தனியார் பாடசாலைகளில் அவர்களுக்கான உரிமையும் அதிகமாக இருந்தது. அவர்கள் விரும்பியதை மாணவர் செய்தேயாக வேண்டும். பிள்ளைகள் பயமும், மரியாதையும் காட்ட எதிர்பார்க்கப்பட்டனர். பயத்தால் கல்வியே உயிரை விட்ட தனி மனித வரலாறுகள் உள்ளன. எனது அனுபவத்தில் சந்தித்த ஆசிரியர் பலர் பெரும்பாலும் மகாஜனா ஆசிரியர்– மரியாதை தரக்கூடிய பண்புகள் கொண்டிருந்தனர் என்பது நிஜம். சிலரிடம் எமக்குப் பயம் இருந்தது. மரியாதை இருக்கவில்லை. இன்னும் சிலரிடம் பயம் இல்லை. மரியாதை இருந்தது. மிக மிகச் சிலரிடம் இரண்டுமே தோன்றவில்லை.

எமது ஆசிரிய அனுபவக் காலத்தில் "கரும்பைப் பிழிவது போல, மாணவ மன அரும்புகளைப்பிழியக் கூடாது" என்ற தெளிவுடன் தமது கடமையைச் சீராகச் செய்த ஆசிரியர்களை மாணவர் மதித்தனர். இப்போது ஆசிரியர்களின் முதுகுக்குப் பின்னால் அவர்களைக் கேலி செய்யும், விமர்சிக்கும் மாணவரை நிறையவே பார்க்க முடிகிறது. இதன் பின்புலத்தில் இங்கு மாணவர் விழுமியச் சரிவு மட்டுமில்லை, ஒப்பீட்டளவிலான ஆசிரியர் ஒழுக்கக் குறைவும் உண்டுதான்.

அது எமது மாணவப் பருவம். தமிழ்ப் பாடத்தில் "ஆண்பால், பெண்பால்" கற்பித்தாலே வகுப்பில் "களுக்" ஒலிகள் கேட்கும். அதற்கு மேல் பால், பால்நிலை, பாலியல் ஆகியவை பற்றி– ஏன் காதல் பற்றிக் கூடக்– கதைப்பதே கௌரவமற்ற விடயம் என்று கருதப்பட்டது. ஆயினும் மாணவர்கள் சிலர் காதலித்தார்கள். அவர்களில் ஒரு பகுதியினராவது காதலித்த நபரைத் திருமணம் செய்து கொண்டார்கள் என்ற நடப்பியல் வேறு!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் விஞ்ஞான ஆசிரியராக வந்த காலத்தில் காதலிப்பது உள்ளத்திற்கு மிக ஆரோக்கியமானது தான்! ஆயினும் திருமணம் செய்வது என்ற முடிவுடன் காதலிப்பதற்கு மூளையின் முன்நுதல் சோணை மேற்பட்டை (prefrontal cortex) முழு விருத்தியடையும் வயது (ஏறத்தாழ 21) வரவேண்டும் என்ற தெளிவு ஏற்பட்டது. விஞ்ஞான பாடத்தில் இனப்பெருக்கத்தொகுதியைக் கற்பிக்கும் போதும் மாணவர் கேள்வி கேட்பதற்கு அனுமதிப்பேன். மாணவர்கள் "சிரித்த" நினைவு இல்லை. இப்போது மாணவர்கள் கதைக்காத "தலைப்பு" எதுவும் இல்லை என்பது சரி. நல்லது. ஆயினும் "காதல்" காரணமான தற்கொலைகள் இங்கு அதிகரித்திருப்பது நல்லதாகத் தெரியவில்லை. தெளிவான அறிவையும் உணர்வுகளைக் கையாளும் திறனையும் கொடுப்பதும் ஆசிரியர்களின் பணிதான்.

எமது மாணவப் பருவத்திலும் "குழுக்கள்" இருந்தன. நூலகம், வாசிப்பு ஆகியவற்றில் ஆர்வம் கொண்ட நாலுபேர் கூடினால் அண்மையில் வாசித்த நூல் பற்றிப் புழுகுவது வழமை. அந்த அண்டப் புழுகு, ஆகாசப் புழுகுடன் மற்றவர்கள் குறித்த நூலை வாசிக்க, நூலகம் ஓடுவதும் சகஜம். விளையாட்டுக்குழு, நாடகக்குழு, சினிமா ரசிகர் குழு. இத்தியாதி குழுக்கள்! கால ஓட்டத்தோடு இவை மதுக்குழு, போதைக்குழு, வெறிக்குழு, வன்முறைக்குழு, வாள்வெட்டுக்குழு என்று ஆகிவிட்டது மிகத் துன்பியல் நிகழ்வு. உள ஆரோக்கியம் எமது நாட்டில் வேகமாகச் சரிந்து வருவதன்– பொருளாதாரம் மட்டுமில்லை–சுட்டி! "அந்தக் காலத்தில் யாரும் ஊரில் கள்ளுக் குடிப்பதில்லையா என்ன?" என்ற குரல் பின்னிருந்து கேட்கிறது. குடித்திருக்கலாம். அருமையாக! அதிபர், ஆசிரியர்களுக்குத் தெரியாமல்! அகப்பட்டால் தலையைச் சொறிந்து தப்ப முடியாது.

இந்த அரைச்சகாப்தத்தின் மிகப்பெருமளவு காலத்தில், பிரதான கற்றல், கற்பித்தல் உபகரணம் வெண்கட்டியும் கரும்பலகையுந் தான். வெண்கட்டித்துகள் நுரையீரலுக்கு நல்லதில்லை என்று தெரிந்தும் வேறு வழி இருக்கவில்லை. மிகச்சிறு வகுப்பில் நாங்கள் எழுதும் இடமாகவும் "சிலேட்" இருந்தது. "கலர் சோக்" பாவிப்பவர்கள் சிறந்த ஆசிரியர். ஏனெனில் கரும்பலகையின் கலர்ப்படம் தான் மூளையில் பதியும் காட்சிப் படிமம். பாடநூல்கள் அருமை. ஆங்கில நூல்களை அடிப்படையாக வைத்து ஆசிரியர் தரும் "நோட்ஸ்" தான் வேதம். பாடமாக்க வேண்டியதே! விடை வங்கியில் வேறு சொற்கள் கிடையாது. நூலகத்தில் இருக்கும் சில அருந்தலான புத்தகங்களுக்குப் பெரும் கிராக்கி. சில மாணவர்கள் நூல்களை மறைத்து வைப்பதும் – தாம் பிறகு போய் மிகுதி படிக்க– மற்றைய மாணவர்கள் தேடுவதும், கோபப்படுவதும், நூலகரோடு முரண் படுவதும் உண்டு. எமது ஆசிரிய அனுபவக் காலத்தில் பாடநூல்கள்– ஏறத்தாழ எல்லா வகுப்புக்கும்– வந்துவிட்டன. இப்போதைய இணைய வசதி மாணவரின் கையடக்கத் தொலைபேசிக்குள் "எல்லாம்" கிடைக்கும் என்ற நிலையை உருவாக்கிவிட்டது. திறன் வகுப்பறைகள் இங்கும் திறக்கப்படுகின்றன. கற்றல், கற்பித்தல் உபகரணமாகத் "திறன் பலகை" அறிமுகமாகி விட்டது. எமது நாட்டிலும் ஏறத்தாழ அரைவாசி ஆசிரியர்கள் இந்தத் திறன் பெற்றுள்ளனர். காலப்போக்கில் பாடசாலை என்பது "கற்போர்" எனும் வாடிக்கையாளர் இடையிடை கூடும் சந்தை போலாகும். பிள்ளைகள் இணையத்தை விட்டுப் பிரிய முடியாத "தங்கியிருத்தல்" நிலைக்குப்போகும் ஆபத்துகள் அதிகரிக்கலாம்.

நாங்கள் படிக்கிற போது ஏதோ ஒரு காரணத்தால் வகுப்பு நித்திரை தூங்கும் நிலைக்குச் சென்றால் மேசைக்குக்கீழே அகிலனோ, கல்கியோ, ஆனந்த விகடனோ வந்து அமர்ந்து விடுவர். எமது மாணவர்கள் செய்திகளை அல்லது பட்டங்களைக் கொண்டு செய்யும் கடதாசி அம்புகளை உருவாக்கிவிடுவர். இப்போது பாடசாலைக்குக் கைபேசி கொண்டு வரக்கூடாதென்ற ஒழுங்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதியையும் மீறிப் பலரது விரல் நுனிகளில் "வாட்ஸ் அப்பும்" "முக நூலும்". ஆசிரியர்களும் மாணவர்களும் முகநூல் நண்பர்களாக உள்ளனர். நல்ல விடயங்கள் பரிமாறப்பட்டால் எல்லாம் நன்மைக்கே!

எமது கல்லூரிப் பராயத்தில் டியூஷனுக்குப் போகிறவர்கள் குறைவு. வகுப்பில் கற்பிப்பது விளங்காதவர்தான் டியூஷனுக்குப் போவார் என்ற அபிப்பிராயம் வேறு இருந்ததால் அது கௌரவக் குறைவாகவும் பார்க்கப்பட்டது. தமது மாணவர் டியூஷனுக்குப் போவதை ஆசிரியர்களும் விரும்புவதில்லை. எமது ஆசிரியப் பராயத்தில், ஆசிரியர்கள் பெரும்பாலும் பாடத்திட்டத்தைப் பூர்த்தி செய்வார்கள் தான். ஆயினும் பிள்ளைகள் மேலதிக டியூஷனுக்கு போவது "நாகரிகம்" ஆகிவிட்டது. இப்போது டியூஷனுக்குப் போகாத பிள்ளை இல்லை என்பதை விட, இங்கு டியூட்டரிகள் பாடசாலைகளுடன் ஒப்பந்தங்கள் செய்து கொள்கின்றன. டியூசனுக்குப் போக வசதியாகக் குறிப்பிட்ட வகுப்புகளுக்குப் பாடசாலை விடும் நேரம் மாற்றியமைக்கப்படுகிறது. குறிப்பிட்ட டியூட்டரியில் வகுப்பு இருக்கிறதென்றால், அந்த நாளில், அந்த நேரத்தில் பாடசாலை எந்த நிகழ்வையும் நடத்தாது. பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் கற்பிக்காத பகுதி "டியூசனில்" என்ற நிலைவேறு! இத்தகைய "நிரவல்" நிகழ்ச்சித்திட்டத்தில் அகப்பட்ட பிள்ளை பெரும் பாவம்!

நாங்கள் கல்வி கற்கிறோம். புறக்கிருத்திய செயற்பாடுகளின் வகைமை குறைவு. ஆயினும் அவற்றில் ஈடுபடும் மாணவரும், ஆசிரியரும் அர்ப்பணிப்பும் ஈடுபாடும் கொண்டு மாலை நேரத்தை, வாரவிடுமுறையை, மனநிறைவுடன் செலவிடுவர். உடல், உள ஆரோக்கியம் மேம்பட்டது. நான் ஆசிரியராக நாடகம் போன்ற இணை பாடவிதான செயற்பாடுகளைச் செய்த போது டியூசனை வெட்டிப் பாடசாலையில் தரித்து நிற்பதைச் சில பெற்றோரும், பிள்ளைகளும் விரும்பவில்லைத்தான்! ஆனாலும் பயன் தெரிந்தவர்கள் பங்கு பற்றினார்கள். இன்று பிள்ளைகள் பங்கு பெறக்கூடிய இணை பாடவிதான செயற்பாடுகளின் வகையறாக்களும் அவற்றுக்கான வசதிகளும் மிக அதிகம் என்றாலும், செயற்பாடுகள் யாவும் பெரும்பாலும் பாடசாலை நேரத்திலேயே நடைபெறுகின்றன.

உயர்தர வகுப்பு நிறைவில் வரும் இரவுணவு,பசுமை நிறைந்த நினைவுதான் எல்லோருக்கும். மனதுக்கான சுபீட்சந்தான். அள்ளிப்பூசிய இருளிலும் மரங்கள் குளிர்காற்றை அள்ளி வீசும் அம்பனை ரோட்டில் அன்று. எமது காலத்தில் விடயங்கள் ஆசிரியர்களின் கட்டுப்பாட்டை மீறாது. சர்வகலாசாலைப் பாரம்பரியங்கள் சில கற்றுக்கொள்ளும் களமாக அமையும். மகாஜனாவில் சைவ உணவுதானே! போஷாக்கான உணவு. ஆண்பிள்ளைகளும் பெண்பிள்ளைகளும் கலந்து அமரலாம். சில வேளை விருப்பமான ஒருவருக்குப் பக்கத்தில் அமரலாம் என்பதே பெரும் வரப்பிரசாதமாய். முக்காலத்திலும்! நாம் ஆசிரியராக இருந்த காலத்தில் உணவு–செயற்கை மணமும் ருசியுமாய்ப் பொரித்த உணவுவகை– மாணவரின் விருப்பப்படி போஷாக்குச் சரிவை நோக்கி நகரத் தொடங்கி விட்டது. ஆசிரியர்கள் சில கட்டுப் பாடுகளை நிலை நிறுத்தக் கஷ்டப் படும் நிலை.இப்போது இன்னும் கட்டு மீறிய நிலை. நாகரிகம் என்ற போர்வை நட்டாற்றில் தள்ளுகிறது என்று தெரியாமல்! உலகளாவிய ரீதியில் இப்போது போஷாக்குணவை வலியுறுத்தும் போக்கு வந்து விட்டது. விழுமியங்களை வலியுறுத்தும் போக்கும் வரும் என எதிர்பார்க்கலாம்.

சீருடை என்று பார்த்தால் உயர்தர மாணவிகளாக நாங்கள் வெள்ளைச்சேலை உடுத்தோம். காலை ஒன்றுகூடல் நாள் மற்றும் விழாக்களில் முழு வெள்ளை. ஏனைய நாள்களில் சிறு கரை, சில பூக்களுக்கு அனுமதி உண்டு. ஆசிரியராய் உள் நுழைந்த போதில் எல்லா மாணவிகளுக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரே மாதிரிச் சீருடை ஆகிவிட்டது. ஆண்பிள்ளைகளின் சீருடையும் சிறுநிற மாற்றங்கள் தவிர பெருத்த வேறுபாடின்றித் தொடர்கிறது. உலகப் பாடசாலைகள் சீருடைகளைக் கைவிடும் போக்கு வந்துவிட்டது. எமது நாட்டிலும் சில பாடசாலைகள் வெள்ளை நிறம் அற்ற வேறு நிறத்திற்கு மாறியுள்ளனர். எமது நாட்டின் காலநிலைக்கும், உடல் உள நலத்துக்கும் வெள்ளை உடை அணிவது நல்லதே. பெண் ஆசிரியர்கள் இன்னும் சேலையைக் கைவிடாதிருப்பது பாராட்டிற்குரியது. ஆண் ஆசிரியர்களில் வேஷ்ட்டியைக் காணக் கிடைப்பதில்லை இப்போது!

மதவுகள், தேநீர்க்கடைகள், கோயில்கள், சனசமூக நிலையங்கள், விளையாட்டு மைதானங்கள் போன்ற அமைவிடங்கள் ஆண் பிள்ளைகள் கூடிச் சல்லாபிக்கும் இடங்கள் அப்போது. பெண்பிள்ளைகள் வெளியே வருவது ஒப்பீட்டளவில் குறைவுதான் என்றாலும் கோயிலை விடமாட்டார்கள். காலம் நகர மெல்ல மெல்லப் பிள்ளைகள் சேர்ந்து கதைக்குமிடம் "ரியூட்டரி" தான் என்றாகியது. தியேட்டர்களையும் மறக்க முடியாது. இப்போது ஒவ்வொரு பிள்ளையினதும் பிறந்த நாள், பூப்புனித நீராட்டு விழா, ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் சித்தியெய்திய விழா, சா/த, உ/த பரீட்சை பெறுபேறுகளுக்கான "பார்ட்டி" என்று மாணவர் பலர் ஒன்று கூடுவதும் கதைப்பதும் கட்டாயம் மட்டுமில்லை.. அதிலே மது முக்கிய இடம் வகிப்பதும் கட்டாயம்.

நல்ல பாடசாலையில் உள்ள நல்ல மாணவர்கள் சுய ஒழுக்கம், கற்றல் தொடர்பான உயர் இலக்கு, நேர முகாமையின் சிறப்பு, குழு வேலையில் ஆர்வம், நம்பிக்கை, பொறுப்புணர்வு, ஆகியவற்றைக் கொண்டிருப்பர் என்றே மிக நவீன கல்வியியல் நூல்களும் பேசுகின்றன. சுய அமைதிக்கு இவை மிக அவசியம் என்று புத்திசாலிகள் பலருக்குத் தெரிகிறது.

ஆயினும் உலகம் ஒழுங்கு தவறி இயங்கத் தொடங்கிவிட்டது. மனித உயிரியின் பேராசையும், அதிகார வேட்கையும் பூமியின் மொத்த அழிவுக்குப் பாதை வகுத்துச் செல்வதாய்ப்படுகிறது. "தாளம் படுமோ, தறிபடுமோ" என்று ஆசிரியர், மாணவர் அனைவரும் சேர்ந்து பட வேண்டியது தானோ அல்லது நம்பிக்கை ஒளிக்கீற்றுத் தென்படுமோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவுகளுடன் கலந்த வாழ்த்து செய்தி

**ஆசிரியர் சத்தியமூர்த்தி செல்லத்துரை**

கல்லூரியிலே வீற்றிருக்கும் ஆனந்த சமேத நடராஜப் பெருமானை நினைந்து மகாஜன மாதாவை வணங்கி எழுத விளைகிறேன்.

1995 ம் வருட க.பொ.த உயர்தர மாணவர்கள் நடாத்தும் ஒன்றுகூடல் நிகழ்வும், மலர் வெளியீடும் சிறப்புற நிகழ வாழ்த்து கூறுவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். மகாஜனா என்னும் பல்கலைக்கழகத்தில் கிட்டத்தட்ட 15 வருடங்கள் கல்விச்சேவை செய்ய சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு முதற்கண் இறைவனுக்கு நன்றி கூற கடமைப்பட்டவனாக இருக்கின்றேன்.

பாடசாலை இடம்பெயர்ந்து பல இடங்களில் போர்க்காலச் சூழலில் இயங்கிய போதும் ஆசிரியர் பற்றாக்குறை, நூல்நிலைய வசதி, ஆய்வுகூட வசதி எதுவும் இல்லாது இருந்த போதிலும் பாடசாலையிலும் ஆசிரியர்களிலும் நம்பிக்கை கொண்டு தொடர்ந்தும் அங்கு கற்ற மாணவர்களை முதற்கண் நினைவு கூறுகிறேன். அவர்கள் பாடசாலையில் கொண்டிருந்த பற்றுதல் போற்றுதற்குரியது.

1994, 1995 க.பொ.த உயர்தர மாணவர்களில் கணிதப்பிரிவு மாணவர்களுக்கு பிரயோக கணிதம், பௌதிகவியலில் சில பகுதிகளையும், உயிரியல் பிரிவு மாணவர்களுக்கு, பௌதிகவியல் பாடத்தையும் கற்பித்தேன்.

ஒரு நல்லாசான் தொடர்ந்து கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். தரமான மாணவர்கள் கல்லூரியில் இருந்த காரணத்தால் நான் அவர்களுக்காகவே தொடர்ந்து கற்க வேண்டிய கட்டாயத்திற்கு உள்ளாக்கப்பட்டேன். மாணவர்களினூடாக நானும் நன்கு கற்றுக் கொண்டேன்.

தனித்துவமாகவும், வேறு பல இடையூறுகளையும் தவிர்க்கும் நோக்கோடு முக்கியமாக 1994, 1995 க.பொ.த உயர்தர மாணவர்கள் மருதனார்மடத்தில் ஒரு தனியார் காணியில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியின் அதே அமைப்பில் ஓலைக் கொட்டகை வகுப்புக்களை அமைத்தார்கள். கடுமையான அவர்கள் உழைப்பினால் மீண்டும் மகாஜனாக் கல்லூரி தனித்துவமாக உதயமானது. மாணவர்கள் மகிழ்வோடும், மனஉறுதியோடும் புது உத்வேகத்துடனும் செயற்படத் தொடங்கினார்கள்.

மீண்டும் பல துறைகளையும் சார்ந்த மாணவர்கள் பல்கலைக் கழகம் சென்றார்கள். இவ்வாறு உத்வேகம் கொண்டதற்கு 1994, 1995 க.பொ.த உயர்தர மாணவர்களின் பங்கு முக்கியமானதாக இருந்தது என்பதை எவராலும் மறக்க முடியாது.

பல மாணவர்கள் தாயகத்திலும் புலம் பெயர் நாடுகளிலும் தத்தமது துறைகளில் பல சாதனைகள் படைத்துப் பாடசாலைக்குப் பெருமை சேர்ப்பதை காண்கின்றோம். மகாஜனா மாதாவையும், கற்பித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களையும் தமது ஆழ் மனத்தில் அழியா இடத்தைக் கொடுத்ததன் பயனாக சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் பாடசாலையில் ஒன்றுகூடி ஆசிரியர்களையும் அழைத்து, பசுமை நிறைந்த நினைவுகளை மீட்டு மகிழ்வுறுவதையும், மன நிறைவடைவதையும் காண்கின்றோம். அதுமட்டுமல்லாது, பொருளாகவோ, பணமாகவோ பாடசாலையின் வளர்ச்சிக்காக வழங்கி வருகின்றார்கள்.

இடம்பெயர்ந்து இக்கட்டான நிலையிலே கடமையாற்றிய ஆசிரியர்கள், அதிபர் ஆகியோர் போற்றுதற்குரியவர்களே! எவ்விடர் வந்தபோதும் மனம் தளராது பற்றுறுதியோடு செயற்பட்டதை அறிவோம். நான் பாடசாலையில் கற்பித்தலோடு மாணவர் ஒழுக்கம், மாணவ தலைவர், மாணவர் மன்றங்கள், விளையாட்டுத்துறை போன்றவற்றிற்குப் பொறுப்பாக இருந்ததன் பலனாக பல மாணவர்களின் மனங்களில் இடம்பிடித்ததோடு அவர்களும் என் மனதில் இடம்பிடித்துக் கொண்டார்கள். அதன் பலனாக பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் எனது முக நூலில் இணைந்திருக்கிறார்கள். முகநூல் வாயிலாக இன்றும், வயது முதிர்ந்த வேளையிலும் அவர்களோடு தொடர்பில் இருப்பதால் மன நிறைவும், மிக்க மகிழ்ச்சியும் அடைகிறேன்.

அவர்கள் தமது பிள்ளைகளை வளர்த்து வரும் பாங்கு என்னை மிகவும் கவர்ந்தது. போற்றுதற்குரியது. மென்மேலும் பல சிறப்புகள் பெற்று வாழ வாழ்த்துகின்றேன். இவ்வாறு நினைவுகள் பல கூறலாம். இருப்பினும் இத்தோடு நிறுத்த விளைகின்றேன்,

வாழ்க, வளர்க! வெல்லுக மகாஜன மாதா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரும்பிப் பார்க்கின்றேன்

முன்னாள் பிரதி அதிபர் திரு. செ. இராஜகுலேந்திரன்

மகாஜனக் கல்லூரி வாழ்வின் சில பக்கங்களை புரட்டிப்பார்க்கின்றேன். குருவிகள் போல் சிகடித்துப் பறந்த, மான் குட்டிகளைப் போல துள்ளித் திரிந்த என் மாணவச் செல்வங்கள் பற்றி எண்ணிப் பார்க்கின்றேன். விரல் விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரைத் தவிர எல்லோருமே திருமணமாகி மழலைச் செல்வங்களுக்கு பெற்றோர் ஆகி இல்லறம் என்னும் நல்லறத்தினை நடாத்திக்கொண்டிருக்கின்றனர். உள்நாட்டில் ஒரு பகுதியினர் வெளிநாட்டில் ஒரு பகுதியினர் என வாழ்ந்து வரும் நிலையில் நேரில் சந்திப்பது கார்த்திகைப் பிறை கண்டது போல் ஆயிற்று. இணையமும் தொலைபேசியும் மெல் இழைகளாய் உறவுகளை இணைத்துக் கொண்டிருப்பது ஒரு வரப்பிரசாதமே. வாழ்வில் என்றும் இன்பமும் இல்லை அது போல் என்றும் துன்பம் இல்லை இரண்டும் கலந்து சகடக்கால் போல சுழன்று வருவனவே. எம் வாழ்வும் அப்படித்தான். இந்த நேரத்தில்தான் மகாஜனாக் கல்லூரியில் நாம் வாழ்ந்த வாழ்க்கை பற்றி சற்றே திரும்பிப் பார்க்கின்றேன்.

இல்ல விளையாட்டுப் போட்டி என்றால் மாணவர்களது உற்சாகத்திற்கு குறைவில்லை. அந்த உற்சாகம் ஆசிரியர்களாகிய எம்மிலும் தொற்றிக் கொள்வதில் ஒன்றும் வியப்பில்லை. இல்லங்களுக்காக பிரிந்து நின்று இல்ல வெற்றிக்காய் இயங்கும் மாணவர்களும் ஆசிரியர்களும் இல்லத்தில் சேர்ந்து நின்று போட்டியிடுவர். போட்டிகள் முடிவடைந்ததும் முன்புபோல் ஒன்றாகிவிடுவர். ஒன்றிணைவும் போட்டியும் தொடர்பான வாழ்க்கைப் பாடங்களை புகட்டி வைத்த காலம் அது. இன்று தம் வாழ்வில் கல்லூரித்தாயின் வழிகாட்டலை உணர்ந்திருப்பர் என நம்புகின்றேன்.

கொண்டாட்டத்திற்கு குறைவற்ற பரிசுத் தினம் இரண்டு. ஒன்று கல்லூரி ஸ்தாபகர் பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களின் நினைவு தினம். இரண்டாவது நவ மகாஜன சிற்பி ஜெயரட்ணம் அவர்களது நினைவு தினம். பரிசில்களைப் பெற்றிட வேண்டும் என்று மிகுந்த உத்வேகத்துடன் மாணவர்கள் தமக்கிடையே தீவிரமாகப் போட்டியிடுவர். படித்தனர், பாடினர், ஆடினர், நடித்தனர், வெற்றி பெற்று பரிசில்களைத் தட்டிச் சென்றனர். எல்லையில்லா ஆனந்தத்தில் களித்தனர். அதிபர் கல்லூரியின் வளர்ச்சியை எடுத்துரைக்க பெருமிதத்துடன் அனைவரும் கேட்டனர். அறிஞர் தம் அறிவுரைகளை செவிமடுத்து மனதில் இருத்தினர்.

எங்களது வாராந்த நற்சிந்தனை நிகழ்வில் நீதிக் கருத்துக்கள், நகைச்சுவைக் கதைகள், இலக்கிய நயம் மிக்க அனுபவச் சிதறல்களின் பிரவாகத்தை எதிர்பார்த்துக் காத்திருந்து இரசித்து கேட்டு பின்னர் வகுப்பறையில் அவை பற்றி மேலும் தகவல் கேட்டறிந்த இளம் சிறார்கள் இன்று உயர்ந்து வளர்ந்து நிற்பதைக் காண பெருமையாக இருக்கின்றது.

மெல்லிய நீரோடையாய் சென்றுகொண்டிருந்த கல்லூரிப் பயணத்தில் நாட்டின் அசாதாரண சூழ்நிலை காரணமாக எத்தனை ஏற்ற இறக்கங்கள்! எத்தனை துன்ப துயரங்கள்! குடும்பத்தோடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடம் பெயர்ந்தோம் வேரோடு குடைசாய்ந்தோம். மகாஜா அன்னையும் அதற்கு விதிவிலக்கல்ல. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி மற்றும் அளவெட்டி அருணோதயா கல்லூரி என மகாஜனாவின் பயணமும் பல இன்னல்கள் மத்தியிலும் தொடர்ந்து கொண்டிருந்தது. இறுதியாக 1992 - 93 காலப்பகுதி என நினைக்கின்றேன். இணுவில் மத்திய கல்லூரி வந்தடைந்த நாம் தரித்து நிற்க வாய்ப்பு கிட்டியது. மாணவர்களும் ஆசிரியர்களும் துன்பங்களையும் இடையூறுகளையும் எதிர்கொண்ட போதும் கல்லூரியின் மேல் வைத்த பாசத்தினால் தொலைதூரத்தில் இருந்தும் வந்துசென்றுகொண்டிருந்தனர்.

தளபாட பற்றாக்குறை கல்லூரியை நடாத்துவதில் பெரும் தடைக்கல்லாக இருந்தது. அக்காலப் பகுதியில் கல்வி கற்ற மாணவர்கள் (ஆண்பிள்ளைகள்) துணிந்து ஒன்றுகூடினர். இரவு நேரத்தில் எங்கள் கல்லூரி வளாகத்திற்கு சென்றனர். சத்தம் கேட்டு விடக்கூடாது என்று பெரிய வாகனத்தை தள்ளிக் கொண்டு சென்று தளபாடங்களை சுமந்து வந்து வாகனத்தில் ஏற்றிக், கொண்டுவந்து சேர்த்தார்கள். அன்று அவர்கள் தம் வாழ்வை துச்சமென எண்ணி கல்லூரிக்குச் செய்த பணி எண்ணி இன்றும் மெய்சிலிர்க்கின்றேன்.

இணுவிலில் தரித்து நின்றபோது 'இனி இடம்பெயர முடியாது. ஓரிடத்தில் நிலையாக தங்கி நிற்க வேண்டும்' என்று பாடசாலை சமூகம் தீர்மானித்துக் கொண்டது. அப்போது க.பொ.த. உயர்தரத்தில் கல்வி கற்றுக் கொண்டிருந்த மாணவர்கள் முழுமூச்சாக உறுதியோடு கொட்டகை அமைக்கும் பணியில் ஈடுபட்டனர். கொட்டகையின் கூரை கிடுகுகளால் வேயப்பட்டு தரை செம்மண்ணாக மகாஜனக்கல்லூரி மருதனார்மடத்தில் மீண்டும் சிருஷ்டிக்கப்பட்டது. மருதனார்மடத்தில் கே கே எஸ் வீதியில் இராமநாதன் கல்லூரிக்கு முன்பாக மேற்கு திசையில் எமது கல்லூரியின் அமைப்பிலேயே கொட்டகை அமைத்துக் கொண்டமை சிறப்பான அம்சமாகும். இந்நூலை வெளியிடும் 1995 க.பொ.த உயர்தரத்தில் கல்வி கற்று மாணவர்களது பங்களிப்பும் அளப்பரியது

நிலையான இடம் கிடைத்த பின் மீண்டும் பழைய மிடுக்குடன் பயணத்தைத் தொடர்ந்தனர். பாடினர், ஆடினர், நடித்தனர், படித்தனர், பல்கலைக்கழகம் சென்றனர், பெறுபேறுகையில் சாதனை படைத்தனர். மகாஜனாக் கல்லூரியை பெருமைப்படுத்தினர். பழைய நினைவுகளை மீட்ட மகிழ்வுடன் என் மாணவச் செல்வங்களுக்கு அவர்களது வாழ்வு சிறக்கவும் அவர்கள் பணி ஓங்கவும் ஆசிவழங்கி நிறைவுசெய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜன மாதாவின் இடம்பெயர்வுகளும் 1995 க.பொ.த.உயர் தர மாணவர்களும்

முன்னாள் அதிபர் திரு.பொ.சுந்தரலிங்கம்

இன்று உள்நாட்டிலும் புலம்பெயர்ந்து பல உலகநாடுகளில் வாழும் 1995 க.பொ.த.உயர்தர மாணவர்கள் அனைவரும் ஒன்றுகூடி தமது 45வது வயது விழாவைக் கொண்டாடும் முகமாக ஒரு மலரினை வெளியிடுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறேன். இம் மாணவர்கள் தரம் 9இல் கற்றுக்கொண்டிருந்த போது 1990இல் முதலாவது இடப்பெயர்வு ஏற்பட்டு பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் பிற்பகல் வகுப்புக்களில் கற்றார்கள். 1991 ஜனவரியில் இருந்து அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் தரம் 6 – 11 வரையான வகுப்புக்கள் நடைபெற்றன. இரவு வகுப்புக்கள் அளவெட்டி வடக்கு சீனன்கலட்டி ஞானோதயா வித்தியாசாலையில் நடைபெற்றன. க.பொ.த.உயர்தர வகுப்புக்கள் சொந்த இடமான எமது அம்பனை மகாஜனக் கல்லூரியில் நடைபெற்றன. கல்லூரிச் சுற்றாடலில் நிலைமை சற்றுச் சீரானதும் சகல வகுப்புக்களும் சொந்த இடத் தில் இயங்க ஆரம்பித்தன. 1992 ஜூன் மாதமளவில் இராணுவம் பாடசாலைக்கு அண்மையில் நிலைகொண்டிருந்ததால் கல்லூரிக்கு ஒருவரும் செல்ல முடியாத நிலை ஏற்பட்டது. அதிபர் திரு.க.நாகராசா அவர்கள் உயிர் ஆபத்தையும் பொருட்படுத்தாது அம்பனை சந்தியிலிருந்து பாடசாலை வரை தவழ்ந்து சென்று மிக முக்கியமான ஆவணங்களை எடுத்து வந்து விட்டு தொடர்ந்து ஆசிரியர் திரு.சி.கணேசலிங்கம், திரு.க.காராளசிங்கம், கல்வி சாரா ஊழியர்கள், க.பொ.த 1994 உயர்தர மாணவர்கள் உதவியுடன் மிகுதி முக்கிய ஆவணங்களையும் நூலக புத்தகங்கள், ஆய்வுகூட உபகரணங்கள் போன்றவற்றையும் பாடசாலைக்கு வெளியே கொண்டுவந்தனர். தொடர்ந்து மூன்று இரவுகள் பாரவூர்திகளை அம்பனைச் சந்தியில் நிற்பாட்டிவிட்டு தளபாடங்களையும், முன்பு தவறவிட்ட பாடசாலைச் சொத்துக்களையும் ஏற்றி வந்து தளபாடங்களை அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும், நூலகப் புத்தகங்களையும் ஆய்வுகூட உபகரணங்களையும் சில ஆசிரியர்களின் வீடுகளிலும், முக்கிய ஆவணங்களை அதிபர் வீட்டிலும் வைத்தனர். பாரவூர்திகளில் ஏற்றிவந்த தளபாடங்களையும் ஏனையவற்றையும் இறக்கி ஒழுங்காக வைப்பதற்கு 1994 க.பொ.த.உயர்தர மாணவர்களுக்கு இந்த க.பொ.த.உயர்தர 1995 பிரிவு மாணவர்கள் உதவி செய்தனர். தரம் 6 – தரம் 11 வரை வகுப்புக்கள் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியில் மாலை நேர வகுப்புக்களாகவும், க.பொ.த.உயர்தர வகுப்புக்கள் அருணோதயாக் கல்லூரியின் ஆரம்பப் பிரிவில் காலையிலும் நடைபெற்றன. 1992 ஆகஸ்ட் மாதமளவில் இராணுவம் அளவெட்டி வரை முன்னேறியதால் மீண்டும் பாடசாலை இடம்பெயர நேரிட்டது. 1992 இப்பகுதியில் க.பொ.த.உயர்தர வகுப்புக்கள் கோண்டாவில் நிரு தனியார் நிறுவனத்தில் காலையில் எனது பொறுப்பிலும், இடைநிலை வகுப்புக்கள் இணுவில் மத்திய கல்லூரியிலும், ஆரம்பப் பிரிவு இணுவில் அமெரிக்க மிஷன் பாடசாலையிலும் பிற்பகல் வகுப்புக்களாக அதிபர் திரு.க.நாகராசா பொறுப்பிலும் நடைபெற்றன. இந்த 1995 க.பொ.த.உயர்தர மாணவர்களின் 1992 க.பொ.த.சாதாரணதர பரீட்சைகள் இணுவில் மத்திய கல்லூரியில் நடைபெற்றது. 1993இல் க.பொ.த.உயர்தர கலை, வர்த்தகப் பிரிவு வகுப்புக்கள் இணுவில் அமெரிக்க மிஷன் பாடசாலையில் காலையிலும், விஞ்ஞானப் பிரிவு வகுப்புக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து நிரு தனியார் கல்வி நிறுவனத்திலும் நடைபெற்றன. இந்த 1995 க.பொ.த.உயர்தர மாணவர்கள் 1993இல் இணுவில் அமெரிக்க மிஷன் பாடசாலையிலேயே உயர்தரப் பிரிவு கல்வியை ஆரம்பித்தனர். இணுவில் கந்தசுவாமி கோவிலுக்கருகில் பற்றைக் காடாக இருந்த ஒரு காணியைப் பெற் று துப்பரவாக்கி கல்லூரிக்கு விளையாட்டு மைதானம் ஒன்று உருவாக்கியதில் இந்த 1995 க.பொ.த.உயர்தர மாணவர்களும் பங் காற்றினர். மாணவர்களுக்கு முழுமையான கல்வியை வழங்க வேண்டுமென்று அதிபர், ஆசிரியர்கள், க.பொ.த.உயர்தர பிரிவு மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் அனைவரினதும் விருப்பத்திற்கேற்ப மருதனார்மடத்தில் கொட்டில்கள் அமைத்து தனித்துவமாக இயங்குவதென முடிவெடுக்கப்பட்டது.

மருதனார்மடத்தில் கொட்டில்கள் அமைப்பதற்கான செலவின் ஒருபகுதியை ஈடுசெய்ய 1994 க.பொ.த.உயர்தர பிரிவு மாணவர்கள் தலைமையில் பல குழுக்கள் உருவாக்கப்பட்டு வடமாராட்சி, தென்மாராட்சி உட்பட யாழ்மாவட்டத்தின் சகல பகுதிகளிலும் துவிச்சக்கர வண்டிகளில் சென்று அதிஷ்டலாபச் சீட்டு விற்றதிலும் 1995 க.பொ.த.உயர்தர பிரிவு மாணவர்கள் பங்குபற்றினர். கொட்டில்கள் அமைப்பதற்கான பனைமரங்களைத் தறித்து கொட்டில்களுக்கு ஏற்ற அளவில் துண்டுகளாக்கப்பட்ட மரக்குற்றிகளை உழவு இயந்திரங்களில் ஏற்றி மருதனார்மடம் கொண்டு வந்து இறக்குவதற்கும் 1994 உயர்தர மாணவர்களுடன் இந்த 1995 உயர்தர மாணவர்களும் பங்குகொண்டனர். கொட்டில்கள் அமைத்தபின் ஒவ்வொரு கொட்டிலும் சாக்கினால் மூடியமைத்த வகுப்புகளாக பிரிக்கப்பட்ட போது 1994 உயர்தர மாணவர்களுக்கு இந்த 1995 உயர்தர மாணவர்களும் உதவி செய்தனர். கொட்டில்கள் வகுப்பறைகளாக மாற்றப்பட்ட பின் தளபாடங்கள் உட்பட பல இடங்களில் இருந்த பாடசாலைச் சொத்துக்களைக் கொண்டு வருவதற்கு 1994 உயர்தர மாணவர்களுக்கு 1995 உயர்தர மாணவர்கள் உதவி செய்தனர்.

1995இல் க.பொ.த.உயர்தர மாணவர்களின் ஒன்றுகூடலையும், பாவலர் துரையப்பாபிள்ளை நினைவுதினப் பரிசளிப்பு விழாவையும் மறக்க முடியாத அளவு சிறப்பாகக் கொண்டாடிய பின் க.பொ.த.உயர்தர பரீட்சைக்கு உரும்பிராய் மகா வித்தியாலயத்திலும், கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் தோற்றினர். 1992 ஒக்ரோபரில் பாரிய இடம்பெயர்வு காரணமாக மட்டுவில் சந்திரோதய வித்தியாசாலை இயங்கிய போது இவர்களின் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிவந்தன. பல மாணவர்கள் சிறந்த பெறுபேற்றைப் பெற்றனர். 1995 க.பொ.த.உயர்தர பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் மருத்துவம், பொறியியல் உட்பட பல்வேறு துறைக்கு 55 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகி சாதனை படைத்தனர். இந்த 1995 க.பொ.த.உயர்தர மாணவர்கள் உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் உயர் பதவிகளிலிருந்து கல்லூரியின் வளர்ச்சிக்காகப் பல வழிகளிலும் உதவி செய்து வருகின்றனர். முருகையா கிரிதரன் கல்லூரியின் பழைய மாணவர் தாய்ச்சங்கத்தின் செயலாளராகச் செயற்பட்டு வெளிநாடுகளிலுள்ள பழைய மாணவர் சங்கத்துடன் தொடர்பு கொண்டு பாடசாலையின் வளர்ச்சிக்காக உதவிகளைப் பெறுவதற்கு அதிபருக்கு உறுதுணையாகச் செயற்பட்டார். தற்போது சங்க உபதலைவர்களில் ஒருவராகவும் செயற்படுகின்றார். கல்லூரியைத் தேசிய பாடசாலையாக மாற் றுவதற்கு முன்னின்று உழைத்தவர்களில் இவரும் ஒருவராவார். இந்த 1995 க.பொ.த.உயர் தர மாணவர்கள் இன்னும் பன்னெடுங்காலம் சீரும் சிறப்புடனும் வாழ்ந்து பாடசாலை வளர்ச்சிக்கு தம்மாலான உதவிகளை வழங்க இறையருளை வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசானாக என் ஆசிகள்

ஆசிரியர் நடராஜா காளிதாசன்

1992 O/L, 1995 A/L மாணவர்கள் தங்களது 45 வருடப் பூர்த்தியை எமது மகாஜனக்கல்லூரியுடன் சேர்ந்து கொண்டாடுவது பாராட்டுவதற்குரிய விடயம். நான் இந்த வகுப்பு மாணவர்களிற்கு ஆண்டு 9, 10, 11 வகுப்புகளில் (1990 முதல் 1992 வரை) விஞ்ஞான பாடம் கற்பித்தேன். அத்துடன் அவர்களது வகுப்பு ஆசிரியராக ஆண்டு 11இல் (1992) பணியாற்றினேன். அவர்கள் பலரது முகங்கள் இன்னும் என் மனக்கண்ணில் இருக்கின்றது. இன்றும் தமக்குக் கிடைக்கும் நேரங்களில் என்னைச் சந்திக்க ஆர்வத்துடன் தேடி வருவது எனக்கு மகிழ்ச்சியையும் பெருமையையம் கொடுக்கின்றது. நான் அன்று முழு ஈடுபாட்டுடன் கற்பித்ததன் பலனை அவர்களின் இன்றைய நிலைகள் பிரதிபலிப்பதை எண்ணிப் பெருமிதம் அடைகின்றேன். ஒரு ஆசிரியரிற்கு இதைவிட ஏதும் கூடுதலான பரிசுகளோ பட்டங்களோ கிடைப்பதில்லை.

அன்றைய போர்க் காலச்சூழல்கள் எங்கள் கற்பித்தலிற்கும் மாணவர்களின் கற்றலிற்கும் பெரும் சவால்களாகவே அமைந்தது. அந்த நாட்களில் மின்சாரம் நிரந்தரமாகவே இல்லாமல் இருந்தது. Bicycle தான் எம்மெல்லோரது ஒரே ஒரு வாகனம். பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி, அளவெட்டி அருணோதயாக்கல்லூரி, இணுவில் இந்துக்கல்லூரி என மகாஜனக் கல்லூரி பல இடம் பெயர்வுகளைச் சந்தித்தது. மாலை நேரப் பாடசாலையாக மகாஜனக்கல்லூரி இயங்க இந்தப் பாடசாலைகள் உதவி செய்ததை என்றும் எம்மால் மறக்க முடியாது. நாங்களும் எந்த இடர்பாடுகளினாலும் தளர்வடையாமலும், மனச்சோர்வடையாமலும் இடம்பெயர்ந்து பாடசாலை இயங்கும் இடங்களிற்கு மத்தியான வெயிலையும் தொலைதூரத்தையும் பொருட்படுத்தாது சென்று கற்பித்தோம். எமது மாணவர்களும் அதே ஆர்வத்துடன் வந்து கல்வி கற்றனர். எம் மாணவர்கள் பாடப்புத்தகங்களுடன் தம் அறிவுத்திறனை மட்டுப்படுத்தாமல், விளையாட்டு, கலைத்துறை எனப் பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கினார். அவர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியே கவனித்து ஊக்கமளித்து அவர்களின் முன்னேற்றத்தில் உதவினோம். மகாஜனக் கல்லூரியின் ஒரு சிறப்பான அம்சம், அங்கு கல்வி கற்கும் அநேகமான மாணவர்கள் எல்லோரும் பாடசாலையின் சுற்றாடலைச் சேர்ந்தவர்கள். மாணவர்கள் அவர்களது சகோதரர்கள், பெற்றோர்கள் எல்லோரையும் ஆசிரியர்கள் நன்கு அறிவர். அதனால் அவர்களிற்கு இடையேயான பிணைப்பு இன்னும் கூடுதலாக இருந்தது.

அவர்கள் ஒவ்வொருவருடைய வளர்ச்சியிலும் உதவுவது எமது தலையாய கடமையாய் உணர்ந்து செயலாற்றினோம். அன்று எம்மால் பொறுப்புடன் வளர்க்கப்பட்ட மாணவர்கள் இன்று உலகெங்கும் பரந்தும், விரிந்தும், வெவ்வேறு துறைகளில் பொறுப்புகளுடன் தொழிலாற்றுவதையும், அதே ஈடுபாட்டுடன் தமது குடும்பத்தையும் உற்றார் உறவினர்களையும் கவனிப்பதையும் அத்துடன் நின்றுவிடாது தம்மை வளர்த்த மகாஜனா மாதாவை நன்றியுடன் நினைத்து இந்த விழாவை நிகழ்த்த எண்ணியதை நினைக்கும்போது மிகவும் பூரிப்பாக இருக்கிறது. அவர்களுடைய இந்த முயற்சி வெற்றியடையவும், அவர்கள் வாழ்வில் அடுத்தடுத்த நிலையையெட்டி முன்னேறவும் மற்றவர்களிற்கு முன்மாதிரியாகவும், வழிகாட்டிகளாகவும் வாழவும் வாழ்த்துகிறேன்.

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தை வென்றவர்கள்

ஆசிரியை திருமதி சாந்தினி கரன்

என்னுடைய 95ம் ஆண்டு மாணவர்கள் அனைவருக்கும் முதலில் எனது வாழ்த்துக்கள். உண்மையில் எனக்கு என்ன எழுதுவது என்று தெரியவில்லை. மகாஜனாக்கல்லூரியில் கற்பித்த காலம் எனது வாழ்வில் மறக்க முடியாத காலம். நான் கற்பித்தேன் என்பதை விட, அதிபர், ஆசிரியர்கள், மாணவர்களிடம் இருந்து நிறையக் கற்றுக் கொண்டேன் என்பது தான் உண்மை.

ஆசிரியராகத் தொடங்கிய சிறிது காலத்தில் எமது பாடசாலை அம்பனையில் தொடர்ந்து இயங்க முடியாத நிலை ஏற்பட்டது. அந்த நேரத்தில் மாணவர்களுக்கு நிறையக் கஷ்டங்கள் ஏற்பட்டது. அம்பனையிலிருந்து இணுவிலுக்கு இடம்பெயர்ந்த காலத்தில் என்னால் இன்றும் நம்பமுடியாத விடயம் என்னவென்றால் இந்தச் சிறுவயது மாணவர்கள் எவ்வாறு படிப்பையும் பாடசாலை அமைக்கும் வேலையையும் ஒரே நேரத்தில் செய்தார்கள் என்பது தான். அவர்களின் விடாமுயற்சியும் தன்னம்பிக்கையும் என்னைப் பல வேளைகளில் பிரமிக்க வைத்துள்ளது.

இணுவிலில் பாடசாலை அமைப்பதில் எமது அதிபர் திரு நாகராஜா அவர்களின் பங்களிப்பு மிகப் பெரியது. அவர் இல்லாவிட்டால் நிச்சயமாக இது நடைபெற்றிருக்காது. இடம்பெயர்ந்த காலத்திலும் மாணவர்கள் விளையாட்டுப்போட்டி உட்பட எந்த நிகழ்வையும் நிறுத்தாமல் நடத்தியிருந்தார்கள். இவர்கள் புதிதாக விளையாட்டு மைதானத்தை அமைத்து இணுவிலில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி மறக்க முடியாத ஒன்று.

இன்று எமது மாணவர்கள் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு துறையில் சிறந்து விளங்குவதைப் பார்க்கும் போது மிகவும் சந்தோஷமாக இருக்கின்றது.

பழைய நினைவுகளை மீண்டும் ஞாபகப் படுத்தியதற்கும் எனக்கு எழுத சந்தர்ப்பம் தந்ததற்கும் 95ம் ஆண்டு மானவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து எல்லோரும் வாழ்வில் மகிழ்ச்சியாக வாழ வாழ்த்துகின்றேன்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தன்நிலைகுலையாத மகாஜனா

ஆசிரியர் சிற்றம்பலம் கணேசலிங்கம்

தேமதுரத் தமிழோசை உலகெல்லாம் பரவும் வகை செய்வோம் என்ற பாரதியின் கூற்றிற்கு இணங்க மகாஜன மாதாவின் சிறப்புக்கள் அகிலமெங்கும் பரவிக் காணப்படுகின்றன. காலத்துக்குக் காலம் இடர்சூழும் வேளைகளிலெல்லாம் தன்னிலை குலையாது அடையாளத்தினை இழந்துவிடாது நிமிரும் அன்னையின் தனித்துவம் அவர் பிள்ளைகளால் என்றும் பேணப்படுகின்றது. மொழிப்பற்றும் தேசப்பற்றும் நிரம்பிய பிள்ளைகளைத் தோற்றுவித்த கல்லூரித்தாய் வரலாற்றில் பாரிய இடப்பெயர்வைச் சந்தித்த போதிலும் "உனை நீ அறி" என்ற தாரக மந்திரத்தினை அருளோசையாகக் கொண்டு தன் செயற்பணிகளை நிலை நிறுத்தியதை அனைவரும் எண்ணி வியக்கின்றனர். இதற்கு வலுச்சேர்த்தவர்களில் 1995ஆம் ஆண்டு உயர்தரம் கற்ற பிள்ளைகள் முக்கிய பங்கினை வகித்தவர்கள்.



AB தரம் கொண்ட 1-13 வரையான வகுப்பறை தொகுதிகளில் உயர்தரப் பிரிவுகள் பாடசாலையின் வளர்ச்சியிலும் உயர்ச்சியிலும் முக்கிய பங்கினை வகிக்கின்றன. அந்த வகையில் கலை, வர்த்தக, கணித விஞ்ஞான பிரிவுகளை நிறைவாக உடைய பாடசாலைகள் சிறுவர் நேய அணுகு முறையுடன் கூடிய செயலொழுங்கினைப் பேணும்போது எத்தகைய சூழ்நிலையிலும் "எனது" என்ற நிலை மாறி "எமது" என்ற எண்ணமே வலுப்பெறுகின்றது. மேலும் ஆசிரியர் மாணவர்கள் இணைந்த "எங்களது கல்லூரி" என்ற சிந்தனை நிலைநிறுத்தப்படும்போது முதல் தரப்பாடசாலை என்ற அடையாளம் கிடைக்கின்றது. அவ்வாறான ஒரு அடிப்படையினைத் தனதாக்கிக் கொண்ட கல்லூரியாக எமது கல்லூரி மிளர்கின்றது. பாடசாலையின் முகாமையும், ஆசிரியர்களும் பெரும்பாலானவர்கள் அதன் பிள்ளைகளாக (பழைய மாணவர்கள்) காணப்படுகையில் இது நிலைநிறுத்தப்படுகின்றது. இதுவே இடம் பெயர்ந்து மருதனார்மடம் சந்தியில் மேற்குப்பக்கமாக எமது கல்லூரி "யாழ். மகாஜனாக் கல்லூரி" என்ற அடையாளத்துடன் சிலகாலம் சிறப்பாக இயங்க வழி வகுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய அமைவிடத்தில் மனித பௌதீக வளங்களை ஒன்றிணைத்து பாடசாலை ஒன்றை இயங்க வைப்பது பெரியளவில் வெற்றியளிக்காது எனப்பல கல்வியியலாளர்களும் கூறுகையில் அதனை மறுதலித்து சிறந்த தலைமைப்பற்றுள்ள ஆசிரியர்களும் பண்பு நிறைந்த மாணவர்களையும் கொண்ட குழுமத்தினால் மாற்றி அமைக்க முடிந்தது. கல்வியின் அடிப்படை நோக்கம் சமூகத்திற்கு பயன்மிக்க ஆக்கத்திறன் கூடிய பிரஜைகளை உருவாக்குவதாகும் என்ற தேசிய நோக்கத்தினை எட்டுவதற்கான பல்பரிமாணங்களும் இக்காலத்தில் தோற்றுவிக்கப்பட்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதற்காகப் பல்வேறு செயற்திட்டங்களையும் உருவாக்கி, நடைமுறைப்படுத்துவதில் மாணவரின் பங்கு அளப்பரியது. சொல்லில் அடங்காதது. இடப்பெயர்வில் தனிமனித குடும்ப வாழ்வியலை சீர் செய்வதே பலத்த சவால் நிரம்பியதாக இருந்த வேளையிலும் அதனைப் பின்னிறுத்தி இடம் தேடுவதிலிருந்து, நிதி திரட்டல், கட்டுமான உபகரணங்களைப் பெறல் அதனை நகர்த்தல் என்ற இன்னோரன்ன பணிகளை இரவு பகலாக செயற்படுத்தியவர்கள். இக்காலத்தில் கல்விகற்ற உயர்தர வகுப்புப் பிள்ளைகள், போரியல் சூழலும், பொருளாதார நெருக்கடிகளும் சூழ்ந்த நிலையிலும் மகாஜனாவின் பிள்ளைகள் என்ற உணர்வோடு ஒழுக்க சீலர்களாக இருந்து செயற்பட்ட பெருமைக்குரியவர்கள். கல்வித்துறையில் மேன்மையடைந்த பலநாடுகளின் முன்னிலைப் பாடசாலைகள் இவ்வாறான ஒரு பின்னணியினையே கொண்டிருக்கின்றன. அவுஸ்திரேலியா, பின்லாந்து, நியூசிலாந்து போன்ற நாடுகளிலும் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும் அதனையே சுட்டி நிற்கின்றன. நிறைவான தேர்ச்சித்திறன்மிக்க தலைவர்களால் இதனை அறிவியல் பூர்வமாகச் சாதிக்க முடியும் என வலியுறுத்துகின்றன. மகாஜனாவின் பிள்ளைகளும் இதற்கு ஒப்பானவர்களாக இருந்துள்ளனர் என்றால் மிகையாகாது.

1990களின் பின்னர் பாடசாலை முதல்வர்கள் நவீன பாடசாலை தலைவர்களாகப் பார்க்கப்படுகின்றனர். ஆசிரியர்களும் பல்பரிமாணத் தகைமையாளராக அடையாளப்படுத்தப் படுகின்றனர். இதற்கேற்றால் போல் மாணவர் சக்தி ஒன்றிணைக்கப்பட்டு திரட்சி பெற்றவர்களாகவும் அடிப்படைத் தேர்ச்சிகள் நிரம்பியவர்களாகவம் வடிவமைக்கப்படும்போது தேசிய, சர்வதேசிய இலக்குகள் இலகுவாக எட்டப்படக்கூடியதாக இருக்கும்.

கல்வியை வழங்குபவர்கள் "பரந்த அறிவை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரத்துடன் முட்டி மோதியும், தொடர்பு கொண்டும் செயற்படுகின்றனர்". இத்தகைய பின்னணியுடன் அறிவு, திறன், மனப்பாங்கு மற்றும் பிரயோக ஆற்றலுடைய பிரஜைகளை உருவாக்கும் ஒரு பாரிய பணியில் ஈடுபட்டுள்ளதுடன் அது பல்வேறு இடர்களுக்கு முகங்கொடுத்தே செயற்படுகின்றது. இதனை இலகுவாக வெற்றிகொள்ள அடிப்படைத் தேர்ச்சிமிக்க உயர் விழுமியம் மிக்க மாணவர்கள் கட்டமைக்கப்பட்டிருத்தல் அவசியம். இவ்வாறான பின்னணியைப் பேணுவதற்காகவே தரம் ஒன்றில் இருந்து பிள்ளைகள் குறித்த ஒரு பாடசாலையில் குவியப்படுத்தப்பட்டு நேர்ச்சிந்தனையுடன் வளர்க்கப்படுகின்றனர். எமது கல்லூரியும் இத்தகைய பின்னணியையே கொண்டிருக்கின்றன.

1980 காலகட்டங்களில் உயர்தரப் பிரிவுகளில் உயர் பெறுபேறுகளை கா.பொ.த சாதாரணதரத்தில் பெற்றவர்கள் கணித, விஞ்ஞானப் பிரிவுகளைத் தெரிவு செய்வர். ஏனையவர்களே கலை, வர்த்தகப் பிரிவுகளைப் பெரும்பாலும் பயில்வர். 1990களின் பின்னர் இச்சூழல் முற்றிலும் மாற்றமடையத் தொடங்கியது. க.பொ.த சாதாரண தரத்தில் பெரும்பாலான பாடங்களில் அதிவிசேட சித்தி பெற்றவர்கள் கலைப்பிரிவைத் தேர்வு செய்து பயிலத் தொடங்கினர். இதில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

94/95 உயர்தரப்பிரிவு மாணவர்கள் சிறந்த எடுத்துக்காட்டு. குறிப்பாக செல்விகளான தர்சினி, விஜயா போன்ற மாணவர்கள் (05) அதிவிஷேட சித்திகளுக்கு மேல் பெற்று கலைப்பிரிவைத் தெரிவு செய்து இன்று உயர்பதவிகளில் சேவை புரிகின்றனர். இன்னும் பலர் உள்ளனர். "நவீன கல்விச் சிந்தனையில் அடிப்படைத் தேர்ச்சித்திறன் மிக்க மாணவர் குழாம். ஒன்றிணைக்கப்படும்போது சிறந்த தலைமைத்துவம், கலை, விளையாட்டு, விழுமியம் அனைத்தும் மேம்பாடு பெறக்கூடியதாக இருக்கும். இக்காலத்தில் வெற்றிக்கு இத்தன்மை பேருதவியாக இருந்துள்ளது. எமது பிள்ளைகள் இதன் அடையாளங்களே!

1990களின் பின்னரான காலகட்டம் கற்றலில் பல சவால் நிறைந்ததாகத் தோன்றியது. கல்வி வளங்களின் பாரிய இழப்புக்கள் நெருக்கடியாக மாறத் தொடங்கியது. பிள்ளைகளின் கற்றலில் கருத்தூன்ற முடியாமை, அதீத பயம் தொடர்புபட்ட இனம் புரியாத அச்சம், மாணவரின் இடைவிலகல், மெல்லக்கற்கும் சூழல், உள நெருடலினாலான மன உழைச்சல் போன்றவற்றினை மாற்றியமைக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் எமது அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், தீவிரமாகச் செயற்பட்டனர். குறிப்பாக ஒவ்வொரு மாணவனையும் அவனது குடும்பச் சூழலையும் தனித்தனியாக இனங்கண்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. இதற்காக அரசு, அரச சார்பற்ற நிறுவன ஒத்துழைப்புக்களையும் விரிவுபடுத்திச் செயற்பட எத்தனித்தனர். எதிர்காலம் பற்றிய எதிர்மறையான சிந்தனையும் பூர்விக வாழ்விடங்களை விட்டுப் பிரிந்தமையும் குடும்ப உறவுகளின் இழப்புக்களும் ஒன்றிணைந்து கல்வி முன்னேற்றங்களை வெகுவாகப் பாதித்தன. இதனை வெற்றிகொள்வதில் ஆக்க பூர்வமாகச் செயற்பட்டு இதனை வெற்றிபெற முடிந்ததெனலாம். இதன் வெளிப்பாடாக மாணவர் தொகை வெகுவாக அதிகரித்ததுடன் புதிய மாணவர்களும் நம்பிக்கையுடன் இணைந்து கொண்டனர்.

'வாழ்க்கை நீடித்த கற்கும் சமுதாயத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில்' எமது கல்லூரி கவனம் செலுத்திய பல விடயங்கள் உள்ளன. அதில் குறிப்பாக ஆசிரியர் சமூகத்திலிருந்து விலகியிராமல் அதன் பங்குதாரராக ஆசிரியர்கள் இருந்தமை முக்கியமானதாகும். கற்றல் – கற்பித்தல் கற்கும் சமூகத்தை நோக்கியதாக மாறியது. மாணவர்களின் தேவைகளை இயலுமானவரை நிறைவு செய்து கற்றலுக்கான இலகுவான சூழலை உருவாக்கிக் கொடுத்தமை சிறப்பாகும். ஆய்வுகூடம், நூலகம், விளையாட்டு மைதானம், ஒன்றுகூடல் மண்டபம் என்பன இவற்றுள் முக்கியமானவை. இவற்றை மேம்படுத்துவதில் மாணவரின், பெற்றோரின், பழைய மாணவரின் அர்ப்பணிப்பான ஒத்துழைப்பு என்றும் எண்ணிப்பார்க்கப்படவேண்டியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A/L 95 மாணவர்களின் ஒன்றுகூடல் மலருக்கான வாழ்த்துக்கள்

ஆசிரியர். சுப்பிரமணியம் சயந்தன்

யா/ மகாஜனக் கல்லூரியின் க.பொ.த உயர்தரம் (1995) மாணவர்கள் ஒன்றிணைந்து தாம் கற்ற கல்லூரியை நினைவிலிருத்தி தமக்குக் கற்பித்த ஆசிரியர்களுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

இம் மாணவர்கள் கல்லூரியின் இடப்பெயர்வு காலத்தில் கற்று உயர் நிலை அடைந்தவர்கள். இம் மாணவர்களில் வர்த்தகப் பிரிவு மற்றும் கலைப் பிரிவு மாணவர்களுக்கு அளவையியல் பாடத்தினைக் கற்பித்திருந்தேன். இவர்களில் அனேக மாணவர்கள் A தரப் பெறுபேறு பெற்று எனைப் பெருமைப்படுத்தியவர்கள்.

மகாஜனக் கல்லூரி மருதனார் மடத்தில் இயங்கிய காலத்தில் இவர்கள் உயர்தர வகுப்பில் கற்றவர்கள். இடப்பெயர்வு காரணமாக இணுவில் மத்திய கல்லூரி மற்றும் கோண்டாவில் நிரு கல்வி நிலையம் என்பவற்றில் இயங்கிவந்த உயர்தர வகுப்புக்கள் A/L 94 மாற்றும் 95 மாணவர்களின் முயற்சியினால் அன்றைய அதிபர் அமரர் க.நாகராசா அவர்கள் தலைமையில் பிரதியதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், நலன்விரும்பிகள் எனப்பலரின் உதவியினால் மருதனார் மடத்தில் தற்காலிக வகுப்பறைகளில் எல்லா மாணவர்களையும் ஒருங்கிணைத்து கற்றல் செயற்பாடுகளும் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளும் இடம்பெற்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இம் மாணவர்கள் கல்வியிலும் இணைப்பாடவிதான செயற்பாட்டிலும் தமது திறமைகளை வெளிப்படுத்தி சாதனையாளர்களாகி கல்லூரிக்குப் பெருமை சேர்த்தவர்கள். 1995 இல் பல்வேறு கற்கை நெறிகளுக்கு 57 மாணவர்கள் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டமை அக் காலத்தில் குறிப்பிடக்கூடிய ஒன்றாகும்.

அதேவேளை விளையாட்டுத் துறையில் சதுரங்கம், வலைப்பந்து, கரப்பந்து, உதைபந்து, துடுப்பாட்டம் மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளில் மாகாணம், தேசியம் என சாதித்தவர்கள். மற்றும் தமிழ்த்தினப் போட்டி, ஆங்கில தினப் போட்டி, கணித விஞ்ஞானப் போட்டி, சமூக விஞ்ஞானப் போட்டி போன்றவற்றிலும் தமது திறமைகளை வெளிப்படுத்தி சாதித்தவர்கள்.

அக்காலத்தில் விளையாட்டு மைதானம் இல்லாததால் இணுவில் முருகன் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள காணியை விளையாட்டு மைதானமாக்கி இல்ல விளையாட்டுப் போட்டிகளையும் மற்றும் பயிற்சிகளையும் மேற்கொண்டவர்கள். இவ்விதம் பாடசாலைக் காலத்தில் பல செயற்பாடுகளில் ஈடுபாடு கொண்டு பின் உயர்நிலைக்கல்வி கற்று உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பல பதவி நிலைகளை அலங்கரித்துக் கொண்டிருப்பவர்கள். இம் மாணவர்கள் கல்லூரியின் தேவைகளையறிந்து உதவிவந்திருப்பதும் அறியத்தக்கது. இத்தகைய மாணவர்களின் ஒன் றுகூடல் அவர்களையும் அவர்களுக்குக் கற்பித்த ஆசிரியர்களையும் மகிழ்விக்கும் என்பது உண்மையே. இவர்களின் ஒன்றுகூடல் சிறப்பிக்க வாழ்த்துவதுடன் அம் மாணவர்கள் குடும்பத்துடன் மேலும் மேன்மையடைய சிவகாமிசமேத ஆனந்த நடராஜப் பொருமானின் அருளை வேண்டுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறநெறிக் கல்வி

திருமதி அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன்

"நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம் என்றும் இடும்பை தரும்" என்ற வள்ளுவர் வாக்கிற்கு அமைவாக அற நெறிக்கல்வி என்பது எமது பாரம்பரிய இந்து மதத்தினூடாக மாணவர்களை நல்ல ஒழுக்க நெறியில் வாழ்வதற்கு வளம்படுத்துவதாகும்.

தெய்வத்தை வழிபடல், பெற்றோரை மதித்தல், இன்சொல் பேசுதல், உண்மை பேசுதல், விருந்தோம்பல் போன்ற நல்ல ஒழுக்கங்களை சிறுவயதிலிருந்தே ஊட்டப்பட வேண்டும் என்பதே இதன் நோக்கமாகும். ஆரம்ப காலத்திலே குருகுலம் மாணவர்களுக்குத் தேவையான கல்வியை வழங்கியது காலம் செல்லச்செல்ல திண்ணைப்பாடசாலைகளால் கல்வி அறிவில் மேம்பட்ட பெரியோர்களால் அற நெறிக்கல்வி போதிக்கப்பட்டது. இக்கல்வி முறையானது வளர்ச்சி பெற்று தனித்துவமான எளிமையான போக்கைக் கொண்ட அறநெறிப் பாடசாலையாக மிளிர்ந்து நிற்கின்றது.

அறநெறிப் பாடசாலைகள் 1989 ம் ஆண்டு தொடக்கம் இந்து சமய கலாச்சாரத் திணைக்களத்தின் பதிவு செய்யப்பட்ட அமைப்பாக, சிறப்பான, விரிவான திட்டங்களுடன் அரச அந்தஸ்து பெற்ற பாடசாலைகளாக உருவாகி உள்ளமை இந்து சமய கலாச்சாரத்தை மேம்படுத்தும் சிறந்த நோக்கம் என்பதை எவராலும் மறக்க முடியாது.

அறநெறிக்கல்வியானது 5 வயது தொடக்கம் 19 வயது வரையிலான மாணவர்களுக்கு போதிக்கப்படும் கல்வியாகும். இவை பாலர் கல்வி, இளைஞர் கல்வி, கீழ் பிரிவு, மத்திய பிரிவு, மேல் பிரிவு என 5 பிரிவாக பிரிக்கப்பட்டு வயதுக்கு ஏற்ப பாடசாலைக்கல்விக்குப் புறம்பாக கற்பிக்கப்படும் தனித்துவமான கல்வியாகும். இதனால் மாணவர்கள் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடுவதற்கு இக்கல்வி பிரிவு முறைகள் துணை புரிகின்றன என்று கூறலாம். அறநெறிப்பாடசாலைகளுக்கான பாடத்திட்டம் பாடசாலைகளில் போதிக்கப்படும் பாடத்திட்டங்களுக்கு புறம்பானது. பாடசாலைகளுக்கான பாடத்திட்டம் குறிப்பிட்ட திட்டங்களுடன் நின்றுவிடும். ஆனால் அறநெறிப் பாடசாலை பாடத்திட்டம் சமயத்தை ஒரு சித்தாந்தமாக கொள்ளாது வாழ்வியலோடு இணைந்து வழிகாட்டும் அறநெறி சார்ந்த பாடத்திட்டமாக வகுக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டம் ஆன்மீகம், ஆக்கத்திறன், சமூகம், பண்பாடு, கலாச்சாரம் என ஒழுக்கம் சார்ந்த நெறிகளை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டுள்ளது. இப்பாடத்திட்டம் பொதுவாக ஒழுக்கம் சார்ந்த பாடத்திட்டமாகவே அமைந்துள்ளது எனக் கருத முடியும்!

அறநெறிக் கல்வி குறிக்கோள்களால் வினைத்திறன்களுடன் அடைவதற்கு சிறந்த அடிப்படைக் கற்பித்தல் நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. பிரார்த்தனைகள், தியானமூலம், குழுவாகப் பாடுதல், குழுச்செயற்பாடு, கதை கூறுதல், தேவாரத்தை, பஞ்ச புராணத்தை பண் இசையோடு பாடுவதற்கு பயிற்சி அளிக்கபடுகின்றது. வெள்ளிக்கிழமைகளில் கூட்டுப்பிரார்த்தனைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடத்தப்படுகின்றன. அறநெறிப் பாடசாலைகளில் குழுச் செயற்பாடுகளாக நடத்தப்படும் பேச்சுப் போட்டி, பண்ணிசைப் போட்டி, கட்டுரைபோட்டி என்பன மாணவர்கள் சிறந்த கலைஞர்களாக மிளிரக் கூடிய வாய்ப்புக்களை ஏற்படுத்துகின்றது.

மேலும் அறநெறிப் பாடசாலைகளில் குருபூசைகள், தைப் பொங்கல் விழா, நவராத்திரி விழா போன்ற விழாக்கள் கொண்டாடுவதன் மூலம் மாணவர்கள் சமய விழுமியங்களைப் பின்பற்ற பயன் பெறுகின்றன. இந்து சமயப் பரீட்ச்சைக்கு தோற்றுவதன் மூலம் சமூகத்தில் சிறந்த பிரசைகளாக உருவாக முடிகின்றது.

அறநெறிப் பாடசாலைகள் முழுமையான ஒருங்கிணைந்த ஆளுமைப் பண்புகளை வளர்த்து வருகின்றன.

ஆன்மீக நிலை, மனம் சார்ந்த நிலை, உடல் சார்ந்த நிலை, புத்தி சார்ந்த நிலை, தலைமைத்துவம் சார்ந்த நிலைகள் ஆகிய பன்முகப் படுத்தப்பட்ட நிலை மாணவர்கள் மனித மதிப்புக்களை மலரச்செய்து ஆளுமை வளர்கின்றது. மாணவன் ஆளுமை உள்ளவனாக மிளிர்கிறான். அறநெறி சான்றோர்களாக வாழ்ந்து காட்டிய திருவள்ளுவர், ஆறுமுக நாவலர், சுவாமி விவேகானந்தர் போன்ற மாமனிதர்களின் வாழ்வியல் பின்பற்றி வாழ்வதற்கும் இவர்களைப் போன்ற ஆளுமை உள்ளவர்களாக திகழ்வதற்கும் எமது அற நெறிப் பாடசாலைகள் வழிகாட்டி நிற்கின்றன என்றால் அது மிகையாகாது.

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை பண்பும் பயனுமது" என்ற குறளுக்கு ஏற்ப மனிதன் அன்புடனும் அறச் செயல்களுடனும் மனிதன் மனிதனாக வாழ்ந்து காட்டுவோமாக.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பணிக்கோர் கணிப்பு

கலாபூசணம். விமலாதேவி நாகேஷ்வரன்

கிழக்கு மாகாணத்தில் பத்து வருடங்களாகப் பணி புரிந்த எனக்கு சொந்த மாவட்டத்தில் சேவையாற்றும் வாய்ப்பினை எனது இடமாற்றம் பெற்றுத்தந்தது. மேலும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியில் சேவையாற்ற கிடைத்தமை பெரும் பேறாகும்.மகாஜனாவின் எனது சேவைக் காலத்தில் உயர்தரத்தில் 1995ஆம் ஆண்டு இணைந்து கொண்ட மாணவர்களே எனது முதல் உயர்தர மாணவர்களாக அமைந்தனர் என்பதை இங்கு குறிப்பிட வேண்டும்.ஏனெனில் எனது இசைத்துறைக் கல்வியினை ஊட்டி வளர்க்க கிடைத்த மிகப்பெரும் சந்தர்ப்பமாகும் .அத்தோடு அன்பும்,பண்பும், விடாமுயற்சியும் கொண்ட மாணவர்களாக வந்து சேர்ந்தமை எனக்கு கிடைத்த அதிர்ஷ்டமே. அது இறைவன் தந்த வரப்பிரசாதம் என்றால் மிகையாகாது.

மேலும் மாணவர்களுக்குக் கற்பிக்கும் போது ஆசிரியரும் கற்றுக் கொண்டிருக்கிறார் என்பது கல்வியாளர்களின் கருத்து. அதன் மூலமே ஆசிரியர் தனது ஆசிரிய வளத்தை வளர்த்துக் கொள்கிறார். அத்தகைய சூழலை எனக்குத் தந்தவர்கள் இந்த மாணவர்களே.

இக்காலத்தில்சந்தர்ப்பசூழ்நிலையால்நாம்பலதடைகளையும்சோதனைகளையும்சந்திக்கநேர்ந்தது. இது தவிர்க்க முடியாத வகையில்அமைந்தது.அவ்வேளையில்இடம்பெயர்ந்துஓடிக்கொண்டிருந்த வேளையில் வரிசையிலிருந்து "டீச்சர்" என்று பழக்கப்பட்ட இனிய குரல் என் செவியில் பட்டது. குரல் வந்த திசையை உற்று நோக்கினேன். நாங்கள்" B"தரத்தில் சித்தி அடைந்துள்ளோம் என்ற வார்த்தை என் மனதுக்கு பால் வார்த்தது போன்று இருந்தது .அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. அந்த நினைவு என் வாழ்வில் மறக்க முடியாத ஒன்றாகும்.

மேலும் இந்த மாணவர்கள் இன்று வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருந்தாலும் தாம் பெற்ற இசைத்துறைக் கல்வி தமது வாழ்க்கையில் கை கொடுக்கின்றது என்று கூறுவதைக் கேட்டு நான் பூரிப்படைகிறேன்.

ஏற்றப்பட்ட தீபங்கள் பிரகாசிக்கும் போது தான் ஏற்றிய தீபம் பெருமை பெறுகிறது. அந்த வகையில் நான் மகிழ்வடைகிறேன். 1995 உயர்தர மாணவர்கள் கற்ற காலங்கள் என் மனதில் பசுமரத்தாணி போல் பதிந்து உள்ளது என்றால் அது மிகையான கூற்றாகாது. எங்கு வாழ்ந்தாலும் இம் மாணவச் செல்வங்கள் இறைவன் கிருபையால் எல்லா வளங்களும் பெற்று பல்லாண்டு வாழ எனது இதயப்பூர்வமான வாழ்த்துக்கள் உரித்தாகுக.

"கலையின்பமே நிலையின்பமாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் சேவையில் நான் சந்தித்த கல்லூரி

ஓய்வு நிலை கணித பட ஆசிரியர் ஜெ.குமாரதேவன்

எனது சேவைக்காலத்தில் ஐந்து பாடசாலைகளில் வெளி மாவட்டங்களில் சேவையாற்றி, ஆறாவது பாடசாலையாக 1989ம் ஆண்டு மகாஜனக் கல்லூரி தெரிவு செய்தேன். தெரிவின் போது ஒரு நல்ல பாடசாலையைப் பெறுவதற்காக கல்வித் திணைக்களம் சென்றிருந்தேன். அன்றைய தினமே யா/மகாஜனக் கல்லூரி தெரிவு செய்து, அதிபர் க. நாகராசா அவர்களையும் கல்வி அதிகாரி அறிமுகப்படுத்தி வைத்தார். அப்போது அதிபர் என்னிடத்தில் பல கேள்விகளைத் தொடுத்து, ஒரு நேர்முகப் பரீட்சை வைத்து தெரிவு செய்தார் என்றால் அது மிகையாகாது. அப்போது நான் உணர்ந்து கொண்டேன், அதிபர் பாடசாலையில் எவ்வளவு அபிமானம், அக்கறை கொண்டுள்ளார் என்பதனை. அதன்படி நான் கணிதபாட ஆசிரியராக 1989 ம் ஆண்டு ஆனி மாதம் 1ம் திகதி நியமனம் பெற்றேன்.

அப்போதைய பாடசாலை நிர்வாகம், திருமதி. துரைச்சாமி ஆசிரியை ஓய்வு பெற்றதன் நிமித்தம் வகுப்பு 8A இற்கு கணிதபாட ஆசிரியராகவும், வகுப்பு ஆசிரியராகவும் என்னை நியமித்தது. அக் காலப்பகுதியில் வகுப்பு 8A கல்லூரியின் விடுதியில் இயங்கி வந்தது. வகுப்பின் முதல் நாள் மாணவ, மாணவிகளைச் சந்தித்த போது மிகவும் உற்சாகத்துடன், மகிழ்ச்சியாக என்னை வரவேற்றார்கள். இவர்களின் செயற்பாடுகள் என்னைக் கவர்ந்தது. இவர்கள் திறமையானவர்கள், நல்ல நிலைப்படுத்தலாம் என அன்றே எண்ணினேன். அவர்களுடன் அன்பாகவும், அதே வேளை கண்டிப்பாகவும் நடந்துகொண்டேன். அக் காலப்பகுதியில் மதிய உணவு வழங்கப்பட்டது. அதற்கு பொறுப்பாக மாணவ, மாணவிகளைத் தெரிவு செய்து வழி நடாத்தினேன். நாட்கள் செல்ல மாணவர் அடைவு மட்டம் உயர்ந்து செல்வதையும், கல்வியில் துலங்கல் தெளிவாகத் தெரிவதையும் அறிந்து கொண்டேன். இக் கால கட்டத்தில் நாட்டில் அசாதாரண சூழ்நிலை காணப்பட்டது.

1990ம் ஆண்டு காலப்பகுதியில் ஒரு நாள் நூலகத்தில் நானும் சில ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களும் நூல் வாசித்துக் கொண்டிருக்கும் போது கல்லூரியின் தென் திசையில் துப்பாக்கிச் சத்தம் கேட்டது. அப்போது சில சன்னங்கள் நூலகத்தின் சுவரைத் துளைத்தது. மாணவர்கள் பயந்து சத்தமிட்டார்கள். உடனே மாணவர்களை நிலத்திலே படுக்கச்சொல்லி, யுத்தம் நிறைவுற்றதும் மாணவர்களைப் பாதுகாப்பாக வீடுகளுக்கு அனுப்பி வைத்தது இன்றும் என் நினைவிலுள்ளது. பின்பு 1990ம் ஆண்டின் நடுப்பகுதியில், கல்லூரியினை யாழ்/பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் மாலை நேர பாடசாலையாக நடாத்துவதற்கு எங்கள் அதிபர் திரு. க. நாகராசா அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார். அக் காலகட்டத்தில் நான் நல்லூரில் இருந்து துவிச்சக்கர வண்டியில் சென்று கல்வி கற்பித்தேன். ஒவ்வொரு நாளும் துவிச்சக்கர வண்டியில் வரும் சிரமத்தை உணர்ந்து, அதிபர் அவர்கள் ஒன்று விட்டு மறு நாள் வருவதற்கு ஒழுங்கு செய்து தந்தார். பின்னர் சில காலம் யாழ்/அருணோதயக் கல்லூரி கட்டடத்தில் இயங்குவதற்கும், பின்பு இணுவில் மத்திய கல்லூரி கட்டடத்தில் சில காலம் இயங்குவதற்கும் ஒழுங்கு செய்து, இறுதியில் மருதனார்மடம் சந்திக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருகாமையில் காணி ஒழுங்கு செய்து, 1994 ம் ஆண்டு கொட்டில் அமைத்து தமது சொந்த கொட்டிலில் மாணவர்கள் கற்பதற்கு ஒழுங்கு செய்து தந்த பெருமை அதிபர் திரு க.நாகராசா அவர்களையே சாரும். அவருக்கு மகாஜனா கல்விச் சமூகம் கடமைப்பட்டுள்ளது என்று சொன்னால் அது மிகையாகாது. இக் கொட்டிலில், 1989 ம் ஆண்டு 8 A யில் பொறுப்பேற்ற மாணவர்களுக்கும், பிற மாணவர்களுக்கும் யுத்த காலத்தில் விடுபட்ட வகுப்புக்களை ஈடு செய்வதற்காக மாணவர் மேலதிக வகுப்புக்களை ஒழுங்கு செய்து கற்பித்தேன். இம் மாணவர்கள் 1992 ம் ஆண்டு 11A வகுப்பில் இருந்து G.C.E (O/L) பரீட்சைக்கு தோற்றினார்கள். பரீட்சையில் நல்ல பெறுபேறுகளைப் பெற்று, அனேகமாக எல்லா மாணவர்களும் சித்தி எய்தி, க.பொ.த (உ/த) கற்பதற்கு பல்வேறு துறைகளைத் தெரிவு செய்தார்கள். உயர்தரம் (A/L) கற்கும் காலத்தில் கல்வி, விளையாட்டு மட்டுமன்றி , நாடகம், சங்கீதம், நடனம் ஆகிய பல்வேறு செயற்பாடுகளிலும் அதி தீவிரம் காட்டி, கல்லூரியில் பல சாதனைகள் படைத்தார்கள். 1995ம் ஆண்டு G.C.E (A/L) பரீட்சைக்கு தோற்றி கூடுதலான மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று கல்லூரிக்குப் பெருமை சேர்த்தார்கள்.

இத்தகைய சாதனை படைத்த மாணவர்கள் தற்போது பல துறைகளில், பல பதவிகளில் பிரகாசித்துக்கொண்டிருப்பது கற்பித்த ஆசிரியர்களுக்கு மனநிறைவைக் கொடுத்துள்ளது மட்டுமன்றி, அவ் ஆசிரியர்களை மறவாது அவர்களைக் கௌரவிக்க வேண்டும் என்ற எண்ணமும், மேலும் அவர்களிடத்தில் ஆசிகள் பெறவேண்டும் என்ற சிந்தனையும் பாராட்டுக்குரியது. இத்தகைய சிறப்புக்குரிய மாணவர்கள் வாழ்க்கையில் மேலும் பல சிறப்புக்களைப் பெற்று, பல்லாண்டு காலம் வாழ வேண்டும் என்று வாழ்த்தி விடை பெறுகிறேன்.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# A Trip Down Memory Lane

**Mrs Chandradevi Ratnam**

One day during my retired life, while relaxing in an armchair, enjoying the gentle breeze under our Neem tree, my thoughts carry me away to the days of long ago. It brought me memories of the time I was at Mahajana as a teacher.

Mahajana College offered scope for the study in various fields such as Languages, Science, Maths, Fine Arts, Sports, Oratory, Debates and so on. It excelled academically as well as in sports. Needless to say, the special group of teachers who had been given the opportunity to teach at Mahajana worked hard to the expectations of the principals and produced excellent results. The school was shining as the northern star in the northern region of the Jaffna peninsula.

I began to reminisce the proud moment when I had been posted as an English teacher to this reputed school. When I was appointed, I realised the fact that Mahajana was a prestigious school since of old times and I was proud and excited to be posted as a teacher there. I performed my duties sincerely and with dedication. I remembered the time I had spent teaching the kids, especially the after-school classes, weekend classes and holiday classes in addition to the usual classes at school. My memory also took me back to the times when I used to train students in oratory, recitation, reading and dramas as part of interschool competitions, inter-house competitions or for the special occasions such as Founders Day. These times remain evergreen in my memory. Despite the challenges they presented and the additional work that came with it, I enjoyed these moments most during my career.

Then my memory recollected the two great celebrations held annually in the school. These days coincided with the prize giving for the secondary school and the primary school. The Founders Day, which was also referred to as the Thuraiappah Day, held in June and Jayaratnam Day, held in October. Eminent personalities are invited as chief guests. The first part of the day is the prize giving. The prize winners walk up to the stage and receive their prizes from the celebrated guests. Stage performances follow the prize giving. Performances in the forms of dramas, music recitals, dances, speeches are staged. I usually work in preparing students for various English performances for this day. This was a special day for me too, as I love seeing my students in action, putting into practice all their hardwork leading up to the event.

I fashioned plays involving interested students who were really thrilled to participate in an English play. In addition to plays, there were also other forms of creations



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

such as speeches, dialogues and individual performances. Practice and training the students was always a difficult task, but the end result was so promising and well appreciated by the audience. One of the performances I staged during my time was a play named "Opportunity Knocks". The chief guest noted that the standard of the play was really high and highlighted that the pronunciation throughout the play was extremely good and was up to the international standards. Upon hearing this, I felt so proud of my students. My participation in the preparation of these performances made me so happy that I just cannot forget these times.

These were the happiest times of my service at Mahajana. I was disheartened when my thoughts drifted through to the tough times Mahajana faced, owing to the war situation. It was a time when untold difficulties had to be put up with. The school had to face displacements and we functioned at different schools. This caused much inconvenience to both teachers and students. Mahajana did not lose heart. It braved the situation and continued to work through the formidable task of regrouping and operating with the full support of the principal, teachers and students. After a period of several displacements and after realising that running the school at different places was not proving to be fruitful, it was decided that Mahajana needed its own place independently of other schools. A large plot of land was obtained with the help of well wishers in Marudanar Madam so that we could have a permanent location for Mahajana. Construction work started immediately. Everyone was concerned about building a school from scratch with limited resources. In a short amount of time, sheds were put up with the effort and energy of our students. The entire project was a grand success. This all became possible because of the dedicated efforts of the Advanced Level students, teachers and the principal. They organised a ticket show and went from door to door selling tickets to raise funds towards rebuilding the school. What a laudable enterprise!

We started school at Marudanar Madam Mahajana with so much pride. I was extremely happy to have been able to conduct the English Day at the Marudanar Madam Mahajana. I still have fond memories of the number of performances and the large audiences we had. It was a grand occasion, and it was appreciated by many. I would like to take this opportunity to thank all the English teachers and other teachers who contributed towards the success of this day.

After an undisturbed period at Marudanar Madam, we were finally allowed to get back to our very own Mahajana in Tellippalai. Parents, teachers and students strived hard to bring back order. Finally, order did come with the full support of the OSAs, SDS other such institutions.

It was a remarkable recovery. Normalcy was restored gradually and at present, Mahajana is shining in every field of study and sports activities. I have now come to the end of my daydream because I have ended my teaching service at Mahajana by this time. Come what may, my attention is still focussed on the progress of this great


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

school. It is exhilarating to know that Mahajana has progressed by leaps and bounds, setting the standards in areas such as education as well as in sports and athletics examinations, quizzes, speeches, football, cricket, track and field to name a few. I feel honoured and proud that all my children studied in this great institution.

In conclusion, let me thank the students of A/L 95 batch for giving me the honour of writing an article for their souvenir. I take this opportunity to mention that these students have contributed immensely with dedication and sacrifice towards the welfare of their alma mater during difficult times. I am certain, with the full support of the old students, Mahajana will reach great heights.

Long live Mahajana! Long live the principals, teachers and students who made the school what it is today.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My first Best class at Mahajana

**Mrs Indramathy Ramachandra**

We come across a lot of people during our life span. We may meet relatives, neighbours, friends, old people, young people, children and students. But some of them have got fixed in our minds. As a teacher I taught a lot of students. Among them, I consider the students of 95 A/L batch of Mahajana College as my first best class.

When I came to my alma mater in 1987 as an English teacher, this particular class was given to me in grade 7A. We had to continue teaching in the same class until grade 11. Very smart, active and cute little children, ready to respond for any question, asked by any teacher, whether it was right or wrong. That was the most appropriate reason for the special affection, I had for them. During my time of teaching, I noted that the students of this batch were extraordinary.

I still remember the faces of most of the boys and girls. Some of them I meet very often; some very rarely; I have the contact of many in the FB. Now after 27 years I have seen a lot of changes in them. Change in appearance, manner of speech, behaviour, conduct and every thing changed. I feel very happy and proud when I meet them. They never hesitate to approach me and talk to me. I have the opportunity of meeting the children of some of these students at the pre schools, as I used go there for monitoring and guiding the English teachers. I feel it a great pleasure to see them voluntarily coming out with the correct answers which remind me of their parents.

Teaching of English was difficult indeed. Most of the students were not interested in learning English; a few of them were really keen; the others occupy themselves in doing the work of other subjects during English period. I had to be very tactful to get the attention of all the students.

I am really very happy to note that this batch of students produced 11 distinctions in English in the GCE (O/L) examination. It was a remarkable success during that time. The students of this class participated in the English Day competitions and won places at divisional, zonal and district levels. I can still recall that they participated in a Role play titled "How to communicate in the current world "and got the 2nd place at the district level.

Followed by the 94 A/L batch, these students conducted the Teachers' day as a very grand function. I can even now view how we were garlanded at the Maruthanarmadam Vairavar temple after the special poojah and were welcomed to our displaced school

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

with eastern and western band music. We, teachers were honoured abundantly on that day.

It was during their period the college shone well in the interact club. They published a book and brought fame to our college. They also participated in the inter-School debates and drama competitions and won places.

I shall be failing in my duty in writing this article, if I don't touch the contribution they offered in building up the cadjan sheds like the real Mahajana College at Maruthanarmadam. During the war time, together with the 94 A/L batch the students toiled hard in collecting funds and erected the sheds to form classrooms and other necessary sheds for the whole school. When they were badly in need of a playground, the students found a land which was used to be a pond near Inuvil Kandasamy temple and with great effort they turned it into a playground and had the sportsmeet there. Since the playground was not enough for the March Past practice of five houses, I still remember the athletes had their practice in the Inuvil temple premises. Now-a-days in the western education the students learn more outside the classroom. But these students had already practised learning outside the classroom and playground.

95 A/L batch of students were not only good in their studies, but also in sports, games and extra curricular activities. During their time the school marched in leaps and bounds in the whole curriculum.

Now we can see the Mahajanans in very popular positions in every nook and corner of the world, bringing fame for their alma mater.

This particular batch is not an exception for it. They are a significant group in U.K, Canada, France, Singapore, Malaysia, Australia, Sri Lanka and so on.

They are celebrating a get together after 27 years of Schooling. Congratulations and all my best wishes to have a wonderful function.

Glory to the Mahajanans!
Long Live the 95 A/L Batch!
Principals and Teachers!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவர் ஆக்கங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனாவுடன் பயணித்த நாட்கள் (1982 தொடக்கம் 1995 வரை)

உமா தம்பிஜயா

மாணவப் பருவத்தை நினைத்துப் பார்க்காதவர்கள் யாரும் இலர். இன்று, கூடப்படித்த மாணவர்களும் எம்மை ஆளாக்கிய அதிபர், ஆசிரியர்களும் வெவ்வேறு இடங்களில் சிதறுண்டு போயினர். அதில் சிலர் இன்று எம்முடன் இல்லை என்பதும் துயரமான விடயம். இன்றைய நாட்களில், திக்குத் திக்காக உலகெங்கும் பரவியிருக்கும் எங்களை, சமூகவலைத்தளங்கள் இணைத்துக் கொண்டிருக்கின்றன. எனினும் பாடசாலைக் காலத்தில், சுதந்திரமாகச் சிறகடித்துப் பறந்த காலங்களை இன்றைய சமூகவலைத்தளங்கள் என்றும் ஈடுகட்ட முடியாது. துரித வேகத்துடன் இயந்திரமாக நகர்ந்து கொண்டிருக்கும் எம் தற்போதைய வாழ்க்கைப்பயணத்தில், சில நிமிடங்கள் ஒதுக்கி, நாம் ஒன்றாகக் கூடித்திரிந்த அந்தப் பொன்னான காலங்களை மீண்டும் நினைத்துப் பார்க்க ஒரு அருமையான சந்தர்ப்பம் எனக்குக் கிடைத்திருக்கின்றது.

"உங்கள் வீடு எங்கு உள்ளது என்று யாராவது கேட்கும்போது மகாஜனாக்கு முன்னால்" என்று பெருமையுடன் கூறுவதுண்டு. ஆம்! மகாஜனாவின் அருகிலேயே வளர்ந்தவள் நான்! 14 வருடங்கள் மகாஜனா மாதாவின் மடியில் தவழ்ந்தது என் வாழ்நாள் முழுவதும் மனதை விட்டு நீங்காத நினைவலைகள்.

1982ஆம் ஆண்டு தை மாதம் முதல் கிழமை என் அண்ணாக்களுடன் பாடசாலைக்குச் சென்றது இன்றும் என் மனக்கண்ணில்! எங்கள் வகுப்பு கிணற்றடிக்குப் பக்கத்தில் அமைந்த முதல் வகுப்பு. முதன்முதலாக பாடசாலைக்குச் செல்லும் பிள்ளைகளுக்குள்ள பயமோ, பதட்டமோ என்னிடம் சிறிதளவும் இல்லை. மாறாக நான் மிகுந்த ஆவலுடனேயே முதல் நாள் வகுப்பிற்குச் சென்றேன். காரணம் என் அயல்வீட்டு நண்பிகளான பாமினியும் பிரியதர்ஷினியும் என் வகுப்பு சக மாணவிகள். எமது பாலர் வகுப்பு ஆசிரியை, தளையசிங்கம் ஆசிரியை அன்பாக எம்மை அரவணைத்தார். எம் சிறுவயதுக் குறும்புத்தனங்களை (நான் இதற்கு விதிவிலக்கு), அவரினால் பொறுமையுடன் சமாளிக்கமுடியும் எனப் பாடசாலை நிர்வாகம் நினைத்திருக்குமோ!

அடுத்து முதலாம் வகுப்பு, இரண்டாம் வகுப்பென முன்னேறினோம். முதலாம் வகுப்பு ஆசிரியை பொன்னுத்துரை ஆசிரியை கண்டிப்புடன் கூடிய கனிவான ஆசிரியை. இரண்டாம் வகுப்பு ஆசிரியை பத்மா ஆசிரியை எப்போதும் புன்முறுவலுடன் இருப்பார்.1984 ஆம் ஆண்டில் எனது அப்பா காலமானார். ஒரு வாரம் நான் பாடசாலைக்குச் செல்லவில்லை. மீண்டும் பாடசாலைக்குச் சென்றபொழுது பத்மா ஆசிரியை ஆறுதல் வார்த்தைகள் கூறியது இன்று ஞாபகத்திற்கு வருகிறது.

மூன்றாம் வகுப்பிலேயே எமக்கு முதன்முதலாகத் தரங்கள் (A & B divisions) பிரிக்கப்பட்டன. அன்று வரை ஒன்றாகக் கூடியிருந்த நாங்கள் இரண்டாகப் பிரிந்தோம். அந்த நாட்களில் இரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரமேஸ்வரி ஆசிரியைகள் இருந்தார்கள். இருவரும் சிறு வயதுப் பிள்ளைகளுக்குப் பாடம் நடத்துவதில் ஒருவருக்கு ஒருவர் சளைத்தவர்களில்லை. ஒரு பரமேஸ்வரி ஆசிரியை A பிரிவுக்கும் மற்ற பரமேஸ்வரி ஆசிரியை B பிரிவுக்கும் கல்வி கற்பித்தனர். ஆங்கிலமும் விஞ்ஞானமும் மூன்றாம் வகுப்பில் அறிமுகப்படுத்தப்பட்டன. இந்திரசிங்கம் ஆசிரியர் சிறிது காலமும், டுபாய்ட் ஆசிரியை சிறிது காலமும் ஆங்கிலம் படிப்பித்தார்கள். இந்திரசிங்கம் ஆசிரியை சிறிது காலமும் லோகநாதன் ஆசிரியை சிறிது காலமும் விஞ்ஞானம் படிப்பித்தார்கள்.





ஆண்டுதோறும் நடைபெறும் பாவலர் துரையப்பா நினைவுதினப் பரிசளிப்பு விழா, அமரர் ஜெயரத்தினம் நினைவுதினப் பரிசளிப்பு விழா நிகழ்ச்சிகளுக்காக நான் எப்போதும் எதிர்பார்ப்புடன் காத்திருப்பேன். அத்தனை மாணவர்கள், ஆசிரியர்கள் பெற்றோர்கள் முன்னிலையில், பலத்த கரகோஷங்களினூடாக மேடையில் ஏறிப் பரிசு வாங்குவது எப்போதும் எனக்கு இனிப்பான விடயம். அது தவிர, மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் களை கட்டும். அவற்றிற்குப் பொறுப்பான ஆசிரியர்கள் மிகுந்த பிரயாசையுடன் மாணவர்களைப் பயிற்றுவித்து மேடையேற்றுவர்.

மூன்றாம் வகுப்பில் எங்களுக்கு சாரணர் இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. ரோகினி ஆசிரியை சாரணர்களிற்குப் பொறுப்பானவர். ஆண்பிள்ளைகள் குருளைச் சாரணர்களிலும் பெண்பிள்ளைகள் சிறுதோழியர்களிலும் சேர்ந்தோம். இக்குழு எனக்குப் பல புதிய அனுபவங்களைக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றுத்தந்தது. மேலாக, எனக்கு மேல் வகுப்பு, கீழ் வகுப்பு மாணவிகளுடன் பழகுவதற்கும் நல்ல சந்தர்ப்பத்தைத் தந்தது. சிறுதோழியர் நடவடிக்கைகளில் நான் ஆர்வத்துடன் கலந்துகொண்டேன். பின்னர் சிறுதொழியர் தலைவியாகவும் இருந்தேன். சிறுதோழியர் வாழ்க்கை எனக்குத் தலைமை தாங்கும் திறமையை வளர்த்தது. அத்துடன் நில்லாது அடுத்தடுத்த வகுப்புகளில் வழிகாட்டிகளில் சேர்வதிலும் என்னை ஊக்குவித்தது. வழிகாட்டிகள் தலைவியாகவும் பொறுப்போடு செயற்பட்டேன். ஒவ்வொரு பாடசாலை நிகழ்சிகளிலும் கௌரவ விருந்தினரையும் அவருடன் கூடவரும் அதிபரையும் ஆசிரியரையும் வரவேற்க்கும் பொறுப்பு குருளைச் சாரணர்கள், சிறுதோழியர்கள், சாரணர்கள், வழிகாட்டிகளுக்குரியது. கௌரவ விருந்தினர்கள் மகாஜனாவின் பழைய மாணவர்களாக இருப்பது வழமை. சிறுதோழியராக இருந்து கௌரவ விருந்தினரை வரவேற்கும்போது பிற்காலத்தில் நாமும் ஒருநாள் கௌரவ விருந்தினராகப் பாடசாலைக்கு வர முடியும் என நினைப்பதுண்டு. சிறுதோழியர், வழிகாட்டிகள் குழுக்களில் எங்களுக்கு survival skills அந்தந்த வயதிற்கேற்ப சொல்லித்தரப்பட்டது. கயிறுகளில் முடிச்சுகள் போட்டுப் பழகினோம். எந்த ஒரு வசதிகளும் இல்லாத போது எவ்வாறு தேநீர் போடுவது என்று பழகினோம். அதேபோல் சாரணியர்களும் வெவ்வேறு எமடைடள பழகினர். கொட்டகைகள்(tents) போட்டுப் பழகியது அவற்றில் ஒன்று.

ஐந்தாம் வகுப்பு காலப்பகுதிகளில் தான் "வகுப்பு" என்ற வழக்கு மாறி "ஆண்டு" என்ற வழக்கு வந்தது. நாம் ஆண்டு ஆறிற்குச் (வகுப்பு ஐந்து) சென்றோம். 6ம் ஆண்டில் இன்னும் பல புதிய மாணவர்கள் வந்து சேர்ந்தனர். புலமைப் பரிசில் பரீட்சை என்பது இப்போதும், அப்போதும், எப்போதும் மாணவர்களுக்கு ஒரு சவாலாகவே இருக்கும். முதன்முதலாக தேசிய மட்டத்தில் எடுக்கும் அந்தப் பரீட்சைக்கு பெற்றோர்களினதும் ஆசிரியர்களினதும் விடாமுயற்சியில் நாங்கள் பயிற்றுவிக்கப்பட்டுக் கொண்டிருந்தோம். அந்த வகையில் தங்கம்மா ஆசிரியர் கணிதமும் பாலசுப்ரமணியம் ஆசிரியர் தமிழும் படிப்பித்தனர். அக்காலச் சூழ்நிலைகள் பரீட்சையைப் பிற்போட்டுக்கொண்டிருந்தன. எனினும் அடாது மழையடித்தாலும் விடாது குடை பிடிப்போமென நாமும் தொடர்ச்சியாக எம்மைத் தயார்படுத்தினோம். ஆசிரியர்களும் பிரத்தியேகமாக சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வகுப்புகள் நடாத்தினர். புலமைப் பரிசில் பரீட்சை, கல்வியெனும் நெடுஞ்சாலையில் பெரிய திருப்புமுனையைக் கொடுப்பது அல்ல எனினும், பரீட்சைப் பெறுபேறுகள் வந்து அறிவுப்பு பலகையில் எனது பெயரை, பிரகாசன், செந்தில் குமரன், கௌரி ஷங்கர், அனுஷ ாவுடன் பார்த்தபோது பூரித்துப் போனது உண்மை தான்.

சைவமும் தமிழும் கலையும் மகாஜனா மாணவர்கள் ஒவ்வொருவரிலும் கலந்திருப்பது அப்போது எனக்குப் புரிந்திருந்ததோ இல்லையோ பாடசாலை விட்டு அகன்று பல்கலைகழகத்தில் படிக்கும் போதும் அதன் பின்னான தற்போதைய வாழ்க்கையின் போதும் அது நன்றாகவே தெரிந்தது. பாடசாலை ஆரம்பிக்கும் போதும், முடியும் போதும் தேவாரம் ஒலிபெருக்கியில் ஒலிபரப்பாகும். இனிமையான குரல் வளமுள்ள நிறைய மாணவர்கள் எமது பாடசாலையில் கல்வி கற்றனர். அத்துடன் பாடசாலையில் அமைந்துள்ள நடராஜர் கோயிலைத் தரிசித்த பின்னே நாம் எமது வகுப்புகளிற்குச் செல்வோம். ஒவ்வொரு நாளும் கோயிலில் பூஜை நடைபெறும். எமக்கு எல்லாம் பிடித்த விநாயகரட்ணம் ஆசிரியர் ஆறாம் வகுப்பில் சைவசமய ஆசிரியர் ஆனார். அவர் வகுப்பு ஆரம்பிக்கும் போதும் முடிக்கும் போதும் நாம் எல்லோரும் எழுந்து நிற்க, நன்றாகப் பாடக் கூடிய மாணவர் ஒருவர் தேவாரம் படிப்பர். தேவாரம் பாடமாக்குவது என்று நான் ஒருபோதும் நேரம் செலவழித்தது இல்லை. எம் பாடசாலைச்சூழலும் நடைமுறைகளும் தேவாரத்தையும் திருவாசகத்தையும் எம்முள்ளே விதைத்தன. விநாயகரட்ணம் ஆசிரியர்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடமாக்கிய தேவாரங்களைப் பார்க்காமல் எழுதி வைக்கச் சொல்லித்திருத்தித் தருவது எம்மை self-regulation, self-discipline உடன் வளர வழிகாட்டியது. அத்துடன் அவர் ஒவ்வொரு வருடமும் நடைபெறும் சைவ பரிபாலனப்பரீட்சைகள் மற்றும் சைவசமயத்துடன் தொடர்பான போட்டிகளிற்குப் பொறுப்பானவர். அவரின் உந்துதலில் எல்லாப் போட்டிகளிலும் பங்குபற்றினோம். வெற்றி பெற்றோம். பேச்சுப்போட்டிகளில் பங்குபற்றும் ஆர்வத்தைத்தூண்டிய பெருமையும் விநாயகரட்ணம் ஆசிரியரையே சாரும். அந்த வயதில் மெருகேற்றப்பட்ட பேச்சாற்றல் இப்போதும் எனது தொழிலில் உதவி புரிகின்றது. "பசித்திரு, தனித்திரு, விழித்திரு, பதவி உன்னைத் தேடி வரும்" என்று விநாயகரட்ணம் ஆசிரியர் சொல்லியிருக்கிறார். விநாயகரட்னம் ஆசிரியரின் ஏற்பாட்டில் 1988 இல் மகாஜனா மாணவர்கள் திருக்கேதீஸ்வரம் கோயிலுக்குச்சுற்றுப் பயணம் மேற்கொண்டது மிகவும் மகிழ்ச்சியான அனுபவம். அது தான், நான் முதலாவதாக யாழ்மாவட்டத்தை விட்டு வெளியில் சென்ற அனுபவமும் கூட! விநாயகரட்ணம் ஆசிரியர் தன் வாழ் நாள் முழுவதையும் எம் பாடசாலைக்கே அர்ப்பணித்த ஆசிரியர்களுள் ஒருவர். அவர் இவ்வுலகை விட்டு நீங்கினாலும், அவருடன் பயணித்த நினைவுகள் எம்மை விட்டு என்றும் அகலாதவை.

எம் பாடசாலைப் பிள்ளைகள் இசைத்துறை, நடனத்துறை, நாடகத்துறை என எல்லாக்கலைகளிலும் சிறந்து விளங்கியவர்கள். ஏனைய பாடசாலை மாணவர்களும் கூட மகாஜனா மாணவர்களின் கலைத்திறனை வியந்து பாராட்டியிருக்கிறார்கள். பாடசாலையைத் தாண்டி எம் மாணவர்கள் வேறு பாடசாலைகளுடன் பல போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியுள்ளனர். சிறு வயதிலிருந்து பாடசாலையில் நடைபெறும் நடன நிகழ்சிகளில் பங்குபற்றியிருக்கின்றேன். நடனக்கலையை சிறு வயதிலிருந்து வேறு வேறு ஆசிரியர்கள் பயிற்றுவித்தனர். சகுந்தலா ஆசிரியரும், ஜெயகௌரி ஆசிரியரும், பின்னர் செல்வி ஆசிரியரும் குறிப்பிடத்தக்கவர்கள். பல்வேறு தருணங்களில் பாடசாலை மேடையில் எங்கள் நடன நிகழ்வுகள் மேடையேறியதுடன் மட்டுமல்லாது, யாழ் நகரிலுள்ள வேறு பாடசாலைகளிற்கும் போட்டிகளிற்காகச்சென்றது.

நவராத்திரி நாட்களில் மகாஜனாக் கல்லூரி விழாக்கோலம் காணும். அதிலும் கடைசி நாளான விஜயதசமி அன்று சிறப்பான நிகழ்ச்சிகள் நடைபெறும்.பாடல்களும், ஆடல்களும், நாடகங்களும், விவாத மேடைகளும் வானைப் பிளக்கும். வண்ண வண்ண ஆடைகளுடன் வகுப்பறைப் பிரசாதங்களை உண்டபின் கண்களிற்கும் செவிகளிற்கும் விருந்தாக நிகழ்ச்சிகளை இரசிப்போம்.

மாதம் தோறும் நடைபெறும் காலை நேர மாணவர் ஒன்றுகூடல்களில் அதிபர், ஆசிரியர்கள் சொற்பொழிவு ஆற்றுவது வழமை. வாழைப்பழத்தில் ஊசியேற்றுவது போல் வாழ்க்கைக்குத் தேவையான உகந்த கருத்துக்களை சிறுபிள்ளைகளுக்கும் விளங்குமாறு உரையாற்றுவது ஆசிரியர்களுக்கே உரிய கலை. அந்தவகையில் கோகிலா மகேந்திரன் ஆசிரியை, ராஜகுலேந்திரன் ஆசிரியர், மற்றும் பல ஆசிரியர்கள் பேசிய விடயங்களை வீட்டில் அம்மாவுடன் பகிர்ந்து கொண்டதும் நினைவிருக்கிறது. கோகிலா ஆசிரியையின் சிறப்பு சிறுவயதிலிருந்தே எமக்கெல்லோருக்கும் நன்கு தெரியும். அவரே எமக்கு விஞ்ஞான ஆசிரியையாக ஆண்டு 6 இல் வந்தபோது எமக்குக் கிடைத்த ஆனந்தத்திற்கு அளவில்லை.

ஆங்கிலத்தில் பேசுவது எமது ஊரில் பழக்கமில்லாத வேளைகளில், ஆங்கிலம் ஒரு வேற்று மொழியாகவும், வெறுமனே பரீட்சைக்குப் படிக்கும் பாடமாகவும் இருந்தபோது, அந்த மொழியையும் இலகுவாக்கியவர்கள் ஆரம்பத்தில் இந்திரசிங்கம் ஆசிரியர், டுபாய்ட் ஆசிரியை, 6ஆம் ஆண்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரட்ணம் ஆசிரியை, அதன் பின் ராமச்சந்திரா ஆசிரியை. இவர்களிடம் ஆங்கிலப்பேச்சுப் போட்டிகள், கவிதைப்போட்டிகளை (English oratory, poetry) அவர்களின் வீடுகளிற்குச்சென்று பயின்றது அவர்களது கடமையுணர்ச்சி பாடசாலை தாண்டியும் இருந்ததை வலியுறுத்துகின்றது. நான் உயர்தரம் படிக்கும் போது English Day இன் நிகழ்ச்சித் தொகுப்பாளராகப் பங்கேற்கும் ஒரு அரிய வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ரட்ணம் ஆசிரியை என் மேல் முழு நம்பிக்கை வைத்துப் பயிற்றுவித்தார். அந்நிகழ்ச்சியின்பின், தன் பாராட்டுகளையும் தெரிவித்தார். ரட்ணம் ஆசிரியையில் வைத்திருந்த மதிப்பு இன்னும் ஒரு படி உயர்ந்தது.

பொதுவாக ஆண்டு 7 இலிருந்து ஆண்டு 11 வரை ஒரே ஆசிரியர்கள் தான் கற்பிப்பார்கள். ஆண்டு 7 இல் துரைச்சாமி ஆசிரியை எமது வகுப்பாசிரியை ஆனார். அவர் கணிதம் கற்பித்தல் ஒரு தனி அழகு. உறுப்பாக, எந்த ஒரு கிறுக்கல்களும் இல்லாமல் எழுதக்கற்றுத்தந்தார். எமது அப்பியாசப் புத்தகங்களுக்கும் Report sheet களுக்கும் உறை போட்டுப் படம் ஒட்டிப் பெயர் எழுதி ஒவ்வொருவருக்கும் தந்தபோது எமக்குத் தலை கால் புரியாத குதூகலிப்பு. அமரத்துவமடைந்த துரைச்சாமி ஆசிரியையின் ஆசிகள் எங்கள் ஒவ்வொருவருக்கும் எப்போதும் கிடைத்துக்கொண்டே இருக்கும்.

ஆண்டு 9 காலப்பகுதிகளில் (1990) நாட்டுப்பிரச்சனைகளால் மாணவர்கள் இடம்பெயர்ந்ததுடன் மட்டுமல்லாது எம் பாடசாலையும் இடம்பெயர்ந்தது. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் மாலை நேர வகுப்புகள் நடைபெற்றன. மானிப்பாயிலிருந்து பண்டத்தரிப்புக்கு உச்சி வெயிலில் சைக்கிள் மிதித்துச்சென்றது மறக்கமுடியாத காலங்கள். அதன்பின் அளவெட்டி அருணோதயக்கல்லூ ரியிலும் இணுவில் இந்துக்கல்லூரியிலும் பாடசாலை நடந்தது. எங்கெங்கு மகாஜனாக் கல்லூரி நடைபெறுகின்றதோ அங்கங்கு நாமும் தேடிப் போய்ப் படித்தோம். மிகவும் அண்மையில் எனக்குத் தெரிந்த ஒருவர் "ஏன் நீங்கள் இடம்பெயர்வு காலங்களில் பாடசாலையை மாற்ற யோசிக்கவில்லை" என்று கேட்கும் போது "எனக்கும் என் குடும்பத்தினருக்கும் அது ஒரு ழிவழைெ ஆகத்தெரியவில்லை" என்று பதிலளித்தேன். ஆம்! மகஜானாவைத் தவிர எதுவும் ஒரு ஊாழஉைந இருக்கும் என்று கூட யோசிக்கவில்லை.

ஆண்டு 8, 9,10,11வகுப்புகளில் ஆனந்தி ஆசிரியையும், குமாரதேவன் ஆசிரியரும், அதன்பின் காளிதாசன் ஆசிரியரும் எமது வகுப்பாசிரியர்களாக இருந்தனர். குமாரதேவன் ஆசிரியர் புதிய ஆசிரியர், மற்றைய ஆசிரியர்களுடன் ஒப்பிடும் போது வயதில் சிறியவர். ஆனால் அவர் எமக்குக் கணிதம் கற்பிக்கும் முறையில் மிகுந்த அனுபவம் தெரியும். எல்லோரையும் அன்புடன் கவனிப்பார். கணிதத்தில் அவ்வளவு நாட்டமில்லாத மாணவர்களைக்கூட அவரது பிரத்தியேகக் கவனிப்பு, கணிதத்தை விரும்பச்செய்யும்.

காளிதாசன் ஆசிரியரின் கற்பித்தல், விஞ்ஞானம் மீது எனக்கு ஆர்வம் ஏற்படுவதற்கு ஒரு முக்கிய காரணம். உயர்தரத்திலும் உயிரியல் விஞ்ஞானம் படிக்க அப்போதே முடிவெடுத்திருந்தேன். அவருடைய நகைச்சுவை கலந்த கற்பித்தல் மாணவர் எல்லோரையும் அவர் பால் இழுத்தது. starch, glucose பற்றிக் கற்பிக்கும் போது, ஏன் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் முன் மாணவர்களிற்கு glucose கொடுப்பது?, ஏன் அவர்கள் சோறு (starch உணவு) சாப்பிட்டுவிட்டு ஓடக் கூடாது? என்று விளங்கப்படுத்திவிட்டு, சோறு சாப்பிட்டுவிட்டு ஓட்டப்போட்டியில் பங்குபற்றினால், ஓட்டப் போட்டியில் வெல்லமுடியாது, ஆனால் போட்டி முடிந்தபின் அவர்கள் இல்லத்திற்கு விரைவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





ஓடிப் போகலாம் என்று சொல்ல, நாம் எல்லோரும் "கொல்" எனச் சிரித்தோம். இதேபோல், அவரது கற்பித்தலில் நகைச்சுவை எப்போதும் ஊடுருவியிருக்கும். அவர் தரும் notes, examக்கு முதல் நாள் விரைவாக ஒரு முறை தட்டிப் பார்த்துச்செல்ல பெரு உதவியாக இருந்தது. விஞ்ஞான விளக்கத்தை மூன்று வரிகளிற்குள் எழுதும் வித்தையையும் அவர் கற்றுத்தந்தார். ஆண்டு 10 இல் ஒருமுறை கணிதத்தில் குறையப் புள்ளிகள் எடுத்திருந்தேன். எனக்கு இன்றும் ஞாபகம் இருக்கிறது. நான் 80 புள்ளிகள் எடுத்திருந்தேன். எங்கள் வகுப்பில் பல மாணவர்கள் நல்ல புள்ளிகள் எடுத்திருந்தனர். நான் அதைப்பற்றி எதுவும் பெரிதாகக் கவலைப்படவில்லை. ஆனால், காளிதாசன் ஆசிரியர், "ஏன் marks குறைந்தது? என்ன நடந்தது? என்று மிகவும் கரிசனையுடன் விசாரித்தார். அப்போது தான் நான் யோசித்தேன், காளிதாசன் ஆசிரியர் தனது பாடத்தை மட்டுமல்ல, மற்றப் பாடங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் எடுக்கும் புள்ளிகளையும் அவதானித்துக் கொண்டிருக்கிறார். என்னுடைய potential என்ன என்பதை என்னை விட அவர் நன்கு அறிந்திருந்தார். அதன்பின் நான் கணித பாடத்தில் கூடுதல் அக்கறை செலுத்தி நிறைய கணக்குகளைச்செய்து பார்த்தேன். காளிதாசன் ஆசிரியர் என் மீது வைத்திருந்த நம்பிக்கையை நான் வீணடிக்க விரும்பவில்லை.

ஆரம்ப காலத்தில் சமூகக்கல்வி கற்பித்த ஆனந்தி ஆசிரியையின் மென்மையான பேச்சு ஒரு வருடல். அதன் பின் குணரட்ணம் ஆசிரியரும் அரியபுத்திரன் ஆசிரியரும் இலங்கை, உலக வரலாறுகள், வரைபடங்களென சமூகவியலைப் புகட்டினார். தமிழ்மொழி கற்பித்தவர் யோகநாதன் ஆசிரியை. அவருடன் விளையாட்டாகப் பேசுவதும், அவருடைய செல்லக்கோபங்களிற்கு ஆளாகுவதும் எப்போதும் எமது ஆண்களே!

இன்டரக்ட் கழகம் (Interact Club) எம் பாடசாலைக் காலத்தில் மிக முக்கியமான ஒரு கழகம். பாடசாலையின் உயர்தர வகுப்பு மாணவர்களும் ஆண்டு 11,10 மாணவர்களும் இன்டரக்ட் கழக அங்கத்தவர்கள் ஆக முடியும். எம்மில் சிலர் ஆண்டு 10 இல் இன்டரக்ட் கழகத்தில் ஆர்வத்துடன் இணைந்து கொண்டனர். இன்டரக்ட் கழகம் பல பொதுச்சேவை சார்ந்த பணிகள் செய்வது வழமை. ஆண்டு 10 வகுப்புகளில் நாம் வீடு வீடாகச்சென்று மதிய உணவுப் பொட்டலங்கள் சேகரித்து உதவி தேவைப்படும் மக்களுக்குக் கொடுத்தது, கஷ்டப்படுபவர்களிற்கு உதவி செய்வதன் முக்கியத்துவத்தை வெறுமனே கற்பிக்காமல், எங்கள் மூலமே அந்தப் பணியைச் செய்வித்து எமக்கு உணர்த்தப்பட்டது.

முதலுதவிப்பயிற்சி (First Aid) எல்லோருக்கும் அத்தியாவசியமான ஒரு அடிப்படைப்பயிற்சி. மகாஜனாக்கல்லூரி அந்தப்பயிற்சியை மாணவர்களிற்கு வழங்கத் தயங்கவில்லை. நாட்டு நிலைமைகள் எமது பலதரப்பட்ட பயிற்சிகளைச் சீராகக் கொண்டுசெல்ல எப்போதும் முட்டுக்கட்டை போட்டுக் கொண்டிருந்தது. அவற்றை மீறி எமது பாடசாலையிலிருந்து மருத்துவபீடத்திற்குத் தெரிவான அண்ணாமார், வேறு முதலுதவியில் தேர்ச்சி பெற்ற அண்ணாமார் எங்களுக்கு theory மற்றும் hands-on பயிற்சிகள் வழங்கினர்.

விளையாட்டில் ஆர்வமில்லாமல் இருந்த என்னை பாலசுப்ரமணியம் ஆசிரியர் 7 ஆம் வகுப்பில் netball பயிற்சிக்கு வருமாறு அழைத்ததன் விளைவாக netball அனுபவம் சிறிதளவு கிடைத்தது. எம் வகுப்பில் நிறைய மாணவிகள் விளையாட்டிலும் netball இலும் திறமை மிக்கவர்கள். வேறு பாடசாலைகளுடன் போட்டி போட்டு உரி உடன் வருவது அவர்களிற்கு மிகவும் சாதாரணமான விடயம்.

நாம் க.பொ.த சாதாரணம் படிக்கும் போது, மகாஜனாக் கல்லூரி இணுவில் மத்திய கல்லூரியில் மாலை நேரப் பாடசாலையாக இயங்கியது. நாட்டின் அசாதாரண சூழல்களால் மாணவர்கள் வெவ்வேறு இடங்களிற்குப் புலம்பெயர்ந்து சென்றிருந்தனர். எனினும் அந்தக் குறிப்பிட்ட அளவு மாணவர்களுக்கும் எந்த ஒரு குறையும் இல்லாமல் வகுப்புகள் நடந்தேறின. ஆசிரியர்கள் மும்முரமாக எங்களை க.பொ.த சாதாரணப் பரீட்சைக்குத் தயார்படுத்தினர். க.பொ.த சாதாரணப் பரீட்சையும் இணுவில் மத்திய கல்லூரியிலேயே நடந்தது. அதன்பின் நாம் எமது பெறுபேறுகளையும் அங்கேயே பெற்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்விப்பயணத்தின் முக்கிய திருப்புமுனையாக அமையும் க.பொ.த உயர்தரத்தைத் தெரிவு செய்யும் காலம் அது. ஏற்கனவே தீர்மானித்தபடி, நான் உயிரியல் விஞ்ஞானப் பிரிவுக்குச் சென்றேன். பல புதிய முகங்கள் க.பொ.த உயர்தர வகுப்புகளில் வந்து சேர்ந்தனர். அப்போது கணிதப் பிரிவும் உயிரியல் விஞ்ஞானப் பிரிவும் கோண்டாவில் நிரு ரியூஷன் சென்டர் (NIRU TUITION CENTER) இல் நடந்தது. வர்த்தகப் பிரிவும் கலைப் பிரிவும் இணுவில் மத்திய கல்லூரியிலேயே நடந்தது. மாணவர்கள் எல்லோரையும் ஒரே கூரையின் கீழ் உள்ளடக்கி, கல்லூரியை நிர்வகிக்க முடியாமல் இருந்த தவிப்பைப் போக்குவதற்கு அப்போதைய அதிபர், அமரர் நாகராஜாவும் ஆசிரியர் குழாமும் முனைந்தனர். அவர்களின் முயற்சிக்குத் தோள் கொடுக்க அப்போதைய 94,95 உயர்தர மாணவர்கள் உறுதி பூண்டனர். அந்த வகையில், அந்த நாட்களில் பிரபல்யமான இசை நிகழ்சி நடாத்த திட்டமிடப்பட்டது. அதற்காக ticket விற்பனையில் நாம் ஒரே மூச்சாகத் தொழிற்பட்டோம். அந்த ஈடுபாடு எந்த வகையிலும் எம் கல்விக்கு முட்டுக்கட்டை போடவில்லை. அதே போல், எமக்கு ticket விற்கும் பணி எந்த ஒரு காரணங்களாலும் தடைப்படவில்லை. பாடசாலை முடிந்தபின், வீடு வீடாகச் சைக்கிளில் சென்று ticket விற்றோம். அது எமக்கு மிகவும் பிடித்த வேலையாகவே இருந்தது. எந்த வகுப்பு கூடுதலான வஉைமநவ விற்பது என்று ஒரு ஆரோக்கியமான போட்டியும் இருந்தது. எமது அன்றைய வெற்றியில் எம் மக்களுக்கும் மிகுந்த பங்கு இருந்ததை யாராலும் மறுக்க முடியாது. எந்த ஒரு வீடும் ticket வாங்க மறுத்தது எனது நினைவில் இல்லை. அவர்களிற்கு எமது மனமார்ந்த நன்றிகள். அவ்வாறு நிதி சேகரித்து, இசை நிகழ்ச்சி நடாத்தி, நாம் எமக்கே எமக்கென்று எம் பாடசாலையை மருதனார் மடச்சந்தியில், தெல்லிபழையிலுள்ள எமது பாடசாலையினையொத்த அதே அமைப்பில் கட்டியெழுப்பினோம். பாவலர் துரையப்பா பிள்ளை ஜூனியன் கல்லூரியிலிருந்து பிரிந்து வந்து மகாஜனாக் கல்லூரியை எமக்காகக் கட்டியெழுப்பினார். அவரின் வரலாற்றைப் படித்து, அவர் வழியைப் பின்பற்றி வந்தமையாலோ என்னவோ, எம் அதிபர் ஆசிரியர் குழாமும் அதே நோக்கத்துடன் எமக்கான பாடசாலையைக் கட்டியெழுப்பியது மிகப் பெரிய சாதனையே! இதுவரை எத்தனையோ என் தொழில் சார்ந்த project களில் முனைப்புடன் தொழிற்பட்டாலும், மருதனார்மடத்தில் நம் பாடசாலையை எழுப்ப இராமனுக்கு அணில் உதவி செய்தது போல் என்னாலான சிறு உதவியைச் செய்தது தான் என் மிகப்பெரிய project.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

க.பொ.த உயர்தரத்தில் சுந்தரலிங்கம் ஆசிரியர் எமக்கு இரசாயனம் கற்பித்தார். அவர் அப்போது உதவி அதிபராக இருந்தார். அவருடன் சிறிது காலம் மோகனதாஸ் ஆசிரியரும் இரசாயனம் கற்பித்தார். சுந்தரலிங்கம் ஆசிரியர் என் உயர்தர வகுப்புகளின் பின்னர், பாடசாலையில் இரசாயனம் கற்பிக்கும் ஒரு வாய்ப்பைத்தந்தார். அது எனக்கு நல்ல ஒரு கற்பித்தல் அனுபவத்தைத்தந்தது. சத்தியமூர்த்தி ஆசிரியர் பௌதீகவியல் கற்பித்தார். அவர் தரும் சிறு சிறு தண்டனைகள் ரசிக்கும் படியாகவேயிருக்கும். அவரது வகுப்பில் தான் நான் அடிக்கடி எழுந்து நின்றிருக்கின்றேன். எமக்கு உயர்தரத்திற்கு வகுப்பு ஆசிரியையாகவும் விலங்கியல் ஆசிரியையாகவும் வந்தவர் சாந்தி ஆசிரியை. அவர் தனது பெயரிற்கேற்றவாறு சாந்தமானவர். எங்கள் ஒவ்வொருவரிலும் அக்கறை செலுத்துவார். அவரிடம் கல்வி கற்றது எமக்கெல்லாம் கிடைத்த வரப்பிரசாதம். தேவையான பொழுதுகளில் அவர் எங்களை கடிந்தும் பேசுவார். அப்படி அவரது கடிதலுக்குக் காரணமாய் இருப்பவர்கள் எப்போதும் எம் வகுப்பு ஆண்களே! சாந்தி ஆசிரியையின் தம்பியும் எமது வகுப்பு மாணவன். ஆனால் அவர் தனது தம்பியையும் எம்மையும் எந்த வகையிலும் வேறுபடுத்திப் பார்த்ததில்லை. அதனாலோ என்னவோ அவரை சாந்தி ஆசிரியை என்று கூப்பிடுவதற்குப் பதிலாக சாந்தி அக்கா என்றே பல சமயங்களில் கூப்பிடுவேன். சாந்தி ஆசிரியையின் பின்னர், சிறிது காலம் சிவரதி அக்கா தற்காலிகமாகவும், அதன்பின் யாழினி ஆசிரியையும் விலங்கியல் கற்பித்தனர். சசிகலா ஆசிரியையும், கேதீஸ்வரி ஆசிரியையும் ஒருவர் பின் ஒருவராக எமக்குத் தாவரவியல் கற்பித்தனர்.

மகாஜனாக் கல்லூரி உயர்தர மாணவர்கள் 1993 இல் வடமராட்சிக்கு ஒருநாள் சுற்றுலாப்பயணம் சென்றது எமது பாடசாலைக் காலத்தில் நடந்த இனிமையான பயணம். இந்தக்காலத்தில் சுற்றுலாப் பயணம் என்பது பிள்ளைகளுக்குச் சாதாரணமானது. ஆனால், அன்றைய நாட்களில், அதுவும் யாழ்நகரின் சூழ்நிலையில், மகாஜனா எமக்காக அந்தச் சுற்றுப்பயணத்தை ஏற்படுத்தியது சாதாரணமான ஒரு நிகழ்வல்ல. மணல்காடு, விஷ்ணு கோயில், வல்லிபுரம் கோயில் என ஒருநாள் முழுவதும் நண்பர் குழாத்துடன் கழித்தோம். அதுமட்டுமல்லாது 1994 இல் யாழ் பாடசாலைகள் இணைந்து, உயிரியல் பிரிவு மாணவர்களிற்கு ஒரு கல்விச்சுற்றுலா நடாத்தியபோதும் மகாஜனா எம்மை அந்தச் சுற்றுலாவில் பங்குபற்ற அனுமதித்து, பொறுப்பாசிரியராக மோகனதாஸ் ஆசிரியரையும் நியமித்தது.

வருடாந்த இல்ல மெய்வல்லுநர்ப் போட்டிகள் எங்கள் பாடசாலையில் மிகவும் சிறப்பாக நடைபெறும். நாட்டின் அசாதரணச் சூழல் காலங்கள் தவிர மற்றைய காலங்களில் எப்போதும் விறுவிறுப்பாக நடைபெறும். அது ஒரு நாள் நிகழ்ச்சியல்ல. பல மாதப் பயிற்சியின் பின் சில வாரங்கள் தொடர்சியாகப் பல்வேறு போட்டிகள் நடைபெறும். மகாஜனாக் கல்லூரியில் ஐந்து இல்லங்கள் ஒவ்வொரு இல்லத்திற்கும் ஒவ்வொரு நிறம் அடையாளமாக இருக்கும். அந்த வகையில் துரையப்பா இல்லம் நீலம், ஜெயரத்தினம் இல்லம் ஊதா, சின்னப்பா இல்லம் பச்சை, அருளம்பலம் இல்லம் சிவப்பு, சின்னையா இல்லம் மஞ்சள் என வெவ்வேறு நிறங்களால் வேறுபடுத்தப்படும். இல்லங்களும், நிறங்களும் எம் மாணவர்களை ஐந்து பிரிவுகளாகப் பிரித்தாலும், இந்த ஐந்து இல்லங்களும், மெய்வல்லுநர்ப்போட்டிகளும் எம் திறமைகளை வெளிபடுத்தும் நிகழ்வாகப் பார்க்கப்பட்டதேயன்றி, எந்த ஒரு பிரிவினையையும் ஊக்குவிக்கவில்லை. இந்த இல்ல மெய் வல்லுநர்ப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் வலய, மாவட்டப் போட்டிகளில் பங்கு பற்றுவதற்குத் தகுதி பெறுவர். நான் கூடுதலான காலம் துரையப்பா இல்லத்திலேயே இருந்தேன். 1994 இல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரையப்பா இல்லப் பொருளாளராகவும், 1995 இல் துரையப்பா இல்லத் தலைவியாகவும் இருக்கும் சந்தர்ப்பங்கள் கிடைத்தது எனக்குக் கிடைத்த பரிசாகவே கருதுகின்றேன். சயந்தன் ஆசிரியரும் லிங்கோற்பவநாதன் ஆசிரியையும் துரையப்பா இல்லப் பொறுப்பாசிரியர்களாக எங்களை வழிநடத்தினார். எமக்குத் தேவையானவற்றை நாமே கஷ்டப்பட்டு, இஷ்டப்பட்டுப் பெற்றுக்கொள்வது எம் பாடசாலைக் காலத்தில் எமக்குச் செயலினால் உணர்த்தப்பட்டது. வாய்ப்புகளும் தருணங்களும் வருவதற்காகக் காத்திருப்பதை விட அவற்றை நாமே உருவாக்குவது, முழுப்பலனையும், மகிழ்ச்சியையும் பெருமையும் ஈட்டித்தரும். அவ்வகையில், இணுவிலில், காடாய்க்கிடந்த ஒரு காணியை, எம் முழு முயற்சியை மூலதனமாக்கி, அழகிய விளையாட்டுத் திடலாய் மாற்றியமைத்தோம். அந்த மைதானத்திலேயே எமக்கு 1994, 1995 இல் வருடாந்த மெய் வல்லுநர்ப்போட்டி நடைபெற்றது. 1995 இல் துரையப்பா இல்லம் முதலிடம் பெற்றது எல்லையற்ற மகிழ்சியையும் பெருமிதத்தையும் தந்தது. இன்றும் அந்தப் பெரிய கேடயத்தை நாம் தட்டிக்கொண்ட தருணத்தைத் திரும்பிப் பார்க்கும் போது அன்றய ஆரவாரம் கண்முன்னே விம்பமாக!

எமது உயர்தர வகுப்பில், 1994/1995 காலப் பகுதிகளில் சிரேஷ்ட மாணவர் தலைவிப் பொறுப்பை வகிக்கும் பாக்கியம் எனக்குக்கிடைத்தது. அதனையும் சேர்த்துப் பல தலைமைத்துவப் பதவிகளைப் பொறுப்புடன் நடாத்த மகாஜனா அன்னை என்னை உருவாக்கியிருந்தார். அந்தப்பயிற்சி என் பாடசாலைக் காலத்திற்குப் பின்னும் பல சந்தர்ப்பங்களில் கை கொடுக்கின்றது.

1995 க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு முன்னர் 95 மாணவர்களின் ஒன்றுகூடல் நிகழ்ச்சி மிகவும் விமரிசையாக நடந்தேறியது. அந்த நிகழ்ச்சி முற்றுமுழுதாக எம் மாணவர்களால் ஒருங்கிணைக்கப்பட்டது. யாழ்நகரின் பல்வேறு பாடாசாலைகளிலிருந்தும் பிரதிநிதிகளாக 95 மாணவர்கள் வந்திருந்தனர். அந்த ஒன்றுகூடல் நிகழ்ச்சி மற்றைய பாடசாலை மாணவர்களுடனும் சகஜமாகப் பழகக் கற்றுத் தந்தது. அது தவிர, நாம் பாடசாலையை விட்டு நீங்கும் காலம் நெருங்கியதால் அது ஒரு பிரிவுபசார நிகழ்சியாகவும் அமைந்தது. ஆம்! அத்தனை காலமும் வெள்ளைச் சீருடையுடன் கள்ளம் கபடமில்லாமல் சிட்டுக்களாகப் பறந்து திரிந்த நாங்கள் பிரிந்து மேற்படிப்பு, தொழில் என எங்கள் தனிப் பாதையில் செல்லும் காலம் நெருங்கியிருந்தது. இது எல்லாப் பிள்ளைகளிற்கும் நேரும் தவிர்க்க முடியாத பிரிவு.

அந்த ஒன்றுகூடல் நிகழ்சியின் பின் எமது உயர்தரப்பரீட்சை நெருங்கியதால் சிந்தனைகளைச் சிறகடிக்கவிடாமல் படிப்பில் கவனம் செலுத்தினோம். அந்த 95 ஆடி, ஆனி, ஆவணி மாதங்கள் மிகவும் மோசமான போர்ச் சூழல் காலங்கள். எமது பரீட்சை நடக்குமா, நடக்காதா எனப் பல கேள்விகள் எங்கள் மனதில் எழுந்தன. என்ன நடந்தாலும் பரீட்சையில் நல்ல பெறுபேறுகள் எடுத்துப் பல்கலைகழகம் செல்லவேண்டும் என்ற மனஉறுதியுடன் படித்தோம். நாம் பயந்தது போலில்லாது, எம் பரீட்சை எத்தனையோ இடர்பாடுகள் மத்தியிலும் கணிதப்பிரிவு, உயிரியல் பிரிவு மாணவர்களிற்கு உரும்பிராய் மகாவித்தியாலயத்திலும், வர்த்தகப்பிரிவு, கலைப்பிரிவு மாணவர்களிற்கு கொக்குவில் இந்துக் கல்லூரியிலும் நடந்தது. இன்னல்கள் பற்பல வந்தபோதும் எம் வகுப்பு மாணவர்கள் தம் முயற்சியைக் கைவிடவில்லை. எம்மில் பலர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானார்கள். வேறு பலர் தம் திறமைக்கேற்ற தொழிலில் இணைந்துவிட்டனர். அவ்வகையில் நான் விலங்கு மருத்துவபீடம், பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குச்சென்று, அதன் பின் விலங்கு மருத்துவராக இலங்கையில் தொழில் புரிந்தேன். தற்போது சிங்கப்பூரில், நன்யாங் தொழில்நுட்பப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகத்தில், ஆராய்ச்சி நிலையத்தில் (Research Center), மூத்த நிர்வாகியாகத் தொழில் புரிகிறேன். எம் எல்லோருடைய வளர்ச்சிக்குப் பக்கபலமாக இருந்தவர்கள் எம் ஆசிரியப் பெருந்தகைகள். அவர்களிற்கு நாம் என்றும் நன்றிக்கடன்பட்டவர்களே!

எமது 95 பரீட்சைக்குப் பின்னர் நாட்டு நிலைமை மிகவும் மோசமடைந்ததால் நாம் எல்லோரும் யாழ் நகரை விட்டு வெளியேறும் சூழல் உருவானது. அந்த வருடத்துடன் நாம் ஒருவரையொருவர் சந்திக்கும் வாய்ப்புகளே இல்லாமல் போகுமென்று தெரியாமலேயே எல்லோரும் சிதறுண்டு போனோம். இப்போதுள்ள தொலைபேசி வசதியோ சமூக வலைத்தளங்களோ அப்போது இல்லை. ஏன்? கடிதத் தொடர்பாடல் கூட மிகவும் கடினமானது. அத்துடன் நண்பர்கள் எங்கு இருக்கின்றார்கள் என்ற விபரங்கள் கூடத்தெரிந்திருக்கவில்லை. இது எல்லாம் தாண்டி வீட்டிலிருந்து வெளியேறி நண்பர்களைத்தேடுவது அன்றைய சூழலில் பாதுகாப்பற்றது. இவ்வாறே எம் வகுப்பு மாணவர்களின் தொடர்புகள் அறுந்தது மனவேதனைக்குரிய விடயம்.

ஆனாலும் காலம் மாறும். நேரம் கூடிவரும். இருட்காலம் எப்போதும் நிரந்தரமல்ல. சிறிது சிறிதாக எம் பாடசாலை நண்பர் வட்டம் விரிவடையத்தொடங்கியது. ஒவ்வொருவர் மூலமாக பல நண்பர்களின் தொடர்புகள் கிடைக்கப் பெற்றன. அதன் பின் பாரிய தொழில்நுட்ப வளர்சியின் விளைவினால் கிடைத்த சமூக வலைத்தளங்கள் உலகத்தையே சுருக்கி உள்ளங்கையில் வைத்தது. பிரிந்து சென்ற நட்பு மீண்டும் பூத்தது. பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

இன்று நாம் 45 வயதையெட்டிய பொழுதில், எம் குறும்புத்தனங்கள் குறைந்து, வயதிற்கேற்ப முதிர்ச்சியுடனும் மிடுக்குடனும் எங்களுக்கேற்படும் சவால்களை எதிர்கொள்ளும் துணிச்சலுடனும் மிளிர்கிறோம். இந்தக் கம்பீரத்திற்கு உரமிட்ட மகாஜனா மாதாவின் காலடியினைத்தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொள்கின்றோம். அதிபர், ஆசிரியர்களைப் போற்றுகின்றோம்."உனை நீ அறி" என அப்போது எமக்கூட்டிய தாரக மந்திரம் எப்போதும் எம் மனதில் இருந்து எம்மை வழி நடத்திச் செல்லும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1983 அதிபராக திரு.தி.சண்முகசுந்தரம் பதவியேற்றல்.

1984

அதிபராக திரு.வே.கந்தையா பதவியேற்றல்.
கோவில் கும்பாபிஷேகம் ஆசிரியர் திரு.ச.விநாயகரத்தினம் அவர்களின்
வழிகாட்டலில் நடாத்தப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




1985

அதிபராக திரு.க.நாகராசா பதவியேற்றல்.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி: பழைய மாணவர் சங்க ஆண்டுவிழா 1985/86


- மாவட்டச் சாரணர் கிளைச்சங்கத்தின் 5ஆவது சாரணர் பாசறை விழாவில் 1ஆம் இடத்தை பெற்றது.

திரு.செ. தியாகராஜா குழுச் சாரணத் தலைவர் தலைமையில் பேடன் பவல் தினம் கொண்டாடப்பட்டது.

3 சாரணர் ஜனாதிபதி விருது பெற்றனர்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனாவின் ஒளி விளக்கு எங்கள் அதிபர் அமரர் கதிர்காமத்தம்பி நாகராஜா

முருகையா கிரிதரன்

அமரர் கந்தையா நாகராஜா அவர்கள் வசாவிளானில் அவதரித்தார். சிறப்புப் பட்டதாரியான இவர் எமது பாடசாலையின் பழைய மாணவராகவும், ஆசிரியராகவும் திகழ்ந்தவர். 1985.12.04 ஆம் திகதி அதிபராகப்பணியேற்றார். அனைவரையும் கவரக்கூடிய கம்பீரமான தோற்றமும், நிமிர்ந்த நடையும், மிகுந்த சுறுசுறுப்பும், நேரிய நோக்கமும் உடையவர். எமது பாடசாலையின் அழகோ தனி அழகு. வீதியில் இருந்து பார்க்கும் பொழுது இருமருங்கும் முகப்பு நுழைவாயில்களும், பாடசாலைக்கு உட்செல்லும் பொழுது ஓங்காரமாக உயர்ந்து நிற்கும் துரையப்பாபிள்ளை மண்டபமும், இவ் மண்டபத்திற்கு முன்னால் விசிறியின் தோற்றமுடைய வாழைமரமும், அரை வடிவில் அழகாக வெட்டப்பட்ட குறோட்டன்களும் இவற்றின் ஊடாக பாடசாலையில் உட்புகும் போது மனதிற்கு இதமான காட்சியாகத்தான் இருக்கும். எமது பாடசாலையின் தோற்றத்தின் அழகை என்னால் வர்ணிப்பதற்கு இனி வார்த்தைகள் இல்லை.

எந்த ஒரு பாடசாலைகளிலும் இல்லாதவாறு நடுவில் மைதானமும் மைதானத்தைச் சுற்றி வகுப்பைறகளும், அதன் நடுவில் நடராஜர் கோயிலையும் கொண்டதுடன் அதிபர் அலுவலகத்தில் இருந்தவாறு பாடசாலையின் செயற்பாடுகளை அவதானிக்கக் கூடியவாறு எமது பாடசாலையின் அமைப்பும் காணப்படுகின்றது. வெண்ணிறக் கொக்குப் போன்று வெண்ணிற ஆடையுடன் கையில் பிரம்பும் கொண்டு பாடசாலையின் வகுப்பறைகளின் செயற்பாடுகளை அவதானிப்பதற்காக வலம் வருவார்.

அதிபர் வருகிறார் எனக் கண்டதும் நிசப்தமான நிலை உருவாகும். வகுப்பறையில் ஆசிரியர் இல்லாதவிடத்து அவ் வகுப்பிற்கு ஆங்கில மொழியினைக் கற்பிப்பார். நாம் கல்வி கற்ற காலங்களில் எமக்கு முன்மாதிரியாகத் (Role model) திகழ்ந்தவர். இவரது நிர்வாகத் திறனை அளவிட முடியாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தளவிற்குத் தனக்கென ஓர் இடத்தினை அமைத்தவர் எங்கள் அதிபர். அடுத்ததாக காலையில் கூட்டுப் பிராத்தனைக்காக மைதானத்தின் ஒரு புறம் ஆண்களும், மறுபுறம் பெண்களும் வெண்ணிற சீருடையுடன் "உனை நீ அறி" என்ற வாசகத்தை மனதிலே நிறுத்திய வண்ணம் கழுத்துப்பட்டியும் காற்றில் அசைந்தபடி மாணவர்கள் இருபக்கத்திலிருந்தும் நடந்து செல்லும் பொழுது "தலையே நீ வணங்காய்" என்று திருவங்கமாலை ஒலிபெருக்கியில் மாணவிகளால் இசைத்துக் கொண்டிருக்கும் போது நடராஜப்பெருமானை வணங்குவதற்காக கோயிலுக்கு முன் ஒன்றுகூடிவரும் அழகே தனியழேக. இவ்வேளை எம்முடன் அதிபரும் வருகைதருவார். ஒவ்வொரு வெள்ளிக்கிழமையிலும் சிவபுராணம் மாணவர்களால் ஓதப்பட்டு ஆசிரியர்களால் நற்சிந்தனையும் வழங்கப்படும். இந்த நேரத்தில் பிந்தி வரும் மாணவர்களுக்கு அதிபர் தண்டனையும் வழங்குவார். உண்மையிலேயே இன்றும் நாம் அதிபர் பின்பற்றிய நேரக் கட்டுப்பாட்டை எமது வாழ்க்கையில் பின்பற்றுகின்றோம்.

பாடசாலையின் துரையப்பா மண்டபத்தின் கீழ்ப் பகுதியில் தான் நூலகம் இயங்கியது. நூலகத்திற்கு மிக முக்கியத்துவம் கொடுப்பவர் எமது அதிபர். அவ்வளவு அழகாக அடுக்கி வைக்கப்பட்ட புத்தகங்களும் நிசப்தமான நிலையும் எம்மை மெய்சிலிர்க்க வைக்கும். நூலகம் செல்வதற்கு மனதில் ஒரு பயத்துடன் கூடிய ஆர்வம் இருக்கும். அப்படி ஒரு தனி அழகாகவே விளங்கியது. ஆய்வு கூடங்களும் தனி அழகே.

பெரிய உயரமான மேசைகளுடன் உயரமான இருக்கைகளும் வைக்கப்பட்டிருக்கும். இப்படி யான தனிச்சிறப்புடனும் திறமையான நிர்வாகத்திறனுடனும் பாடசாலையை வழிநடாத்தி செல்லும் திறமைமிக்கவர் எங்கள் அதிபர். யுத்தம் தொடங்கிய காலத்தில் துர்ப்பாக்கிய நிலையில் தான் இடப்பெயர்வுகள் இடம்பெற்றன. ஒன்றா இரண்டா சொல்ல பல இடங்கள் பாடசாலை இடம்பெயர்ந்தது மட்டுமன்றி பின்நேரப் பாடசாலையாகத்தான் இயங்கமுடிந்தது. அவ்வேளையிலும் அதிபர் சோர்ந்து போகவில்லை ஆசிரியர்கள் பழைய மாணவர்கள் என பலரது உதவிகளுடன் பாடசாலையை நடாத்தி வந்தார். சிறந்த திட்டமிடலினை மேற்கொள்ளக் கூடிய திறன் அதிபருக்கு இருந்ததால் பாடசாலையை தனியாக ஒரு இடத்தில் அமைப்பதற்கான திட்டத்தினைத் தீட்டினார்.

அந்த வேளையில் மருதனார்மடத்தில் எமது மகாஜனாவின் தோற்றத்தினைக் கொண்ட ஓலைகளால் வேயப்பட்ட கொட்டில்களை அமைக்கத் திட்டம் தீட்டியிருந்தார். அக்காலப்பகுதியில் கல்லூரியின் நிதிப் பற்றாக்குறையினைத் தீர்ப்பதற்காக 94 உயர்தர மாணவர்களுடன் எமது பிரிவு மாணவர்களும் ஒன்றிணைந்து பணத்தொகையினை சேர்த்தது மட்டுமன்றி உடல் உழைப்பால் கொட்டில்களை அமைப்பதற்கு முன்னின்று உழைத்தவர்கள் எமது பிரிவு மாணவர்களே. அதை எண்ணி இன்றும் நாம் பெருமைப்படுகின்றோம். பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் தற்காலிகப் பாடசாலையை உருவாக்கி சிறப்பான கல்விச் செயற்பாடுகள் நடைபெறுவதற்குத் தாங்கும் தூணாக நின்றவர் எமது அதிபர்.

அடுத்தாக விளையாட்டுப் போட்டிகள் நடாத்தப்பட வேண்டும் என்பதிலும் ஆர்வமாக இருந்தவர். மருதனார்மடத்தில் பாடசாலையுடன் சேர்த்து மைதானம் அமைக்க முடியாத சூழ்நிலையில், இணுவில் மத்திய கல்லூரியின் காணியில் பற்றைக் காடுகளாக இருந்த இடத்தினைத் துப்பரவு செய்து அதில் மைதானம் அமைக்கப்பட்டு மிகச் சிறப்பான முறையில் மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகள் நடாத்த வழி வகுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாடசாலைக் காலத்தின் முக்கியமான காலகட்டத்தில் நாம் இடப்பெயர்வுகளை எதிர்நோக்கியதால் மனதளவிலும் நாம் வலுவிழந்தவர்களாக இருந்தாலும் பழைய மகாஜனாவின் தோற்றதினைக் கொண்ட தற்காலிக மகாஜனாவையும் அதிபர் ஆசிரியர்களின் அன்பாலும், அரவணைப்பாலும் நாம் புத்துணர்வு பெற்று திறம்பட செயற்பட்டோம். கல்வி, விளையாட்டுகள், பண்ணிசைப்போட்டிகள், பேச்சுப் போட்டிகள், நாடகப் போட்டிகள் எனப் பலபோட்டிகளில் நாம் வெற்றி பெறக் காரணமாக இருந்த எமது அதிபரை இந்நேரம் நினைவுகொள்வதில் பெருமிதம் அடைகின்றோம்.

நாம் இடம்பெயர்ந்த காலகட்டங்களில் கூட மற்றப் பாடசாலை மாணவர்களுக்குக் கிடைத்த வசதி வாய்ப்புக்கள் போல் எமக்கும் உருவாக்கித் தரப்பட்டது. பாடசாலைக் காலகட்டத்தில் உயர்தரவாழ்க்கை மிகவும் முக்கியமானது. அதிலும் கடைசி வருடம் நடாத்தப்படும் ஒன்றுகூடல் மிகமுக்கியமானது. இவ்வளவு காலமும் தோழமையுடன் கல்வி கற்று அன்றைய நாள் நாம் எல்லோரும் பிரியும் நிகழ்வு தான் மிகவும் துன்பகரமான காலம் ஆகும். இந்நேரம் பொருளியலைக் கற்பிக்கும் ஆசானான அமரர். சரவணபவன் அவர்களால் எமக்கு கூறப்பட்டதாவது பாடசாலைக் காலம் "பொற்காலம்" இக் காலகட்டத்தில் தான் உங்களால் பாடசாலைச் சீருடை அணிய முடியும் பாடசாலைக்குரிய சப்பாத்து அணியமுடியும் பாடசாலைக் காலம் முடிவடைந்ததும் இவற்றை உங்களால் அணியமுடியாது அப்படி அணிவீர்களானால் எல்லோரும் உங்களைப் பார்த்துச் சிரிப்பார்கள். ஆசிரியர் கூறிய வார்த்தைகள் இப்போதும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கின்றன. ஆசிரியர் தற்போது உயிருடன் இல்லையென்றாலும் அவரை நினைக்கத்தோன்றுகிறது. அவரது வாசகத்தினால் உயர்தர மாணவர்களுக்குரிய ஒன்றுகூடலினை ஓலைக் கொட்டகைகளுக்குள் ஒருங்கமைக்கப்பட்டு சிறப்பான முறையில் நடாத்தப்பட்டது.

இவை சிறப்புடன் நடாத்துவதற்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பினை நல்கினார் எமது அதிபர் அப்படியொரு நிர்வாகத்திறன் மனம்தளராத முடிவுகளை துணிச்சலுடன் எடுக்கக்கூடிய திறன் பேச்சுத்திறன் என அதிபரது சிறப்புகளை அடுக்கிக் கொண்டே போகலாம் அந்த அளவுக்கு மாணவர்களுடன் தானும் ஓர் நண்பன் போல எம்மை வழிநடாத்தியது மட்டுமன்றி நாம் ஒவ்வொருவரும் நல்ல நிலையில் தற்போது இருப்பதற்கு அத்திவாரம் இட்டவர் எமது அதிபர் என மார்பு தட்டிச் சொல்கின்றோம். எமது பாடசாலைக்காலத்தில் 10 வருடங்களாக ஒரே அதிபருடன் பயணித்திருக்கின்றோம். இந்த வகையிலே எமது காலத்துச் "சிற்பி" என்று கூறுவது சாலவும் பொருத்தமானது. இத் தருணத்தில் அதிபர் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்து சென்றாலும் அவரது செயற்பாடுகளும், அவரது பெயரும், புகழும் அவரது மாணாக்கர் மத்தியில் வாழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. எமது பிரிவு அனைத்து மாணவர்கள் சார்பிலும் அதிபரின் நற்செயல்களை வாழ்த்தி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவில் நீங்கா இசை மேதைகள்

பாமினி மகிந்தன்

ஈழமணித் திருநாட்டின் வடகோடியில் வயலும் வயல் சார்ந்த நிலமும் ஆகிய மருத நிலத்திலே வளம் கொழிக்கும் அம்பனைப் பதியினிலே சிவகாமி சேமத ஆனந்த நடராஜப் பெருமானின் அருளுடன் வானுயர்ந்து நிற்கும் மகாஜனா மாதாவின் பாதாரவிந்தங்களை வணங்கிக் கொண்டு 1982–95 வரையான எமது இசைப் பயணத்தைப் பற்றி உங்களுடன் பகிர்ந்து கொள்ளலாம் என எண்ணுகிறேன்.



செல்வி நாகம்மா கதிர்காமர்

மாந்தரின் உள்ளம் அழகுணர்ச்சி உடையது. இந்த உணர்ச்சியின் வெளிப்பாடே கலை ஆகும். கலை என்பது மக்களின் வாழ்வியல், பண்பாடு, நாகரிகம் என்பவற்றை எடுத்துக்காட்டுகின்றன. அழகுக் கலைகளில் இசைக்கலை சிறந்த இடத்தைப் பெற்றுள்ளது. இசை செவிவழியாக உள்ளத்தைக் கவர்ந்து களிப்பூட்டும். இந்த வகையிலே அமரர் கதிர்காமர் நாகம்மா ஆசிரியர் எமது பாடசாலைக்கு கிடைத்த ஒரு பொக்கிஷம் என்றே கூறலாம். இவர் ஒரு கலாபூசணம். இவரது காலத்தில் இசைக் கலைக்கென்றே மாணவர்களைக் கால்பதிக்க வித்திட்டவர்.



திரு. அ. திலகேஸ்வரன்

"இறைவனே இசைக்கு இசைவான்" என்ற கூற்றுக் கிணங்க செவிவழியாக நுகரப்படும் இசையை மாணவர் களிடையே இசைய வைத்துபாட்டும், பண்ணும், தாளமும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்து சுருதி சுத்தமாக உருப்படிகைளக் கற்பிப்பார். ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர், பண்பானவர், அன்பானவர். இவரிடமிருந்து ஒழுக்கம், அன்பு, பணிவு, துணிவு, நேர்மை போன்ற பல குணங்கைளக் கற்றுக்கொண்டோம். மாணவர்கைளப் பல இசைப்போட்டிகளுக்கு அனுப்பி வெற்றி பெற வைப்பார். மாவைக் கந்தன், நல்லூர்க் கந்தன் ஆலயங்களுக்கு மாணவர்கைளப் போட்டிகளுக்கு அனுப்பி வைக்கும்போது அனைத்து மாணவர்களையும் ஒரே மாதிரியான ஆடைகளுடன், தலையிலே மாலை அணிவித்து, நெற்றியில் திலகமிட்டு அன்புடன் அனுப்பி வைப்பர். ஆசிரியரது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டுதலில் எனது சகோதரி நல்லூர்ப் பண்ணிசைப் போட்டியில் (1989/1991) இரண்டு ஆண்டுகள் தொடர்ச்சியாகத் தங்கப் பதக்கங்களைப் பெற்று ஆசிரியருக்கும் பாடசாலைக்கும் பெருமையைத் தேடிக் கொடுத்தார். இவ்வாறு பல மாணவர்கள் தங்கப்பதக்கங்களைவென்று பெருமையை தேடிக் கொடுத்தனர். இதேபோன்று மாவைக் கந்தன் திருவிழாவிற்குத் திருப்புகழ் பாடுவதற்கும் மாணவர்களை அணியம் செய்து அனுப்புவார். புதுப்புது திருப்புகழிற்குத் தானே மெட்டமைத்துப் பாட வைப்பார். இவரது திருப்புகழ் மாலையை கண்டு கழிப்பதற்காக ஒரு தொகையான அடியார் கூட்டமே நிரம்பி வழியும். இது கண்கொள்ளாக் காட்சியாக இருக்கும். இதுபோன்று அகில இலங்கை வைர மாணவர்களைப் போட்டிகளுக்கு அனுப்பி சாதனையும் படைத்தார். இவ்வாறு தங்கப்பதக்கங்கள் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்களை விநாயகரட்ணம் ஆசிரியர் நடராஜர் கோவிலின் சுவரில் வண்ண வண்ண நிறங்களால் ஓவியம் தீட்டியது போல் அழகாகப் பதிவிட்டார். நாம் போட்டிகளிலே பரிசு பெறுவதற்கு எமக்கு உறுதுணையாக நின்றவர்களில் விநாயகரட்ணம் ஆசிரியரும் ஒருவர் என்று கூறினால் மிகையாகாது.

இவை தவிர பாடசாலையின் நிறுவியவர் நினைவு நாளுக்கு "பல்லியம்"என்ற இசை நிகழ்வை மேடையேற்றுவார். இந் நிகழ்வானது அரங்கை அலங்கரிப்பதோடு மட்டுமன்றி அவையினரின் வரேவற்பைப் பெற்ற ஒரு நிகழ்வாகவும் அமையும். இது போன்று நற்சிந்தனை என்ற நூலிலிருந்து பாடல்களைத் தெரிவு செய்து தானே மெட்டமைத்து எமக்குக் கற்பிப்பார். ஆசிரியர் இடம்பெயர்ந்து சிவரதி அக்காவின் இல்லத்தில் சிறிது காலம் தங்கியிருந்து பின் இந்தியா சென்று அங்கிருந்து சுண்ணாகத்திற்கு வந்து 2008ஆம் ஆண்டு இறைவனது பாதாரவிந்தங்களில் சரணாகதி அடைந்து விட்டார். இவர் தனது உயிர் பிரிந்தபின் உடலை மருத்துவ பீட மாணவர்கள் கற்பதற்கு கொடுக்க வேண்டும் என்று கூறியதற்கிணங்க இன்று அவரது உடல் மருத்துவ பீடத்திலே வைக்கப்பட்டுள்ளது. தனது சொத்துக்கள் அனைத்தையும் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்திற்குக் கொடுத்துள்ளார். இவ்வாறான பரந்த மனம் எல்லோருக்கும் வராது. ஆசிரியரின் சேவை மிகவும் பாராட்டப்படவேண்டியவை. ஆசிரியரின் தேமதுரக் குரலோசை இன்றும் நம் காதுகளில் ஒலித்த வண்ணம் இருக்கின்றன. ஆசிரியர் இன்று நம்முடன் இல்லை என்றாலும் அவரது மாணாக்கர் மனங்களில் வாழ்ந்து கொண்டும், நீங்காது இடம்பிடித்தும் உள்ளார். ஆசிரியர்



திருமதி வடிவாம்பாள் நடராஜன்



திருமதி விமலாதேவி நாகேஸ்வரன்



திருமதி சிவரூபி சொக்கலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதைத்த விதையானது இன்று உலக நாடுகள் எங்கும் பெரு விருட்சமாக வியாபித்து நிற்கின்றன. இந்த வகையிலே ஆசிரியரிடம் கல்வி கற்ற மாணவர்களில் ஹம்சானந்தி அக்கா, ஹேமா அக்கா, றஜனி அக்கா, நளினி அக்கா, சிவரதி அக்கா, சித்திராங்கி அக்கா, ஜெயகௌரி அக்கா, ஹேமலதா அக்கா இவர்களைப் போன்று இன்னும் பல மாணவர்கள் இலைமறை காய் போல உலகெங்கும் பரந்தும், விரிந்தும் இசைத்துறைக்கு ஒளியூட்டிக் கொண்டும் எதிர்கால இசை மேதைகளை உருவாக்கிக் கொண்டும் இருக்கின்றார்கள் என்று கூறினால் மிகையாகாது. ஆசிரியரை ஈழத்து MS என்றும் எல்லோரும் செல்லமாக அழைப்பது இன்று நினைவிற்கு வருகின்றது.

இவரது காலத்திலேயே அமரர் திலகேஷ்வரன் ஆசிரியரும் இசைத்துறைக்கெனப் பெரும் பங்காற்றினார். ஆசிரியர் 1977ஆம் ஆண்டிலிருந்து 1987 ஆம் ஆண்டு வரை மகாஜனாக் கல்லூரியின் இசை ஆசிரியராகப் பணிபுரிந்தார். இவர் கானமணி, ஏழிசைவாரிதி, சங்கீத வித்துவான் போன்ற பல பட்டங்களைப் பெற்றார். மாணவர்கள் மீது மிகவும் அன்பும் அக்கறையும் காட்டி வந்தார். மாணவர்களைப் போட்டிகளுக்கு அனுப்பிப் பரிசுகளைப் பெற வைத்தார். திலகேஷ்வரன் ஆசிரியரும், நாகம்மா ஆசிரியரும் இணைந்து நடன நிகழ்வுகளுக்கு பாடல்களைப் பாடும்போது கேட்பவர்களின் செவிகளுக்கு விருந்தாக அமைவதோடு மனதிற்கு ரஞ்சனையையும் கொடுக்கும். திலேகஷ்வரன் ஆசிரியர் சிறிது காலம் எமது வீட்டிலே எமக்கு மட்டும் பிரத்தியேகமாக இசை வகுப்புகள் எடுத்தார். எவ்வளவு களைப்பாக இருந்தாலும் மனம் சலிக்காமல் எங்களுடன் அன்பாகப் பழகுவார். ஆசிரியர் செய்த சேவையை நாம் என்றும் மறக்கவே முடியாது. இவர் டென்மார்க் சென்று அங்கும் இசைப் பள்ளிகளை அமைத்து தனது இசைப் பயணத்தைத் தொடர்ந்தார். இறுதி மூச்சுவரை இசைக்கென்றே தொண்டுகள் பல புரிந்து 2007ஆம் ஆண்டு இறைவனடி சேர்ந்தார்.

திருமதி வடிவாம்பாள் நடராஜர் ஆசிரியர் 1987ம் ஆண்டு தொடக்கம் 1994ம் ஆண்டு வரையும் எமது பாடசாலையில் இசை ஆசிரியராகப் பணிபுரிந்தார். ஆசிரியர் மிகவும் கண்டிப்பானவர், அன்பானவர். கா.பொ.த சாதாரண தரத்தில் நமக்கு மிக அழகாக இசையைக் கற்பித்து திறைமைச் சித்தி எடுக்க வைத்து எம்மை உயர் தரத்திற்கு உயர்த்தி விட்டவர். சங்கீத வகுப்பிற்கு நேரம் தாமதிக்காமல் செல்ல வேண்டும் என்பதில் கண்டிப்பாக இருப்பார். நடராஜர் ஆலயத்தில் நடைபெறும் அனைத்து நிகழ்வுகளுக்கும் எம்மை ஒழுங்குபடுத்தி அழகாகப் பாட வைப்பார். சரஸ்வதி பூசை எமது பாடசாலையில் வெகு விமர்சையாகக் கொண்டாடப்படும். இதற்கும் எம்மை ஒவ்வொரு வகுப்பு வகுப்பாக பிரித்து ஒவ்வொரு நாளும் பாட வைப்பார். காலையில் நடைபெறும் நடராஜர் வழிபாடு மனதிற்குப் பக்தி பரவசத்தை ஊட்ட வல்லதாக இருக்கும். மாணவர்கள் இருவர் இருவராக மைதானத்தை வலம் வந்து ஆலய முன்றலில் ஒன்று கூடுவோம். அப்பொழுது ஒலிபெருக்கியில் (திருவங்கமாலை) "தலையே நீ வணங்காய்" மாணவர்களால் ஒலிக்கப்படும். இது கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருக்கும். நேரஅட்டவணை போட்டு ஒழுங்காக ஒவ்வொரு நாளும் அதிபரின் அலுவலகத்திற்குள் சென்று பாடவைப்பார். இவற்றை இன்று எண்ணிப்பார்க்கையில் மெய்சிலிர்க்கின்றன. வெள்ளிக்கிழமைகளில் சிவபுராணம் சொல்லிக் கொடுப்போம். எம்மை பாஓதல், பண்ணிசைப் போட்டிகளுக்கு அனுப்பி வெற்றி பெறச் செய்வார். எமது பாடல்களுக்கு பக்கவாத்தியமாக தண்ணுமை (மிருதங்கம்) ஆசிரியரின் அண்ணாவே வாசிப்பார். ஆசிரியரின் சகோதரர்களே எமது ஆலயத்தின் குருக்களாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. பாடசாலை இடம்பெயர்ந்தபொழுது ஆசிரியரும் எம்முடன் தொடர்ந்து பயணித்து மருதனார்மடத்திலும் எமக்குக் கற்பித்தார். 1994ம் ஆண்டு ஆசிரியருக்கு பிரியாவிடையை மிகச் சிறப்பாகக் கொண்டாடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியரை வழியனுப்பி வைத்தோம். பின்பு ஆசிரியர் 1997ம் ஆண்டிலிருந்து 2010ம் ஆண்டு வரையும் கொழும்பு விவேகானந்தாக் கல்லூரியில் இசை ஆசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றார். ஓய்வுபெற்ற பின்பும் இசைத்துறை மேல் கொண்ட பற்றினால் பல போட்டிகளுக்கு நடுவராகச் செல்வது, தியாகராஜ உற்சவத்திற்கு மாணவர்களை நெறிப்படுத்தி விடுவது போன்ற பல செயற்பாடுகளை செய்து வந்தார்.

கா.பொ.த சாதாரண தரத்தில் சிலகாலம் திருமதி சிவரூபி ஆசிரியர் எமக்குக் கற்பித்தார். ஆசிரியர் எங்களுடன் ஒரு நண்பி போலவே பழகுவார். எப்பொழுதும் புன்னகை என்னும் நகை அணிந்து இருப்பார். மிகவும் அன்பானவர் ஒரு நாளும் நாம் பேச்சு வாங்கியதே கிடையாது. ஆசிரியர் 1987, 1988 காலப்பகுதியில் எமது பாடசாலையில் இசை ஆசிரியராகப் பணியாற்றத் தொடங்கி 1990 களில் நிரந்தர நியமனம் பெற்றார். இவர் இசைக்கலைமாணி பட்டம் பெற்றவர். பட்டப்பின் கல்வி டிப்புளோமா செய்தவர். ஆசிரியர் இசை தவிர விளையாட்டிலும் சிறந்து விளங்கினார். இசைப் போட்டிகளுக்கு எவ்வாறு எம்மை அழைத்துச் செல்வாரோ அதே போல் விளையாட்டுப் போட்டிகளுக்கும் எம்மை அழைத்துச் செல்வார். தானும் எம்முடன் சேர்ந்து விளையாடுவார். ஆசிரியர் தினத்துக்கு வலைப்பந்தாட்ட விளையாட்டை ஆசிரியர் விளையாடியது இன்றும் நம் மனக் கண்முன்னே தோன்றுகின்றது. மாணவர்களை கலகலப்பாக வைத்திருப்பார். 1995ஆம் ஆண்டு இடம்பெயர்ந்த காலங்களிலும் எம்முடன் பயணித்தார். போட்டிகளில் வெற்றி பெற வேண்டும் என்று எங்களை வாழ்த்தி அனுப்பி வைப்பார். இவ்வாறு எம்மை வளர்த்து விட்ட ஆசான்களுக்கு என்றும் நாம் நன்றிக் கடன்பட்டவர்களே.

கா.பொ.த உயர்தரத்தில் நாம் இசையை ஒரு பாடமாகத் தெரிவு செய்தோம். எனது தந்தையும் ஒரு இசைப்பிரியன் என்பதாலோ என்னவோ நானும் அத்துறையில் மிகவும் ஈடுபாட்டுடன் செயற்பட்டு வந்தேன். போர்ச்சூழல் காரணமாக பாடசாலை மருதனார்மடத்தில் இயங்கிவந்தது. உயர்தரத்திற்கு திருமதி மாலா நாகேஸ்வரன் ஆசிரியரே இசைப் பாடத்தைக் கற்பித்தார். 1990 ஆம் ஆண்டிலிருந்து 1999 ஆம் ஆண்டு வரையும் மகாஜனாவின் இசை ஆசிரியராகப் பணியாற்றினார். 2005ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரையும் வலிகாமம் கல்வி வலயத்தில் ISA ஆக இருந்து ஓய்வு பெற்றார். ஆசிரியர் "இசைக்கலைமானி", "கலாபூஷணம்", "கலைச்சுடர்", "கலாவித்தகர்" போன்ற பல பட்டங்களைப் பெற்றவர். 1976ஆம் ஆண்டில் சங்கீத அரங்கேற்றம் செய்தார். ஆசிரியரது அரங்கேற்றத்தில் வினாசித்தம்பி ஆசிரியர் "பொன்மாலா" என்னும் விருதினை வழங்கி கௌரவித்தார். ஆசிரியர் மிகவும் கருணை உள்ளம் கொண்டவர். இடம்பெயர்ந்த காலங்களில் நம்முடன் பயணித்து எமக்கு வகுப்புகள் நடைபெறாத நேரங்களில் கூட தனது வீட்டிற்கு எம்மை அழைத்து எமக்குப் பாடங்களைக் கற்பித்து பரீட்சைக்குத் தயார்ப்படுத்தினார். அறிமுறைப் பரீட்சை கொக்குவில் இந்துக் கல்லூரியிலும், செய்முறைப் பரீட்சை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் நடைபெற்றன. இவ்வாறு நடைபெற்ற பரீட்சைகளில் நாம் திறமைச்சித்தி பெற்று பல்கலைக்கழகத்திற்கு தெரிவாகி ஆசிரியருக்கும், பாடசாலைக்கும் பெருமையைத் தேடிக் கொடுத்தோம். கணேசலிங்கம் ஆசிரியரால் இயற்றப்பட்ட "வானம் மகிழவே" என்ற பாடலுக்கு ஆசிரியர் மெட்டமைத்து நாம் குழுவாகப் பாடி கோட்டம், கொத்தணி, மாவட்டம் என்று சென்று முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டோம். இவ்வாறு ஆசிரியர் எமக்கு உறுதுணையாக இருந்து வழிகாட்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று புலம்பெயர் தேசத்திலும் நாம் இக் கலையை கற்பித்து வருகிறோம் என்றால் அது நம்மை வளர்த்த ஆசிரியர்களையே சாரும். விடாமுயற்சி, தன்னம்பிக்கை, ஊக்கம், நற்பழக்கவழக்கம், வாழ்க்கைப் பாடங்கள் அத்தனையும் கற்றுத் தந்தவர்கள் நமது ஆசான்கள். ஆசிரியர் பணி ஒரு தெய்வீகப் பணி எல்லோராலும் போற்றப்படுகின்ற ஒரு பணி. எட்டுத்திக்கும் கொட்டும் முரசு போல மகாஜன மாதாவின் குழந்தைகள் நாம் உலகெங்கும் மணம் வீசிக்கொண்டு இருக்கிறோம் என்றால் அது எம்மை வளர்த்த ஆசிரியர்களையே சாரும். "சுடர் விளக்கானாலும் தூண்டுகோல் வேண்டும்" என்பதற்கு இணங்க எது சரி எது தவறு என்பதை எமக்கு எடுத்துக் கூறி சரியான பாதையில் நம்மை வழி காட்டிய ஆசான்களுக்கு என்றும் நாம் நன்றிக்கடன் பட்டவர்கள். உலகைக் காட்ட நம்மை செதுக்கியவள் தாய், உலகிற்கு நம்மை காட்ட செதுக்கியவர்கள் ஆசிரியர்கள். சிற்பமாய் எம்மை செதுக்கி ஏணியாய் இருந்து எமக்கு ஒளி ஊட்டி வைத்து எல்லோர் மனங்களிலும் தீபமாக எரிந்து கொண்டிருக்கும் ஆசிரியர்களை நினைவு கூருவதில் நாம் பெருமை அடைகிறோம்.

"வெல்லுக மகாஜனா மாதா"





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நினைவில் நீங்காதவை

யமுனா நந்தகுமார்

மகாஜனா அன்னை ஆலமரம் போல கிளைகளை பரப்பி எல்லோரது உள்ளத்திலும் வியாபித்து இருக்கின்றாள். அங்கு கல்விச் செல்வத்தினை பெற்ற மகாஜனர்கள் எங்கள் கல்லூரியின் புகழை உலகமெங்கும் மிளிர வைக்கின்றனர் "கற்றவர்களுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு"

மகாஜனா கல்லூரியில் எனது பெற்றோர்கள் இருவரும் கல்வி பயின்றனர். அம்மாவும் விளையாட்டில் கெட்டித்தனமாக இருந்தார். எனது இரு சகோதரிகளும் மகாஜனாவின் பழைய மாணவிகள். எனது தாயார் திருமதி பாலசுப்ரமணியம் அவர்கள் பன்னிரண்டு வருடங்களாக மகாஜனாக் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றினார். இவர் தமிழ், சமயம் உடற்பயிற்சி என்பன கற்றுக்கொடுத்தார். மாணவர்களுக்கு வலைப்பந்தாட்டமும் பழக்கி போட்டிகளுக்கு கூட்டிச்சென்றார். விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் காலங்களில் எனது தந்தையார் நடுவராக கடமையாற்றுவர்.

1939ம் ஆண்டு பிறந்த எனது தாயார் கோப்பாய் ஆசிரியர் பயிற்சி கலாசாலையில் நேர் கொண்டு சித்திபெற்று ஆசிரியர் தொழிலை ஆரம்பித்தார். குடும்ப நிலை காரணமாகவும் தொழில் காரணமாகவும் யாழ், கொழும்பு, நுவரெலியா என பல இட மாற்றங்களின் பின் மீண்டும் யாழ் திரும்பினோம். மகாஜன சிற்பி ஜெயரத்தினம் அவர்களின் காலத்தில் விளையாட்டு துறை ஆசிரியராக காலடி வைத்து ஓய்வுபெறும் வரை நீண்ட ஒரு பயணத்தை தனதாக்கினார். 1985ம் ஆண்டளவில் தனக்கும் சக ஆசிரியர் பலருக்கும் கௌரவிப்பு விழா நினைவுகளை இன்றும் எம்மோடு பகிர்வார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஜனாக் கல்லூரியில் நான் முதலாம் தரம் தொடக்கம் ஏழாம் தரம் வரை கல்வி பயின்றேன். ஆரம்பக் கல்வியை திருமதி தளையசிங்கம் ஆசிரியரிடம் கற்றேன். எனது ஞாபகத்தில் திருமதி முத்தையா ரீச்சர், இளையதம்பி ரீச்சர், தம்பு ரீச்சர், ரோகிணி ரீச்சர், மரகதவல்லி ரீச்சர் என பலரும் வந்து செல்வார்கள். இந்த நேரத்தில் எனது ஆசிரியர்களுக்கு சிரம் தாழ்த்தி நன்றி கூறுகின்றேன். ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் அவர்களுக்குரிய சிறப்பம்சங்களை கொண்டிருந்தனர். நான் பாடசாலைக்கு உற்சாகமாக செல்வதற்கு ஆசிரியர்களின் அன்பும், அரவணைப்பும் இருந்தது. சிறுவயதிலிருந்தே எங்களுக்கு கலை கலாச்சார விழுமியங்களை சொல்லித்தந்தனர்.

சாரணியத்தில் ரோகிணி ரீச்சருடன் கழித்த நாட்களும், தளையசிங்கம் ரீச்சர் பழக்கிய குறத்தி நடனம், நடன ஆசிரியை பழக்கிய நடனங்கள், நான் நடித்த அரச நாடகங்கள் எல்லாமே என்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவில் நிற்கிறது. விளையாட்டுப் போட்டிகளிலும் பங்கு பற்றி பரிசில்கள் பெற்ற அனுபவங்களும் உண்டு. நிறுவியவர் நினைவுநாள் பரிசளிப்புவிழாவில் பரிசில்கள் பெறுவேன். அப்போது எனக்குள் அளவில்லாத ஆனந்தம் கொட்டும். கைதட்டல்கள் எனக்கு உற்சாகத்தை தூண்டின.

பாடசாலையில் எனது வகுப்புகள் வழமையாக விடும் நேரத்தை விட முன்னரே முடிந்துவிடும். எனது அம்மா, சகோதரிகளுக்காக பாடசாலைமுடியும் வரை பாடசாலை வளாகத்தில் காத்திருப்பேன். காத்திருக்கிக்கும் வேளைகளில் எனது வகுப்பு மாணவியும் எனது தோழியுமான பாமினியுடன் நேரங்கள் கழிந்தன. பாமினியின் வீடு பாடசாலைக்கு முன்தான் அமைந்துள்ளது. அதனால் அவள் என்னுடன் நின்று விளையாடுவாள். அத்தோடு அவளின் அப்பா மகாஜனா சிற்றுண்டிச்சாலையில் மனேஜராக கடமை ஆற்றினார். நாங்கள் இருவரும் பாடசாலை வளாகத்தில் நின்று வேப்ப மரத்தின் கீழ் விளையாடிய ஞாபகங்கள் உள்ளது. அந்த மரத்தில் இருந்து வருகின்ற காற்று என்னை வருடிச்சென்றதும் நினைவில் உள்ளது. வேப்பம்பழம் அப்பப்ப என் தலையிலும் வீழ்ந்ததுண்டு. வேப்பம்பழம் பழுத்து அங்குள்ள மணலில் விழுந்த காட்சிகளை நினைக்கும்பொழுது முருகக் கடவுள் ஔவைப்பாட்டியிடம் சுட்ட பழம் வேண்டுமா? சுடாத பழம் வேண்டுமா என்ற கதை ஞாபகம் வந்து போகும். அதைவிடவும் நானும் பாமினியும் அங்குள்ள ஆய்வுகூட வாசலில் எட்டுப் பெட்டி விளையாடியது நினைவிற்கு வருகிறது. பாடசாலை விடுவதற்கு சில நிமிடத்திற்கு முன்பாக பாடசாலை பேருந்து வந்துவிடும். நான் ஓடிச்சென்று நான்கு இடம் பிடித்து வைத்திருப்பேன். அந்த இடம் எனக்கும் எனது அம்மாவிற்கும் எனது இரு சகோதரிகளுக்கும் ஆனது. ஆரம்ப வகுப்புகள் முடிவடைந்ததும் வான் உயர்ந்து வரிசையாக வளர்ந்து நிற்கும் மரங்களின் கீழ் ஒன்று கூடி எங்களுக்கு விருப்பமான விளையாட்டுக்களை விளையாடுவோம். பிள்ளைகளை கூட்டிச்செல்வதற்கு பெற்றோர் வருவதைக் கண்டவுடன் முகம் வாட்டத்துடன் பிரிந்து செல்வோம்.

எங்கள் பாடசாலை கட்டமைப்பு போல் வேறு கல்லூரிகள் உண்டா. தெற்குப்பக்கம் அதிபர் அறை, ஆசிரியர்கள் அறை, வாசிகசாலை, விஞ்ஞான ஆய்வு கூடமும், பின்புறம் ப வடிவமாக வகுப்பறையும். நடராசர் கோவிலும் உண்டு. அத்தோடு திறந்த வெளி அரங்கும் உண்டு. நடுவில் விளையாட்டுத்திடல் உள்ளது, எனது பாடசாலையில் இவை அனைத்தும் பிரத்தியேக அமைப்பு.

இவைகள் எல்லாம் என் நினைவுகளில் நீங்காமல் நிற்கும் விடயங்களாகும். பின்னோக்கி பார்க்கும்போது மனதிற்கு இதமாக இருக்கும் எனது மனதில் பசுமரத்தாணி போல் பதிந்துள்ளது.

வெல்லுக மகாஜனா மாதா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனா தந்த பாடம்!

**கந்தரட்ணம் இராதேயன்**

மாணவர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு பாடசாலைகள் பாடுபடுவதில் ஆச்சரியப்பட ஏதுமில்லை. ஆனால் கலை, விளையாட்டு, சமயம்,சாரணியம் என, என்போன்ற மாணவர்களின் பன்முகத் திறமைகளை வளர்ப்பதில் மகாஜனாவின் பங்கு அளப்பெரியது.

1985: மகாஜனாவின் புகழ் வானுயர்ந்து நின்ற காலம். என் தாயாரின் தூண்டுதலால் மூன்றாம் வகுப்பு நுழைவுத்தேர்வில் சித்தி பெற்று மகாஜனா வளாகத்தில் உள் நுழைந்தேன். அன்றிலிருந்து 1991ஆம் ஆண்டு, 9ஆம் வகுப்பு நடுப்பகுதியில் இந்தியாவிற்கு செல்லும்வரை மகாஜனா தந்த பாடங்கள் பற்பல!

பண்ணிசைப் போட்டி ஒன்றில் பெற்ற வெற்றியால் இளைஞர் சாரணிய ஆசிரியையாக இருந்த ரோகினி டீச்சர், சாரண இயக்கத்தில் சேருமாறு என்னை அழைத்தார். அவ்வாறு சாரணர் ஆன நான் அதன்மூலம் அனுபவங்கள் பல பெற்றேன். பேச்சுப் போட்டிகளும் இசை போட்டிகளும் மேடைப் பயத்தை தணித்து தன்னம்பிக்கையை வளர்த்தன. வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகளில் மாணவ தலைமைகள் முன்மாதிரிகள் ஆகின. ஆரோக்கியமான போட்டிகள் அர்த்தப்படத் தொடங்கின. தடகளத்தில் தில்லானா அக்காவின் தேசிய சாதனை 'எக் கிராமத்தில் இருந்தும் எதையும் சாதிக்கலாம்' என்ற மந்திரத்தை எனக்கு உணர்த்தியது.

திருமதி கோகிலா மகேந்திரன், திரு இராஜ குலேந்திரன், திரு காளிதாசன், திரு அரியபுத்திரன், திருமதி துரைச்சாமி, திருமதி தங்கம்மா போன்ற ஆசிரிய ஆளுமைகளின் பேச்சாற்றலை, அழகிய தமிழை , அறிவு தழுவிய சிந்தனைகளை, நகைச்சுவை உணர்வை, கட்டுக்கோப்பான கணிதத்தை அருகே இருந்து அனுபவித்து பயன்பெறும் பாக்கியம் பெற்றோம். திருமதி இராமச்சந்திரா அளித்த அடிப்படை ஆங்கில அறிவு இன்றளவும் துணை நிற்கிறது. நாகம்மா டீச்சர், வடிவாம்பிகை டீச்சர் ஆகியோரின் சங்கீத வகுப்புகள் இசையை ரசிக்கத் தூண்டின.

எமது 5ஆம் வகுப்பு புலமை பரிசில் பரீடசை, ஏழாம் வகுப்பிலோ எட்டாம் வகுப்பிலோ நடந்தேறியது. காத்திருந்து, கடுமையாக உழைத்து தோற்றிய புலமைப்பரிசில் பரீட்சையில் ஏனோ தேர்ச்சிபெறத் தவறினேன். துவண்டு போனேன். ஆசிரியர்களும் நண்பர்களும் ஆறுதல் கூறினர். தோல்விகளை எவ்வாறு கையாள்வது என்பதையும் மகாஜனா எனக்கு உணர்த்தியது.

1991இல் இந்தியாவுக்கு சென்ற நான், எஞ்சிய பள்ளிப் படிப்பையும் பின்னர், மருத்துவ கல்வியை திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியிலும் முடித்து மருத்துவரானேன். பின்னர் இந்தியாவில் சில ஆண்டுகளும் இலங்கையில் புத்தளம், கந்தளாய், அளவெட்டி மற்றும் தெல்லிப்பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


வைத்தியசாலைகளில் சில ஆண்டுகளும் வைத்தியராக கடமையாற்றி 2010ஆம் ஆண்டில் ஐக்கிய ராச்சியம் வந்தேன். இங்கு விபத்து மற்றும் அவசர சிகிச்சை (Accident & Emergency) பிரிவில் மேற்படிப்பை முடித்து தற்போது அவசர சிகிச்சை நிபுணராக ஐக்கிய ராச்சியத்தில் பணியாற்றி வருகிறேன்.

மகாஜனா தந்த பாடங்களும் அனுபவங்களும் இன்றளவும் எனக்கு துணை நிற்கிறது என்பதில் மகாஜனனாக பெருமை கொள்கிறேன். மகாஜனாவின் வெற்றிப்பயணம் தொடர என் வாழ்த்துக்கள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1986

- நடராசப்பெருமானுடன் மாணிக்கவாசகர் சிலை வைக்கப்பட்டது.
- Mahajana College: Scout Golden Jubilee 1936-1986
- ஆறுசாரணர்கள் ஜனாதிபதி விருது பெற்றனர்.

1987

பழைய மாணவர் சங்கம் பிரித்தானியாவில் உருவாக்கப்பட்டது.
மகாஜனன் 1987~1997 ~ பாடசாலை மலர் வெளியீடு யா/ மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (ஐக்கிய இராச்சியம்)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனாவுடனான எனது பயணம்

தம்பிராசா பிரகாசன்

எல்லோரும் பாடசாலைக்குச் செல்லும் போது நான் மட்டும் வீட்டில் இருந்தேன். ஏன் என்று கேட்ட போது 1ம் ஆண்டுக்கான அனுமதி தூரம் காரணமாகக் கிடைக்கவில்லை என்று கூறப்பட்டது. இரண்டு மாதங்களின் பின்னர் தான் அனுமதி கிடைத்து, மகாஜனாவில் காலடி எடுத்து வைத்த போது பயமாகவும், எல்லாம் புதிய முகங்களாகவும் இருந்தன. ஆனால் தளையசிங்கம் ஆசிரியரின் அன்பான வரவேற்போடு அந்தப் பயம் காணாமல் போய்விட்டது. எனக்குப் புதிய நண்பர்களையும் உருவாக்கித்தந்தது.

2ம் வகுப்பில் பத்மா ரீச்சர் மற்றும் மரகதவல்லி ரீச்சரின் அன்பான வார்த்தைகள் எமக்கு உற்சாகத்தைத் தந்தன. 3ம் வகுப்பு என்றால் மிகவும் சந்தோசம். ஏனென்றால் மாடிக்கட்டிடத்தில் படிக்கும் வாய்ப்புக் கிடைக்கும். மாடிப்படிகளில் இறங்கி வராமல் சீமெந்துச் சுவரில் வழுக்கி வருவதில் ஒரு சந்தோசம். பாடசாலை முடிய முன்னரே வெள்ளைச்சேட் மண்ணிறமாக மாறி விடும். இதனால் அடிவிழும் என்ற பயம் காரணமாக அதை திரும்பவும் வெள்ளையாக மாற்றும் எமது விஞ்ஞான முயற்சிக்கு வகுப்பில் உள்ள கரும் பலகையில் வெள்ளைச்சோக்கைத் துடைத்த டஸ்டர் எமக்கு எப் போதும் உதவும்.

3ம் வகுப்பில் நாம் இருந்த போது வகுப்பிற்கு வந்த ஆசிரியர் ஒருவர் குருளைச்சாரணியத்தில் சேருவதற்கு விருப்பமானவர்கள் இணையலாம் எனக்கூற, எப்போதும் எதற்கும் கையை உயர்த்தும் நான் கையை உயர்த்தியதால் சாரணியத்தில் இணையும் வாய்ப்புக்கிட்டியது. எங்களை அன்போடு அழைத்துச் சென்ற ஆசிரியர்தான் எனக்குத் தலைமைத்துவத்தையும், நற்பண்புகளையும் சொல்லித்தந்த றோகினி ரீச்சர்.

அப்பாத்துரை ரீச்சரும் எமக்கு சாரணியத்தைக் கற்றுத்தந்த ஆசிரியராவார். 4ம், 5ம் வகுப்புகளில் பாடசாலைக்கு அதிகாலை 7மணிக்கு முதலே சென்று விடுவோம். படிப்பில் உள்ள ஆர்வம் என்று நினைத்துவிடாதீர்கள். வேறு இரண்டு விடயங்களிற்காக. ஒன்று, ஆய்வு கூடத்திற்கு அருகில் உள்ள பூமரத்தில் இருந்து விழும் பூவை கீழே விழ முதல் பிடிப்பதற்காக, அதிகமாகப்பூக்களைப் பிடித் தால் அதிஸ்டம் அதிகமாகக் கிடைக்கும் என்ற கதையை நம்பியவர்களில் நானும் ஒருவன் (பூவைப் பிடிப்பதற்காக காத்திருந்த போது அருகில் இருந்த நண்பன் எறிந்த கல் எனது தலையில் ஏற்படுத்திய காயத்தின் அடையாளம் இன்றும் உள்ளது). இரண்டாவது காரணம், பின்னால் இருக்கும் சின்ன கிறவுண்டில் கிரிக்கெட், உதைபந்தாட்டம் விளையாடுவதற்கு. பாடசாலை பெல் அடிக்க முதலே நாம் ஒரு T5மச்சை முடித்து விடுவோம். (T20 மச்சை அறிமுகப்படுத்த முதலே T5 மச்சை அறிமுகப்படுத்தியவர்கள் நாங்கள்). பக்கத்தில் இருந்த சமரக்கொடி அண்ணை வீட்டு விளாமரத்தைப் பதம் பார்ப்பதும் எமது முக்கிய வேலைகளில் ஒன்றாகும். இதைவிட அதிகாலையில் யார் வீரர்கள் என்பதை நிரூபிப்பதற்காக பல போட்டிகளை நடாத்தியவர்களும் நாங்களே. 4ம்வகுப்பில் எமக்கு படிப்பித்த குலசேகரம் ரீச்சர் நினைவை விட்டு நீங்காதவர். அதே போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எப்போதும் தடியோடு வரும் குலசேகரம் ரீச்சரின் கணவர் குலசேகரம் மாஸ்டர் நாம் அந்தக் காலத்தில் கண்டு பயந்த ஒரே ஆசிரியர் அவர்தான். அவரிடம் வாங்கிய அடிகள் மறக்கமுடியாத நினைவுகள். போர் நடைபெற்ற காலம் என்பதால் பாடசாலைகளில் அதிகாலையில் இறைவழிபாடு முடிந்த பின் போர்ச் சூழலில் எம்மை எவ்வாறு காப்பாற்றிக் கொள்வது என ஆசிரியர்களால் விளக்கம் அளிக்கப்பட்டும், (விமானங்களில் தாக்குதலில் இருந்து எவ்வாறு எம்மைப் பாதுகாத்துக் கொள்வது தொடர்பாக). போர்ச்சூழலிலே முழுமையாக பாடசாலைக் காலத்தைக் கடந்த அணி எமது அணியாகும்.

சித்திரம், சங்கீதம், நடனம் ஆகியவற்றுள் ஏதாவது ஒரு பாடத்தை கட்டாயம் தெரிவு செய்ய வேண்டிய நேரம் வந்த போது வேறு வழியின்றி சங்கீத வகுப்பில் போய் இருந்ததும், இராகம் வராத காரணத்தால் முதல் நாளே அரைவாசியில் தண்ணீர் குடிக்கச் செல்வதாக ஆசிரியரிடம் சொல்லிவிட்டு ஓடிப்போய் அருகில் இருந்த சித்திரவகுப்பில் இருந்ததும் மறக்கமுடியாத நினைவுகள்.

6ம்வகுப்பு வரும் போது எப்போதும் எமக்காக Smart Class Room காத்திருக்கும். அதுதான் எமது தகரக்கொட்டில் வகுப்பறைகள். அதில் படிப்பது ஓர் இனிமையான அனுபவம்.அந்த அனுபவம் வேறு எந்த வசதியான வகுப்பறைகளிலும் கிடைப்பதில்லை. எமது பலவிதமான குழப்படிகளையும், குறும்புகளையும் தாங்கிக் கொண்டது இந்தத் தகரக் கொட்டில் வகுப்பறைகள், எம்மைப் பொறுப்பெடுத்த புதிய ஆசிரியர் குழாம் எமது குழப்படிகளைத் தாங்கிக் கொண்டு எமக்குள் இருந்த திறமைகளை பிரித்தறிந்து எம்மை திறமையான மாணவர்களாக ஆக்கத் தொடங்கினர். அவர்களில் காளிதாசன் மாஸ்டர், கோகிலா ரீச்சர், லோகநாதன் ரீச்சர், ஆனந்தி ரீச்சர், விநாயகமூர்த்தி மாஸ்டர் கா.சுப்பிரமணியம் மாஸ்டர் போன்றோருடன் வாழ்நாள் ஆங்கில ஆசிரியர் (ஆண்டு 6 தொடக்கம் 10 வரை) இராமச்சந்திரன் ரீச்சரும் ஆவர். ஆங்கில ஆசிரியரிடம் இருந்து எப்போது எம்மைக் காப்பாற்றும் சகமாணவிகளும் (விடை தெரியாத போது) குமாரதேவன் மாஸ்டர் கேள்விகளுக்கு எமக்காக பதிலளித்து எம்மைக்காப்பாற்றும் சக மாணவியும் எமக்குத் தெய்வமாகத் தெரிவார்கள். மேலும் தேற்றத்தை நிறுவச் சொல்லி எமது காதை முறுக்குவதோடு போயா நாட்களில் Extra வகுப்பு வைப்பதில் கைதேர்ந்த குமாரதேவன் ஆசிரியரும் எமது வளர்ச்சியில் முன்னின்றவர்களில் ஒருவராவார். பல இடம்பெயர்வுகள் மத்தியிலும் எமது கல்வியைக் காப்பாற்றியவர்கள். குழப்படிகள் கூடுதலாகச் செய்யும் வகுப்பறைகளிற்கு அதிபர் அடிக்கடி திடீர் விஜயத்தை மேற்கொள்வது வழக்கம். அவர் நாளாந்தம் வந்து செல்லும் வகுப்பாகவும் எமது வகுப்பு காணப்பட்டது. ஆனால் திறமையான மாணவர்களையும் ஆசிரியர்களின் அன்பையும் பெற்ற வகுப்பாகவும் காணப்பட்டது. எமது குழப்படிகள் ஆசிரியர்களால் இரசிக்கப்பட்டாலும் நாளாந்தம் தண்டனைகளுக்கும் குறைவிருக்கவில்லை. குழப்படிகள் காரணமாக அதிபரின் அறைக்கு அழைத்துச் செல்லப்படும் போது “கனக்கி Certificate ஐ எடுத்து வா” என ஒலிக்கும் அதிபரின் உயர்ந்த குரலால் நாம் மிரண்டு நிற்கும் போதும் எப் போதும் எமக்கு உறுதுணையாக நின்று “இந்த முறை மன்னித்து விடுங்கோ சேர்” என்று சொல்லி ஒவ்வொரு முறையும் எம்மை காப்பாற்றும் அதிபரின் உதவியாளர் கனக்கி அண்ணை எமக்கு தெய்வமாகத் தெரிவார். எமது வகுப்பிற்கு வரும் பிற வகுப்பு மாணவர்களும் எமது குறும்புத்தனங்களுக்கு இலக்காகி விடுவார்கள். ஆண், பெண் மாணவர்களிடையே ஏற்படும் போட்டிகளும், சிறு சண்டைகளும் நாளாந்த நிகழ்வுகள் ஆகும். அத்தோடு சங்கரப்பிள்ளை அண்ணையின் கன்ரீனும், பக்கத்து Book டிப்போவும் மறக்க முடியாதவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போர் காரணமாக மகாஜனாவின் விளையாட்டுத்துறை பல கஸ்டங்களைச் சந்தித்திருந்த வேளையில் றோகன் அண்ணா, சங்கர் அண்ணா, மயில்வாகனம் மாஸ்டர் போன்றோர் பாடசாலையின் விளையாட்டுத்துறையை உயர்த்துவதில் பாடுபட்டவர்கள். சிறுவயது முதலே எனக்குப் பிடித்தது கிரிக்கெட். 15 வயதுக்கு உட்பட்டோருக்கான தெரிவிற்கு முதல் ஆளாகவே சென்றுவிட்டேன். முதல் நாளே றோகன் அண்ணா என்னை விக்கெட் காப்பாளராக வாறியா எனக்கேட்ட வார்த்தை இன்றும் ஞாபகத்தில் உள்ளது. வசதிபடைத்த நகர்ப்புறப் பாடசாலைகளோடு கிரிக்கெட்டில் போட்டி போடுவது மிகவும் கஸ்டமாக இருந்தாலும் சைக்கிளில் சென்று பல்வேறு பட்டணப் பாடசாலைகளை வெற்றி கொண்டு பாடசாலைக்குப் பெருமை சேர்த்த காலமது. ஆனால் போர் காரணமாக எமது பாடசாலையின் திறமைகள் யாழ் மாவட்டத்தைத் தாண்டிச் செல்ல முடியவில்லை.

1990 இல் சகல பாடசாலைகளையும் வென்று இறுதியாட்டத்திற்கு தயாரான போது முதல்நாள் உலங்குவானூர்தி தாக்குதல் காரணமாக எமது இறுதியாட்டம் தடைப்பட்டது இன்றும் நினைவில் உள்ளது. பாடசாலையில் பெல் அடிக்கும் இடத்திற்குப் பக்கத்தில் ஒரு பலாமரம் இருந்தது. அதற்குப் பல கதைகள் உள்ளன. அந்த மரத்துப் பழங்களை கன்டீன் சங்கரப்பிள்ளை அண்ணை எப்போதும் வாங்கிவிடுவார். ஆனால் பாவம் அவருக்குப் பழங்கள்தான் மிஞ்சுவதில்லை. அதிகாலை 5.30மணிக்கு கிரிக்கெட் Practiceக்கு வரும் நாங்கள் பலாப்பழத்தை பிடுங்கி பக்கத்தில் இலைகள் சேகரிக்கும் தொட்டியில் புதைத்து விடுவோம். பின்பு பழுத்தவுடன் அதை நாங்கள் சாப்பிடும் போது ஏற்படும் சந்தோசமும் அதை விட சங்கரப்பிள்ளை அண்ணை வந்து பழங்களை காணாது திகைத்து நிற்பதையும் பார்த்து மகிழ்வோம். இப்படியான பல குறும்புகளைச் செய்து அதில் பெருமைப்பட்டும் கொள்வோம்.

காளிதாசன் மாஸ்டர் நடந்து வந்தால் அமைதியாக இருப்போம். ஏனென்றால் குழப்படி செய்வதைக்கண்டால் கிரவுண்டில் முள்பொறுக்க விட்டுவிடுவார். (எவ்வளவு அடியும் வாங்கலாம் ஆனால் முள் பொறுக்குவது ஏலாத காரியம்). காளிதாசன் மாஸ்டரின் வித்தியாசமான கேள்விகள் எம்மைச் எப்போதும் சிந்திக்க வைக்கும் (துரையப்பா hall இற்கு ஒவ்வொரு நாளும் ஏறிப் போகிறீர்கள் எத்தனை படிகள் உள்ளன என ஒரு நாள் கேட்ட கேள்வி இன்றும் மறக்கமுடியாதது. எனது பாடசாலைக்காலத்தில் எனக்குத் தெரிந்த ஒரே அதிபர் அமரர் நாகராஜா ஆவார்.

எப்போதும் கம்பீரமாக ஒரு பிரம்புடன் கீழே பார்த் தபடி நடந்து வரும் ஒரு அதிபராவர். எமது பாடசாலை பல இடம்பெயர்வுகளைக் கண்டாலும் தனது சிறந்த ஆளுமையும் பாடசாலையின் மீதான பற்றுக் காரணமாகவும் தனது உயிரையும் பொருட்படுத்தாது பாடசாலையின் சொத்துக்களையும் பாடசாலையையும் காப்பாற்றிய அதிபராவார். எமது பாடசாலை வரலாற்றில் துரையப்பாபிள்ளை ஆரம்பித்த பாடசாலையை அதிபர் ஜெயரட்ணம் அவர்கள் காப்பாற்றி முன்னேற்றியவர் என்றால் போர்க்காலத்தில் பாடசாலையை அழியாமல் காப்பாற்றியவர் அதிபர் நாகராஜா என்றால் அது மிகையாகாது. அவரது சேவை பாடசாலையின் வரலாற்றில் என்றும் நிலைத்திருக்கும். அவரின் வீட்டிற்கு பாடசாலை விடயங்கள் காரணமாக செல்லும் போது அவரின் எளிமையையும் சிறந்த உபசரிப்பையும் கண்டு நாம் பிரமிப்படைந்ததுண்டு. ஒரு முறை அவரின் மனைவியாரினால் வழங்கப்பட்ட தொதல் சாப்பிட்ட நினைவு இன்றும் என் மனதில் உள்ளது. எமது பாடசாலையின் இடம்பெயர்வு முதலில் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரிக்கும் பின்னர் அளவெட்டி அருணோதயக் கல்லூரிக்கும் இணுவில் மத்திய கல்லூரிக்கும் எனத் தொடர்ந்தது. இணுவிலில் இடம்பெயர்ந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படித்துக்கொண்டு இருந்தாலும் எமது அணி அந்த வருடத்தில் சரஸ்வதி பூசையை மிகவும் சிறப்பாகக் கொண்டாடியது இன்றும் மறக்கமுடியாத நிகழ்வாகும்.

A/L வந்தவுடன் விஞ்ஞானப் பிரிவுக்கு என்னோடு எனது சில நண்பர்களும் வந்தனர். எப்போதும் எமக்குத் தண்டனை வழங்குவதில் கைதேர்ந்த இரசாயனவியல் மேதை சுந்தரலிங்கம் ஆசிரியரும், அவரோடு சேர்ந்து இரசாயனவியலைக் கற்பித்த மோகனதாஸ் மாஸ்டரும், எப்போதும் பொக்கட்டில் சாய்பாபாவின் படத்தோடு வரும் பௌதீகவியல் ஆசிரியர் சத்தியமூர்த்தி சேரும். தாவரவியலைப் படிப்பித்த கேதீஸ்வரி ஆசிரியரும் எனது சிறந்த எதிர்காலத்திற்கு வழிவகுத்தவர்களாவர். மேலும் எனது சகோதரியே எனக்கு வகுப்பாசிரியராகவும் எனது விலங்கியல் ஆசிரியராகவும் (சாந்தி ரீச்சர்) வந்தது ஒரு வித்தியாசமான அனுபவமாக இருந்தாலும் எனது பல குழப்படிகளுக்கும் முற்றுப்புள்ளி போட்டது. வேறு பாடசாலைகளில் இயங்குவதால் எமது தனித்துவம் இழக்கப்படும் என்பதால் மருதனார்மடத்தில் வெறும் காணியில் பாடசாலை அமைப்பதற்காக 94 அணி உடன் இணைந்து நிதிசேகரிப்பதற்காக மாணவர்கள் குழுக்களாக பிரிந்து நிதி சேகரித்தனர். கடும் மழையிலும் நிதி சேகரிப்பதற்காக நனைந்து நனைந்து இசை நிகழ்ச்சியை நடத்திக் காட்டியதும் மகாஜனாவின் மேலான பற்றை வெளிக்காட்டியது.

பின்னர் தேவையான பனை மரங்களைப் பெறுவதற்காக போர் நடைபெறும் பகுதிக்கு சென்று மரங்களைத் தறித்ததும் துப்பாக்கி சன்னங்களில் இருந்து உயிர் தப்பி ஓடி வந்ததும் திரும்பவும் சென்று பனை மரத்தை ஏற்றி வந்ததும் மறக்கமுடியாத நினைவுகள். உயிரைப் பணயம் வைத்து எமது அணி மாணவர்கள் செய்தது எல்லாம் எமது பாடசாலை அழிந்து போகாமல் இருக்க வேண்டும் என்பதற்காகவே என்பதை இதைப் படிக்கும் இன்றைய மகாஜனாவின் மாணவர்கள் அறிந்திருக்க வேண்டியது கட்டாயம் என நினைக்கிறேன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமக்கென இணுவிலில் ஒரு காணியை எடுத்து அதை மாணவர்கள் எல்லோரும் சேர்ந்து துப்புரவு செய்து அதில் எமது விளையாட்டு போட்டியை மிகவும் சிறப்பாக நடத்திக்காட்டிய பெருமையும் எமக்கு இருக்கிறது. மருதனார்மடத்தில் மகாஜனாவின் வடிவிலேயே கொட்டில் அமைத்து இயங்கியவர்கள் எமது ஆசிரியர்களும் மாணவர்களும் ஆவர். வேறு பாடசாலைகளின் நிகழ்வுகளுக்குச் செல்லும் போது எம்மைப் பார்த்து கொட்டிலில் இருந்து படிக்கிறீர்கள் என நக்கல் அடிக்கும் போது கொட்டிலில் இருந்தாலும் தனித்துவமாக இயங்குகிறோம் என பெருமையாக சொன்ன காலங்களும் நினைவுக்கு வருகிறது. போர்ச் சூழலிலும் கல்விச் சுற்றுலா சென்றது மறக்க முடியாததாகும்.

அன்றைய காலத்தில் மிகப்பெரிய மாணவர் தொகையைக் கொண்ட பாடசாலையாகவும் எமது பாடசாலை காணப்பட்டது. படிப்பு, விளையாட்டுத்துறை, மற்றும் இதர செயற்பாடுகளிலும் மிகவும் சிறந்து விளங்கியது. யாழ் மாவட்டத்தில் இருந்த கழகங்களில் அந்த காலத்தில் இன்ரறக் கழகம் மிகவும் பிரபல்யமானது. எமது பாடசாலை இன்ரறக்ட் கழகமானது யாழ் மாவட்டத்திலேயே அதிகூடிய அங்கத்தவர்களைக் கொண்டதாகவும், அதிக செயற்பாடுகளை செய்த கழகமாகவும் காணப்பட்டது. கொட்டிலில் இருந்தும் நாம் செயற்படும் விதத்தைக் கண்டு வியந்தன நகர்ப்புற பாடசாலைகள். போர்ச்சூழலிலும் யாழ்ப்பாணத்திலேயே இன்றரக் கழகத்தினால் முதற் தடவையாகவும், கல்லூரி வரலாற்றில் ஒரு கழகத்தினால் முதல் தடவையாகவும் மகாஜனதீபம் என்ற புத்தகத்தை வெளியிட்டும் பெருமையடைந்தோம். மருதனார்மடத்தில் சிறப்பாக நடைபெற்ற ஆசிரியர் தினமும் நினைவு கூரத்தக்கது. கணேசலிங்கம் ஆசிரியர், சயந்தன் ஆசிரியர் போன்றோரின் தோழமையான உறவும் என்றும் நினைவில் நிற்பவை.

இவ் எல்லா ஆசிரியர்களும் எமது கல்வியை உயர்த்துவதற்கு பெரும்பாடுபட்டனர். A/L பரீட்சைக்காலத்தில் மீண்டும் பல மாணவர்கள் இடம்பெயர வேண்டி இருந்தது. இந்த நேரத்தில் உரும்பிராயில் எனது வீட்டில் கலை, வர்த்தகம், கணிதம், விஞ்ஞானம் என நான்கு பிரிவு மாணவர்களும் ஒன்றாக பெற்றோல் மக்ஸ் கொழுத்தி பரீட்சைக்கு படித்ததும் ஒரு வரலாறாகும் வேறு எந்த அணியிலும் நடைபெறாத ஒன்றாகும். அது எமது அணியின் ஒற்றுமையை வெளிக்காட்டியதோடு எமது சிறுவயது நினைவுகளையும் மீட்டியது. போர்க்காலத்தில் பொருளாதார போக்குவரத்து தடை காணப்பட்டாலும் நாம் எமது குறிக்கோளை அடைவதில் பின் நிற்கவில்லை சத்தான கஞ்சி குடித்து, பனம் பழத்தில் வெள்ளைச்சட்டை தோய்த்து, ஜாம் போத்தலில் குப்பி விளக்கு செய்து வீட்டிற்கு ஒளியூட்டி அதில் கல்வி கற்று, சைக்கிள் டைனமோவைச் சுற்றச் செய்து அதன் மூலம் ரேடியோவை இயங்கச் செய்து அதில் எப்போது பரீட்சை என அறிந்து, படிப்பதற்கு டதாசி தட்டுப்பாடு காரணமாக பத்திரிகைக் காரியாலயத்திற்குச் சென்று கழிவுப்பேப்பரை வாங்கி அதில் குறிப்பு எடுத்துப் படித்து, பரீட்சை நிலையத்திற்கு சைக்கிளில் நெடுந்தூரம் பிரயாணம் செய்து, பரீட்சை வினாத்தாள் கப்பலில் வந்து சேருமா என ஏக்கத்தோடு பரீட்சை நிலையத்தில் காத்திருந்து, நேரம் பிந்தி கிடைத்த பரீட்சை வினாத்தாளில் விடையெழுதி, O/L மற்றும் A/L பரீட்சையில் சித்தியடைந்து இன்று உலகெங்கிலும் வாழும் எமது அணியானது மகாஜனா வரலாற்றில் மறக்கமுடியாத ஒரு அணியாக உள்ளது. இன்றும் தொடர்ந்து ஓர் அணியாக மகாஜனாவிற்கு உறுதுணையாக நிற்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வானமே எல்லை"

மிதுலாகரன் பாலசிங்கம்

பரபரப்பான மின்னியல் நாகரிகத்தின் உந்துதலில் சுழலும் இவ் பூமிப்பந்தில் பரவியுள்ள உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு 95A/L மகாஜனன்களை இந்த மடலின் ஊடாக மீண்டும் ஏற தாள 30 ஆண்டுகள் கழித்து சந்திப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றேன்.

நான் 2001ம் ஆண்டு மொறட்டுவப் பல்கலைக்கழகத்தில் கணிய அளவியல் (Quantity Surveying) துறையில் பட்டம் பெற்று ஆரம்ப காலத்தில் இலங்கையிலும் பின் மத்திய கிழக்கு நாடுகளிலும் பணிபுரிந்து தற்போது கடந்த பதின்நான்கு ஆண்டுகளாக ஆஸ்திரேலியாவில் ஒப்பந்த நிர்வாகியாக பணிபுரிகின்றறன்.

எனது பாடசாலை காலத்தின் ஆரம்ப காலத்தில் 1986வது ஆண்டு வரை (3ம் வகுப்பு வரை) வசாவிளான் ஆரம்பப்பிரிவு பாடசாலையிலும் பின் புலம்பெயர்ந்து 1991வது ஆண்டுவரை (க.பொ.த சாதாரண தரம்) அளவெட்டி அருணோதயாக் கல்லூரியிலும் பின் 1995வது ஆண்டு வளர (க.பொ.த உயர் தரம்) கணித பிரிவில் மகாஜனாவிலும் கற்றுக்கொண்டேன். இருந்த போதும் நான் மகாஜனாவின் உயர்தரவகுப்பில் கல்விகற்ற பெரும்பாலான சகமாணவர்களை 80துகளின் கடைசிக்காலத்தில் அதாவது க.பொ.த சாதாரண தரத்துக்கு முந்தைய காலத்திலேயே தனியார் கல்விநிலையங்களின் ஊடாகவும் தனிப்பட்ட முறையிலும் நன்கு அறிந்தும், பழகியும் இருந்திருக்கின்றேன். இது எனது மகாஜனா பாடசாலைக் காலத்தில் சக மாணவர்களோடு இறுக்கமான நெருக்கத்தை குறுகிய காலத்திலேயே ஏற்படுத்தி விட்டிருந்தது.

அந்த வகையில் எனது தனிப்பட்ட வளர்ச்சிக்கும் தொழில் சார்ந்த வளர்ச்சிக்கும் வித்திட்ட எனது பாடசாலைகளில் மகாஜனாவும் அதன் நிர்வாகம், அதிபர், ஆசிரியர்கள், மற்றும் சகமாணவர்களுக்கும் ஒரு கணிசமான உயர்ந்த பங்குண்டு அதற்க்கு இந்த மடலினூடாக நன்றி சொல்ல நினைத்த பொழுது வானமே எல்லை என கூறினால் அது மிகையாகாது.

கடிகாரத்தை மீறிய வேகத்தில் நாமெல்லாம் நமது குடும்பம், குழந்தைகள், அவர்களின் எதிர்காலம் என ஏதோ ஒரு இயற்கை சுழற்சிக்குள் சுழன்றாலும் நம் ஒவ்வொருவர் வாழ்விலும் என்றுமே பசுமையான பொக்கிஷமா பதிந்து கிடக்கும் பள்ளி நினைவுகள் மெல்லிய காற்றின் கீறல்போல் நிச்சியமாக நமது மூளையில் அவ்வப்போது தோன்றி அந்த இனிப்பான நினைவுகளை மீட்டு எங்களை மீண்டும் புத்துணர்வூட்டி புதிய வேகத்தோடு உந்திவிடுகிறது.

நாம் அனைவருமே எமது பாடசாலைக் காலத்தை ஒரு தீவிர யுத்தம் நடைபெற்றுக் கொண் டிருந்த சமகாலத்திலேயே கடந்து வந்துள்ளோம். இதன் காரணமா பாடசாலையும் மாணவர்களும் பல தற்காலிக புலம்பெயர்வுகளை குறுகியகாலத்துக்குள் சந்தித்தபோதும் சீரான சிறந்த கல்வி மற்றும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைத்து துறைகளையும் தரக்குறைவின்றி மாணவர்களுக்கு வழங்குவதில் பாடசாலைகளனும் அதன் ஆசிரியர்களும் தொடர்ந்து மிக அர்ப்பணிப்போடு செயற்பட்டார்கள். அந்த வகையில் எனது பாடசாலை மகாஜனாகல்லூரி பல அர்ப்பணிப்போடு செயற்பட்டு என் போன்ற பல மாணவர்களின் வாழ்க்கைக்கும் வளர்ச்சிக்கும் வழிவகுத்ததை நாம் கண் முன்னே கண்டதோடு மட்டும் அல்லாமல் வாழும் சாட்ச்சியாகவும் இருக்கின்றோம்.

எப்பேற்ப்பட்ட சோதனைகள் எமைச்சூழ்ந்து வந்தபோதும் மகாஜனாவும் அதன் ஆசிரியர்களும் மாணவர்களும் தனித்து ஒற்றுமையோடு செயற்ப்பட்டு தாம் ஒரு தனித்துவமானவர்கள் என்பதை 90 களின் நடுப்பகுதியில் யாழில் நிகழ்த்திகாட்டியவர்கள்.

90களின் ஆரம்பகாலம் முதலே உள்நாட்டு யுத்தம் மற்றும் அரச பொருளாதாரத்தடை தீவிரமடைந்து இருந்ததால் எமது பாடசாலையும் மாணவர்களும் பல சிரமங்களையும் தொடர் இடம்பெயர்வுகளையும் முகம் கொடுக்க நேர்ந்தது. இருந்தபோதும் எங்கள் அதிபர் அமரர் திரு நாகராஜா அவர்களினதும் சக ஆசிரியர்களினதும் அர்ப்பணிப்பும் விடா முயற்ச்சியும் மாணவர்களது பூரண ஒத்துழைப்பும் ஒன்றுசேர மகாஜனா பாடசாலை தனது புகழ் மங்காமல் தனிச்சிறப்போடு உயர்ந்து நின்றது. இதற்க்கு ஒரு சிறந்த உதாரணமாக பாடசாலைகளையும் அதன் நிர்வாகம் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பழையமாணவர்கள் உதவியோடு இணுவில் பரராஜாசேகரப் பிள்ளையார்கோவில் முன் இருந்த தூர்வாரப்படாத பழைய குளத்தை சுத்தப்படுத்தி சமப்படுத்தி தயார்ப்படுத்தி ஒரு மைதானத்தை அமைத்தது மட்டுமின்றி மருதனார்மடத்தில் இருந்த ஒரு சிறு பற்றைக் காடாக கிடந்த காணியை தற்காலிகமாக கையகப்படுத்தி அதில் சிறப்பான முறையில் அனைத்து வகுப்புக்களும் உள்ளடக்கமாக கொட்டில்கள் அமைத்து யாழ் மாவட்டத்தில் ஏனைய பாடசாலைகளுக்கு முன்னுதாரணமாக செயற்பட்டது எமது பாடசாலையின் திறமை மற்றும் தனித்துவம் போன்றவற்றை எடுத்துக்காட்டி இருந்தது.

மாணவர்களாக இருந்து நாங்கள் தெரிந்தும் தெரியாமலும் செய்த தவறுகளைப் பொறுத்துக்கொண்டு எங்களை கைவிடாது எங்கள் பாடசாலையும் அதன் நிர்வாகமும் மற்றும் ஆசிரியர்களும் எமக்கு கல்வியையும் ஏனைய துறைசார் திறமைகளையும் கற்றுக்கொடுத்தார்கள். அதுமட்டுமின்றி பாடசாலைப் பழையமாணவர்கள் உதவியோடு மேலதிக வகுப்புக்களையும் ஒழுங்கு செய்து தருவதில் பாடசாலை முழு ஒத்துழைப்பையும் வழங்கியது (குறிப்பாக இராசாயனவியல்– Chemistry மற்றும் பௌதீகவியல்-Physics). இது எங்கள் வளர்ச்சியில் பாடசாலை காட்டிய ஆர்வத்துக்கு மேலும் சான்றாக அமைகிறது.

இது போன்று எமது பாடசாலை காலத்துக்குக் காலம் பல மாணவர்களை கல்வி, விளையாட்டு, கலை, மற்றும் பண்பாடு போன்ற அனைத்துத் துறைகளிலும் திறம்பட பயிற்றுவித்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பெருவிருச்சங்களாக விரிந்து பலன் கொடுக்க வைப்பதுமட்டுமின்றி எமது சமூகத்தின் பேராளுமைகளாக திகழவைத்துக்கொண்டும் இருக்கிறது. இந்தவரலாறு தொடர்ந்தும் நிறைவேறிக்கொண்டே இருக்கும் இதற்கு பாடசாலைக்கும் பாடசாலை நிர்வாகத்துக்கும் அதிபர் ஆசிரியர்கள் மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்களுக்கும் எனது உளமார்ந்த வாழ்த்துக்களும் நன்றிகளும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலை உதைபந்தாட்ட குழுவில் இடம்பெற்று ஒரு சில போட்டிகளில் கலந்துகொண்டும் இருந்தேன் மேலும் சிலகாலம் துடுப்பாட்டக் குழுவில் பயிற்சியிலும் ஈடுபட்டு ஒரு சிலகாரணங்களால் தொடரமுடியாது இடைநிறுத்தியும்மிருந்தேன். இதுதவிர குறுகிய காலம் சாரணியம் (scout) மற்றும் இன்டராக் கழகம் (Interact Club) போன்றவற்றிலும் மாணவர் பாதுகாப்புக்காக உருவாக்கபட்டிருந்த வாகன போக்குவரத்து கட்டுப்பாட்டு குழுவிலும் (Traffic Control) இடம்பெற்றுமிருந்தேன் என்னை போன்று ஒவ்வொரு மாணவரும் தத்தம் திறமைகளை வெளிக்கொண்டுவர பாடசாலை தகுந்த நேரத்தித்தில் தகுந்த தளங்களை அமைத்துக்கொடுத்து முழு உறுதுணையையும் வழங்கியது.

பாடசாலையில் பயின்றகாலத்தில் பாடசாலையிலும் மற்றும் ஆசிரியர்களிலும் இருந்த நம்பிக்கை தவிர எனது நாட்கள் பற்பல ஏக்கங்களோடு கழிந்தது இப்போதும் நினைவில் உண்டு. இதில் குறிப்பிட்டுக் கூறக்கூடியவையாக உள்ளவையாவன -யுத்தத்தால் கல்வி தடையின்றி தொடருமா-ஒருசில காரணங்களால் குறைந்திருந்த ஆசிரியர்களின் முழு அன்பு கிடைக்குமா- உயர்தரப்பரீட்சை உரிய நேரத்தில் நிகழுமா- அவ்வாறு நிகழ்தாலும் பல்கலைக்கழக நுழைவு கிடைக்குமா- போன்ற ஏக்கங்கள் இருந்தன. மேலும் குறிப்பாக நாங்கள் எங்கள் இரசாயனவியல் பரீட்சைக்குத் தயாராகி போன அந்தநாள் இன்றும் நினைவில் இருக்கிறது. பலாலியில் இருந்து நடத்தப்பட்ட தொடர் செல்தாக்குதலால் பரீட்சை சில மணி நேரம் கழித்து ஆரம்பமானது. அப்போது நாங்கள் எங்கள் பரீட்சையை உரும்பிராய் மத்திய மகாவித்தியாலத்தில் தோற்றி எழுதினோம். இதனால் பரீட்சை இடைநிறுத்தப்பட்டு மீண்டும் ஒரு திகதியில் இடம்பெறுமா என இருந்த ஏக்கங்கள் பரீட்சை முடிந்த கையோடு மீண்டும் ஒரு இடம்வபயர்வு இம்முறை யாழ் நகரில் இருந்து முழுவதுமான இடம்பெயர்வு. நாங்கள் வன்னிக்கு சென்று குடியேறிய பிறகு யாழ் நகரத்துக்கான போக்குவரத்து ஒரு இறுக்கமான நிலையில் இருந்த காலம் அது. பரீட்சைப்பெறுபேறுகள் எப்போது, எப்படி, எங்கே பார்ப்பது என்று தெரியாமல் ஏங்கிய காலங்கள் பின் பெறுபேறுகள் வந்தும் கடைசிவரை பெறுபேறுகளை பார்க்கவே முடியவில்லை. பின்பு வன்னி பெருநிலப்பரப்பில் இருந்து யாழ் நிலப்பரப்புக்கு பயணம் மேற்கொண்டுவந்த நெருங்கிய நண்பன் ஒருவன் மூலமாக அறிந்துகொண்டு அதை ஆசிரியர்களோடு பகிர்ந்து அவர்கள் ஆசிர்வாதமும் ஆலோசனையும் பெறமுடியாமல் ஆசிரியர்களை தேடி ஏங்கியகாலங்கள் என பல ஏக்கங்கள் நிறைந்திருந்த காலமது.

ஒருவிதமாக இறையருளும் பெற்றோரின் உறுதுணையும் கல்லூரி ஆசான்களின் கற்ப்பித்தல் திறனும் நண்பர்களின் உதவியும் இவற்றோடு இவர்கள் அனைவரதும் ஆசிர்வாதமும் எனக்கு இருந்தபடியால் பரீட்சை பெறுபேறு பல்கலைக்கழக Esost முதல் அமர்விலேயே பெற்றுத்தந்தது. இவர்களுக்கு என் மனமார்ந்த நன்றிகளை இம்மடலின் ஊடக பதிவுசெய்வதோடு என் உயிர் உள்ளவரை இவர்களுக்கும் பாடசாலைக்கும் நன்றிக்கடன் பட்டுள்ளேன். குறிப்பாக நான் எனது அதிபர் அமரர் திரு நாகராஜா மற்றும் ஆசிரியர்களான தூய கணித (Pure Maths) ஆசிரியர் திரு கமல்சிங்கம், பிரயோக கணிதம் (Applied Maths) மற்றும் பௌதீகவியல் (Physics) ஆசிரியர்கள் திரு சத்தியமூர்த்தி, திரு தளயரட்ணம் மற்றும் வேலாயுதநாதன் அவர்கள், இராசாயனவியல் (Chemistry) ஆசிரியர்கள் திரு சுந்தரலிங்கம் திரு. மோகனதாஸ் மற்றும் செல்வி கேதீஸ்வரி, இவர்களோடு ஆங்கில (English) ஆசிரியர்கள் திருமதி செல்லப்பா மற்றும் திருமதி றட்ணம் போன்றவர்களை இதில் நன்றியோடு நினைவுகூற கடமைப்பட்டுள்ளேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகாஜனாவின் எதிர்கால இளைய சமூகத்துக்கு கணிய அளவியல் பற்றிய ஒரு சிறு குறிப்பை இச்சந்தர்ப்பத்தில் தருவது பொருத்தமானது என நினைக்கின்றேன்.

## கணிய அளவியல் பாடத்துறை (Quantity Surveying)

பொறியியல், மருத்துவம், கணனி, பொருளாதாரம் போன்ற அனைத்து துறைகளும் எம்மவரிடையே மிகவும் பரீட்சயமான துறைகள் ஆனால் கணிய அளவியல் என்ற ஒரு துறை அதுவும் இன்றைய அபிவிருத்தியடைந்த, அடைந்துவரும் நாடுகளில் மிகவும் விரைவாக பரவி வரும் இத்துறையை பற்றி எம்மவர்கள் குறைந்த அளவிலையை அறிந்து வைத்திருக்கிறார்கள் என்பது மிகவும் வருத்தமளிக்கிறது. கணிதத்துறையைத் தெரிந்தெடுப்பவர்கள் எப்போதும் பொறியல் துறைக்குத்தான் முதலிடம் கொடுப்பர். அதன் பின் பௌதீகத்துறை என வகுப்பர். ஆனால் இவற்றுக்கிடையில்தான் கணிய அளவியல் (Quantity Surveying) கட்டிடக்கலை (Architecture) ஆகிய துறைகள் அமைகின்றன. இது முற்றுமுழுதாகவே நில அளவையியலில் (Land Surveying) இருந்து வேறுபட்டதொன்றாகும்

அடுத்து இந்த பாடநெறிதிட்டம் இங்கிலாந்திலிருந்துதான் ஏனைய நாடுகளுக்கு அறிமுகப்படுத்தப் பட்டது. இதை இலங்கை, இங்கிலாந்து, அவுஸ்த்திரேலியா ஆகிய நாடுகளில் கணிய அளவியல் (Quantity Surveying) என்றும் இத் தொழிலாற்றுபவர்களை கணிய அளவியலாளர் (Quantity Surveyor) எனவும் மற்றும் கனடா, அமெரிக்கா போன்ற நாடுகளில் Cost Engineer என்றும் அழைக்கிறார்கள். இத்துறை இலங்கையில் 80 துகளின் ஆரம்பத்தில் அறிமுகமாகி முதல் பட்டதாரியை 1985ம் ஆண்டு உருவாக்கியிருந்தது. மேலும் இது மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் (University of Moratuwa) கட்டிடக்கலைப்பீடத்தின் (Faculty of Architect) கட்டிட பொருளியல் திணைக்களம் (Department of Building Economics) என இயங்கி வருவதோடு ஆண்டு தோறும் குறைந்தது 50 பட்டதாரிகளை நாட்டுக்கு ஈன்றுவருகிறது. மேலும் இந்த பட்டதாரிகள் பயிலும் பாடவிதானமானது BSc (Hons) in Quantity Surveying என அழைக்கப்பட்டும் இந்த பட்டப் படிப்பானது அவுஸ்திரேலிய நாட்டின் Australian Institute of Quantity Surveyors (AIQS) மற்றும் பிரித்தானிய நாட்டின் Royal Institution of Chartered Surveyors (RICS) ஆகிய இரு சர்வதேச அளவில் பிரசித்தி பெற்ற நிறுவனங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதால் உலகில் எந்த மூலையிலும் வேலை வாய்ப்பை பெறக்கூடிய உத்தரவாதத்தை அளிக்கிறது.

கணிய அளவீட்டளர்கள் (Quantity Surveyors), பொறியியலாளர் (Engineers), கட்டடக் கலைஞர்கள் (Architect) எல்லோரும் ஒன்றிணைந்து செயற்படுவர். ஒரு கட்டடமோ இல்லை ஒரு நிர்மாணமோ (Construction) கட்டட கலைஞரின் வடிவமைப்புக்கும் நிர்மாணத்தின் பொறியியலாளரின் பரிமாணத்துக்கும் அமைய மதிப்பீடு (Cost Estimate) செய்து அந்த வேலைத்தித்திட்டத்தை உருவாக்கி மதிப்பீட்டு கண்காணிப்பை (Cost Control) பேணுவது கணிய அளவீட்டாளரின் முக்கிய முதுகெலும்பான பொறுப்பு. கணிய அளவீட்டாளர்(QS) ஆலோசனையாளர் பிரிவிலிருந்து முதலீட்டாளருக்கு (Client) மதிப்பீட்டறிக்கையை (Cost Information) வழங்கி வேலைத்திட்டத்தை வரவு செலவு திட்டத்தினுள் அடங்கிய வகையில் முடிப்பதற்கான மதியுரை(Idea) வழங்கி திட்டத்தை இணைப்பர். இவ்வாறு ஒரு கணிய அளவீட்டாளர் பதவியில் இருப்பவர்தான் நிர்மாண நிருவமொன்றின் இதயமென கருதப்படுகிறார்.

வாழ்க மகாஜனா வாழ்க மகாஜனன்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடித்தளம் / அத்திவாரம் (Fondation)

தங்கராஜா பகிரதன்




எந்திரம் போல வேகமாக ஓடிக்கொண்டிருக்கும் இந்த தொழில்நுட்ப உலகத்தில் கனடாவிலே மின்னணுவியல் மற்றும் மென்பொருள் எந்திரவியலாளராக பணியாற்றிக் கொண்டிருக்கின்றேன். வீட்டில் இருப்பவர்களையே சந்திக்க முடியாத அளவிற்கு வேலை, பிள்ளைகளின் படிப்பு, சமூக சேவை என ஓடிக்கொண்டே இருக்கின்றேன். தொழில்நுட்ப வளர்ச்சினூடாக கிடைத்த சமூக வலைத்தளங்களின் வளர்ச்சியால் இன்று எனது பாடசாலை மாணவர்களது தொடர்பு கிடைத்ததையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது ஆரம்பக் கல்வியை பன்னாலை சேர் கனகசபை வித்தியாலயத்தில் ஆரம்பித்து மகாஜனாவின் மூன்றாம் வகுப்புக்குரிய தகுதிகாண் பரீட்சையில் சித்தி பெற்று மகாஜன கல்லூரிக்கு அனுமதி பெற்றேன். மூன்றாம் வகுப்பில் இருந்து A/L வரை தொடர்ந்து மகாஜனாவிலேயே கல்வி கற்றேன். சாரணீயம், இன்டராக்ட் கழகம் (Interact Club), சதுரங்க கழகம் (Chess Club) மற்றும் மெய்வல்லுனர் விளையாட்டுப்போட்டிகளிலும் பங்குபற்றியிருந்தேன்.

போர்ச்சூழல் காரணமாக ஏற்பட்ட பல இடப்பெயர்வுகளின் மத்தியில் நடந்தேறிய சோதனைகளில் சித்தி எய்தி பேராதனை பல்கலைக்கழகத்தின் பொறியியற்பீடத்துக்கு தகுதி பெற்று 2002ஆம் ஆண்டில் மின்னியல் மற்றும் மின்னணுவியல் பொறியியலாளராக (Electrical & Electronic Engineer) வெளியேறினேன். 2002/2003 காலப்பகுதியில் இலங்கையில் மின்னணுவியல் துறையில் நிலவிய வேலை இன்மை காரணமாக முதுமாணி பட்டம் (Masters Degree) படிக்கலாம் என முடிவு பண்ணி இங்கிலாந்து சென்று முதுமாணி பட்டத்தை நுண் மின்னணுவியல் மற்றும் தொடர்பாடல் பொறியியல (Microelectroic & Communications Engineering) இல் பெற்றேன். இங்கிலாந்தில் வேலை தேடினேன், படிப்புக்குரிய வேலை கிடைக்கவில்லை. ஏனென்றால் பொருளாதார நெருக்கடி (Economic Crisis) நிறைந்த நேரத்தில் தான் எனது படிப்பு நிறைவடைந்தது. தடிமன் காய்ச்சல் வருவது போன்று பொருளாதார நெருக்கடியும் அடிக்கடி வந்து வேலையில்லா பிரச்சினையை உண்டு பண்ணிவிடுகிறது. சிங்கப்பூரில் வேலை வாய்ப்பு ஓரளவு நன்றாக இருந்ததால் சிங்கப்பூருக்கு செல்ல முடிவெடுத்தேன். சிங்கப்பூரில் 5 வருடங்கள் எனது துறையில் வேலை பார்த்துவிட்டு திறமை அடிப்படையிலான குடிபெயர்வின் (Skilled Migration) மூலமாக கனடாவை வந்தடைந்தேன். சிங்கப்பூரில் பெற்ற அனுபவத்தை வைத்து கனடாவில் இலகுவாக வேலை எடுக்க முடிந்தது.

எவ்வளவு பிரச்சினைகள் வந்தபோதும் மனம் தளராது நாடு விட்டு நாடு, கண்டம் விட்டு கண்டம் என்று ஓடி எனது இலங்கை அடைவதற்கான தைரியததை (Courage) உருவாக்கியிருந்தது மகாஜனவும் கற்பித்த ஆசிரியர்களுமே. இதை தான் அடித்தளம் என்று கூறுகிறேன்.

பல்கலைக்கழகங்கள் பட்டதாரிகளை உருவாக்குகின்றன. அங்கே என்ன நடக்கிறதென்றால், பாடசாலை ஆசிரியர்களால் அமைக்கப்பட்ட அத்திவாரத்திற்கு மேலே ஒரு மாடி கட்டப்படுகிறது. முதுமாணி பட்டம் என்பது முதலில் கட்டப்பட்ட மாடிக்கு மேல் இன்னுமொரு மாடியை காட்டுவதாகும். இப்படியாக எத்தனை மாடி வேண்டுமென்றாலும் கட்டிக்கொண்டுபோகக்கூடிய அளவுக்கு உறுதியான அத்திவாரத்தை அமைத்து கொடுப்பவர்கள் பாடசாலை ஆசிரியர்களே.

என்னுடன் படித்த பல மாணவர்கள் சந்தர்ப்பம் சூழ்நிலை (Circunstance) காரணமாக நேரடியாக தொழில் நிறுவனங்களுள் (Industry) சென்று விட்டார்கள். அவர்களில் சிலர் இன்று உயர் பதவிகளிலும் மற்றும் சிலர் பலருக்கு தொழில் வாய்ப்பைக் கொடுக்கக்கூடிய முதலாளிகளுமாக இருக்கிறார்கள். சிலர் தொழில் நிறுவனங்களில் இருந்துகொண்டு பின்னர் பட்டப்படிப்பையும் முடித்துள்ளார்கள். பாடசாலையும் பாடசாலை ஆசிரியர்களும் அமைத்துக்கொடுத்த அடித்தளமும் வழிகாட்டலுமே இதற்கான முதன்மைக் காரணம்.

இந்த அடித்தளம் அமைக்கும் பணியை மகாஜனாவில் செய்வதற்கு எனக்கும் குறுகிய காலத்துக்கு சந்தர்ப்பம் ஒன்று கிடைத்தது. ஆசிரியர்களின் இடப்பெயர்வு காரணமாக A/L கணிதப்பிரிவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் பற்றாக்குறை நிலவியது. பல்கலைக்கழக அனுமதி பெற்றுவிட்டு பல்கலைக்கழகத்துக்குள் செல்வதற்கு இரண்டு வருடங்கள் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. அந்த வேளையில் 98 மற்றும் 99 A/L வகுப்புகளுக்கு கணிதம் படிப்பிக்க அந்த நேரத்தில் உப அதிபராக இருந்த திரு. சுந்தரலிங்கம் ஆசிரியர் அவர்கள் என்னை அழைத்தார். பேருவகையுடன் இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டேன். திரு. சுந்தரலிங்கம் ஆசிரியர் அவர்கள் எனக்கு இரசாயனவியல் படிப்பித்த ஆசிரியரும் ஆவார். படித்த பாடசாலையிலேயே கற்பிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்தது அளவற்ற மகிழ்ச்சியை கொடுத்திருந்தபோதிலும், நான் இந்த பணியை எவ்வாறு திறம்பட செய்யப்போகிறேன் என்று எனக்குள்ளே ஒரு பயத்தையும் உருவாகியிருந்தது. எனக்கு கற்பித்த ஆசிரியரே என்னை அழைத்தமை அவர் என் மீது வைத்திருந்த நம்பிக்கையை எடுத்தக்காட்டுகிறது. அந்த நம்பிக்கைக்கு அவதூறு வராத வண்ணம் எனது கற்பித்தல் பணியை செய்துள்ளேன் என்று நம்புகிறேன். புதிதாக ஒரு கணித ஆசிரியரை நியமிக்கும் வரை தூய, பிரயோக கணிதத்தைக் கற்பித்தேன்.

மேலும் தற்பொழுது கனடாவிலும் பழைய மாணவர் சங்கத்தின் பரீட்சை சபை (Examinatin Board) உடன் இணைந்து பணியாற்றி வருகிறேன். வருடா வருடம் கணிதம் மற்றும் பொது அறிவுப் போட்டி சோதனைகளை தரம் 1 முதல் 12 வரை நடாத்தி வருகின்றனர். தரம் 10 கணித வினாத்தாள் தயார் செய்வது, திருத்துவது சோதனை மேற்பார்வை செய்வது போன்ற பணிகளை மகிழச்சியடன் செய்து வருகின்றேன்.

நான் நிலையான, கௌரவமான ஒரு வாழ்வை வாழ்வதற்கான அடித்தளத்தை அமைத்துக்கொடுத்த மகாஜனா கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் சக மாணவர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். அதிபர், கல்வி கற்பித்த சில ஆசிரியர்கள் மற்றும் சில சக மாணவர்கள் அமரத்துவம் எய்திய செய்தி கேட்டு துயருற்றேன். எனது பள்ளிக்காலத்தில் நீண்ட நாட்கள் அதிபராக இருந்த அமரர் திரு. கே. நகராஜா உட்பட அமரத்துவம் எய்திய ஆசிரியர்கள் மற்றும் சக மாணவர்கள் அனைவரதும் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவியை பிரார்த்திக்கின்றேன். மகாஜனா கல்லூரியால் மாணவர்களுக்கு அமைத்தக்கொடுக்கப்படுகின்ற இந்த அடித்தளமே காஜனாவின் புகழ் உலகளவில் நிலைத்து நிற்பதற்கு வழிவகுக்கிறது. நான் பல நாடுகளில் வாழ்ந்திருக்கிறேன். எந்த நாட்டிலும் தமிழர்கள் மத்தியில் மகாஜனர்களுக்கு தனித்தப்பட்ட மதிப்பும் மரியாதையும் உண்டு.

நான் ஒரு மகாஜனனாக இருப்பதையிட்டு பெருமையடைகிறேன். (Proud to be a Mahajanan)
வெல்லுக மகாஜன மாதா

நன்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசிரியர்களும் நாமும்.... ஓர் மீள்பார்வை

தர்சினி எமில்டன்

ஆசிரியர்கள் என்போர் ஒரு ஆரோக்கியமான சமூகத்தின் மிக முக்கியமான ஆணிவேர் என்றால் அது மிகையாகாது. அதிலும் விசேடமாக, எமக்குக் கற்பித்த மகாஜனக்கல்லூரி ஆசிரியர்கள் எல்லோரும் பரந்துபட்ட இந்த உலகின் ஒவ்வொரு பகுதியிலும், தமது மாணவர்களால் ஒளி ஊட்டியவர்கள். தொடர்ந்தும் ஒளி ஊட்டிக்கொண்டிருப்பவர்கள். இதற்கு இந்தக்காலத்தின் கண்ணாடியே தகுந்த விடையாக இருக்கின்றது.

மாணவப்பருவத்தில் எமக்கு அறிவுக்கண்களினை மட்டுமன்றி எவ்வாறு இன்னலான காலங்களை வென்று காட்டுவது என்பதையும் வாழ்ந்து காட்டியவர்கள் எமது ஆசிரியர்கள். போர்க்கால இடர்களுக்கு மத்தியிலும் தமது உயிரினைக்கூட பொருட்படுத்தாது மகாஜன மைந்தர்கள் இடையூறின்றி கல்வி கற்கவேண்டும் என்ற சிறந்த நோக்கத்திற்காக அவர்கள் அனுபவித்த இன்னல்கள் எமக்குப் பாடமாக அமைந்து பின்னாளில் நாமும் அவ்வாறு எமக்கு வரும் போராட்டங்களையும், சவால்களையும் வென்று கல்வியினால் எமக்கென்று ஒரு அடையாளத்தினை பிறநாடுகளில் நிலைநாட்ட வேண்டுமென்ற ஆக்கபூர்வமான ஊக்கத்தினை விதைத்தவர்கள் எமது ஆசிரியப் பெருந்தகைகள்.

எமது ஆசிரியர்கள் கல்வியறிவினை எமக்கு ஊட்டியது மட்டுமன்றி, அறநெறியில் நின்று வாழ்ந்து காட்டிய தன்மைதான் இன்றும் எமது மகாஜனமைந்தர்கள் உலகெங்கும் தலைசிறந்த பிரஜைகளாக மட்டுமன்றி மற்றோருக்கு சிறந்த முன்மாதிரியாகவும் திகழ்ந்து எமது ஆசிரியர்களிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமையினையும் மதிப்பினையும் பெற்றுக்கொடுத்து அவர்களின் ஆசியினால் மேலும் முன்னேற நினைக்கின்றனர். அவர்கள் விதைத்த விதை ஏழு தலைமுறையினரிற்குமேல் நின்று வியாபிக்கும் என்பதைப் பெருமையுடன் கூற விளைகிறேன். எமது ஆசிரியர்களின் அளப்பரிய சேவை உள்நாட்டில் மட்டுமன்றி உலகளாவிய ரீதியில் விஸ்வரூபம் எடுத்துள்ளதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

எமது மாணவப்பருவத்தில் நாம் அதிக நேரத்தை பாடசாலைகளிலேயே செலவிடுவோம். அதிலும் மேலாக எமது பாடசாலை கல்வியினை மட்டுமன்றி விளையாட்டு கழகங்கள் முதல் பிற பல கலைகள் என மாணவர்களினை பல்வேறு துறைகளில் ஈடுபடுத்தி அவர்களை நேரான வழியில் வழிநடத்தி கடினமான சவால்களை எதிர்கொள்ள வைத்து எம்மை நட்சத்திரங்களாக மாற்றிய நட்சத்திரங்கள் எமது ஆசிரியர்கள். "Knowledge and education are the basis for all things that can be accomplished in life. They provide the power of education to all of us".

எமது சமுதாயத்திற்கு முதுகெலும்பாக இருந்து எமக்கு வழிகாட்டி எமது சமூகத்தின் சமூகவியல் பொருளாதாரத்தினை மேம்படுத்தி எம்மை உருவாக்கிய எல்லா ஆசிரியர்களின் பணியும் மகத்துவமானதே இருப்பினும் நாம் சில ஆசிரியர்களிடம் மட்டுமே கல்விகற்கும் வாய்ப்பினைப் பெற்றிருந்தோம். அவர்களைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் மட்டும்...

விண்ணகத்திலிருந்து இன்றும் எமக்கு ஆசியை வழங்கி வருகின்ற விநாயகரட்ணம் ஆசிரியர் அவர்கள் சமயம் மட்டுமன்றி வேறு பல சமய கலாச்சாரப்போட்டிகளில் எம்மை உள்வாங்கி ஈடுபடுத்தியமையால் எமது மூளை நரம்பியல் தூண்டப்பட்டு எமக்கு சகல பாடங்களையும் இலகுவாக படிக்கும் தன்மையினை ஏற்படுத்தியமையால் எமது மகாஜன அன்னை பல துறைகளிலும் சிறந்து விளங்கும் மைந்தர்களை உருவாக்கக் காரணமானவர்.

கணித ஆசிரியை திருமதி துரைச்சாமி அவர்களிடம் நாம் நீண்ட காலம் கற்கும் பாக்கியத்தினைப் பெறவில்லை. ஆண்டு 6 இல் கணிதத்தின் அடிப்படையான சில எண்ணக்கருக்களை அமைதியான குரலில் ஆறுதலாகக் கற்றுத்தந்தவர். எமக்கு முந்தய தலைமுறையினர் கூட அவரிடம் கற்று இன்று சிறந்த நிலையில் இருப்பதனைக் காணக்கூடியதாக இருக்கிறது.

அவரைத் தொடர்ந்து தங்கம்மா ஆசிரியரிடம் (திருமதி சண்முகரத்தினம்) கற்கும் அரிய வாய்ப்பு எமக்குக் கிட்டியது. கடின உழைப்பு, பயிற்சிகள் என்பவையே இவரது முக்கிய உத்திகளாக இருந்தன. தனது காந்தக் குரலினால் எம்மைக் கவர்ந்து பாடத்தில் எம்மை ஈர்க்க வைத்தவர் என்றால் எவரும் மறுப்பதற்கில்லை.

ஆங்கில ஆசிரியராக திருமதி இரட்ணம் அவர்களிடம் எமது வகுப்பானது இரு வருடங்கள் (ஆண்டு 6,7) ஆங்கிலம் பயின்றமை நாம் பெற்ற பெரும் பேறே. பாடசாலையில் மட்டுமன்றி கோட்டம் மற்றும் வலய மட்டங்களில் கூட ஆங்கிலப் போட்டிகளில் எமது மாணவர்கள் ஊக்கமுடன் பங்குபற்றி பல பரிசுகளை வென்று வர உதவினார். வகுப்பு நேரங்கள் தவிர தனது ஓய்வு நேரத்தில் கூட எமக்குப் பயிற்சியளிக்க ஒருபோதும் தயங்கியது கிடையாது. இந்த அரிய மனப்பான்மை எமக்கும் இன்று எமது ஓய்வு நேரத்தினை பயனுள்ள முறையில் மாணவர்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சி வழங்கும் தன்மையைத் தந்திருக்கின்றது. சிறு கண்டிப்பான ஒரு பார்வையினால் எம்மைத் திருத்தும் அவரது பாணி இன்றும் எம் மனதில் நிழலாடுகின்றது.

ஆண்டு 8 இல் எமக்கு ஆசிரியராக வந்தவர்தான் திருமதி இராமச்சந்திரன். ஆங்கிலத்தில் எல்லோருக்கும் இருந்த தயக்கமும் வெறுப்பும் மறைந்தோடி விருப்பு வரக்காரணமானவர். சிரித்த முகமும் வசீகரக் குரலும் எங்கள் அனைவரையும் வகுப்பில் அமைதியாகவும் முழுமையாகவும் ஈடுபட வைத்தது. எமக்கான O/L இறுதியாண்டுப் பரீட்சை வரை எமக்கு ஆங்கில ஆசிரியராக இருந்தார். பரீட்சைப் பெறுபேற்றிற்காக மட்டுமன்றி எமது எதிர்கால வாழ்க்கைக்கு ஆங்கிலத்தின் அவசியத்தை உணர்த்தி அவ்வழிகளிலெல்லாம் எம்மைப் பயிற்றுவித்தார். வகுப்பினை இறுக்கமான நிலையில் வைத்திருக்காது சகஜமான நிலையில் ஆங்கிலத்தில் உரையாட வைத்து பிழையின்றி (Spelling, punctuation and grammar) எழுத வைத்தவர். எமது ஆசிரியர் எமக்காக இட்ட கடின உழைப்பு வீண் போகவில்லை. எமது வகுப்பு மட்டுமன்றி அவரது எல்லா மாணவர்களும் எந்தப்பாடத்தில் சிறந்து விளங்கினும் ஆங்கிலத்தில் சிறப்பாக இருந்தமையால் அவர்கள் பிற நாடுகளில் கூட தமது துறைகளில் சிறந்து விளங்க மகுடமாக இருந்தார் என்றால் மிகையாகாது. தொடர்ந்து வந்த எமது கல்லூரி வாழ்வில் ஆண்டு 9 இற்கான எமது வகுப்பு ஆசிரியராகவும் கணித ஆசிரியராகவும் புதிய நியமனமேற்று வந்தவர் தான் திரு. குமாரதேவன். இன்றும் கூட எமது பாடசாலையில் கணிதத்திற்கென்றொரு சிறந்த பெறுபேற்றினை எடுக்கக் காரணமான எமது ஆசானைப்பற்றி எழுதக்கிடைத்த இந்த அரிய வாய்ப்பு என் பாக்கியமே. கணித பாடத்தினை மட்டுமன்றி எல்லா மாணவர்களதும் மற்றய பாடங்களுக்குமான பரீட்சைப் புள்ளிகளையும் கருத்தில் எடுத்து அவர்கள் கூடிய கவனம் செலுத்த வேண்டிய பாடங்களை அவர்களுக்குத் தெளிவாக விளக்கிஇ அனைத்து பாடங்களிலும் எமது மாணவர்கள் சிறந்த புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள உறுதுணையாக இருந்தார். கணிதத்திலுள்ள தேற்றங்களை துல்லியமாக நிறுவும் முறையை சாதுரியமாக அவர் கற்றுத்தந்த முறை இன்றும் என் மனக்கண் முன் தோன்றுகிறது. பல தடவைகள் வகுப்பில் நான் எழுப்பப்பட்டு தேற்றங்களை நிறுவும் படிமுறைகளை சொல்ல வைத்து, ஆசிரியரால் அதே ஒழுங்கில் கரும்பலகையில் எழுதப்பட்டு அதற்கான ஒரு சிறு புன்சிரிப்பு எனக்குப் பரிசாகக் கிடைத்தது இன்றும் பசுமையான நினைவுகளாக இருக்கின்றது.

ஆசிரியர் காளிதாசன் அவர்களின் கற்பித்தல் முறை எமக்கு வகுப்பில் பாடத்தினைக் கிரகித்தல் (Concentration) எவ்வளவு முக்கியமானது என்பதனை உணர்த்தியது. இதன் மூலமாக பின்னய பட்டப்படிப்பிற்கும் இந்தக் கிரகிக்கும் முறை எமக்குப் பெரிதும் உதவியது. எவ்வாறு short memory யிலிருந்து long memory க்கு எமது பாடங்கள் தொடர்பான விளக்கங்கள் அனுப்பப்பட்டு இன்றும் கூட நாம் அவற்றை நினைவில் வைத்திருக்க முடிகிறது. பெரும்பாலான வேளைகளில் எமது ஆசிரியர் பாட முடிவின்போதே கற்பித்த பாடங்களிற்குள் வினாக்களைக் கொடுத்து விடையினை எம்மிடமிருந்து எதிர்பார்ப்பார். இது எமக்கு எவ்வளவு ஆழமாக நாம் வகுப்பில் அவதானித்திருக்கிறோம் என்பதற்கு சான்று பகரும். அவ்வாறு அன்று படித்ததை திரும்பவும் அன்றே படிக்கும் போது அது long memory க்கு போக உதவியது. பல மீட்டல்கள் அதற்கு வழி வகுத்தன. கேள்விக்கான விடையினை மட்டுமே எப்போதும் எமது ஆசிரியர் எதிர்பார்ப்பார். வினாவிற்குப் பொருத்தமில்லாத கருத்துக்களைத் தவிர்க்கவே எப்போதும் கூறுவார் இன்று நாம், நமது வாழ்வில் தேவையற்ற விடயங்களைப் பேசாமல் இருப்பதற்கு இதுவும் ஒரு சிறந்த பயிற்சியாக அமைகிறது அல்லவா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர் கோகிலா மகேந்திரன், எமது ஆசிரியர் என்று சொல்வதிலேயே ஒரு தனிப்பெருமை. அவர் தனித்து ஒரு துறையில் மட்டுமல்லாது பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்கிய பல்துறை வித்தகர். அவரது பெருமைகளை பறைசாற்றிய பல்துறை media, வெளிவந்த நாவல்கள் பெற்றுக்கொண்ட விருதுகள் அவரது ஆற்றலுக்கு சான்று பகரும். ஒரு மனிதன் தனித்துத் தான் மட்டும் முன்னேறாது, தான் சார்ந்த சமூகத்தினையும் முன்னேற்ற வேண்டும் என்ற அற்புதமான எண்ணத்தினை எமக்கு Role model ஆக இருந்து காட்டியவர் எமது ஆசிரியர். இன்றும் தனது எழுத்தாற்றலால் பல மகத்தான கருத்துக்களை சமூக வலைத்தளங்கள் ஊடாக எம்மோடு பகிர்ந்துகொண்டிருக்கிறார்.

Girl Guide Group பொறுப்பாசிரியர் திருமதி பத்மநாதன் அவர்களின் மாணவர்களாக இருந்து பல அரிய நற்பண்புகளை வளர்த்துக் கொள்ளத் துணை நின்றவர். நாம், சமூகம், உலகம் இந்த மூன்றினையும் ஒன்றிணைத்து பல துறைப் பயிற்சிகளை வழங்கி அதற்கான Rewards இனைக் கொடுத்து எமக்குள் இருந்த தலைமைத்துவ பண்பை வளர்க்க உதவினார். ஆசிரியர் கணேசலிங்கம் அவர்களின் கற்பித்தலுக்கு மேலாக அவர் வாழ்ந்து காட்டிய முறை எம்மை மிகவும் கவர்ந்தது. எப்போதும் பெரியதொரு மாற்றத்தினை ஏற்படுத்த முயல்பவர். எல்லோரும் போல் இல்லாது தனித்துவமாக வாழ்ந்து காட்டியவர். யாழ்ப்பாணத்தில் மகாஜனவிற்கு என்றொரு புதிய வரலாற்றை போர்க்கால சூழ்நிலையில் ஏற்படுத்தியவர். இன்னல்கள் நிறைந்த அந்த நாட்களில் எமக்கென்று தனிப்பாடசாலையைத் தனித்துவமாக ஏற்படுத்தி வரலாற்றை மட்டுமன்றி எந்த இடையூறுமின்றி சுதந்திரமாக எமது ஆசிரியர்களும் மாணவர்களும் கற்க வழிகாட்டியவர். எமது ஆசிரியர், மாணவர்களோடு மாணவராக இருந்து கட்டியெழுப்பினார் இன்னொரு மகாஜனவை எமக்காக மருதனார்மடத்தில். அவர் என்றும் துடிப்புடன் ஏதாவதொரு மாற்றத்தினை, முன்னேற்றத்தினை எமக்கு ஏற்படுத்த வேண்டும் என்று எப்போதும் சிந்தித்து அதற்கு செயல் வடிவமும் கொடுப்பவர். ஒரு குழந்தையைப் பத்திரமாய் பார்த்து வளர்ப்பது தாயின் கடமை. சித்திரமாய் செதுக்கி எடுப்பது ஆசிரியரின் தன்மை. ஒரு குழந்தையைக் குறைவின்றி வளர்ப்பது தந்தையின் கடமை. குற்றமில்லாமல் வளர்ப்பது ஆசிரியரின் தன்மை. எனவே நல்ல மாணவர்களைக் குற்றமில்லாத சித்திரமாய் உருவாக்கிய எம் ஆசிரியப் பெருந்தகைகளின் கடின உழைப்பும், எம்மீது கொண்ட அக்கறையும் வீண் போகவில்லை. அவர்களின் நற்பண்புகளும், வழிகாட்டல்களும் எமக்குள் ஆழ வேரூன்றி எம்மை இன்று இந்த சிறந்த நிலைக்குக் கொணர்ந்தது போல் நாமும் இதனை அடுத்து வரும் சந்ததிக்கு எடுத்துச்சென்று ஆரோக்கியமான ஒரு சமூகத்தை உருவாக்குவோம் என்பதில் எந்த ஐயப்பாடும் இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செல்லையா தியாகராஜா 1927 - 2019
# ஓவிய ஆசிரியர், சாரண ஆசிரியர்

ஒழுங்கமைப்பு VP. வாசுகன்



- பிறப்பிடம் – மாவிட்டபுரம்
- தாய் தந்தையர் பெயர் – ஆசிரியை செல்லாச்சி ஆசிரியர் செல்லையா
- ஆரம்ப கல்வி – மாவிட்டபுரம் அமெரிக்கன் மிஷன் தமிழ் கலவன் பாடசாலை
- பாட்டனார் – ரங்கூன் நாகலிங்கம் – காங்கேசன்துறை கப்பல் உரிமையாளர்
- மூத்த சகோதரன் – தட்சிணாமூர்த்தி – மல்லாகம் இந்துக்கல்லூரியில் கடமையாற்றினார் – அளவெட்டி ஐக்கிய நாணய சங்கம் மற்றும் அளவெட்டி வடக்கு கூட்டுறவு பண்டகசாலையை நிறுவினார்
- இரண்டாவது சகோதரன் – சிவகடாட்சம் ஆயுள்வேத வைத்தியர்
- மூன்றாவது சகோதரன் – பண்டிதர் தம்பையா ஆசிரிய ஆலோசகர் பெரியபுலம் மகாவித்தியாலய உப அதிபர்
- 1939 – தந்தையார் காலமானார்
- இடப்பெயர்வு – மல்லாகம் தொடர்கல்வி மல்லாகம் விசாலாட்சி வித்தியாலயம் நான்காம் வகுப்பிலிருந்து ஆறாம் வகுப்பு வரை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1940 – இடப்பெயர்வு அளவெட்டி அவரது தாயார் கல்வி கற்பித்த சீனன் கலட்டி ஞானோதய வித்தியாலயத்தில் கல்வியைத் தொடர்ந்தார்
- 13வது வயது – இவர் சிறுவயதில் இருந்து சகல பாடசாலைகளிலும் திறம்பட செயல்பட்டு வந்தார் பதின் வயதின் ஆரம்பங்களில் இலக்கிய ஆர்வம் கவிதை எழுதுதல் ஓவியம் வரைதல் எனது தளங்கள் விரிந்தன – ஞானோதயம் என்ற கையெழுத்து பத்திரிகையின் ஆசிரியராகவும் பணியாற்றினார்
- 1945 ஜனவரி – ஆங்கில கல்விக்காக மகாஜன கல்லூரியில் இணைந்தார்
- 1947 – யாழ் வைத்தீஸ்வரா கல்லூரியில் நடைபெற்ற யாழ்ப்பாண பாடசாலைகளுக்கான சித்திர கண்காட்சிக்கு இவரது ஓவியங்கள் தெரிவாகின
- 1948 பிப்ரவரி இலங்கை சுதந்திரம் அடைந்தது – யாழில் நடைபெற்ற சுதந்திர தின விழாவில் யாழ் பிரபல பாடசாலைகள் தெரிவாகின. மகாஜனா கல்லூரி மாணவர்களின் அணிவகுப்பில் பங்குபற்றினார்
- 1949 – பரீட்சைகளில் திறம்பட சித்தி. சித்திரம் புவியியல் பாடங்களில் கல்லூரி பரிசில்கள். N.P.T.A. பரீட்சையில் சித்திரத்தில் திறமைச் சித்தி பெற்றார்
- "மகாஜனன்" என்ற மலரில் இவரது "இரவினிலே" என்ற கவிதை இடம்பெற்றது
- இவர் மகாஜனா கல்லூரியில் கல்வி கற்ற காலத்தில் இருந்த கல்வியாளர்கள் –
    - கல்லூரி அதிபர் – திரு T.T ஜெயரத்தினம் B.A (Lond) ஆங்கிலம்
    - உப அதிபர் – திரு கிருஷ்ணபிள்ளை B.A (Lond) ஆங்கில இலக்கியம்
    - ஆசிரியர்கள் ––
    - திரு சங்கரப்பிள்ளை B.A (Lond) ஆங்கிலம்
    - திரு இராமசாமி B.A (Lond) (Dip.in.Ed) ஆங்கிலம்
    - திரு விக்ரமசிங்க B.A (Lond) தர்க்கசாஸ்திரம் குடியியல்
    - திரு நாகலிங்கம் – தமிழ்
    - திரு நிமால் – சித்திரம்
- சிறு வயதிலிருந்து உடல் உபாதைகள் காரணமாக பல தடவைகள் பாடசாலை சமூகம் அழிக்கமுடியாத காலங்கள் – மனம்வருந்தினார்
- தொடர் கல்வி – மல்லாகம் இந்துக்கல்லூரி – கல்லூரியில் பாரதி விழா நடத்தி விழாவின் பிரதம பேச்சாளராக உரையாற்றினார். இலக்கியம் தமிழ் சித்திரத்தில் தேர்ச்சியின் பெறுபேறாக திரு குமாரசாமி B.A (Lond) அவர்கள் இவருற்கு பண்டிதர் என்ற பட்டத்தை சூட்டினார்
- Winzer Art Club- யாழில் முன்நிலையில் விளங்கிய "வின்செென்ட் ஆர்ட் கிளப்" நடத்திய சித்திர போட்டியில் சித்தி எய்து ஓவிய நிகழ்விலும் பங்குபற்றினர்
- பண்டிதர் – பிரவேச பண்டிதர் பரீட்சையில் சித்தி எய்தினார்
- 1956 – மூன்று வருடங்கள் நுண்கலைக் கல்லூரியில் கற்கவேண்டிய சித்திர பாட ஆசிரியர் தராதரப் பத்திர பரிட்சையை சொந்த முயற்சியால் நேர்கொண்டு சித்தி எய்தினார்
- 1957 – அப்புத்தளை தோட்ட பாடசாலையில் பிரதான ஆசிரியராக நியமனம் பெற்றார்
- பாடசாலை வளர்ச்சி – 1932 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இக்கல்லூரி மலையக மாணவர்களே அதிகம் கல்வி கற்றனர். கல்லூரி வீழ்ச்சியை நோக்கி இருந்த காலத்தில் இவரது வருகை அளப்பெரியது பாடத்திட்டங்களுக்கு அப்பால் இலக்கியம் சித்திரம் விளையாட்டு ஆங்கிலம் கலை நிகழ்வுகள் கண்காட்சிகள் என பல தளங்களை திறந்தது மாணவர்களுக்கு. நூலகம் ஒன்றையும் அமைத்தார். மாணவர்களது உற்சாகமும் பெற்றோர்களது ஆதரவும் கல்லூரியின் வளர்ச்சிப் போக்கை மேம்படுத்தியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1958 – அளவெட்டி கந்தையா செல்லம்மா தம்பதிகளின் மகளான ஞானம்மாவை என்பவரை திருமணம் செய்தார். அவர்களின் பெண் குழந்தை சிறிதர்சினி
- 11 வருட கால சேவை – பாடசாலை பாரதி வித்தியாலயம் என்ற பெயர் சூட்டப்பட்டது. பெண் மாணவர்களின் வருகை அதிகரித்தது இவரிடம் கல்வி கற்றவர்கள் பலர் நல்ல அரசு பதவிகளுக்கு சென்றனர்.
- உப அதிபர் அரச இடமாற்றம் காரணமாக அப்புத்தளை தமிழ் மகாவித்தியாலயம் சிரேஷ்ட பாடசாலைக்கு நியமிக்கப்பட்டு சில காலங்களிலேயே உப அதிபராக பதவியேற்றார்
- பொதுசேவை – அப்புத்தளை தமிழ் மகாவித்தியாலய பெற்றோர் ஆசிரியர் சங்க செயலாளர் ஊவா மாகாண தமிழ் ஆசிரியர் சங்கம் உபசெயலாளர் சித்திர ஆசிரியர் சங்க செயலாளராக கடமையாற்றினார்
- ஓவியம் முதலிடம் – ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சியில் இவரால் வரையப்பட்ட ஓவியம் முதலிடம் பெற்றது முதலிடம் பெற்றது
- 1970 – கொழும்புத்துறை ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு அங்கு முதலாவது கல்லூரி மலறில் "சொல்லாக்கம்" என்ற கட்டுரை இரண்டாவது ஆண்டு "தெள்ளுத்தமிழ் கனகி புராணம்" என்ற கட்டுரை "கலைவாணி" என்ற கவிதை போன்ற இலக்கிய தளங்களில் இயங்கினார்
- 1972 – மீண்டும் அப்புத்தளை தமிழ் மகா வித்தியாலயம், பண்டாரவளை தமிழ் ஆசிரியர் சங்கம் பொருளாளராகவும் இருந்தார். முஸ்லிம் மக்களால் அப்புத்தளை தமிழ் மகாவித்தியாலயத்தில் "மீலாத் விழா"ற்கு பாராளுமன்ற உறுப்பினர் திரு லொக்குபண்டார பிரதம விருந்தினராக அழைக்கப்பட்டு விழா வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டு, இவரது உரை மக்களிடையே மிகவும் பேசப்பட்டது.
- 1977 – இரண்டாவது தவணை பரீட்சை முடிந்து விடுமுறைக்கு யாழ்ப்பாணம் புகை வண்டியில் செல்லும்போது 1977 இனக்கலவரம் மூண்டது. பாதைகள் மறுக்கப்பட்டதால் கொழும்பு சென்று அங்கிருந்து கப்பல் மூலம் யாழ் சென்றார் இடைக்காலத்தில் அளவெட்டியில் அருணோதயாக் கல்லூரியில் கடமையாற்றினார்
- அரசினால் இடமாற்றம் வழங்கப்பட்ட மையால் மீண்டும் அப்புத்தளை பாடசாலைக்கு சென்றார்
- மகாஜனா – மகாஜன அதிபர் பொ. கனகசபாபதி அவர்கள் தியாகராஜருக்கு இடமாற்றத்திற்கு விண்ணப்பித்தால் தனக்கு அறிவிக்கும் படியும் மகாஜனாவிற்கு ஆசிரியராக எடுப்பதாகவும் தெரிவித்திருந்தார்.
- 1980 – சில பல அரசியல் காரணங்களால் மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பினார். அதிபர் கனகசபாபதி அவர்களின் விடாமுயற்சியாலும் சில அரசியல் தலைவர்களின் சிபார்க்குகளாலும் மகாஜனக் கல்லூரியில் ஆசிரியர் பதவியை ஏற்றார். 80ன் இறுதியில் சாரண ஆசிரியர் திரு கந்தசாமி இடமாற்றம்.
- 1981 – ஜனவரியிலிருந்து சாரணர் பொறுப்பாசிரியர் பதவியை ஏற்றுக்கொண்டார். காங்கேசன்துறை மானிப்பாய் வட்டுக் கோட்டை ஆகிய சாரண மாணவர்கள் இடையிடையில் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் போட்டிகள் நடைபெற்றன, போட்டியில் மகாஜனா வெற்றிவாகை சூடி சம்பியன் கேடயத்தை தனதாக்கியது
- ஏழு ஆண்டு தொடர் வெற்றி – யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் நடைபெற்ற யாழ்ப்பாணம் பாடசாலைகளுக்கிடையிலான சாரணர் இயக்க கட்டுரைப் போட்டியில் மகாஜனக் கல்லூரி மாணவன் முதலிடம் பெற்றான். இவரது காலத்தில் சாரணர் இயக்கம் ஏழு ஆண்டுகள் தொடர்ந்து மாவட்ட போட்டியில் வெற்றி வாகை சூடி சாம்பியன் கேடயத்தை பெற்றுக்கொண்டது




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 1982 – சித்திர ஆசிரியர் இடமாற்றம் பெற அவ்விடம் இவருக்கு மிக கச்சிதமாக அமைந்தது. சித்திரகூடத்தை அழகுற அமைத்து அவரால் வரையப்பட்ட சரஸ்வதி பிக்காசோ கலாயோகி ஆனந்த குமாரசாமி போன்ற பிரபலங்களின் படங்களை வரைந்து கூடத்தில் காட்சிப்படுத்தினார். மாணவர்களுக்கு சித்திரத்தை ஆத்ம திருப்தியுடன் கற்பித்தார். கல்லூரி மட்டத்தில் சித்திர கண்காட்சியை நடத்தி மாணவர்களை ஊக்கப்படுத்தினார். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற யாழ் பாடசாலைகளுக்கிடையிலான கண்காட்சிக்கு "சித்திர வித்தியதரிசி கலாகேசரி அ. தம்பித்துரை கலை பகுதிக்கு பொறுப்பாளராக இவரை நியமித்தார்.
- மலர்கள் – பிரபல எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் அவர்களின் "மனித சொரூபங்கள்" என்ற புத்தகத்திற்கு அட்டை படம், மகாஜனக்கல்லூரி சாரணர் இயக்க பொன் விழா மலருக்கு, அட்டைப்படம், இராமநாதன் கல்லூரி அதிபர் ஆனந்தியின் ஒப்படை புத்தகத்துக்கு அட்டைப்படமும் வேறு பல நூகளுக்கு அட்டைப்படமும் வடிவமைப்பையும் நேர்த்தியாக அமைத்தார். கட்டுரை எழுதும் பழக்கமும் இவருடன் ஒட்டியிருந்தது
- 1986 – மகாஜனாவின் சாரண இயக்கம் பொன்விழாக் கண்டது, விழாவை திருமதி ரோகிணி ஆசிரியரின் துணையுடன் செப்பனே நடாத்தினர். பொன்விழா மலரை அழகே வடிவமைத்தார். பொன்விழா மலரை யாழில் பல பத்திரிகைகள் வியந்து பாராட்டின.
- 1987 – சித்திர பாடத்திற்கு புதிய ஆசிரியர் வருகை தந்த பிறகும் இவரைவிட மனமில்லாது தொடர்ந்து ஓவியக்கூடத்தை நாடாத்த அதிபர் திரு நாகராஜா வேண்டி நின்றார். 1986ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இளைப்பாற வேண்டிய இவர் 1987ஆண்டு இறுதி வரை பணியாற்றி ஓய்வு பெற்றார்.
- பிரியாவிடை – மாணவர்களும் பழைய மாணவர்களும் ஆசிரியர்களும் இவரது பணியை மெச்சினர். லீவு எடுக்காத ஆசிரியர் என்று புகழ்ந்தனர். வாழ்த்து மடல் வழங்கி பிரியாவிடை சிறப்பித்தனர்
- நண்பர்கள் – இவருடைய நண்பர்கள் புத்தகங்களும் பத்திரிகைகளும் எழுத்துக்களும். அளவெட்டி முத்துமாரி அம்மன் கோயில் அருகே அமைந்திருந்த அழகிய வீட்டை அலங்கரிப்பதும் வீடுதோட்டம் பயிரிடுவதுமே இவரது பொழுதுபோக்கு.
- எழுத்துப்பணி – இவர் எழுதிய தொடர் கட்டுரை சுடரொளி பத்திரிகையில் 2012ஆம் ஆண்டு "ஜீ. ஜீ. மேதையின் இன்னொரு பெயர்" என்ற தலைப்பில் தொடர்ச்சியாக எட்டு வாரங்கள் வெளிவந்தன. முதுமைப் பருவத்தில் தன்னால் சேகரிக்கப்பட்ட தகவல்களின் தொகுப்பான "உலக மேதை ஜீ . ஜீ." என்ற பெறுமதி வாய்ந்த வரலாற்று ஆவண நூலை ஆக்கி 2016ம் ஆண்டு வெளியிட்டார்
- 2019 – தனது முதுமைப் பருவத்தை அமைதியாக கழிக்க எண்ணி 2014 தொடக்கம் 2016ம் ஆண்டு வரை சுழிபுரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் செலவிட்டார். இறுதியாக குடும்பத்துடன், 15. 8. 2019 அன்று அதிகாலை தனது 92து வயதில் காலமானார்

*தியாகராஜா மாஸ்டரின் நினைவு மலரில் இருந்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## எமது காலத்தில் சரணியம் 1982 - 95

- 1982 – 50 சாரணர்கள் இருந்தனர். அருணோதயாக் கல்லூரியில் நடைபெற்ற பாசறை விழாவில் பல போட்டிகளில் முதலிடம் பெற்றனர். உதவி சாரணத் தலைவர்களாக திரு. S. கணேசலிங்கம் திரு.S. சுதர்சன் ஆகியோர் பணிபுரிந்தனர்.

- 1983 – செல்வி S. முத்தையா அவர்களின் பணி குருளைச் சாரணிய வளர்ச்சியைப் பாதித்தது.

- திருமதி றோ. இரத்தினவேல் குருளைச்சாரண உதவி மாவட்ட ஆணையாளராகப் பதவியேற்றார். 45 சாரணர்கள் இருந்தனர். எமது பாடசாலையில் நடைபெற்ற பாசறைவிழாவில் 1ஆம் இடம் பெற்றனர். திரு. செ. தியாகராஜா தலைமையில் உதவிச்சாரண தலைவர்கள் திரு. ரி. கணேசலிங்கம் S. சுதர்சன் ஆகியோருடன் கிளிநொச்சி சென்றனர். அநுராதபுரத்தில் நடைபெற்ற 3ஆவது தேசிய சாரணர் ஜம்போறியில் S. சுதர்சன் தலைமையில் 10 சாரணர்கள் கலந்து கொண்டனர். செல்வன்கள் S. திலகராஜ், வ. நவந்தம T. வரதராஜன் ஆகியோர் பச்சை வடத்தைப் பெற்றனர்.

- 1984 மானிப்பாயில் இடம்பெற்ற பாசறை விழாவில் 2ஆம் இடத்தைப் பெற்றனர்.

- 1985 – 50 சாரணர்கள் துருப்பில் இருந்தனர். திரு. க. ஞானசேகரன் சாரணத்தலைவராக தியமனம் பெற்றார். மாவட்டச் சாரணர் கிளைச்சங்கத்தின் 5ஆவது சாரணர் பாசறை விழாவில் 1ஆம் இடத்தை பெற்றது. திரு.செ. தியாகராசா குழுச் சாரணத் தலைவர் தலைமையில் பேடன் பவல் தினம் கொண்டாடப்பட்டது. செல்வன்கள் F. நிமிலன் உதயகுமார், பெர்னான்டோஸ் ஆகியோர் ஜனாதிபதி விருது பெற்றனர்.

- 1986 – 63 சாரணர்கள் காணப்பட்டனர். பேடன் பவல் தினம் அதிபர் திரு. K. நாகராசா அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இ. இராஜமோகன் கனிஸ்ர சாரணர் பிரிவிற்கும், சோ. திலகராசா சிரேஷ்ட சாரணர் பிரிவிற்கும் பொறுப்பாக இருந்தனர். மாவட்ட ஆணையாளராகப் பொறுப்பேற்ற திரு. நா. போஜன் திருமதி றோகினி இரத்தினவேல், வ. கந்தசாமி ஆகியோருக்குத் திரு. செ. தியாகராசா தலைமையில் தேனீர் விருந்து அளிக்கப்பட்டது. திரி சாரணர் பேடன்பவல் விருதினையும், ஆறுசாரணர்கள் ஜனாதிபதி விருதினையும், ஒன்பது சாரணர்கள் பச்சை நாடாவினையும் பெற்றனர். திரு.க. தர்மேசன் திரு. க. காராளசிங்கம் ஆகியோர் சாரணத் தலைவர்களாக இருந்தனர்.

- 1989 – 53 சாரணர்கள் காணப்பட்டனர். சாரணர் பாசறை விழாவில் முதலாம் இடத்தைப் பெற்றது. இந்தியாவிலும் போபாவிலும் பங்களாதேசிலும் நடைபெற்ற ஜம்போறிகளில் ஶ்ரீ.இராமசந்திரன் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

- 1990 – விகாரைமகாதேவி பூங்காவில் நடைபெற்ற சாரணர் ஜம்போறியில் எமது சாரணர்கள் வசந்த, சிவா பத்மபோஜன், முகுந்தன், ஜெயபவன், உமாசங்கர், உபாசனன் சாரணத் தலைவர்கள்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. க. தர்மேசன் திரு. க. காராளசிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். மீரிகமப் பயிற்சிப் பாசறையில் நடைபெற்ற தரு சின்னப்பயிற்சியில் திரு. க. தர்மேசன், திரு. காராளசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

- 1991 – கண்டியில் சென். அன்ரனிஸ் கல்லூரியில் நடைபெற்ற 75ஆவது ஆண்டு விழாவில் செல்வன் பத்மலோஜன், உபாசனன் ஆகியோர் கலந்துகொண்டனர். செ. ஜெயபாலன், சு. முத்துலிங்கம், போ. உபாசனன், K.குமரவீர ஆகியோர் ஜனாதிபதி விருது பெற்றனர்.
- 1992 – குருரநாகலில் இடம்பெற்ற தேசிய ஜம்போறியியல் எமது சாரணர்கள் ஜெயப்பிரசாந், ஜெயபவன், உல்லாசனன் ஆகியோர் கலந்துகொண்டனர்.
- 1993 – வருடாந்த சாரணர்பாசறை விழாவில் 1ஆம் இடம்
- 1994 – சாரணப் பாசறை விழாவில் 1ஆம் இடம் திரு. வ. கனகரத்தினம் பொறுப்பேற்றார்.
- 1995 – யுத்தம் காரணமாகச் சாரணச் செயற்பாடுகள் மட்டுப்படுத்தப்பட்டன.

*ஆதாரம் : சாரணர் துருப்பு பவளவிழா மலர் -மகாஜனா கல்லூரி 2011*








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகேந்திரம் போஜன் 1949-2011
# வடமாகாண சாரண ஆணையாளர்

காலவரிசை ஒழுங்கமைப்பு: தங்கராசா கிருஷ்ணராஜா & VP. வாசுகன்



## முதலுதவியில் ஆற்றிய பணிகள்

- 1963 – 1969 பரியோவான் முதலுதவி சங்கமும் படையும் சார்ஜென்ட்
- 1973 – 1975 மாவட்ட குருளை சாரணர் தலைவர் – வலி வடக்கு
- 1976 – 1979 உதவி மாவட்ட ஆணையாளர் –கிளிநொச்சி உப மாவட்டம்
- 1980 – 1986 உதவி மாவட்ட ஆணையாளர் நிர்வாகம் காங்கேசன்துறை
- 1986 – 1996 மாவட்டம் சரண ஆணையாளர் காங்கேசன்துறை
- 1987 – 2006 தேசிய பயிற்சி குழு உறுப்பினர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 2006 – 2010 வடமாகாண சாரண ஆணையாளர்
- 2011 – ... சாரணர் அபிவிருத்தி (சாரணர் அபிவிருத்தி)

### முதலுதவிப் பணிக்கான விருதுகள்

- 1988 .09. 01 – முதலுதவி தகுதி நிலை விரிவுரையாளர்
- 1989 – சேவைச் சகோதரர் சென்ஜோன் விருது – எலிசபெத் மகாராணியின் சார்பாக கௌரவ ஜனாதிபதி டி.பி.விஜயதுங்கவினால் வழங்கப்பட்டது
- 1990.05.05 – 20 வருடங்களுக்கு மேற்பட்ட சேவைச்சான்றிதழ்

### சாரணியத்தில் பெற்ற விருதுகள்

- 1972 – பேடன் பவல் விருது – கௌரவ மகாதேசாதிபதி வில்லியம் கோபல்லவா அவர்களால் வழங்கப்பட்டது
- 1974 – பாராட்டுப் பத்திரம் – சிறந்த சாரண தலைவருக்கானது – பிரதம சாரண ஆணையாளரால் வழங்கப்பட்டது
- 1989 – தகமைச் சான்றிதழ் – சிறந்த தொடர் சேவைக்கானது – பிரதம சாரணர் ஆணையாளரால் வழங்கப்பட்டது
- 1990 – சேவை பதக்கம் – சிறந்த தொடர் சேவைக்கா வழங்கப்பட்டது
- ... உயர் சேவை பதக்கம் – அர்ப்பணிப்பான சாரணர்

### சமூகப்பணிகள்

- 1965 – 1968 மாவை கொல்லங்கலட்டி சனசமூக நிலைய நிர்வாக சபை உறுப்பினர்
- 1969 – 1988 மாவை கொல்லங்கலட்டி சனசமூக நிலைய செயலாளர்
- 1970 – 1988 மாவை கிராம அபிவிருத்திச் சங்க செயலாளர்
- 1981 – 1985 மாவை கொல்லங்கலட்டி – ஞான வைரவர் ஆலய செயலாளர்
- 1986 – ... மாவை கொல்லங்கலட்டி – ஞான வைரவர் ஆலய தலைவர்
- 1988 – 1994 யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ செயலாளர்
- 1989 – ... மாவை கிராம அபிவிருத்தி சங்க தலைவர்
- 1995 – 1999 யாழ் மாவட்ட சனசமூக நிலையங்களின் சமாஜ தலைவர்
- 2004 – 2007 வலி வடக்கு கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர்

*போஜனின் நினைவு மலரில் இருந்து*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது கல்லூரி வாழ்வில் மறக்கமுடியாத ஆசிரியப் பெருந்தகைகள்

திருமதி சியாமளா செந்தில்நாதன்

எமது நல்வாழ்விற்காக பல ஆசிரியர்கள் தங்களை அர்ப்பணித்திருக்கிறார்கள் என்பதை நாம் இப்பொழுது உணர்கிறோம். அந்தவகையில் 1986 – 1995 வரையான காலப்பகுதியில் பல்துறை ஆற்றலுள்ள ஆசிரியர்களையும் அவர்களின் தனித்துவமான நுட்பங்களையும் கண்டிருக்கிறோம். அந்தவகையில் கணிதத்துறைக்காக துரைச்சாமி ஆசிரியை, குமாரதேவன் ஆசிரியர், சி. சுப்பிரமணியம் ஆசிரியர் ஆகியோர் குறிப்பிடப்படவேண்டியவர்கள். அதேபோல தமிழ்த்துறைக்காக ஜனகரட்ணம் ஆசிரியர், யோகநாதன் ஆசிரியை போன்றவர்கள் எமக்காக உழைத்தவர்கள். அடுத்து விஞ்ஞானத்துறைக்காக காளிதாசன் ஆசிரியர், கோகிலா ஆசிரியை போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அடுத்து ஆங்கில மொழிக்காக எனக்கு சந்தர்ப்பம் கிடைத்த ஒரே ஆசிரியை திருமதி இந்துமதி ராமச்சந்திரா.

அடுத்து மேற்குறித்த எம் ஆசிரியர்களின் தனித்துவங்கள் பற்றி பல இருப்பினும் சிலவற்றை இங்கே பதிவிடுகின்றேன். தமிழ்ப் பாடத்தைப் பொறுத்தவரை தரம் 5 B இல் எனக்கு அடித்தளமாக இருந்தவர் ஜனகரட்ணம் ஆசிரியர். எமது கொப்பியில் எழுத்துக்கள் மிகத் தூய்மை. அல்லாவிடின் தண்டனைக்குப் பஞ்சமில்லை. தண்டனைக்குப் பயந்து தமிழைப் படித்தோம். அடுத்து கணிதத் துறையில் நான் கண்ட முதல் ஆசான் க. சுப்பிரமணியம் ஆசிரியர். உண்மையில் மாணவர் மீது விசுவாசம். தூய்மையான விளக்கம். இது அவர் அணிகலன். மற்றைய கணித ஆசிரியர் துரைச்சாமி ஆசிரியை அவர்கள். கண்டால் பயம். கொப்பி காட்டப் போகும் பொழுது நடுக்கம் வேறு. ஒரு சதுரத்தில் ஓர் எழுத்து, இல்லையேல் பக்கம் முழுவதும் வெட்டு. பயந்து பயந்து கணிதம் கற்றோம். ஆகையால் அவரின் அடைவுமட்டம் உச்சம். அடுத்து குமாரதேவன் ஆசிரியர், தண்டனை பெரிதளவில் கிடையாது, ஆனால் சிறப்பான கற்பித்தல், எல்லோர் மனதையும் கொள்ளை கொண்டவர் என்றால் மிகையேதும் இல்லை.

அடுத்து விஞ்ஞானபாட ஆசிரியர் காளிதாசன் ஆசிரியர் அவர்கள். 40 நிமிட பாடத்தில் 20 நிமிடம் கற்பித்தல். 20 நிமிடம் நமக்கு வேலை. குறித்த விடயத்தை தெளிவாக விரைவாக ஒப்புவிப்பார். கிரகிப்பது எமது பொறுப்பு. சிறுகுறிப்பு எதுவும் பெரிதளவில் கிடையாது. இதனால் கவனமாக இருக்க வேண்டும், கேள்விக்கு விடை எழுத. அதற்காகத் தண்டனை எதுவும் பெரிதளவில் இல்லை. ஆனால் நாம் எல்லோரும் கலந்துரையாடியாவது விடை எழுதி விடுவோம். இது அவரின் நுட்பம். அடுத்து எனது ஆங்கில ஆசிரியர் இ. ராமச்சந்திரா. தரம் 5 B யில் தொடங்கி தரம் 11 A வரை அவரின் வளர்ப்பு. சொல்வதெழுதுதல் வைத்ததில் இருந்து கட்டுரை எழுதப் பழக்கியது வரை அவரின் பாணி தான். ஒரு பாடவேளையில் அனைத்து திறன்களும் உள்ளடக்கப்பட்டுவிடும். (தொழினுட்பம் பெரிதளவில் இல்லாத காலத்திலும்) நானும் சாகல்யாவும் பாடவேளையில் அடிக்கடி ஆசிரியரால் பெயர் குறிப்பிடப்படுவோம். காரணம் நாம் இருவரும் பாடசாலை வந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





முதல் நாளில் ஆசிரியரிடம் அடி வாங்கியவர்கள். காரணம் ஞாபகம் இல்லை. ஏதோ அன்புக்குப் பாத்திரமாகி விட்டோம்.

அடுத்து எனது உயர்தர வர்த்தகத்துறையான D1 வகுப்பிற்காக உழைத்த ஆசிரியர் பற்றிய சில மனப்பதிவுகளை இதில் குறிப்பிடுகின்றேன். பொருளியல் பாடத்தைப் பொறுத்தவரை ஆசிரியர் சரவணபவன் அவர்களின் வகுப்பு கலகலப்பாகவே இருக்கும். இயன்றவரை அனைத்து மாணவர்களையும் கற்றல் கற்பித்தல் பொறிமுறைக்குள் அகப்படுத்தி விடுவார். காரணம் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொனி, சுருக்கமான விளக்கம், ஆழமான பதிவு. அடுத்து கணக்கியல் பாட அசிரியர் வேலாயுதம் அவர்கள் அவரின் நேர் கொண்ட பார்வை, உரத்த தொனி வகுப்பை அமைதிப்படுத்தி விடும். நல் உள்ளம் கொண்டவர். மாணவர் மீது மிகுந்த விசுவாசமும் கொண்டவர். ஆனாலும் எமக்குப் பயம் அதிகம். காரணம் தான் நினைத்த விடயத்தை அப்படியே (பேசி) கூறிவிடுவார். கணக்கியல் பாடம் என்பதால் வகுப்பு என்றும் களைகட்டிய வண்ணமே இருக்கும். வகுப்பில் போட்டிக்கு குறைவில்லை.

அடுத்து அளவையியல் பாடத்திற்கு எமக்கு அத்திவாரம் இட்டவர் எமது சிரேஷ்ட அணியைச் சேர்ந்த முகுந்தன் அண்ணா அவர்களே. அவர் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாகிய நிலையில் ஆசிரியர் பற்றாக்குறையின் போது எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி எமது வகுப்பிற்கு அளவையியல் பாடத்தை மிகத்திறமையாக கற்பித்தவர் என்பது அனைவரும் அறிந்தது. பிற்பகுதியில் சயந்தன் ஆசிரியர், காராளசிங்கம் ஆசிரியர் அகியோர் எமது பெறுபேற்றுக்கு காரணமாக உழைத்தவர்கள். எமது வகுப்பைப் பொறுத்தவரை அளவையியல் பாட தனியார் வகுப்புக்கும் சயந்தன் ஆசிரியரிடமே அதிகமானவர்கள் சென்றிருந்தனர்.

இதனால் ஆசிரியருக்கு எமது வகுப்பின் அளவையியல் பாட அடைவுமட் டம் மிக உயர்வாக இருந்தது. அடுத்து வணிகபாடத்தை ஆரம்பத்தில் எமக்குக் கற்பித்தவர் ஜெயமனோகரன் ஆசிரியர் அவர்கள். அவர் ஒவ்வொரு நாளும் கற்பித்த விடயத்தை இறுதிப் பத்து நிமிடங்களில் மதிப்பீடுசெய்வார். இதனால் யாம் கற்றலில் ஆர்வம் கொண்டோம். அடுத்து வணிகபாடத்தை கற்பித்தவர் துரைசிங்கம் ஆசிரியை அவர்கள். மாணவர்களின் கற்றல் மீது அதிக அக்கறை கொண்டவர். குறிப்பாக பெண்கள் கல்வி கற்று தொழில் புரியவேண்டும் என்று விருப்புக் கொண்டவர். அதிக சிறுகுறிப்பு உள்ள பாடம் என்பதால் நாம் அடிக்கடி சலிப்படைவதுண்டு. ஆனாலும் ஆசிரியர் எந்த தண்டனையம் இன்றி அமைதியாக கற்றலில் ஈடுபடுத்துவார். இன்றும் ஆசிரியரை நாம் கண்டு அளவளாவும் போது எமது வகுப்பில் கற்ற பல நண்பர்களைப் பற்றி சுகம் விசாரிப்பார். அவ்வளவு தூரம் மாணவர்களில் தனிப்பட்ட விடயங்களில் முன்பே அக்கறையுடன் இருந்த ஓர் ஆசிரியர்.

நிறைவாக என் பதிவில் பல ஆசிரியர்களைப் பற்றி குறிப்பிட மனம் விரும்பினாலும் வரையறையைக் கருத்தில் கொண்டு மட்டுப்படுத்தியுள்ளேன். குறிப்பாக நான் மேற்குறிப்பிட்ட ஆசிரியர்களில் கண்ட விசேட திறன் மாணவரை அடையாளம் காணலே. ஏனெனில் ஒரு மாணவனில் விசேட ஆற்றலை அடையாளம் காணல் மிகமிகக் கடினமானது. அதாவது வகுப்பில் ஒரு சாரார் (மீத்திறன் கூடியவர்கள்) தம்மை ஆசிரியருக்கு தெரியப்படுத்துவர். மற்றைய சாராரே ஆசிரியரால் இனம் காணப்பட வேண்டியவர். இவர்கள் தட்டிக் கொடுப்பதன் மூலமே (ஊக்குவிப்பின்) முன்னுக்கு வருபவர்கள். இவ்வாறு எமது வகுப்பில் இனம் காணப்பட்டு சமூகத்தில் நல்ல நிலையில் பலர் உள்ளார்கள். அதற்கு எமது ஆசரியர்களே காரணம் என்றால் மிகையேதும் இல்லை.

எமது ஆசிரியர்கள் அனைவரும் நோய் நொடியின்றி நலமாக நீடூழி காலம் வாழ இறைவனை வணங்கி வாய்ப்பளித்த எமது கல்லூரி அணி (92-95) நண்பர்களுக்கு நன்றி கூறி என் பதிவை நிறைவு செய்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் வாழ்வின் அடித்தளம்

திருமதி விஜயா சனாதனன்

1987 ஜனவரி மாத முற்பகுதியில் ஒரு இனிய காலைப் பொழுதில் தரம் 6 இல் கல்வியைத் தொடர மகாஜனாக் கல்லூரிக்குச் சென்ற அந்த வேளை உயர்ந்த முகப்புத் தோற்றம், பரந்து விரிந்த பாடசாலை வளாகம், ஆயிரக்கணக்கான மாணவர்கள், நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் கண்டு பிரம்மித்து நின்றது இன்றும் பசுமையாக மனதில் உள்ளது. திருவங்கமாலையுடன் தொடங்கும் காலை ஆராதனையில் நடராஜப்பெருமானுக்கு நிகழும் பூஜை வழிபாடுகள் எல்லாமே புதிதாய் விழிகளை அகலவைத்தன. புதிய நண்பர்கள் புதிய சூழல் புதிய நம்பிக்கையளித்தமையை மறக்க முடியாது.

எமது பாடலைக் காலம் முழுவதும் இந்த கம்பீரம் தொடரும் என்ற எதிர்பார்ப்பு நாட்டின் அசாதாரண சூழல் காரணமாக தகர்ந்த போதிலும் தனித்துவம் குலையாது எந்த ஒரு இடரிலும் மாற்று ஏற்பாடுகளுடன் எமது கல்வியை தளரவிடாது வழங்கிய கல்லூரியை ஓர் உதவி அதிபராக இன்றும் அதை பிரம்மிப்பு மாறாது நினைத்துப் பார்க்கின்றேன்.

இல்ல விளையாட்டுப் போட்டியை ஓர் ஓரத்தில் நின்று பார்த்த நான் உயர்தரம் கற்கும் போது நாமே அதனை நடத்தி முடிக்கும் ஆற்றல் கொண்டவர்களாக வளர்வோம் என்று எண்ணியிருக்கவில்லை. இதைபோல பரிசளிப்பு விழா, ஆசிரியர் தினம், நவராத்திரி விழா என்று ஒவ்வொன்றும் தனித்துவமான அம்சங்களோடு ஆச்சரியமூட்டின. போட்டிகள் மற்றும் பரீட்சைகள் என்றால் பாடசாலை நேரம் தவிர்ந்த நேரங்களில் மாணவர்களை தயார்படுத்தி உற்சாகமளித்து பல வெற்றிகளுக்கு வழிகோலிய ஆசிரியர்கள் என்னால் மறக்க முடியாதவர்கள். இன்றுவரை தொடரும் நண்பர்கள் வட்டமும் பாடசாலை எனக்களித்த ஓர் உன்னதமான வரம் என்பதையும் இவ்விடத்தில் எண்ணிப்பார்க்கின்றேன்.

சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறு என் கல்லூரி வாழ்வின் துருவ நட்சத்திரமாய் புதிய திருப்பத்தை கொண்டு வந்து புதிய உத்வேகத்தை அளித்தது. க.பொ.த உயர்தரத்தில் விளையாட்டு, நாடகம், கழக அங்கத்துவங்கள், மன்றப் பொறுப்புகள் என்று அனைத்திலும் பங்குபற்றி பல பரிமாணங்களில் பரிணாமமடைந்து நிறைந்த அனுபவங்களை பெற்றுக்கொண்டமையை நன்றியுடன் நிலனவுகூர வாய்ப்புக் கிடைத்தமை பெரும் அதிர்ஷ்டமாகும்.

இந்தப் பயணம் பல்கலைக்கழகத்தினூடாக தொடர்ந்து ஆசிரியராக பெருமையுடன் 15 வருடங்கள் பணியாற்றிய போது எனது பாடசாலைக் கால அனுபவங்கள் உறுதுணையாக அமைந்ததை மறுக்க முடியாது. ஒவ்வொரு நிகழ்வையும் ஒழுங்குபடுத்துவதிலும் மாணவர்களை தயார்ப்படுத்தி வழி காட்டுவதிலும் அவை எனக்கு பக்கபலமாக அமைந்து தன்னம்பிக்கையுடன் செயற்படவைத்தன தற்போது இலங்கை அதிபர் சேவையுள் பிரவவேசித்து உதவி அதிபராகக் கடமையாற்றுகின்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றால் அது எனது கல்லூரித் தாயின் வழிகாட்டலே ஆகும். வானளாவ உயர்ந்த இன்றைய என் வாழ்வின் அடித்தளம் என் கல்லூரி என்றால் அது மிகையில்லை.

"வெல்லுக மகாஜன மாதா!"







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மடத்தடியில் மகாஜனா

கௌசல்யா சூசைராஜா

"நீர் ஏன் பொட்டுப் போடவில்லை" கோண்டாவில் "நிரு" ரியூசன் நிலையத்தினுள் 93ம் ஆண்டு தைத்திங்கள் ஓர் நாள் காலை 8 மணியளவில் துவிச்சக்கர வண்டியை நிறுத்தி விட்டு சக மாணவிகட்குப் பக்கத்தில் இதயம் துடிப்பதைக் காதினால் உணர்ந்தவண்ணம் நிலம்பார்த்து நின்ற என்னிடம், மூத்த மாணவர் குழுவினால் வினாவப்பட்ட முதல் வினா அது. இதுதான் மகாஜனா வாழ்வின் என் முதல் நாள் அனுபவம். ஏறதாழ 20 வருடங்கள் கழித்து இன்று நினைத்துப் பார்த்தாலும் சிரிப்புத்தான் வருகிறது அன்று நான் ஏன் அப்படிப் பயந்தேன் என்று. அனைத்து மாணவிகளது நெற்றிகளுமே திலகமிட்டு அழகாகக் காட்சி அளித்தன என் ஒருத்தியினுடையதைத் தவிர. பாடசாலையில் மாணவியர் பொட்டு வைப்பது தண்டனைக்குரிய செயலாகக் கருதப்படும் பள்ளியொன்றில் பத்து வருடங்கள் பயின்ற எனக்கு மகாஜனாவில் மாணவியர் பொட்டு வைப்பது வழமையான ஒரு செயல் என்பது வியப்பானதே! திருநீறிற்கும் திலகத்திற்கும் தொடர்பேதும் இல்லாத போதினிலும் ஏனோ என் மனம் மட்டும் அன்றைய தினம் முழுவதுமே "நீறில்லா நெற்றி பாழ்" என்ற பழமொழியையும் எனது நெற்றியையும் அடிக்கடி தொடர்புபடுத்தி இம்சித்தவண்ணமிருந்து உண்மை. இன்று புலம் பெயர்ந்து இங்கு வந்த பின்னரும் கூட பொட்டு வைக்கும் பொழுதுகளில் அந்த நாள் ஞாபகங்கள் நெஞ்சினிலே வந்து நின்று தங்கிவிட்டுச் செல்வதற்கு என் முதல்நாள் அனுபவமே காரணமாக இருக்கக்கூடும்.

அம்பனை மகாஜனாவில் கால்பதித்த ஞாபகமே எனக்கில்லை. அதனால் எனது பார்வையில் மகாஜனா சற்று வித்தியாசமானதே. மகாஜனாக் கல்லூரி என்றதும் என் மனக்கண்முன் தெரிவது குடில் போட்டு ஒன்றாக வாழ்ந்திட்ட கூட்டுக்குடும்பமொன்று தடைகள் பல வந்தபோதும் கலையாமல் தலைநிமிர்ந்து வாழ்வதற்காய் துடிப்புடன் போட்டியிட்ட உயிர்களின் சங்கமம்! இடம்பெயர்ந்து படிப்பதற்குப் பாடசாலை இல்லாதவேளையிலும் வசதியுள்ள மாணவர்களின் வீட்டுத்திண்ணையில் சகமாணவர்கள் ஒன்றாகக் கூடியிருந்து படிப்பது, அந்த ஒற்றுமையிலும் ஒரு போட்டி தொனிப்பது என்பது மகாஜனா மாணவர்கட்கேயுரிய ஒரு தனிப்பண்பு என்பது அனுபவம் மூலம் நான் அறிந்த உண்மை. அப்படியான ஒரு காலகட்டத்தில் இடம்பெயர்ந்ததினால் எனக்குக்கிடைத்த இனிய நண்பி தான் 'வாசுகி'. வாசுகியின் நட்பு 'உமா' என்ற இன்னொரு மாணவியின் வீட்டுத்திண்ணையில் படிப்பதற்காக என்னையும் அழைத்தது. அன்று அந்த வீட்டுத்திண்ணையில் பயின்ற மாணவிகள் அனைவரினது நட்புமே களங்கமற்றது ஆனால் நேர்மையான போட்டி அதில் வெளிப்படையாகத்தெரிந்தது. மகாஜனாவின் பிள்ளைகள் ஒவ்வொருவரிடமும் இதே பண்பு இருந்தது, இனி வரும் சந்ததியிடமும் இருக்கும் என்பது யாவரும் அறிந்த உண்மை. ஆழமான, புனித நட்பை, ஆரோக்கியமான போட்டியுடன் கூட்டி வளர்த்தார்கள் அன்று வாழ்ந்த இன்றும் மகாஜனாவில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஆசான்கள் என்றால் மறுக்கமுடியாது. 'வாசுகி' மூலம் கிடைத்த புது நட்பின் வலிமை தான் மகாஜனாவிற்குள் என்னையும் அன்று நுழைய வைத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வலிமைக்கு உறுதி சேர்ப்பது போல் 'தமிழினி' என்ற மாணவி கணிதபாடத்தில் அதி விஷேட புள்ளிகள் பெற்று அவுஸ்திரேலியாவிற்குப் புலமைப் பரிசிலுடன் படிக்கச் சென்றார். முற்றாக இடம்பெயர்ந்த நிலையிலும் மகாஜனா தனக்குரிய பொலிவை இழக்கவில்லை என்பதற்கு இது ஒரு ஒப்பற்ற எடுத்துக்காட்டு.

இணுவில், கோண்டாவில் என்று இரு வேறு இடங்களில் மாற்றான் வீட்டுத் தோட்டத்தில் தொடர்ந்தும் தங்கியிருக்காமல் தனக்கென மகாஜனா ஒரு தனியிடம் அமைத்து ஒன்றாக இயங்க வேண்டுமென்ற எல்லோரது ஒருமித்த முயற்சியின் பலன் மருதனார்மடச் சந்தியிலே இருந்த ஒரு பற்றைக்காணியும் வீடும் மகாஜனாவின் 'பர்ணசாலை'யாக மாறியது. தொடர்ந்து இணுவில் கந்தசாமி கோவிலுக்கு அருகாமையிலிருந்த இன்னொரு காணி மகாஜனா மாணவர் விளையாடுவதற்குக் களம் அமைத்துக் கொடுத்தது. மருதனார்மடத்தில் மகாஜனாவை இயங்க வைப்பதற்காக வீடு வீடாகச் சென்று ரிக்கெட்ஸ் விற்பனை செய்து நிதி திரட்டுவதில் பெரும்பங்கு அன்று உயர்வகுப்பிலுருந்த மாணவர்களிடம் கொடுக்கப்பட்டது. எதிலுமே போட்டி போட்டு வெல்லும் எங்கள் மாணவர்கள் ரிக்கெட்ஸ் விற்பதிலும் அதையே கடைப்பிடித்தார்கள். கீரிமலை வீதி, காங்கேசன்துறை, பலாலி வீதி என சமாந்தரமாக யாழ்நகரை நோக்கிச் செல்லும் வீதிகளை மையமாக வைத்து அதற்குக் குறுக்கே எல்லைகளைப் போட்டு ஒவ்வொரு வகுப்பினக்கும் பிரித்துக் கொடுத்து, எல்லையைத் தாண்டிச் செல்வது நல்லதல்ல என்ற எச்சரிக்கையுடன் மாணவர்களாகிய எங்களைச் சக மாணவர்கள் போட்டிபோட வைத்தமை மிகவும் சுவாரசியமான நிகழ்வு. அந்தப் போட்டியில் எமது வகுப்பு வெற்றிபெற முடியவில்லையாயினும் ஒட்டுமொத்தமாக மகாஜனா வெற்றிபெற்று மிகக் குறுகிய காலத்திலேயே அழகான மகாஜனாவை உருவாக்கியமை அன்றைய நாட்களில் வாழ்ந்த ஒவ்வொரு மகாஜனனினதும் வெற்றியே! காலையில் ஏட்டுக்கல்வி மாலையில் அனுபவக்கல்வி என அன்றைய நாட்கள் இடம்பெயர்ந்த இன்னல்களை மறக்கலைக்குமளவுக்கு இனிமையாகக் கழிந்தன. மகாஜனா மீண்டும் அம்பனை சென்றுவிட்டதனை அறிந்தபோது ஒரு சம்பவம் நினைவுக்கு வந்தது.மருதனார்மட மகாஜனாவினுள் ஒருதடவை மரம் நட்டார்கள். அப்பொழுது சகமாணவி "திரும்ப நாம் அம்பனை செல்லும் பொழுது மரத்தை என்ன செய்வதாம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கேட்க, இன்னொரு மாணவி "மரத்தையும் கிளப்பிக்கொண்டு போய் அங்கு நடுவார்கள்" என நகைச்சுவையாகக் கூறினார். ஆனால் அந்த நண்பியின் வார்த்தைகளில் இரு உண்மைகள் மறைந்திருந்தன. மகாஜனா திரும்ப அம்பனையில் இயங்கும் என்பது முதலாவது அப்போது நாங்கள் மாணவர்களாக இருக்கமாட்டோம் என்பது இரண்டாவது. இரண்டுமே இன்று நிறைவேறியுள்ள உண்மைகள்.

அன்று உயர்தர விஞ்ஞானப்பிரிவில் எமது வகுப்பில் ஆண்கள் எட்டு, பெண்கள் எட்டு என மொத்தம் 16 மாணவர்கள் இருந்தோம். எமது வகுப்பில் என்றுமே கலகலப்புக்குக் குறைவிராது. சின்னச்சின்ன நிகழ்வுகளுக்கெல்லாம் சின்னச்சின்ன சண்டைகள் பிடித்துப்பின் அதை சுவாரசியமாக அசை போட்டுக் கொண்டிருப்போம். யாழ்பாணத்திலுள்ள பல பாடசாலைகள் இணைந்து விஞ்ஞானரீதியான ஒரு சுற்றுலாவை ஒருதடவை ஒழுங்கு செய்திருந்தன. எமது பள்ளியிலிருந்து பத்து மாணவர்களை சுற்றுலாவுக்கு வரும்படி அழைப்பு வந்திருந்தது. எங்கள் ஒவ்வொருவருக்குமே செல்ல ஆசை ஆனால் 16 மாணவர்களிலிருந்து 10 பேர் மட்டும் எப்படிச்செல்வது? 5 ஆண்களும் 5 பெண்களும் செல்வது தான் முறை அதையே ஆசிரியரும் கூறினார். யுடட ழச ழெநெ விதியைப்பற்றிப் பிடிக்கும் எங்களால் 8 இலிருந்து 3 ஐ விட்டுச் செல்வது முடியாத காரியமாக இருந்தது. ஆண்களும் அதையே ஒப்பினார்கள். அனால் பெண்கள் 8 பேரும் சேர்ந்தே போக விரும்புவதாகக் கூறியதும் ஆண்கள் அனைவரும் தங்களுக்குக் கிடைத்த அரிய வாய்ப்பை எமக்காக விட்டுக்கொடுத்து பெருமிதமாக ஒதுங்கிக் கொண்டார்கள். சண்டை ஒன்றை எதிர்பார்த்த எங்களுக்கோ வியப்பிலும் வியப்பு! கூடைவிட்டுக் கலைவதற்கான காலம் நெருங்கியதை உணர்ந்ததினால் தர்மத்திற்குப் புறம்பான எமது விருப்பத்தை நிறைவேற்றினார்கள் போலும். மேலும் இருவர் தேவைப்பட்டதனாலும், அடுத்த வகுப்பில் ஆண்கள் பகுதியில் இருவர் மட்டுமே இருந்ததனாலும் அவர்களைக்கூட்டிச் சென்றமை வேறு கதை.

அன்று எமது வகுப்பில் பாடம் நடாத்திய சுந்தரலிங்கம் சேர் முதல், சாந்தி ரீச்சர் வரை ஒவ்வொருவருமே எங்கள் ஒவ்வொருவரிலும் தனிப்பட்ட அக்கறை செலுத்தித் தம் சொந்தப்பிள்ளைகள் போல் அதட்டியும் அரவணைத்தும் வந்தார்கள். எதோ ஒருவகையில் ஒவ்வொரு ஆசான்களும் எம்மனதில் மறக்கமுடியாத அளவுக்கு இடம்பிடித்து விடுவார்கள். சுந்தரலிங்கம் சேர் கோபமாக இருந்தால் அவரது குரலில் கோபமும் சேர்ந்தே தெரியும்.சேர் படிப்பிக்கும் பொழுது எங்கள் எல்லோரினது கவனமும் வகுப்பறையில் நடைபெறும் பாடத்தில் தான் இருக்க வேண்டும், இல்லாவிட்டால் அவர் கையில் இருக்கும் ஏதோ ஒன்று எமது மேசையில் வந்து விழும். சத்தியமூர்த்தி மாஸ்ரரை எடுத்தால், அவர் சத்தமாகத் தான் படிப்பிப்பார். அவர் கோபப்படும் பொழுதும் ஏனோ அவர் முகம் சிரித்துக் கொண்டுதான் இருக்கும். அவர் எமக்குக் கொடுக்கும் அதிக பட்ச தண்டனை பாடம் முடியும் மட்டும் எம்மை எழுப்பி நிற்க வைப்பது தான். சில தடவைகள் நாங்கள் 16 பேரும் எழும்பி நின்று அவரின் தண்டனையை அனுபவித்தும் இருக்கின்றோம்.

எமக்கு வகுப்பாசிரியையாக இருந்த சாந்தி ரீச்சர் சற்று வித்தியாசமானவர். அவர் கோபப்பட்டு என்றுமே கண்டதாக எமக்கு நினைவு இல்லை. நடை, உடை, பாவனை அனைத்திலுமே சாந்தி ரீச்சரிடம் ஓர் அழகு தெரியும். அதிகம் கதைக்கமாட்டார். தேவையானதை மட்டும் அளவோடு புகட்டுவதில் கெட்டிக்காரி. என்னுடன் படித்த அனைத்து மாணவர்களுமே மதிப்பும் மரியாதையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்திருந்த ஆசிரியர்களுள் முக்கியமானவர் காளிதாசன் மாஸ்ரர். அவரிடம் கல்வி கற்கும் சந்தர்ப்பம் எனக்குக் கிடைக்கவில்லை. ஆனால் எனது நண்பிகள் அடிக்கடி அவரை நன்றியுடனும் மதிப்புடனும் நினைவு கூறுவார்கள். பள்ளியில் காளிதாசன் சேரைச் சந்திக்கும் வேளைகளில், அவர்களின் உரையாடல்களில் ஓர் உண்மையான பாசம் தெரியும். அனால் எமது வகுப்பாசிரியையே தான் நன்றாக இருப்பதற்கும், காளிதாசன் மாஸ்ரரின் அறிவுரைகள் தான் காரணம் என்று பெருமையுடன் நினைவுகூர்ந்ததை நினைக்கும் பொழுது, மகாஜனாவில் குரு–சீடத்துவ உறவு வாழையடி வாழையாகத் தொடர்வதனையும், பெற்றோர்–பிள்ளைகளுக்கான உறவைவிட உறுதியானது என்பதனையும் உணர முடிந்தது.

வெறும் இரண்டரை வருடங்கள் மட்டுமே மகாஜனாவில் மாணவியாக இருந்த எனக்கே அது பொற்காலமாக இருந்தால், பள்ளிப்பருவம் முழுவதையுமே மகாஜனாவில் கழித்தவர்கட்கும், தொடர்ந்தும் மகாஜனாவிற்காக தமது வாழ்க்கையை அர்ப்பணித்து அங்கே ஆசிரியப்பணி செய்தவர்களுக்கும் மகாஜனா ஒரு கோவிலே! வாழ்க மகாஜனா, வாழ்க அதன் புகழ்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனாக் கல்லூரியின் நாடகப் பாரம்பரியம்

பொன்னுத்துரை பகீரதன்

அன்னை மகாஜனாவின் நூற்றுப் பதினொரு அகவையில் நடந்து வந்த வழித்தடங்கள் பற்றிய ஒரு கண்ணோட்டமாக என் மனப்பதிவை பகிர்ந்து கொள்வதில் தான் பெருமிதம் கொள்கின்றேன், ஸ்தாபகர் துரையப்பாபிள்ளை அவர்கள் ஒரு மாபெரும் படைப்பாளி அவர் ஒரு சகல குணசம்பன்னன் ஆவார். ஆங்கிலப் புலமையையும் மீறி அன்னைத்தமிழ் மொழிப் புலமையிலும் அவர் தம் சிந்தனையூற்று மிகவும் செழுமைவாய்ந்து காணப்பட்டமை வரலாற்றுப்பதிவுக்கு உட்பட்டுக் காலத்துக்கு காலம் வளர்ச்சி கண்டு கொண்டே இருக்கின்றது.

கவிஞர் கதிரேசப்பிள்ளையின் கைவண்ணத்தில் உருவாகி தேசியக் களத்தில் தொடர்ந்து ஐந்து வருடங்கள் வெற்றி வாகை சூடிய நாடகங்களின் பிதாமகர் என்னும் பெறுமதிமிக்க சாதனையாளின் பாரதம் தந்த பரிசே அன்னை மகாஜனாவின் நாடகப் பாரம்பரியத்தின் தொடக்கப் புள்ளியாக அமைந்து தொடர்ந்து நாடகத்துறை விற்பன்னர்களினால் வருடா வருடம் சூட்டப்படும் முத்தான படைப்புக்களால் வரலாறு செழுமை கண்டு நீண்ட நெடும் பயணத்தில் நகர்ந்து கொண்டிருப்பது வருடா வருடம் எமது தரிசனத்திற்கு நல்விருந்தாக அமைகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

நாடகமும் அரங்கியல் பாடத்துறை அமுலாக்கப்பட்ட காலத்தில் இருந்து படிப்படியாக மாணவர் தொகையும் பெறுபேறுகளின் தரமும் பல்கலைக்கழக அனுமதிகளின் பதிவுகளும் நாடகப் பாரம்பரியத்தை அதன் பதிவை உள்ளங்கை நெல்லிக்கனியாக எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. ஒரு பெரிய ஆய்வுக்கு உட்படுத்தக்கூடிய தலைப்பை ஒரு சில பக்கங்களுக்குள் சொல்லி முடிப்பதென்பது முடியாத ஒரு காரியமாகும். ஆசான்களின் பெயர் விபரங்கள், நாடகங்களின் தலைப்புகள் மாணவர்களின் விசேட அடைவு மட்டங்கள் என்பவை குறிப்பிடப்படாது விடய உள்ளடக்கத்தை மட்டுமே இங்கு குறிப்பிடுவது சாலச் சிறந்ததாகும்.

ஈழத்து தமிழ் நாடக வரலாற்றில் தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரியின் நாடகப் பாரம்பரியம் ஆழமாக இடம் பெற்றிருத்தல் என்பது எம்மை பெருமிதத்திற்கு உட்படுத்துவதாகும். பல்கலைக்கழகங்களில் நாடகமும் அரங்கியலும் கற்கைநெறி ஆரம்பிப்பதற்கு முன்பே நாடகக் கலை வளர்ச்சி மகாஜனாவில் செழுமையுற்றிருந்தமை மறக்க முடியாத பேருண்மையாகும். இசையும் நடனமும் ஒன்றிணைந்த கூட்டுக்கலையாக, தாயக்கலையாக நாடகக்கலை தன்னைத் தானே ஆழ வேரூன்றி விருட்சமாகி விழுதுகளைப்படைத்து ஒரு முழுமையான கல்லூ ரிக் கலைத்திட்டத்தை அமுல்படுத்தி வந்த பெருமை பாவலருக்கும் அவர் நம் மகன் சிற்பி ஜயரத்தினம் அவர்களுக்கும் உரியதாகும், தொடர்ந்து வந்து பொறுப்பேற்ற அதிபர்களும் நல்ல தலைவர்களாகவும் நடுவர்களாகவும் அமைந்து தாமே கூடஅமர்ந்து நாடக ஒத்திகைகளுக்கு உறுதுணை வழங்கியதோடல்லாமல் மேடை ஏற்றத்தின் போது பூரண ஒத்துழைப்போடு கலா இரசனையோடு கடமை ஆற்றியமை அற்புதமான ஒரு வளமாகும். ஸ்தாபகர் தின ஜயரத்தின



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவு தின பெருவிழாக்களில் வருடா வருடம் நிகழும் போட்டிகள் பட்டறைகள் அனைத்திலும் புத்துணர்வும் புதுமையாக்கமும் கொண்டு இன்று வரை பீடுநடைபோடும் அற்புத பாரம்பரியம் எமது அழியாச் சொத்தாக தொடர்ந்து வளர வேண்டும் என்று அனைத்து மகாஜனங்களோடு இணைந்து நாமும் வாழ்த்தி விடை பெறுவோமாக.

### கட்டுரை ஆசிரியரின் பிற்குறிப்பு :

எனது பெயர் பொன்னுத்துரை பகீரதன் நான் மகாஜனாக் கல்லூரியில் கல்விபயின்றது எனக்கு கிடைத்த பேறு என்று தான் கூற முடியும். எமது கல்லூரியில் கல்வி கற்பதுடன் இயல் இசை, நாடகம், விளையாட்டு, ஒழுக்கம் போன்ற பல்வேறு விடயங்களை எனக்கு கற்பித்த அதிபர் ஆசான்களிடம் நான் பெற்றுக் கொண்டேன். இன்று நான் ஒரு கலைப்பட்டதாரியாக இருந்து நாடகமும் அரங்கியலும் என்ற பாடத்தினை தரம் 6 இருந்து உயர்தர வகுப்பு வரை யாஃவட்டு மத்திய கல்லூரியில் கற்பித்து வருகின்றேன். அத்துடன் பட்டபின் கல்வி டிப்ளோமா, மற்றும் அகில இலங்கை சமாதான நீதவான் ஆகவும் மற்றும் தேசிய மாணவர் படையணியில் இரண்டாம் லெப்டினன் ஆகவும் கட்டுவன் மேற்கு நாச்சிமார் ஆலய பரிபாலன சபையில் பல வருடங்கள் தொடர்ச்சியாக தலைவராக இருந்து வருகிறேன். அதற்காக ஆலய சமூகத்தவர்களால் "அடுப்பணி செம்மல்" என்ற பட்டம் எனக்கு வழங்கி கௌரவிக்கப்பட்டது. நான் இவ்வாறு செயற்படுவதற்கு ஆணிவேராக யா/மகாஜனக் கல்லூரி (தேசிய பாடசாலை மாதாவை என்றென்றும் போற்றி வாழ்த்தி வணங்கி விடைபெறுகின்றேன்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் விநாயகரத்தினம் அவர்கள்

**தர்சினி எமில்டன்**

தெல்லி நகர் என்றதுமே எல்லோரது மனதிலும் முதலில் தோன்றும் எண்ணம் கலை, கலாச்சாரம், பண்பாடு யாவும் ஒருங்கிணையப்பெற்ற மக்கள் வாழும் பகுதி என்பது தான். அதற்கு அரணாக இருப்பது எமது மகாஜன மாதாவே என்றால் மிகையாகாது. ஒரு சமூகத்தினைக் கட்டி எழுப்பும் பாரிய தார்மீகப் பொறுப்பு அந்தக் கிராமத்துப் பாடசாலையையே சாரும். எமது பாடசாலையில் இதனைப் பல தலைமுறையினரிற்கு ஊட்டி, தானும் அவ்வழியில் வாழ்ந்து அதனைத் தொடர்ந்து வந்த தலைமுறையினரிற்கு கொண்டு செல்லும் அளவிற்கு ஆழமாக வேரூன்ற வைத்தது எமது ஆசான் விநாயகரத்தினம் அவர்களையே சாரும்.

"அவன் அருளால் அவன் தாள் வணங்கி" என்பதற்கு அமைவாக, நாம் இறைவனை வணங்குவதற்குக்கூட இறைவனின் அனுக்கிரகம் இருக்க வேண்டும். அதேபோல் எமது பாடசாலையில் கலை, கலாச்சாரம் என்பவற்றைத் தன் வாழ்நாளில் வாழ்ந்து காட்டிய இறைவனின் அடியாரைப்பற்றி எழுதக்கிடைக்கப்பெற்ற என் கரங்களும் பாக்கியம் பெற்றதே.

எந்த சமயமாக இருந்தாலும், எவர் ஒருவர் சமயத்தின் பால் ஒன்றித்து வாழ்கிறாரோ அவர் அந்த சமுதாயத்தில் மிகச்சிறந்த ஒழுக்க சீலராக இருப்பார். ஒரு ஆசிரியர் தனித்து பாடங்களினை மட்டும் மாணவர்களிற்கு கற்றுக்கொடுப்பதுடன் நின்று விடாது, தானும் அந்நெறியில் வழுவாது நின்று வாழ்ந்து காட்டுவதே சிறப்பானது. அதற்கு எடுத்துக்காட்டாக, எமது ஆசானின் தூய்மையான, எமது கலாச்சாரத்திற்கே உரிய வெள்ளை வேட்டி சட்டை, வெண்ணீறு, புன்முறுவல் அதற்கு மேலாக இறைவன் அனுப்பிய தூதுவன் போல் எம் ஆசான் அடுத்தடுத்தாக பல போட்டிகளில் மாணவர்களை உள் வாங்கி ஈடுபடுத்தி அதன் மூலம் அவர்களின் திறமைகளை வெளிக்கொணர வேண்டும் என்ற நாடித்துடிப்பு பாடசாலைக்கு கேட்கும் அளவிற்கு உதவுவார். போட்டிகளின் வரிசையில் தெல்லிப்பழை இந்து இளைஞர் சங்கம் நடாத்தும் சமய அறிவுப்போட்டிகள், திருக்குறள் போட்டிகள், நல்லூர் கந்தசாமி கோவில் வருடாந்த உற்சவ காலத்தில் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தால் நடாத்தப்பெறும் சைவசமய அறிவுப் பண்ணிசைப் பேச்சுப்போட்டிகள், சைவ பரிபாலன சபை நடாத்தும் சமய பாடப் பரீட்சைகள், சிறீ விசுவேசப் பிள்ளையார் கோவில் வண்ணார்ப்பண்ணை திருவெம்பாவை உற்சவ கால சைவ சமய பாடப் பரீட்சைகள், கீரிமலை சிவநெறிக்கழகம் நடாத்தும் மாலை கட்டுதல் போட்டி, கோலம் போடுதல், பேச்சுப்போட்டி, விவேகானந்த சபைப் பரீட்சைகள் இந்து கலாச்சார சபை நடாத்திய கட்டுரைப் போட்டி, பண்ணிசைப் போட்டி, பேச்சுப்போட்டி என்பன குறிப்பிடத்தக்கன.

ஆசிரியர் விநாயகரத்தினம் அவர்கள் எமது பாடசாலையிலேயே தனது படிப்பினைப் படித்த காரணத்தினால் அவர் பாடசாலையில் வைத்த பற்று இரட்டிப்பாகியது. ஆசிரியர் அவர்கள் எமது பாடசாலையில் தமிழும், சமயமும் கற்பிக்கும் ஆசிரியராக இருந்தாலும் கூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



விளையாட்டுத்துறையிலும் தனது தடத்தினை பதிக்கத் தவறவில்லை. இல்ல விளையாட்டுப்போட்டிகளில் ஒருங்கிணைப்பாளராகவும் உதைபந்தாட்ட அணியில் பயிற்றுவிப்பாளராகவும் இருந்து பிரமிக்க வைத்ததுடன் மட்டுமன்றி தடகளப் போட்டிகளின் தொடக்குனர்களுள் ஒருவராகவும் இருந்தார்.

1992 ம் ஆண்டு பாடசாலை, கோட்டம் மற்றும் மாவட்ட மட்டங்களில் சிறந்த ஆசிரியராக தெரிவு செய்யப்பட்டு நல்லாசான் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்ட மதிப்பிற்குரிய ஒருவர். எமது மகாஜன மைந்தர்கள் பல போட்டிகளில் தங்கப்பதக்கம், பரிசில்கள் பெறக்காரணமானவர். தேசிய மட்ட ரீதியில் ஆசிரியரின் ஊக்குவிப்பு எமது பாடசாலை தேசிய மட்டத்தில் கூட பல தங்கப்பதக்கங்களை பெற்றமை குறிப்பிடத்தக்கது. எமது ஆசான் எமக்கும் பல பரிசில்களைப் பெற வைத்து எமது பாடசாலைக்கென்றொரு சிறப்பான பெயரை தேசிய ரீதியில் தக்க வைத்துக் கொள்ள காரணமானவர்.

மகாஜன சிற்பி தெ.து. ஜெயரத்தினம் அவர்களின் வெண்கலச்சிலை ஒன்றினை செய்வித்து அதனை ஜெயரத்தினம் நினைவு மண்டபத்தில் நிறுவிய வரலாற்று நிகழ்ச்சிக்கு காரணகர்த்தா எமது ஆசான்.

எமது பாடசாலை வளாகத்தினுள் நாம் நுழைந்ததுமே ஓர் கோயிலுக்குள் பிரவேசிக்கும் மன உணர்வினை ஏற்படுத்தியவர். படிக்கும் இடம் தெய்வீகக்களை பெற்றிருப்பின் மாணவர் படிப்பிற்கு தடையேது..? காலையில் கடவுள் வணக்கத்துடன் ஆரம்பிக்கும் நடராஜர் பூஜை, தனது பாட ஆரம்பத்திலும் முடிவிலும் தேவார புராணம். எமது பாடசாலை நடராஜர் கோயில் உற்சவங்கள் மட்டுமன்றி திருக்கேதீஸ்வரம், மாவிட்டபுர கோயில்களில் எமது பாடசாலைக்கான உபயங்களை நடாத்துவதுடன் மாணவர்களையும் அழைத்துச்செல்வார். போர் இடம்பெற்று இடருற்று இடம்பெயர்ந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளையில் கூட எமது நடராஜர் சிலையினைக் கொணர்ந்து நாம் எவ்வித தடையுமின்றி இறை வணக்கம் செய்ய வழி வகுத்தார் மருதனார்மடத்தில்.

எமது சைவ சமயம் எவ்வாறு விஞ்ஞானத்துடன் தொடர்புடையது என்பதற்கு எமது ஆசான் எம்மை ஈடுபடுத்திய போட்டிகளே சான்று பகரும். மாலை கட்டுதல், கோலம் போடுதல், பண்ணிசைப்போட்டி, மனனப்போட்டி, பேச்சுப்போட்டி, கட்டுரைப்போட்டி இவையெல்லாம் எமக்குப் பரிசில்களைப் பெற்றுத்தருவதற்கு மேலாக எவ்வாறு எமது மூளை, நரம்பியல் மற்றும் உடலினை ஒரு சேர பல தொழிற்பாடுகளினை ஊக்கப்படுத்தி எமது மூளை தனது signal இனை சகல பகுதிகளிற்கும் விரைவாக ஊக்கப்படுத்த உதவியது. இதனைத்தான் இன்று மேற்குலக நாடுகளில் பல ஆராய்ச்சிகளின் பின்னர் மாணவர்கள் படிப்பினை ஊக்கப்படுத்துவதற்காக Fine motor skill, Sensory activities, Eye-hand co-ordination, Creativity, Cognitivie skill. என்றெல்லாம் சிந்தித்து இவற்றினை பாடவிதானங்களினுள் உட்புகுத்துகின்றனர். ஆனால் எமது ஆசான் இதனை எமது சைவத்துடன் இணைத்து எமது வாழ்க்கை முறைக்குள் புகுத்தி எமது Concentration, Planning skills and encurage our teamwork என்று எமது கடினமான பாடங்களை இலகுவாகப் படிக்க உதவி ஒரு ஆரோக்கியமான சமூகத்தினை உருவாக்கக் காரணமானவர். கடவுள் எமக்கு விநாயகரத்தினம் ஆசிரியர் வடிவில் அளித்த சமூகக்கட்டமைப்பு அவர். அதனால் இன்றும் எமது மாணவர்கள் மனக்கட்டுப்பாடு, கலாச்சாரம், பண்பாடு என்று எதிலும் பிறழாது, எங்கிருப்பினும் மனதினால் கூட இறைவனைக் காணும் அரிய ஞான அறிவினைப் பெற்றிருக்கின்றனர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுமையான நினைவுகள்

தயாசுகி பத்மநாதன்

இலங்கையில் வடமாகாணத்தில் இயற்கை அழகும் இயல்பான மக்களும் அருள்மிகு கோவில்களும் சிறந்த மண் வளமும் நிறையப்பெற்ற தெல்லிப்பளைக்கு கூடுதல் அழகு சேர்ப்பது நமது மகாஜனாக் கல்லூரி. அம்பனையில் பாடசாலையின் முன்புறத்தில் பச்சை பசேலென புல்வெளி சூழ்ந்திருக்க கம்பீரமான தோற்றத்துடன் துரையப்பா உருவச்சிலையும், நான்கு புறமும் சூழ்ந்த வகுப்பறைகள், நடுவில் அழகிய மைதானம், உயர்ந்த மாடிக் கட்டிடங்கள் என ஒருங்கிணைந்ததே எமது பாடசாலை ஆகும்.

பள்ளிக்காலம் என்பது ஒரு மனிதனுடைய வாழ்க்கையின் இனிமையான காலமாகும் இக்காலப்பகுதியில் தான் ஆசிரியர்களின் வழிகாட்டலுக்கு அமைய ஒவ்வொரு மாணவர்களும் தமக்குள் இருக்கும் ஆற்றல்களை வெளிப்படுத்தி திறமைகளை வளர்க்கவும் சரியான முறையில் செப்பனிட்டு மேம்படுத்திக் கொள்ளவும் பிற்காலத்தில் சமுதாயத்தில் உயர்ந்த நற்பண்புகளுடனும், தன்னம்பிக்கையுடனும் வாழ முடியும். எமது பள்ளிப்பருவத்தில் கல்வியோடு மட்டும் நிற்காது விழுமியங்களையும் கலை கலாச்சாரத்தையும் போற்றி வாழ வழிவகுத்தது எமது பாடசாலையாகும். கல்வி, விளையாட்டு, கலாச்சாரம் சம்பந்தமான போட்டிகள் என்று பல்வேறு கோணங்களில் எம்மை வளர்த்துவிட்ட பெருமை மகாஜனாவை சாரும். நாங்கள் மகாஜனாக் கல்லூரியின் பழைய மாணவர்கள் என்பதில் என்றுமே பெருமை அடைகிறோம்.நாங்கள்

நாங்கள் சிறியவர்களாக காலையில் ஒன்றுகூடிய ஆனந்த நடராஜர் கோவில் வழிபாடு, ஓடி விளையாடிய அழகிய மைதானம், வசதியான வகுப்பறைகள்,ஒன்று கூடிய துரையப்பா மண்டபம் உணவுப் பண்டம் வாங்கி உட்கொண்ட சிற்றுண்டிச்சாலை என்றுமே மனதில் நீங்காத நினைவலைகள். எல்லோரும் நண்பர்களாக ஒற்றுமையுடன் வாழ்ந்த கல்லூரி நாட்கள் என்றுமே பசுமையான நினைவுகள்.1990 போரின் உக்கிரத்தால் சொந்த இடம் தொலைந்து பல்வேறு இன்னல்களுக்கு மத்தியிலும் அளவெட்டி, பண்டத்தரிப்பு, இணுவில் என அதிபர் ஆசிரியர்களின் கடின உழைப்பாலும், மாணவர்களின் ஒத்துழைப்புடனும் மகாஜனாக் கல்லூரி கல்வியை தொடர்ந்து வழங்கியது.ஆரம்ப கல்வியில் இருந்து எம்முடன் படித்தவர்கள் சிலர் 1990 போர்கால சூழ்நிலை காரணமாக இடம்பெயர்வுகளால் எமது பாடசாலையில் கல்வியைத் தொடர முடியாமல் பாடசாலையை விட்டு விலகியதும்.

புதிதாக உயர்தரம் கல்வி கற்க எமது பாடசாலையை தெரிவு செய்து இணைந்த மாணவர்கள் எல்லோரும் மகாஜனாக் கல்லூரியின் 1992 O/L,1995 A/L பிரிவுக்கு உட்பட்டவர்கள். இப் பிரிவானது எமது அடையாளம்.1994 மற்றும்1995 உயர்தர வகுப்பு மாணவர்களின் முயற்சியினாலும் (பற்றுச்சீட்டு விற்பனை) அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள் என பலரின் உதவியுடன் மருதனார்மடத்தில் தற்காலிகமாக ஓலைக் கொட்டில்கள் அமைக்கப்பட்டது. இதற்கு நமது உயர்தர வகுப்பும் விதிவிலக்கல்ல. 1992 ம் ஆண்டுக்கு பின்னர் உயர்தரம் கல்வி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்க தேர்வு செய்த துறை வெவ்வேறாக இருந்தாலும் எல்லோரும் பழைய நட்புடன் ஒருவருக்கு ஒருவர் விட்டுக்கொடுக்கும் தன்மை எமது சிறப்பு. புதிய மாணவர்கள், பழைய மாணவர்கள் இணைந்து எல்லோரும் ஒன்றாக 1995யுஃடு அடையாளத்தின் நண்பர்கள் ஆனோம். பற்றுச்சீட்டு விற்பனைக்காக நண்பர்கள் குழுவினர்களாக சேர்த்து துவிச்சக்கரவண்டியில் சுற்றி திரிந்த நாட்கள், விளையாட்டு மைதானம் இல்லாததால் இணுவில் முருகன் ஆலயத்திற்கு முன்பாகவுள்ள காணியை சீரமைத்து மைதானம் உருவாக்கியமை, மாணவர்களிடையே முரண்பாடு வரும் போது தீர்வு காணல், உணவுகளை பகிர்ந்து உண்ணல், நான்கு துறைகளின் (உயிரியல் துறை, கணிதத்துறை, வர்த்தகத் துறை, கலைத்துறை) ஒற்றுமை, உதவி செய்யும் மனப்பான்மை, ஓலைக்கொட்டிலும் செம்பாட்டு மண்ணிலும் மகிழ்ச்சியாக சிறகடித்த தருணம் என்றுமே மனதில் இனிமையான நாட்கள் .

நான் தெரிவு செய்த துறை வர்த்தகத்துறையாகும்.வர்த்தக துறையில் கல்வி கற்பித்த எமது ஆசிரியர்கள் என்றுமே பாராட்டுக்குரியவர்கள். நாம் தவறு செய்யும்போது கண்டித்து பொறுமையுடன் எடுத்துரைத்து நல்வழிப்படுத்தி அரவணைத்து நட்புபாராட்டி எமது சிறந்த வழிகாட்டியாக இருந்தவர்கள் எமது ஆசிரியர்கள் என்று கூறுவதில் எமக்கு என்றும் பெருமையே. பாடம் புகட்டுதல் மட்டுமன்றி எமது எதிர்கால நலன் கருதி நல்ல அறிவுரைகளை வழங்கி எம்மை நல்வழிப்படுத்தியவர்கள். வர்த்தகத்துறை இரண்டு பிரிவுகளை கொண்டது. D1,D2 இரண்டு வகுப்புகளில் கல்வி கற்பித்த ஆசிரியர்களுக்கு வர்த்தக துறை மாணவ மாணவிகள் சார்பில் நன்றி கூறிக்கொள்கிறேன். எமது ஆசிரியர்கள் அன்று போலவே இன்று 27 வருடங்கள் கழித்தும் எம்முடன் கைகோர்த்து தமது நினைவலைகளை பதிவிட்ட மை நாமும் எமது சக மாணவர்களும் பாக்கியம் செய்தவர்கள். வர்த்தக கலைத்துறை துறை சார்பில் அளவையியல் ஆசிரியர் திரு சு. சயந்தன் அவர்கள் எம்முடன் தமது நினைவுகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்து ஆக்கம் தந்தமைக்கு எமது ஆசிரியருக்கு நன்றி உள்ளவர்களாக இருப்போம்.

கல்வி கற்பிக்கும் காலத்திலிருந்த அன்பு, அரவணைப்பு, எதிர்கால நலன் கால் நூற்றாண்டுக்குப் பின்னர் இன்றும் அளவையியல் ஆசிரியர் இடத்தில் இருப்பது எமக்கு பொக்கிஷம். இன்று நாங்கள் பிரிந்து எம் நாட்டிலும் புலம்பெயர் நாடுகளிலும் வசித்து வருகிறோம். எமது நாட்டில் நண்பர்கள் பல உயர் துறைகளில் வேலை செய்வதை போன்று புலம்பெயர் நாடுகளிலும் தமது திறமைக்கு ஏற்ப தனியாகவோ அல்லது கூட்டுத்தொழிலையோ தெரிவு செய்து திறம்பட செயற்பட்டுவருகிறார்கள். எங்கு வாழ்ந்தாலும் சமுதாயத்தில் நல்லவர்களாக ,திறமையானவர்களாக ,உதவி செய்யும் மனப்பாங்குடன் வாழ எங்களை நல்வழிப்படுத்திய எமது ஆரம்ப கல்வி முதல் உயர்தரம் வரை கல்வி கற்பித்த மகாஜனாக் கல்லூரியின் ஆசிரியர்களுக்கு நாங்கள் என்றுமே நன்றி கூற கடமைப்பட்டுள்ளோம்.

எமது பள்ளிக்காலத்தில் சோதனைகளையும் வென்று சக மாணவர்களின் அனுபவங்களையும் காலத்தின் சுவடுகளாக ஆக்கங்கள் மூலம் எதிர்கால மகாஜனா சிறார்களுக்கு இது ஒரு உந்து சக்தியாக இருக்கும் என்று நம்புகிறோம். சிலர் நம்முடன் நட்பில் இருந்தாலும் பலரை 27 வருடங்களின் பின்னர் பெரிதாக்கு (zoom) ஊடாக பார்க்கும் போது இருந்த மகிழ்ச்சி, அந்த பழைய நாட்களின் நினைவுகள் எல்லாம் கண்முன் தோன்றுகிறது. பிரிந்த நண்பர்கள் ஒன்றுகூடி பேசி மகிழ்ந்த தருணம் பல வருடங்கள் ஆகியிருந்தாலும் எம் நண்பர்களின் நட்பு மாறவே இல்லை. இந்த மாறாத நட்பின் அடையாளம்தான் எமது கல்லூரிக் காலத்தின் வெற்றி.

"வெல்லுக மகாஜனமாதா"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என் நினைவில் நீங்கா ஆசான்கள்

எனை எழுத்தறிவித்து ஏணியாய் இருந்த
எனதருமை ஆசான்களை எண்ணுகின்றேன் என்றென்றும்

கணேசலிங்கம் ஆசானின் கண்டிப்புடனான கனிவான விளக்கங்கள்
கலங்கரை விளக்கென கண்ணுள்ளே தெரிகிறது இன்றும்
கன்னமிடமுடியாத கனமான அறிவு சொத்து அது

இராஜகுலேந்திரன் ஆசானின் இருளகற்றிய
இலக்கணம் மாறா இராஜசிம்மக்குரல்
இன்றும் கேட்கிறது என்னில்

சரவணபவான் ஆசானின் சஞ்சலம் தீர்க்கும்
சமயோசித விளக்கங்கள்– எனை
சரியவிடவில்லை பொருளியலில்
கோகிலா ஆசிரியையின் கோவையான
கோடிட்டுக்காட்டும் யுக்திகள்–இன்றும்
கோலமாய் நிற்கிறது என்னுள்ளே
விஜயா ஆசிரியையின் வித்தகஞானம் –எனை
வித்தகியாய் விதேசத்திலும் விழி திறக்க வைத்தது

பத்மா ஆசிரியையின் பண்படுத்திய பக்குவமான பதவுரைகள்
படித்த காலங்களை இரை மீட்டிட வைக்கிறது
அன்னை மண்ணிலும் அண்டை நாட்டிலும்
அயராதுஅனுசரிக்க அடியிட்ட என் ஆசான்களை
அடிபணிந்து வணங்குகிறேன்

**சிவாஜினி கிரிதரன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# கல்லூரியில் ஒரு விடுதி

VP. வாசுகன்

மகாஜனா மாணவர் தங்கு விடுதி தனக்கென ஒரு பண்பாட்டையும் வரலரரையும் கல்லூரியோடு பின்னி வைத்திருந்தது, மிகையல்ல. மாணவர்கள் இலங்கையின் எட்டு திசைகளிலும் இருந்தும் பயணப்பட்டு, இங்கு தங்கி கல்விகற்றது வரலாறு. எமது குடும்ப ரீதியாக நட்பு கொண்ட இந்திய வம்சாவளி குடும்பத்தினர் மன்னாருக்கு இடம்பெயர்ந்த ஒருவரின் மகன் இங்கு தங்கி மகாஜனாவில் உயர் கல்விகற்றது எனது சிறுவயது ஞாபகம். விடுதியில் பயன்பெற்ற யாழ் திவகங்கள், மட்டக்களப்பு, மலையக மாணவர்களின் செவிவழி கதைகளின் எதிரொலி வெளிநாடுகளிலும். பட்டதாரிகளும், பெரும் ஆளுமைகளும், உரிமையாளர்களும் விடுதியில் தங்கி கல்வி கற்றதன் பெறுபேறை நாம் அறிவோம். நமது பாலர் வகுப்பு காலங்களில் சில ஆண்டுகள் விடுதி தொடர்ந்து இயங்கியதை நாம் பார்த்தோம். போர்ச்சூழல் காரணமாக 1987ம் ஆண்டுகளின் பிற்பாடு ஆண்பிள்ளைகள் இரவில் தங்கி கல்வி கற்பதென்பது இருள் சூழ்ந்த காரியமே !. விடுதி மூடப்பட்டிருந்த காலங்களில் மணிப்புறாவும் மாடப்புறாவும் வாழ்ந்ததாகக் கேள்வி. மதில் பாய்ந்து சென்று விடுதியின் சுவர்களில் சூடான அரசியல் சுவரொட்டிகளை சில மாணவர்கள் ஒட்டியதை நேரில் கண்ட சாட்சி நான், அவர்களின் பெயர் நான் அறியேன்.

அதே காலப்பகுதிகளில் அறிமுகமானது மதிய உணவு போசணை திட்டம். அதற்காக மரக்கறி குழையல் சோறு தயாரிக்கப்பட்டது தங்கு விடுதியின் சமயல் அறையிலேயே. பால் காச்சி நன்றாக சீனி கலந்து இலவசமாக வழங்கினார்கள், அருந்தினோம். சிறிய மலிப்பன் மாறி பிஸ்கெட், சீருடைக்கான துணிகள், கிட்ஸ் கன்வாஸ் சப்பாத்து போன்றனவும் இலவசமாக கிடைத்தன. எமது வகுப்பு ஆண்டு 7 தகர கொட்டில் வகுப்புகளில் நடந்தன. தொடர்ந்து ஆண்டு 8 ஆண்டு 9 (1989 ரூ 1990) விடுதியில் இருந்த அறைகள் வகுப்பறைகள் ஆகின. நமது பிரிவில் மூன்று வகுப்புகள் விடுதியில். முறையே பாடசாலை வளாகத்தில் இருந்து விடுதிக்குள் செல்லும் வாசலின் வலது பக்கத்தில் தண்ணீர் தொட்டியும் முழு நெல்லி மரமும் இடதுபக்கத்தில் ஒரு வகுப்பும், தொடர்ந்து நேராக செல்லும்போது எதிர்த்தால் போல் இன்னொரு வகுப்பும், இடது பக்கத்தில் விடுதியின் இரும்பு கம்பியால் ஆன வெளி வாசலும், வலது பக்கம் திரும்பி சமையலறையை நோக்கும்போது இடது பக்கத்தில் மூன்றாவது வகுப்பு இயங்கின. குசினியை தாண்டி நேராக சென்றால் மணலில் சிறு நடை பாதை ஊடாக தகர கொட்டிலின் கடைசி வகுப்பை அடைந்துவிடலாம். காலை வந்தனம் கோவிலில் முடித்து விடுதியின் பிரதான வாசல் வழியாகவும் அல்லது தகரக்கோட்டில் வழியாகவும் வகுப்பறை செல்வது வழக்கமாக கொண்டிருந்தோம். யார் முதலில் செல்வது என போட்டியும் நிகழும். இக்காலத்தில் நம்மிடத்தில் ஹீரோ மை பேனா சிலரிடம் இருந்தது. அப்பேனாவின் உச்ச பயனை ஏப்ரல் 1ம் திகதி அன்றே பிரயோகிப்போம்.

மகாஜனாவின் விடுதியின் வளர்ச்சிப்பாதை யில் 1978ம் வெள்ளி விழாவை நினைவுபடுத்தி மலர் ஒன்று அச்சாகியது மிக முக்கியமான ஆதாரம். அம்மலரின் ஆசிரியர்களின் "விதியின் எழுச்சிப் பாதையில்" என்ற தலைப்பிலான கட்டுரையின் ஒரு பகுதியை இங்கு உங்கள் முன் வைக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதியின் எழுச்சிப் பாதையில்

1910ஆம் ஆண்டு பாவலர் துரையப்பாபிள்ளையின் புகழார்ந்த இல்லத்தில் விடுதிப் பாடசாலையாக ஆரம்பித்த தெல்லிப்பழை ஆங்கில உயர் நிலைப் பாடசாலை, இன்று அது அமைந்திருக்கும் இடத்தில் நிலைத்துப் படிப்படியாக உயர்ந்து, மகாஜனக் கல்லூரியாக மலர்ந்து உலகப் புகழ்பெற்று விளங்குகிறது. கல்லூரியின் வளர்ச்சி தெல்லிப்பழைக்கு வெளியேயுள்ளவர்களையும் கவர்ந்திழுத்தது. எனவே வெளி மாணவர்களின் நலன் கருதி மகாஜனக் கல்லூரியின் சிற்பியாகிய அமரர் தெ. து. ஜயரத்தினம் அவர்களால் 1954ஆம் ஆண்டு கல்லூரி விடுதிச்சாலை தொடங்கப்பட்டது. அந்நாளில் கல்லூரியில் போதிய இடமில்லாமையால் கல்லூரிக்கு மேற்பால் உள்ள ஓர் இல்லத்தில் ஆரம்பிக்கப்பட்டது. ஆறு மாணவர்களோடு ஆரம்பிக்கப்பட்ட விடுதி இன்று 120 மாணவர்களோடு திகழ்கிறது.

விடுதியின் முதற் காப்பாளராகப் புலவர் நா. சிவபாதசுந்தரனார் அவர்கள் விளங்கினார்கள். அவரது அயரா உழைப்பினால் விடுதி சிறப் படைந்தது. அவர்களைத் தொடர்ந்து திருவாளர்கள் க. நாகேஸ்வரன், சு. ஐயாத்துரை, வே. கந்தையா ஆகியோர் விடுதிக் காப்பாளராக அமர்ந்து விடுதியை வளர்த்தனர்.

திருவாளர் சி. கதிர்காமத்தம்பி அவர்கள் விடுதியைக் "கண்மணி" போலக் காத்து புதிய கட்டடங்களையும் உருவாக்கினார். திரு. சி. கதிர்காமத்தம்பி அவர்களைத் தொடர்ந்து திரு. நன்னித்தம்பி அவர்கள் விடுதிக்காப்பாளராக இருந்து பணிபுரிந்தார்.

1974இல் விடுதி மாணவரின் தொகை 23ஆகக் குறைந்து நடாத்த முடியாத நிலை ஏற்பட்டது. இந் நிலையில் அக்காலத்தில் அதிபராக இருந்த திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்கள் திரு. க. செல்வகுணச்சந்திரன் அவர்களையும், திரு. நா. சிவபாதசுந்தரனார் அவர்களையும் காப்பாளராக நியமித்தார். இதனைத் தொடர்ந்து விடுதி, வளர்முக நிலைக்குச் செல்ல ஆரம்பித்தது.

தொட்டதெல்லாம் துலங்கும் புகழாளராய அமரர் தெ. து. ஜயரத்தினம் அவர்கள் 1976இல் ஓய்வு பெற்றதன்பின், கல்லூரியினதும், விடுதியினதும் வளர்ச்சியில் தேக்கநிலை ஏற்பட்டது. 1976இல் புதிய அதிபரின் வருகையோடு கல்லூரி துரித வளர்ச்சிஅடைய ஆரம்பித்தது. இந் நிலையில் விடுதியை நாடும் மாணவரின் தொகை உயரத் தொடங்கியது. திரு. நா. சிவபாதசுந்தரனார் அவர்கள் உடல்நலக் குறைவால் விலக, விடுதிக் காப்பாளராகிய திரு. க. செல்வகுணச்சந்திரனின் தனித் திறமை விடுதியின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளர்ச்சிக்கு ஊன்றுகோலாய் அமைந்தது. விடுதியின் வளர்ச்சி வேகம் காரணமாக மேலும் உதவிக் காப்பாளராகத் திரு. க. வல்லிபுரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

விடுதியின் வளர்ச்சியினாற் கவரப்பட்ட மில்க்வைற் தொழிலதிபர், சிவதர்ம வள்ளல் திரு. க. கனகராசா J. P. அவர்கள் விடுதியின் இட நெருக்கடியைப் போக்கும் வகையில் புதிய கட்டடம் ஒன்றை அமைக்க முன்வந்தார். வரையாது வழங்கும் வள்ளலாகிய திரு. க. கனகராசா J. P. அவர்களின் வள்ளன்மையால் எமது விடுதி புதுப்பொலிவோடு நிறைவாகும் பெரும்பேறு இன்று பெற்றுள்ளது. அவர்களது புகழோங்க வாழ்த்துகின்றோம்.

விடுதி மேலும் சிறப்புற்றோங்க அனைவரதும் ஆதரவு பெருக வேண்டுகின்றோம்.

இதழாசிரியர்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இல்லக் கொடிகள்



அருளம்பலம்



துரையப்பா



சின்னையா



சின்னப்பா



ஜெயரட்ணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





1988

- தேசிய பாடசாலையாகத் தரம் உயர்த்தப்பட முன்மொழியப்பட்டு அங்கீகரிக்கப்பட்டதாக அறியப்படுகிறது.
  மகாஜனாக் கல்லூரியின் இலக்கியப் பாரம்பரியம் ~ நூல் வெளியீடு
  ஆசிரியர் நா. சண்முகலிங்கன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வலைப்பந்தாட்டத்தின் அறிமுகம்

திருமதி ஜெயந்தி லம்போதரன்

இங்கிலாந்தில் 1890 ஆண்டுகளில் ஒர் முறையான விளையாட்டாக மேம்படுத்தப்பட்டு அங்கிருந்து பல நாடுகளுக்கு பரவியது. இவ் விளையாட்டானது செவ்வக வடிவ ஆடுகளம் மூன்று பிரிவுகளாக பிரிக்கப்பட்டு அதில் இறுதிப்பகுதியில் உயரமான இலக்கு கூடை அமைந்துள்ளது. விளையாட்டின் நோக்கம் பந்தை எடுத்துச் சென்று கூடையில் எறிந்து கோல் இடுவதாகும். வலைப்பந்து ஏழு பேர்களை அடக்கிய இரு அணிகளுக்கிடையே ஆடப்படும் ஓர் விளையாட்டாகும். இவ் விளையாட்டு அணியின் வீரர் ஒவ்வொருவருக்கும் குறிப்பிடப்பட்ட செயலாற்றும் வகையில் இடங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. ஆட்டத்தின் போது பந்தைக் கையாளும் வீரர் மற்றொருவருக்கு பந்தை கைமாற்றும் முன் ஒரு எட்டுத்தான் எடுக்க முடியும். புந்தை மூன்று நொடிகளுக்கு மேல் கைமாற்றாது வைக்கிருக்க முடியாது. அதாவது தீர்மானம் எடுத்தல் விரைவானதாகவும் சரியானதாகவும் இருத்தல் வேண்டும். குறிப்பிட்ட வீரர்களே கோல் போடவும் முடியும்.

இவ் விளையாட்டானது பெண்களின் உடல் அமைக்கு ஏற்றதும் உடல் உபாதைகளை ஏற்படுத்தாததும் ஆகும். அவர்களது வாழ்க்கையை சிறப்புடன் நடாத்துவதற்கு வலைப்பந்தாட்டத்தில் கூறப்படும் விதிகளாய் இருக்கட்டும் நுட்பங்களாகட்டும் இவை அனைத்தும் ஒரு பெண்ணின் வாழ்வியலுடன் தொடர்புபட்டவையாகவே உள்ளது. விளையாடும் போது தமக்கென ஒதுக்கப்பட்ட எல்லைக்குள் இருந்து கொண்டு எதிர் அணியினருக்கும் பாதிப்புக்களை ஏற்படுத்தாது பந்தினை விரைவான தீர்மானங்களை மேற்கொண்டு சரியானபாதையில் பந்தினை நகர்த்தி தமக்கென ஒதுக்கப்பட்ட கூடையில் கோல் இடும் வரை பல முரண்பாடுகள் தடைகள் என பலவற்றைக் கடந்து செயற்படுவது அவர்களது வாழ்வியல்களுடன் பொருந்தக் கூடிய ஒரு தனித்துவமாக பெண்களுக்கென உருவாக்கப்பட ஒரு விளையாட்டுமாகும் என கூறுவதில் பெருமிதம் கொள்கின்றேன்.

வரைபடம்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் கல்விகற்ற காலங்களில் வலைப்பந்தாட்டத்தில் யாழ் மாவட்டத்தில் முக்கிய அணியாக வலம் வந்துள்ளோம். தேசிய அணியில் இடம்பெறுவதற்கு அக்கால நாட்டு நிலமைகள் சாதகமாக அமையவில்லை. பின்னர் எமது பாடசாலையின் வலைப்பந்தாட்ட மாணவர்கள் பல்கலைக் கழகத்தில் இருந்து தெரிவாகி தேசிய அணியில் விளையாடிய வரலாறுகளும் உண்டு. எம்மை வழிப்படுத்தி பயிற்சிகளை வழங்கி நாம் சாதிப்பதற்கு பாடசாலை சமூகம் பல வழிகளில் தோழ் கொடுத்து உறுதுணையாக நின்ற அந்த நாட்களை மீட்கலாம் என எண்ணுகின்றேன்

## நெஞ்சம் மறப்பதில்லை

வாழ்க்கையின் நடுப் பகுதியிலிருந்து வாழ்க்கையின் முற் பகுதிக்கு நகர்த்தும் நினைவலைகள் மிகவும் அற்புதமானவையாகவே உள்ளன. மீண்டும் பள்ளிக்கு போகலாம் வாருங்கள் என்ற எண்ணம் தோன்றுகின்றது. அன்றைய நாட்கள் என்னவோ பசுமையான நினைவலைகளாகப் பதிந்து போயினவோ என்னவோ உண்மை தான்.

நட்பு என்ற ஒன்றின் ஏணிப் படி ஒன்றிருந்தால் போதும் மலையைக் கூட ஏறிக்கடந்திடலாம் நண்பர்களின் கரங்களைக் கைகோர்த்துக்கொண்டே என செயற்பட்ட காலம் தான் எமது பள்ளிக் காலம். பிரிந்த நட்புக்களும் மீண்டும் துளிர்விட்டு மறையும் இவ் ஆக்கங்கள் ஊடாகவே அவ்வகையான நட்புக்களே இக்காலத்திலும் எமது வாழ்க்கையில் தொடர்கின்றது என்பது உண்மை.

இவ்வகையான பசுமையான எண்ணங்களுடன் விளையாட்டுத்துறையின் ஈடுபாட்டுடன் தொடர்பான நினைவலைகளை மீட்கலாம் என எண்ணுகின்றேன். விளையாட்டுத் துறையைப் பொறுத்த வரை நான் பெரிதும் விருப்பத்துடன் ஈடுபட்டது குழு விளையாட்டான வலைப்பந்தாட்டமே. உண்மையில் தனி விளையாட்டுக்களை விட குழு விளையாட்டுக்களிலேயே தான் நிறைய அனுபவப் பாடங்களைக் கற்கலாம் என எண்ணுகின்றேன். தனி விளையாட்டு என்பது தனிப்பட்ட ஒருவரின் முயற்சியாலும் ஆளுமையினாலும் வளர்வதே ஆகும். ஆனால் குழு விளையாட்டுக்கள் அவ்வாறானவை அல்ல. குழு விளையாட்டுக்களில் தலைமைத்துவ பண்பு, விட்டுக் கொடுத்தல், அடுத்தவரைப் புரிதல், ஒரே நேரத்தில் பல தரப்பட்ட அவதானங்களை ஒன் று சேர்த்தல், குழுவில் ஒருவரின் கவனக் குறைவால் ஏற்படும் தோல்வியையும் சகிக்கும் தன்மை, நேர முகாமைத்துவம் என பல அனுபவங்களை பெற்ற அனுபவம் குழு விளையாட்டை விளையாடிய வீர வீராங்னைகளுக்கு உண்டு என எண்ணுகின்றேன்.

ஆயிரம் பேருக்கு அறிவுரை கூறும் அளவு அனுபவம் இருந்தாலும் தனக்கு என்றால் தாங்க முடிவதில்லை யாராக இருந்தாலும் அந்த வகையில் அனுபவங்கள் வாழ்க்கையை தொடங்குவதற்கும் மனித மனங்களின் நிலையை அறியவும் மனக் காயங்களை போக்கவும் மருந்தாகின்றன . இவ் அனுபவங்களே தொடங்கிய வாழ்க்கைப் பயணங்கள் முடிவதற்கும் உதவுகின்றன. பிரிவுகளால் ஏற்படும் மனவலிகளை மன சோர்வுகளை போக்கவும் மனத்திடமுடன் வாழ்க்கையை முன் நகர்த்தவும் உதவுகின்றன. அவ்வகையில் விளையாட்டு துறையின் ஊடாக பெற்ற அனுபவங்கள் தான் தனக்கென வாழ்க்கையை வாழ்க்கையாக வாழ்வதற்கு கற்றுக்கொடுத்துள்ளது.

இவ்வகையான அனுபவத்தைப் பெறுவதற்கு எமது பாடசாலை களமாக அமைந்துள்ளது. வலைப்பந்தாட்டத்திற்கு ஆர்வத்தையும், ஊக்கத்ததையும் அனைத்து வழிகளிலும் பங்களிப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழங்கி எம்முடன் கரம் கோர்த்து மைதானத்தில் நின்ற அதிபர் அமரர் கதிர்காமத்தம்பி நாகராஜா அவர்கள் திருமதி தனவதி பாலசுப்பிரமணியம் (பாலா ரீச்சர்) செல்வி. சம்பந்தர் இரஞ்சிதமலர் மற்றும் திருமதி. சுவேந்திரன் லோகேஸ்வரி ஆசிரியர் இவர்களது அர்ப்பணிப்புக்கு நான் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன். எனக்கு பயிற்றுவிப்பாளராகச் செயற்பட்ட அமரர் றோகான் ராஜசிங்கம் அவர்களையும் வணங்குகின்றேன்.

திருமதி தனவதி பாலசுப்பிரமணியம் (பாலா ரீச்சர்) அவர்கள் உடற்கல்வி ஆசிரியராக 1990 ஆண்டு வரை கடமையாற்றியவர். நாம் 5 ஆம் ஆண்டில் கல்விகற்கும் காலப்பகுதியில் உடற்பயிற்சி போட்டிக்கு எம்மை திறம்பட பயிற்றுவித்து மல்லாகம் பழம் பிள்ளையார் கோயில் முன்றலில் நடைபெற்ற உடற்பயிற்சி போட்டிக்கு அழைத்துச் சென்றார். நாம் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டோம். பிற விளையாட்டுக்களையும் ஆர்வத்துடனும் அர்ப்பணிப்புடனும் பயிற்றுவித்தார். வலைப்பந்தாட்டத்தினை ஆரம்ப காலங்களில் பயிற்றுவித்தவர் ஆவார். அவரது தன்னலமற்ற சேவைக்கு வணங்குகின்றேன்.

பாடசாலை இடம் பெயர்ந்த காலகட்டங்களே எமது பெரும் பகுதியான பள்ளிக் காலம் ஆகும். அப்போது சீரமைக்கப்பட்ட மைதானங்களோ விளையாட்டு உபகரணங்களோ இல்லாத காலம் ஆனால் எல்லோர் மனதிலும் ஓர் இலக்கான துடிப்பாக வெற்றிகள் பல பெற்றிட வேண்டும் என்பது இலக்காக இருந்தது அவையே எமக்கு மன துணிவையும் போராடியே வெற்றிகளை பெறவேண்டும் என்ற எண்ணத்தையும் தந்தது.

அமரத்துவம் அடைந்தவர்கள் தற்காலத்திலும் வாழுகின்றார்கள் என்பதற்கு அமரர் கதிர்காமத்தம்பி நாகராஜா மற்றும் அமரர் றோகான் இராஜசிங்கம் அண்ணா அவர்கள் ஆற்றிய அர்ப்பணிப்பான சேவைகளும் தொண்டுகளும் இன்றும் அவர்களை நினைவு கூர்ந்து கொண்டே இருக்கின்றது. அவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வகையில் அமரர் கதிர்காமத்தம்பி நாகராஜா அவர்கள் வலைப்பந்தாட்டத்திற்காக ஆற்றிய பங்கு எண்ணற்றவை. நாம் வெற்றிகள் பல குவிக்க வேண்டும் என்ற எண்ணம் உடையவர். வெற்றியை பெறுவதற்கு என்ன தடைகளாக உள்ளன என தேடுபவர். இவரது இந்த வலுவான எண்ணத்தால் தான் நாம் யாழ்மாவட்டத்தில் முக்கிய வலைப்பந்தாட்ட அணியாக மிளிர காரணமாகியது.

அக் காலத்தில் பாடசாலையிடமும் போதிய வசதி வாய்ப்புக்கள் இருந்ததில்லை. நாமும் ஒவ்வொரு இடமாக இடம்பெயர்ந்து வாழந்து கொண்ட காலம் ஒரு முறை வலைப்பந்தாட்ட போட்டிக்கு செல்லும் போது பாரிய குறைபாடாக இருந்தது வலைப் பந்தாட்டத்திற்குரிய சீருடை. ஏனெனில் நேர்த்தியான சீருடையில் மற்ற அணிகள் களம் இறங்கும் போது நாம் சாதாரண உடையில் களம் இறங்கி விளையாடும் போது மனதளவில் பாதிப்படைந்துள்ளோம். இக்குறையை அதிபரிடம் முறையிட்டதும் அடுத்த போட்டிக்கு சீருடையைப் பெற்றுத் தந்தார்.

அடுத்ததாக பாடசாலையில் சுற்றுலா ஒன்றிற்கு ஒழுங்குபடுத்தி திகதியும் அறிவிக்கப்பட்டது. அன்றைய தினம் எமக்கும் யூனியன் கல்லூரி அணியினருக்கும் போட்டி நடைபெற தீர்மானிக் கப்பட்டது. நாம் அதிபரிடம் முறையிட்டோம் சேர் நாம் என்ன செய்ய நாமும் சுற்றுலாவுக்கு வரவேண்டும் என கேட்டோம். அடுத்த நிமிடமே அந்த சுற்றுலா பயணத்தை இன்னோரு திகதிக்கு மாற்றியது மட்டுமல்லாது வலைப்பந்தாட்ட போட்டி நடை பெறும் இடமான இராமநாதன் கல்லூரிக்கு அனைத்து மாணவர்களையும் போட்டி நடை பெறும் இடத்திற்கு அனுப்பி எமக்கு உற்சாத்தை அளித்தார். அதுமட்டுமன்றி மாணவர்களின் கரசோசங்களின் மத்தியல் நாம் சிறப்பாக விளையாடி வெற்றியும் கண்டோம். இவ் நிகழ்வு இன்றும் என் மனதில் பசுமையான நினைவாகவே உள்ளது.

எமக்கும் உடுவில் மகளிர் கல்லூரி அணிக்கும் இடையில் தான் இறுதிச் சுற்றுக்கான போட்டி நடைபெறும். நாம் வலைப்பந்தாட்டத்தில் சிறந்த வீரர்களாக இருந்தாலும் உடுவில் அணியைக் கண்டதும் எமக்கு மனதளவில் ஒருவித பின்னடைவை எதிர்கொள்வோம் ஏனெனில் நாம் போட்டிக்காக சைக்கிளில் யாழ்ப்பாணம் வேம்படி மகளிர் கல்லூரிக்கு செல்வோம். ஆனால் உடுவில் மகளிர் கல்லூரி அணி பாடசாலைக்குரிய வானில் வந்து இறங்குவார்கள் அவர்களது வலைப் பந்தாட்ட சீருடைகளும் மிக அழகானவையாக இருக்கும் இவற்றை பார்த்த உடனே எமக்கு மனதளவில் சிறு தளர்வு நிலையை உணர்ந்துள்ளோம். ஏன் இவற்றைக் குறிப்பிடுகின்றேன் ன்றால் நாம் மனதளவிலும் பாதிப்படைந்திருக்கின்றோம். ஆனாலும் எமது பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் காட்டும் அக்கறை மற்றும் அன்பினால் அப்பாதிப்புக்கள் பெரிதாக தோன்றவில்லை.

அடுத்ததாக வலைப்பந்தாட்ட அணி மிளர பெரும் அர்பணிப்புடன் செயற்பட்ட சம்பந்தர் இரஞ்சிதமலர் ஆசிரியர் அவர்கள். இவ் ஆசிரியர் என்றும் என் மனதில் திகழ்கின்றார். பாடசாலை இடம் பெயர்ந்து அருநோதயாக் கல்லூரியில் இயங்கிக் கொண்டிருந்தது. அப்போது 15 வயதிற்கான ஒரு போட்டி ஒழுங்குபடுத்தப்பட்டிருந்தது. அவ்வேளை வலைப் பந்தாட்ட குழவிற்கான தலைவர் தீர்மானிக்கப்படவில்லை. அதிபரும் சம்பந்தன் ஆசிரியரும் சொன்னார்கள் என் பெயரை என்னால் நம்பவே முடியவில்லை. அந்நாளில் இருந்து நான் அணியின் தலைவியாக செயற்ப்பட்டேன். சம்பந்தர் இரஞ்சிதமலர் ஆசிரியர் எமக்கு வெற்றிகள் றெ பெரிதும் உறுதுணையாக நின் றவர் சீருடைகளை அவரே எமக்கு தைத்து தருவார். வெற்றி பெற்றாலும் சரி தோல்வி அடைந்தாலும் சரி எமக்கு குளிர் கழி மற்றும் சிற்றுாண்டிகள் என வேண்டித்தருவார். இன்றும் அவரின் செயற்பாடுகளை நினைவு கூறும் போது இன்பமான உணர்வுகளாகவே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நேரத்தில் அன்று எமது அணியின் வீராங்கனைகளாக பாமினி, விஜியா, சுதாஜினி, கோகிலாம்பாள், லதா, மேனகா, கலைவாணி, ஜெயந்தி, சுதர்ஜினி சில காலம் சுமங்கலியுடன் உமாவும் மற்றும் ஒன்றுவிட்ட வருடத்திற்கு விமலினி அக்கா எம்முடன் இணைவார் அப்போது அவரே அணியின் தலைவியாக இருப்பார். நாம் இடம்பெயர்ந்து தூரஇடங்களில் வசித் திருந்தாலும் அனேகமாக ஒவ்வொரு நாளும் பாடசாலை தொடங்கும் முன் காலை வேளையில் பயிற்சியை ஆர்வத்துடன் பெற்றுக் கொள்வோம் . குழ ஒற்றுமை எம்மிடையே வலுவாக இருந்தது. இதனால் பயிற்சிகளை நேர்த்தியாக பெற்றுக் கொள்ள உந்துதலாக அமைந்தது. வலைப்பந்தாட்டத்தில் 07 பேர் கொண்ட குழ ஆனால் எம்முடன் விம்மியக்கா இணையும் போது 03 பேருடனே பந்தின் பாய்சல் இருக்கும் மையத்தோன் ஆக பாமினி கோல் காப்பாளர் விம்மியக்கா பேத்துசெய்வோன் நானும்மாக பந்தினை நகர்துவோம். மிகவும் அற்புதமாக இருக்கும். இக்காலகட்டங்களில் நாம் பெற்ற வெற்றிகள் எண்ணற்றவை. எந்த முரண்பாடுகளும் இன்றி ஒற்றுமையாக ஒரு தலைமைத்துவத்தின் கீழ் செயற்பட்டு வெற்றிகளை குவித்த அணியினரே எமது அணி.

தன்னலமற்ற பயிற்றுவிப்பாளராக தொண்டாற்றிய அமரர் றொகான் இராஜசிங்கம் அண்ணா அவர்களின் சேவை அற்புதமானவை. எந்நேரமும் புன்முறுவலுடன் இருப்பவர். வலைப்பந்தாட்டத்தில் நிறைய விதமான உத்திகளை நேரம் பாராது பயிற்றுவித்துள்ளார். நாம் விடும் பிழைகளையும் புன்னகையுடன் திருத்திவிடுவார். ஓர் முறை நான் பள்ளிக் காலம் நிறைவடைந்த பின் மருதனார்மடத்தில் இராமநாதன் கல்லூரியின் மைதானத்தில் கோட்ட மட்ட வலைப்பந்தாட்ட போட்டிக்கு நடுவராக செயற்பட்டேன். அப்போது உயரம் குறைந்தவரும் உயரமானவருமாக இருவரும் ஒரே நேரத்தில் பந்தினை பற்றிக் கொண்டிருந்தனர். அத் தருணத்தில் நாம்தான் தீர்ப்பு வழங்க வேண்டும். அப்போ நான் பந்தினை உயரமாகவே மேல் நோக்கி வீசிய போது யார் பிடிக்கின்றார்களோ அவர்களுக்கு தான் பந்து அது தான் இறுதி தீர்மானம். இதனை அவதானித்துக் கொண்டிருந்த றொகான்அண்ணா போட்டி நிறைவடைந்த பின் என்னை அழைத்து பந்தினை மேல் நோக்கி வீசும்போது சமமான அளவு உயரத்துடனே வீசவேண்டும் என புன்முறுவலுடன் எனது தவறினை திருத்தினார். இவ்வாறான மாமனிதர்களால் பல சிரமங்கள் தடைகளுக்கு அப்பால் உருவாக்கப்பட்டதே அக் கால மகாஜனாவின் வலைப்பந்தாட்ட அணி ஆகும்.

மகாஜனாவின் இளம் தலைமுறையினரும் அனுவப்பாடங்களை ஒரு பாடமாகக் கொண்டு வலைப் பந்தாட்டம் எவ்வளவு முக்கியமான பெண்களுக்கென உருவான தனித்துவமான விளையாட்டு என்பதை உணர்ந்து செயற்படுவார்கள் என்ற நம்பிக்கையுடன் இளம் தலைமுறையினரும் வலைப்பந்தாட்டத்தில் பல வெற்றிகளை குவித்திடவேண்டும் என வாழ்த்துகின்றேன் அத்துடன் எனக்கு இவ் ஆக்கத்தை எழுதுவதற்கு வாய்ப்பையும் ஊக்கத்தையும் அளித்த எமது பிரிவு நண்பர்கள் அனைவருக்கும் நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன்.

"யாம் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுத்துறை

திரு. சின்னையா பாஸ்கரன்

சின்னையா சுபாஸ்கரன் ஆகிய நான் 1982–1995 வரையான காலப்பகுதியில் இக்கல்லூரியில் கல்வி கற்று இப்பாடசாலையில் மெய்வல்லுநர் விளையாட்டுகளிலும் குறிப்பாக கோலுன்றிப்பாய்தல், காற்ப்பந்தாட்ட நிகழ்ச்சியில் பங்குபற்றியும் கோட்டமட்டப்போட்டியிலும் பங்குபற்றினேன்.

இந்த அனுபவத்தினூடாக எனது தொழில் ரீதியாகவும் கோலுன்றிப்பாய்தல் பயிற்றுவிப்பாளராக எனது நாட்டத்தினை செலுத்தினேன். ஆரம்பத்தில் தொழில் நிமிர்த்தம் அருணோதயாக் கல்லூரியில் கடமையாற்றி தற்போது (2013 இலிருந்து இன்றுவரை ) மகாஜனாக்கல்லூரி ஆசிரியராகவும் மெய்வல்லுநர் பயிற்றுவிப்பாளராகவும் கடமையாற்றி வருகின்றேன்.

எமது பாடசாலை நீண்டகாலமாக வடமாகணத்தில் மெய்வல்லுநர் நிகழ்வில் சிறந்த பெறுபேறுகளின் ஊடாக கால் தடம் பதித்து வருகிறது. 90களில் கோட்ட மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான போட்டிகளில் காலம்காலமாக இளவாலை புனித ஹென்றி கல்லூரியுடன் கடும் போட்டி நிலவியது. இந்த நேரத்தில் கோலூன்றிப்பாய்தல் நிகழ்வில் கலந்து கொண்டு எமது பாடசாலை முன்னிலை பெறுவதற்கு நான் பங்களிப்பு செய்தமையினை இட்டு பெரும் மகிழ்ச்சியடைகிறேன்.

அந்த கால அனுபவம் இன்று எனது பாடசாலையின் வெற்றிக்கும் எனது தனிப்பட்ட ரீதியான வளர்ச்சிக்கு மிகவும் உறுதுணை புரிகின்றது. 1993 மாவட்டமட்ட உதைபந்தாட்ட அரையிறுதிப் போட்டியில் ஹாட்லிக்கல்லூரிமோதி இறுதிப் போட்டிக்கு முன்னேற முடியவில்லை. 3ஆம் இடத்துக்கான போட்டியில் ஸ்கந்தவரோதயக்கல்லூரி மோதி 3ஆம் இடத்தினைப் பெற்றுக் கொண்டது.

இடம்பெயர்ந்த காலப்பகுதியில் இணுவில் கந்தசாமி கோயிலுக்கு முன்பாக மழை காலங்களில் நீர் நிரம்பி இருக்கும் மைதானத்தில் விளையாட்டுப்போட்டிகளினை நடாத்தி மாணவர்களின் திறன் வளர்க்கப்பட்டது.

மழைக் காலங்களில் இணுவில் இந்துக்கல்லூரி மைதானத்தையும், பல்கலைக்கழக மைதானத்தையும், கல்லாக்கட்டுவான்மைதானத்தையும் பயன்படுத்தி எமது ஆற்றல்களை வளர்த்துக் கொண்டோம். வெவ்வேறு மைதானத்தில் பயிற்சி செய்தாலும் ஆற்றல்களை வளர்ப்பதில் பாடசாலையும் மகாஜனாக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர் க.நாகராஜா மிகுந்த அக்கறையோடு செயற்பட்டதை எமது வாழ்நாளில் மறக்கமுடியாது.

மகாஜனக்கல்லூரி அண்மைக்கால விளையாட்டுத்துறை வளர்ச்சியில் தேசிய ரீதியில் பெற்றுக் கொண்ட சாதனைகள் தொடர்பான விபரங்கள் பின்வருமாறு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மெய்வல்லுனர்

| வீரரின் பெயர் | ஆண்டு | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| K.பார்தீபன் | 2009 | Un- 21 | தட்டு எறிதல் | 2 | க.மயில்வாகனம் |
| S.மோகுநாத் | 2010 | Un- 21 | கோலூன்றிப் பாய்தல் | 1 | றமணன் |
| M.டிலக்சன் | 2012 | Un- 21 | உயரம் பாய்தல் | 3 | சி.கமலமோகன் |

## தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2014
## அகில இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகள் 2014

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| J.அனித்தா | Un- 19 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 3.32m தேசிய சாதனையை சமப்படுத்தியமை | சி.சுபாஸ்கரன் |
| P.ரிசோத் | Un- 21 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 4.10m | சி.சுபாஸ்கரன் |
| S.டிலக்சன் | Un- 17 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 3.90m | சி.சுபாஸ்கரன் |
| S.டிலானி | Un- 17 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 2.50m | சி.சுபாஸ்கரன் |
| S.டன்சிகா | Un- 21 | கோலூன்றிப் பாய்தல் | 3 | 2.65m | சி.சுபாஸ்கரன் |
| S.டினேஸ் | Un- 17 | கோலூன்றிப் பாய்தல் | வர்ணச் சான்றிதழ் | 3.10m | சி.சுபாஸ்கரன் |
| J.ஜெனந்தன் | Un- 21 | கோலூன்றிப் பாய்தல் | வர்ணச் சான்றிதழ் | 3.80m | சி.சுபாஸ்கரன் |
| S.சுயுசாந் | Un- 17 | தட்டு எறிதல் | வர்ணச் சான்றிதழ் | 45m | சி.சுபாஸ்கரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 37வது கனிஸ்ட தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2014

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| J.அனித்தா | Un- 18 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 3.00m புதிய சாதனை | சி.சுபாஸ்கரன் |
| A.அன்ரனி பிரசாந் | Un- 20 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 4.10m | சி.சுபாஸ்கரன் |
| P.ரிசோத் | Un- 20 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 4.10m | சி.சுபாஸ்கரன் |
| S.டினுசன் | Un- 20 | கோலூன்றிப் பாய்தல | 3 | 3.80m | சி.சுபாஸ்கரன் |

## 84வது சேர் ஜோன்ராபெற் தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2014

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| J.அனித்தா | Un- 18 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 3.00m | சி.சுபாஸ்கரன் |
| P.ரிசோத் | Un- 20 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 4.10m | சி.சுபாஸ்கரன் |

## தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2015
## அகில இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகள் - 2015

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| P.ரிசோத் | Un- 21 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 4.00 m | சி.சுபாஸ்கரன் |
| S.டிலக்சன் | Un- 17 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 4.42m புதிய சாதனை | சி.சுபாஸ்கரன் |
| J.அனித்தா | Un- 19 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 3.20m | சி.சுபாஸ்கரன் |
| C.ஹெரீனா | Un- 15 | உயரம் பாய்தல் | 3 | 1.49m | சி.கமலமோகன் |
| R.அபர்னா | Un- 19 | கோலூன்றிப் பாய்தல் | வர்ணச் சான்றிதழ் | 2.60m | சி.சுபாஸ்கரன் |
| S.கபில்சன் | Un- 17 | கோலூன்றிப் பாய்தல் | வர்ணச் சான்றிதழ் | 3.80m | சி.சுபாஸ்கரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 38 வது கனிஸ்ட தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2015

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| S.டிலக்சன் | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 4.20 m | சி.சுபாஸ்கரன் |
| J.அனித்தா | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 3.00m | சி.சுபாஸ்கரன் |
| S.டினேஸ் | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 3.70m | சி.சுபாஸ்கரன் |
| T.சியானஸ் | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 3 | 3.80m | சி.சுபாஸ்கரன் |

## 85 வது சேர் ஜோன்ராபெற் தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2015

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| J.அனித்தா | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 3.20 m | சி.சுபாஸ்கரன் |
| S.டிலானி | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 2.70m | சி.சுபாஸ்கரன் |
| K.கலைமகள் | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 3 | 2.40m | சி.சுபாஸ்கரன் |

## தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2016
## அகில இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகள் - 2016

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| C.ஹெரீனா | Un-17 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 2.70 m | சி.சுபாஸ்கரன் |
| C.ஹெரீனா | Un-17 | உயரம் பாய்தல் | 3 | 1.50m | சி.கமலமோகன் |
| J.அனித்தா | Un-21 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 3.20m | சி.சுபாஸ்கரன் |
| J.அனித்தா | Un-21 | ஈட்டி எறிதல் | 3 | 30.99m | மயில்வாகனம் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| J.அனித்தா | Un- 21 | 100m சட்ட வேலி | 3 | 16.4sec | சி.சுகிர்தன் |
| S.டிலானி | Un- 19 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 2.80m | சி.சுபாஸ்கரன் |
| S.டிலக்சன் | Un- 19 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 4.30m | சி.சுபாஸ்கரன் |

## 39வது கனிஸ்ட தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2016

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| S.டிலக்சன் | Un- 20 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 4.30 m | சி.சுபாஸ்கரன் |
| J.அனித்தா | Un- 20 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 3.00m | சி.சுபாஸ்கரன் |
| T.சியானஸ் | Un- 18 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 3.80m | சி.சுபாஸ்கரன் |

## 86வது சேர் ஜோன்ராபெற் தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2016

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| J.அனித்தா | Un- 20 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 3.35 m புதிய தேசிய சாதனை | சி.சுபாஸ்கரன் |
| S.கபில்சன் | Un- 18 | கோலூன்றிப் பாய்தல் | 3 | 3.70m | சி.சுபாஸ்கரன் |
| C.ஹெரீனா | Un- 18 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 3.80m | சி.சுபாஸ்கரன் |
| C.ஹெரீனா | Un- 18 | உயரம் பாய்தல் | 3 | 1.45m | சி.கமலமோகன் |
| S.டிலானி | Un- 18 | கோலூன்றிப் பாய்தல் | 3 | 2.70m | சி.சுபாஸ்கரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2017
## அகில இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகள் - 2017

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| C.ஹெரீனா | Un-17 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 3.10 m | சி.சுபாஸ்கரன் |
| C.ஹெரீனா | Un-17 | உயரம் பாய்தல் | 1 | 1.58m | சி.கமலமோகன் |
| S.டிலக்சன் | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 4.15m | சி.சுபாஸ்கரன் |
| K.கேதுசன் | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 3 | 3.90m | சி.சுபாஸ்கரன் |
| S.டினேஸ் | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | வர்ணச் சான்றிதழ் | 3.75m | சி.சுபாஸ்கரன் |

## 40வது கனிஸ்ட தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2017

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| C.ஹெரீனா | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 3.01 m புதிய சாதனை | சி.சுபாஸ்கரன் |
| C.ஹெரீனா | Un-18 | உயரம் பாய்தல் | 3 | 1.58m | சி.கமலமோகன் |
| S.கபில்சன் | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 4.10m | சி.சுபாஸ்கரன் |
| S.டிலக்சன் | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 4.20m | சி.சுபாஸ்கரன் |
| K.கேதுசன் | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 3 | 3.90m | சி.சுபாஸ்கரன் |

## 87வது சேர் ஜோன்ராபெற் தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2017

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| S.டிலக்சன் | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 4.20 m | சி.சுபாஸ்கரன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2018
## அகில இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகள் - 2018

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| S.ஜாம்சன் | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 3.80 m | சி.சுபாஸ்கரன் |
| C.ஹெரீனா | Un-18 | உயரம் பாய்தல் | 2 | 1.53m | சி.கமலமோகன் |
| K.கேதுசன் | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | வர்ணச் சான்றிதழ் | 3.80m | சி.சுபாஸ்கரன் |
| K.ரோஜினி | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | வர்ணச் சான்றிதழ் | 2.70m | சி.சுபாஸ்கரன் |

## 41வது கனிஸ்ட தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2018

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| C.ஹெரீனா | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 2.90 m | சி.சுபாஸ்கரன் |
| S.கபில்சன் | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 4.10m | சி.சுபாஸ்கரன் |

## 87வது சேர் ஜோன்ராபெற் தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2018

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | 4.20 m அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| S.சுகிகேரதன் | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 4.00 m | சி.சுபாஸ்கரன் |
| S.ஜாம்சன் | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 4.00 m | சி.சுபாஸ்கரன் |
| K.கேதுசன் | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 4.00 m | சி.சுபாஸ்கரன் |
| C.ஹெரீனா | Un-18 | உயரம் பாய்தல் | 2 | 1.54 m | சி.கமலமோகன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | 4.20 m அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| C.ஹெரீனா | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 2.90 m | சி.சுபாஸ்கரன் |
| S.கபில்சன் | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 4.00 m | சி.சுபாஸ்கரன் |
| K.ரோஜினி | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 3 | 2.70 m | சி.சுபாஸ்கரன் |
| A.ஜினோஜன் | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 3 | 3.60 m | சி.சுபாஸ்கரன் |

## தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2019
## அகில இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் போட்டிகள் - 2019

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| C.தீபீகா | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 3.25 m புதிய சாதனை | சி.சுபாஸ்கரன் |
| S.சுகிகேரதன் | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 4.40m | சி.சுபாஸ்கரன் |
| S.சுவர்ணா | Un-16 | உயரம் பாய்தல் | 3 | 1.49m | சி.சுபாஸ்கரன் |
| S.ஜாம்சன் | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | வர்ணச் சான்றிதழ் | 4.00m | சி.சுபாஸ்கரன் |
| C.ஹெரீனா | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | வர்ணச் சான்றிதழ் | 2.80m | சி.சுபாஸ்கரன் |

## 42வது கனிஸ்ட தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2019

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| C.தீபிகா | Un-18 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 2.80 m | சி.சுபாஸ்கரன் |
| S.சுகிகேரதன் | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 4.20m | சி.சுபாஸ்கரன் |
| C.ஹெரீனா | Un-20 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 3.10m | சி.சுபாஸ்கரன் |
| C.ஹெரீனா | Un-20 | உயரம் பாய்தல் | 3 | 1.50m | சி.கமலமோகன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 88வது சேர் ஜோன்ராபெற் தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2019

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | 4.20 m அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| K.கேதுசன் | Un- 20 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 3.90 m | சி.சுபாஸ்கரன் |
| C.தீபிகா | Un- 18 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 3.11 m | சி.சுபாஸ்கரன் |
| I.டிலக்சன் | Un- 16 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 3.20 m | சி.சுபாஸ்கரன் |
| V.யதுஸ்ரிகா | Un- 18 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 2.70 m | சி.சுபாஸ்கரன் |
| S.தேனுசன் | Un- 16 | கோலூன்றிப் பாய்தல் | 3 | 2.60 m | சி.சுபாஸ்கரன் |

## 42வது கனிஸ்ட தேசிய மட்டத்திலான மெய்வல்லுநர் போட்டிகள் - 2022

| வீரரின் பெயர் | வயதுப் பிரிவு | பங்குபற்றிய நிகழ்ச்சி | இடம் | அடைவு மட்டம் | பயிற்றுநர் |
|---|---|---|---|---|---|
| V.யதுஸ்ரிகா | Un- 20 | கோலூன்றிப் பாய்தல் | 1 | 3.10 m | சி.சுபாஸ்கரன் |
| C.தீபிகா | Un- 20 | கோலூன்றிப் பாய்தல் | 2 | 3.10m | சி.சுபாஸ்கரன் |
| S.சுவர்ணா | Un- 18 | கோலூன்றிப் பாய்தல் | 3 | 2.70m | சி.சுபாஸ்கரன் |
| C.துசாந்தன் | Un- 18 | கோலூன்றிப் பாய்தல் | 3 | 3.80m | சி.சுபாஸ்கரன் |

சின்னையா சுபாஸ்கரன் ஆகிய நான் மகாஜனாக் கல்லூரியின் வரலாற்றின் 2013 இருந்து 2022 வரை கல்லூரியின் மெய்வல்லுநர் விளையாட்டுத்துறை வளர்ச்சிக்கு கணிசமான பங்களிப்பை வழங்கியுள்ளேன். இதுவரை தேசிய ரீதியில் தங்கப்பதக்கங்களையும், வெள்ளிப்பதக்கங்களையும், வெண்கலப்பதங்ககங்களையும் பெற்றுள்ளேன். 2015ம் ஆண்டு மகாஜனாக் கல்லூரியின் கோலூன்றிப் பாய்தல் வீராங்கனையான ஜெகதீஸ்வரன் அனித்தா இலங்கை சாதனையை முறியடித்து 2018ம் ஆண்டு வரைக்கும் 3 ஆண்டுகள் தனது சாதனையை புதுப்பித்துக் கொண்டிருந்தார். மேலும் 2017ம் ஆண்டு தாய்லாந்தில் நடைபெற்ற திறந்த பிரிவு மெய்வல்லுநர் அணிக்கு சி.சுபாஸ்கரன் ஆகிய நான் பயிற்றுனராக சென்றிருந்தேன் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் மகாஜனாக்கல்லூரியின் மெய்வல்லுநர் அணி தொடர்ச்சியாக மாகாணமட்டத்தில் 6 வருடங்களாக முன்னிலையில் திகழ்ந்து கொண்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி அமைச்சு உதைபந்தாட்டம் - 2014

| வயதுப் பிரிவு | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|---|---|
| 15 ஆண்கள் | 3 | | | | | சி.சாந்தகுமார் |
| 17 ஆண்கள | 2 | | | | | சி.சாந்தகுமார் |
| 19 ஆண்கள | 2 | | | | | து.மோகனதாஸ் |
| 19 பெண்கள் | | 3 | 1 | 1 | | சி.சாந்தகுமார் |

## கல்வி அமைச்சு உதைபந்தாட்டம் - 2015

| வயதுப் பிரிவு | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|---|---|
| 15 ஆண்கள் | | | | | | சி.சாந்தகுமார் |
| 17 ஆண்கள | 1 | 2 | | | | இ.இராஜராஜன் |
| 19 ஆண்கள | 2 | | | | | து.மோகனதாஸ் |
| 19 பெண்கள் | | | 1 | 1 | | சி.சாந்தகுமார் |

## கல்வி அமைச்சு உதைபந்தாட்டம் - 2016

| வயதுப் பிரிவு | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|---|---|
| 15 ஆண்கள் | | | | | | சி.சாந்தகுமார் |
| 17 ஆண்கள | | | | | | சி.சாந்தகுமார் |
| 19 ஆண்கள | | | | | | து.மோகனதாஸ் |
| 19 பெண்கள் | | 1 | 1 | 1 | | சி.சாந்தகுமார் |

## கல்வி அமைச்சு உதைபந்தாட்டம் - 2017

| வயதுப் பிரிவு | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|---|---|
| 16 ஆண்கள் | | 3 | | | | சி.சாந்தகுமார் |
| 18 ஆண்கள் | | 2 | | | | சி.சாந்தகுமார் |
| 20 ஆண்கள் | | 2 | | | | து.மோகனதாஸ் |
| 20 பெண்கள் | | 1 | | 1 | 3 | ச.செந்தூரன்<br>தி.புருசோத்தமன்<br>ச.ஜாபாகர் |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி அமைச்சு உதைபந்தாட்டம் - 2018

| வயதுப் பிரிவு | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவி-ப்பாளர் |
|---|---|---|---|---|---|---|
| 16 ஆண்கள் | | | | | | வே.இராஜேந்திரன் |
| 18 ஆண்கள் | | 3 | | | | சி.சாந்தகுமார்<br>க.வசந்தரூபன் |
| 20 ஆண்கள் | | 2 | | 1 | 1 | து.மோகனதாஸ்<br>ச.செந்தூரன்<br>தி.புருசோத்தமன்<br>ச.ஜாபாகர் |
| 20 பெண்கள் | | 1 | | 1 | | |

## கல்வி அமைச்சு உதைபந்தாட்டம் - 2019

| வயதுப் பிரிவு | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவி-ப்பாளர் |
|---|---|---|---|---|---|---|
| 20 ஆண்கள் | | | | 1 | 1 | சி.சாந்தகுமார் |

## இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனப் போட்டி - 2014

| வயதுப் பிரிவு | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|
| 16 ஆண்கள் | 1 | | 3 | சி.சாந்தகுமார் |

## இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனப் போட்டி - 2015

| வயதுப் பிரிவு | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|
| 15 ஆண்கள் | 3 | | | ச.செந்தூரன் |
| 15 பெண்கள் | 1 | | 1 | சி.சாந்தகுமார் |

## இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனப் போட்டி - 2016

| வயதுப் பிரிவு | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|
| 15 பெண்கள் | 1 | | 2 | சி.சாந்தகுமார்<br>ச.செந்தூரன் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனப் போட்டி - 2017

| வயதுப் பிரிவு | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|
| 12 ஆண்கள் | | | | க.வசந்தரூபன் |
| 14 ஆண்கள் | | | | வே.இராஜேந்திரன் |
| 16 ஆண்கள் | | | | சி.சாந்தகுமார்<br>க.வசந்தரூபன் |
| 18 ஆண்கள் | 1 | | 3 | து.மோகனதாஸ்<br>ச.செந்தூரன் |
| 12 பெண்கள் | 2 | | | ச.செந்தூரன் |
| 14 பெண்கள் | 2 | | 3 | தி.புருசோத்தமன்<br>ச.ஜாபாகர் |
| 16 பெண்கள் | 1 | | 3 | |
| 18 பெண்கள் | | | 1 | |

## இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனப் போட்டி - 2018

| வயதுப் பிரிவு | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|
| 12 ஆண்கள் | | | | ச.செந்தூரன் |
| 14 ஆண்கள் | | | | சி.சாந்தகுமார்<br>க.வசந்தரூபன் |
| 16 ஆண்கள் | | | | |
| 18 ஆண்கள் | | | | |
| 20 ஆண்கள் | | | | து.மோகனதாஸ்<br>ச.செந்தூரன் |
| 12 பெண்கள் | | 1 | | சி.சாந்தகுமார் |
| 14 பெண்கள் | 2 | | | ச.செந்தூரன் |
| 16 பெண்கள் | 1 | | | தி.புருசோத்தமன்<br>ச.ஜாபாகர் |
| 18 பெண்கள் | 1 | | | |

## இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்மேளனப் போட்டி - 2019

| வயதுப் பிரிவு | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|
| 14 பெண்கள் | | | 1 | சி.சாந்தகுமார் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேசியமட்ட உதைபந்தாட்டி அணிகளில் விளையாடிய வீரர்கள்

| வருடம் | வயதுப்பிரிவு | வீரரின் பெயர் | இலங்கை சார்பில் பங்குபற்றிய போட்டிகள் | பயிற்றுனர் |
|---|---|---|---|---|
| 2013 | 14 பெண்கள் | பா.சாஹு | தெற்காசிய உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணம் கொழும்பு | சி.சாந்தகுமார் |
| 2014 | 14 பெண்கள் | பா.சாஹு<br>சு.கௌரி | தெற்காசிய உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணம் கொழும்பு | சி.சாந்தகுமார் |
| | 14 ஆண்கள் | ஞா.கஜானன் | இந்தியா சுற்றுலா உதைபந்தாட்டப் போட்டி டெல்கி | |
| 2015 | 14 ஆண்கள் | ஞா.கஜானன் | ஆசிய உதைபந்தாட்டப் போட்டி கஜகஸ்தான் | சி.சாந்தகுமார் |
| | 14 பெண்கள் | சு.கௌரி (உப-தலைவி)<br>சி.தர்மிகா | தெற்காசிய உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணம் நேபாளம் | |
| 2016 | 15 ஆண்கள் | வி.கஸ்ரோ | ஆசிய உதைபந்தாட்டப் போட்டி - மலேசியா | சி.சாந்தகுமார் |
| 2018 | 16 ஆண்கள் | ர.தனுஜன் | யப்பான் மற்றும் தெற்காசிய (இலங்கை, பூட்டான், நேபாளம்) தேசிய அணிகள் உதைபந்தாட்டப் போட்டி | சி.சாந்தகுமார் |
| | | | தெற்காசிய உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணம் - பூட்டான் | |
| | | | ஆசிய உதைபந்தாட்டப் போட்டி - சவூதிஅரேபியா | |
| 2018 | 14 பெண்கள் | ஜெ.ஜதுன்சிகா | தெற்காசிய உதைபந்தாட்ட வெற்றிக்கிண்ணம் - பூட்டான் | ச.செந்தூரன்<br>ச.புருசோத்தமன் |
| | | | ஆசிய உதைபந்தாட்டப் போட்டி - கொழும்பு | |

## கல்வி அமைச்சு கரப்பந்தாட்டப் போட்டி- 2014

| வயதுப் பிரிவு | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|---|---|
| 15 பெண்கள் | | | | | | சி.தயாளபாலன் |
| 17 பெண்கள் | 1 | 2 | | | | |
| 19 பெண்கள் | 2 | 1 | 3 | 3 | | |
| 19 ஆண்கள் | 1 | 2 | | | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி அமைச்சு கரப்பந்தாட்டப் போட்டி- 2015

| வயதுப் பிரிவு | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|---|---|
| 15 பெண்கள் | 3 | 3 | 2 | | | கலாஜினி |
| 19 பெண்கள் | 1 | 1 | 1 | 1 | | ச.செந்தூரன் சி.தயாளபாலன் |
| 19 ஆண்கள் | 2 | 3 | 3 | | | |

## கல்வி அமைச்சு கரப்பந்தாட்டப் போட்டி- 2016

| வயதுப் பிரிவு | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|---|---|
| 13 பெண்கள் | | 1 | | 1 | | சி.தயாளபாலன் ச.செந்தூரன் |
| 15 பெண்கள் | 2 | 1 | | | | |
| 17 பெண்கள் | 3 | | | | | |
| 19 பெண்கள் | 2 | 2 | | | | |

## கல்வி அமைச்சு கரப்பந்தாட்டப் போட்டி- 2017

| வயதுப் பிரிவு | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|---|---|
| 16 பெண்கள் | | 1 | | 4 | | சி.தயாளபாலன் சி.கமலமோகன் |
| 18 பெண்கள் | | 3 | | | | |
| 20 பெண்கள் | | | | | | |

## கல்வி அமைச்சு கரப்பந்தாட்டப் போட்டி- 2018

| வயதுப் பிரிவு | கோட்டம் | வலயம் | மாவட்டம் | மாகாணம் | தேசியம் | பயிற்றுவிப்பாளர் |
|---|---|---|---|---|---|---|
| 16 பெண்கள் | | 2 | | | | சி.தயாளபாலன் சி.கமலமோகன் |
| 18 பெண்கள் | | 1 | 3 | | | |
| 20 பெண்கள் | | 1 | 3 | | | |

மேலும் மகாஜனாக் கல்லூரியின் உதைபந்தாட்ட ஆண்கள் அணி 40 வருடங்களின் பின்பு 2019ம் ஆண்டு தேசிய மட்டச் சம்பியனாக திகழ்ந்தது. அத்தோடு மகாஜனாக் கல்லூரியின் பெண்கள் உதைபந்தாட்ட அணி அண்மைக்காலமாக சிறப்பான ஒரு இடத்தில் காணப்படுகின்றது. மகாஜனாக் கல்லூரியின் வலைப்பந்தாட்ட அணி படிப் படியாக முன்னேறிக் கொண்டு முன்னேற்ற பாதையில் சென்று கொண்டிருக்கின்றது. இதனைவிட மகாஜனாக் கல்லூரியில் கரப்பந்தாட்ட அணி, மேசைப்பந்தாட்ட அணி, பளுதூக்கல் அணி, ஹொக்கி அணி, சதுரங்க அணி போன்ற குழு விளையாட்டுக்களும் மகாஜனாக் கல்லூரியின் திறம்படச் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றது. இவையாவற்றையும் தொகுத்து நோக்குமிடத்து மகாஜனாக் கல்லூரியில் கல்வி பயிலும் சகல மாணவர்களும் சகல விளையாட்டுத்துறைகளிலும் ஈடுபடுவதன் ஊடாகவும் இணைபாடவிதான செயற்பாடுகளில் பங்குபற்றுவதனூடாகவும் சிறந்த ஒரு ஆளுமையுள்ள மனிதனாக வெளியேறுகிறான்.இவர்களே தாய்நாட்டிலும் சரி புலம் பெயர் நாடுகளிலும் மகாஜனன் என்று தலை நிமிர்ந்து சொல்லும் அளவிற்கு காணப்படுகின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நானும் ஒரு மகாஜனன்

சந்திரராஜா ஜீவாகரன்

சமூகத்தில் ஒவ்வொரு மனிதனும் முழு வளர்ச்சி பெற்றுச் சிறந்த உயர்நிலைப்பட சமூகபொருத்தப்பாட்டுடன் வாழ்கை நடத்த அவனுக்கு வழங்கப்படுவது கல்வியாகும். கல்வி எனப்படுவது குழந்தையினது உடல், உள்ளம், ஆன்மா ஆகியவற்றின் சிறந்த பண்புகளை வெளிக்கொணரும் செயல்முறையாகும் என மகாத்மா காந்தி விளக்கம் தந்தார் .

சமுதாயத்தில் வாழ்வாங்கு வாழத்தக்க மனப்பாங்கை கல்வி அழிக்க வேண்டும். அத்தகைய கல்வியை எமக்குத் தந்த களமே மகாஜனா.

பல இன்னல்களைக்கண்ட மகாஜனா இன்று அதிபரின் வழிகாட்டலுடன் ஆசிரியர்களின் ஒத்துழைப்புடன் சைவமும் தமிழும் மிளிர தலைநிமிந்து நிற்பது கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். மண்ணில் நல்ல வண்ணம் வாழ்வதற்குரிய கல்வியை வழங்கி வரும் எங்கள் மகாஜனாவுக்கு உச்ச அளவிலான உதவியை வழங்குதல் மகாஜனன் ஒவ்வொருவரினதும் தலையாய கடமையாகும். அந்த வகையில் நானும் ஒரு மகாஜனன் என்று சொல்வதில் பெருமிதம் கொள்கின்றேன்.

எனது பெயர் ஜீவாகரன் எனது அம்மா அப்பா பெயர் உருக்குமணி சந்திரராஜா. எனது அம்மாவும் இக்கலூரியில் பழைய மாணவரே. நான் 4ம் வகுப்பில் இருந்து 10 ம் வகுப்பு வரை மகாஜனா கல்லுரியில்கல்வி கற்றேன். நான் கல்வி கற்கும் வரை பேச்சுப்போட்டிகள் , விளையாட்டு போட்டிகள் போன்றவற்றில் பங்கு பற்றி இருக்கின்றேன். அதைவிட இல்ல விளையாட்டு போட்டிகளும் நடைபெறும்.


ஐந்து இல்லங்கள் இருக்கின்றன. சின்னையா, சின்னப்பா, துரையப்பா, அருளம்பலம் , ஜெயரட்ணம் ஆகியவை ஆகும். அதில் நான் சின்னப்பா இல்லத்தில் தான் விளையாடினேன். அதில் பல பரிசில்களையும் வென்றேன். அந்த வகையில் அது எனக்கு ஊக்கத்தையும் பெருமையும் தேடித்தந்தது.

இக்கலூரி ஆரம்ப தரத்தில் இருந்து உயர்தரம்வரையும் இருக்கின்றது. இங்கே பல்கலைக்கழகம் போவதற்கு வைத்தியர் ,பொறியியலாளர், கணக்காளர், கணனி துறையினர் எனப் பலர் தெரிவானார்கள். அதனால் யாழ்ப்பாண மட்டத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற பாடசாலையாக திகழ்கின்றது . நான் கல்விகற்கும்போது எனது அதிபராக திரு . நாகராஜா இருந்தார். வகுப்பாசிரியராக திருமதி பொன்னுத்துரை இருந்தார். எங்கள் பாடசாலையை பற்றி சொல்லப்போனால் எனக்கு பெருமிதமாக இருக்கின்றது.

நான் படித்த பாடசாலையை பற்றி எழுத எனக்கு வாய்ப்பு தந்ததற்கு நன்றியை தெரிவித்துக்கொண்டு நான் மகாஜனன் என்று பெருமைப்படுவதில் பேருவகை கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருதனார்மட மகாஜனா ஓர் அனுபவப் பகிர்வு

வேலாயுதபிள்ளை செவ்வேட்குமரன்

மகாஜனா நாம் தவழ்ந்த வீடு அன்னைமடி, அத்தாயின் அன்பில் அரவணைப்பில் கண்டிப்பில் வழிகாட்டலில் நாம் வளர்ந்தோம். சின்னச்சின்ன குறும்புகள் பல நாம் செய்ததுண்டு. சிலவேளை அன்னையிடத்தில் கோபப்பட்டதும் உண்டு. ஆனால் இன்று ஒவ்வொரு ஏதோ ஒரு துறையில் ஆளுமை உள்ளவர்களாக தலைமைத்துவமிக்கவர்களாக பண்பும் ஒழுக்கமும் நிறைந்தவர்களாக இருப்பதற்கு மகாஜனா அன்னையின் வழிப்படுத்தலே காரணம். 45 வயதில் எம்மைப்பார்க்கின்றோம் எங்களிடத்தில் மற்றவர்களைவிட ஏதோ ஒரு சிறப்பு இருக்கிறது. அது ஒழுக்கமாக இருக்கலாம், பண்பாடாக இருக்கலாம், அறிவாக இருக்கலாம், ஆளுமையாக இருக்கலாம், தலைமைத்துவமாக இருக்கலாம், அநீதிகண்டு எதிர்க்கும் இயல்பாக இருக்கலாம், மொழிப்பற்றாக இருக்கலாம் அனைத்திலும் மகாஜனன்கள் மற்றவர்களை விட வித்தியாசமானவர்களாக, முற்போக்கானவர்களாக இருக்கின்றோம். காரணம் என்ன என்று தேடுகையில் மகாஜனா அன்னையின் வளர்ப்புத் தெரிகிறது.

மகாஜனா 110 ஆண்டுகளை கடந்து விட்ட பாடசாலை. எத்தனையோ வைத்தியர்கள், எந்திரிகள், சட்டவல்லுனர்கள், அறிவியலாளர்கள், அரசியல்வாதிகள், கல்வி மேதைகளை உருவாக்கிய பாடசாலை. வடக்கில் தனக்கென ஒரு பண்பாட்டையும், ஆளுமையையும் கட்டிக்காத்த பாடசாலை பாவலர் துரையப்பா பிள்ளை அவர் மகன் ஜெயரத்தினம் போன்ற நல் உள்ளம் கொண்டவர்களின் நற்சிந்தனையில் நற்கொடையில் உருவான பாடசாலை அதில் கற்றது பெரும்பேறு ஆனால் அப்பாடசாலையில் கற்ற மற்றய மாணவர்களுக்கு கிடைக்காத ஒரு பேறு எமக்குக்கிடைத்தது அதுதான் இடப்பெயர்வின் போது அன்னைக்கு மருதனார் மடத்தில் ஒரு வீடு (பாடசாலை) அமைத்தது. அது கொட்டிலாக இருந்தாலும் சுயமரியாதையோடு அன்னை வாழ வழிவகுத்தது. 90 களின் ஆரம்பம் முதல் பல இடப்பெயர்வுகளை சந்தித்தவர்கள் நாங்கள். இடம்பெயர்ந்து செல்கையில் மகாஜனா அன்னையையும் அழைத்துக்கொண்டே சென்றோம். பண்டத்தரிப்பு, அளவெட்டி, இணுவில், கோண்டாவில் என பல இடங்களுக்கும் அன்னையும் எங்களுடன் வந்தாள். இடப்பெயர்வின் போது இன்னொருவர் வீட்டில் அகதியாக தங்கிவாழும் போது ஏற்படும் அசௌகரியங்களை முழுமையாக உணர்ந்தவர்கள் நாம் அதனால் வேறு ஒரு பாடசாலையில் மாலை நேரப் பாடசாலையாக அகதியாக மகாஜனா இயங்குவதை நாம் விரும்பவில்லை. தனியாக ஒரு இடத்தில் தனித்துவமாக எம் பாடசாலையை இயக்கவேண்டும் என நினைத்தோம்.

அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள், அபிவிருத்திச் சங்கம் என் பவற்றின் வழிகாட்டலில் 1994 உயர்தர வகுப்பு சகோதரர்களின் நெறிப்படுத்தலில் புதிய பாடசாலை அமைக்கும் பணி ஆரம்பமானது.

1. புதிய பாடசாலையை அமைக்கும் இடம் தொடர்பாக பல யோசனைகள் முன்வைக்கப்பட்டது அப்போது மருதனார் மடத்தில் இராமநாதன் கல்லூரிக்கு முன்னால் உள்ள வீடும், அதன் பின்னே உள்ள பெரிய காணியும் பொருத்தமான இடமாக அடையாளம் காணப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் காணி மற்றும் வீட்டின் உரிமையாளர்கள் வெளிநாட்டில் இருந்ததால் அப்போது யாழ்ப்பாணத்தின் நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருந்தவர்களின் பேருதவியால் அந்த இடம் எமது பாடசாலைக்கு வழங்கப்பட்டது. அந்த இடத்தைப் பெறும் முயற்சியில் 94 உயர்தரப்பிரிவு மாணவர்களுடன் நாமும் இணைந்து ஈடுபட்டோம். அப்போது கோண்டாவிலில் இருந்த அலுவலகத்தில் அந்த இடம் எமக்கு வழங்கப்பட்டது.

2. அதன் பின் பாடசாலையை அமைப்பதற்கான நிதி சேகரிப்பு முயற்சி ஆரம்பமானது. 1994 மாணவர்களது திட்டமிடலில் இராஜன் இசைக்குழு மற்றும் சத்தியவான் சாவித்திரி நாடகம் நடத்துவதற்கு நடாத்தப்பட்டு அதற்கான நுழைவுச் சீட்டுக்கள் அச்சடிக்கப்பட்டன. 94, 95 உயர்தர வகுப்பு மாணவர்கள் 10 குழுக்களாக பிரிக்கப்பட்டு யாழ்ப்பாணத்தின் அனைத்துப் பகுதிகளுக்கும் அவர்களுக்கான பகுதிகள் ஒதுக்கப்பட்டு நுழைவுச் சீட்டு விற்பனையில் ஈடுபடுத்தப்பட்டனர். அன்றைய நாட்கள் இன்றும் பசுமையாக உள்ளது. வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் என அனைத்து பகுதிகளிலும் குழுக்களாக ஆண் மாணவர்களும், பெண் மாணவிகளும் இணைந்து நுழைவுச்சீட்டு விற்பனையில் ஈடுபட்டோம். பாடசாலை முடிந்ததும் மாலை நேரம் மற்றும் சனி, ஞாயிறு தினங்களில் பல மைல் தூரம் துவிச்சக்கர வண்டியில் சென்று நுழைவுச்சீட்டுக்களை விற்பனை செய்தோம். ஆறு மணியளவில் திரும்பி பாடசாலை வந்து அன்றைய தினம் சேகரித்த பணத்தை ஒப்படைப்போம். ஒரு இலட்சம் ரூபாவை சேகரித்தல் எனும் திட்டத்தில் இறங்கி 40 நாட்களில் ஆறு இலட்சத்திற்கும் மேற்பட்ட நிதியை சேகரித்தோம். 1993 இல் ஆறு இலட்சம் என்பது இன்று ஒரு கோடிக்கு மேற்பட்ட நிதி இன்று நினைத்துப்பார்க்கையில் இதுவொரு இமாலைய சாதனை. அன்றைய காலத்தில் எந்தவொரு பாடசாலை மாணவர்களும் இப்படியொரு நிதியை சேகரித்திருக்கமாட்டார்கள். இது எமது ஆளுமைக்கு ஒரு வித்து.

3. பின்னர் பாடசாலை கொட்டில்களை அமைப்பதற்கான மரங்கள் தேவைப்பட்டன. 40க்கு மேற்பட்ட வகுப்பறைகள், ஒரு பெரிய மண்டபம் என்பவற்றை அமைப்பதற்கு பெருமளவான பனை மரங்கள் தேவைப்பட்டன. தெல்லிப்பளை மாத்தனையைச் சேர்ந்த எமது நண்பன் மாத்தனை, துர்க்காபுரம் பகுதிகளில் உரிமையாளர்கள் இல்லாத பனங்காணிகளை அடையாளம் கண்டு கூறினான் அப்போது யாழ்ப்பாணத்தின் நிர்வாகத்திற்கு பொறுப்பாக இருந்தவர்களின் அனுமதி பெற்று 200 பனை மரங்கள் தறிக்கப்பட்டன. இராணுவ காவலரணுக்கும், புலிகளது காவலரணுக்கம் இடையிலுள்ள சூனியப் பிரதேசத்தில் இம்மரங்கள் தறிக்கப்பட்டன. 1995 உயர்தரப் பிரிவு மாணவர்களாகிய நாங்கள் அங்கே நின்றோம். எங்கள் தோள்களில் தான் பனை மரங்கள் பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துவரப்பட்டு உழவு இயந்திரங்களில் ஏற்றப்பட்டன. இந்த நாட்கள் எமது வாழ்நாளில் மறக்கமுடியாதவை. உயிரைக்கூட பொருட்படுத்தாது பாடசாலையை கட்டுவதற்கு நாம் எடுத்தமுயற்சி எமது ஆளுமைக்கு இன்னுமொரு வித்து.

4. வகுப்பறை கொட்டில்களை வேய்வதற்கு கிடுகுகள் தேவைப்பட்டது. தெல்லிப்பளை யூனியன் லொறியை கேட்டுப்பெற்றோம். பளைப்பகுதிக்குச் சென்று பல்லாயிரம் கிடுகளை ஏற்றிவந்தோம். வீடு வீடாகச் சென்று கிடுகு கேட்டதும் அதற்கான விலையை பேசுவதும் அவற்றைக் கொண்டுவந்து லொறிகளில் ஏற்றுவதும் எமது வேலையாக இருந்தது. இது அனைத்திலும் 95 உயர்தரப் பிரிவு மாணவர்களாகிய நாங்களே ஈடுபட்டோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. பின்னர் பாடசாலையைக் கட்டும் பணி ஆரம்பமானது. மகாஜனா கல்லூரியின் அமைப்பு எப்படி இருந்ததோ கிட்டத்தட்ட அதேபோல் நடுவில் ஒரு மைதானம் அதைச்சுற்றி வகுப்பறைகள் மிக உயர்ந்த நீளமான மண்டபம் என ஒரு பெரிய பாடசாலை கட்டப்பட்டது. அதன் முன்னுள்ள வீடு அதிபர் அலுவலகமாகவும், நூலகமாகவும் செயற்பட்டது. இலங்கையில் எந்த மாணவர்களும் செய்யாத ஒரு பெரும் பணியை அன்றைய காலத்தில் நாம் செய்திருந்தோம்.

6. பாடசாலை கட்டப்பட்ட பின்னர் எமக்கென்றொரு மைதானம் தேவைப்பட்டது. மகாஜனா கல்வியில் மட்டுமல்ல இணைப்பாடவிதானத்தில் குறிப்பாக விளையாட்டுத்துறையில் உதைபந்து, கிரிக்கெற், வலைப்பந்தாட்டம் மற்றும் சுவட்டு நிகழ்ச்சிகளில் புகழ்பெற்ற பாடசாலை. எனவே எமது மாணவர்களது இந்த ஆற்றல் குறைந்துவிடக்கூடாது என்ற நல்ல நோக்கத்தில் எமக்கான ஒரு விளையாட்டு மைதானத்தை தேடும் பணியில் ஈடுபட்டோம். பாடசாலையில் இருந்து ஒன்றரை மைல் தூரத்திற்கு அப்பால் இணுவிலில் ஒரு வெறும் காணி அடையாளம் காணப்பட்டு எமது மாணவர்களால் துப்பரவு செய்யப்பட்டு விளையாட்டு மைதானமாக மாற்றப்பட்டது.

இந்த மருதனார்மடப் பாடசாலையிலேயே எமது உயர்தர வகுப்புக்காலம் முழுமையும் கழிந்தது. இக்காலத்தில் நாம் பாடசாலையை அமைக்கும் பணியில் ஈடுபட்டதோடு கல்விச் செயற்பாட்டிலும் மும்முரமாக ஈடுபட்டோம். அதன் விளைவு 1995 ஆம் ஆண்டில் 55 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழகம் சென்று சாதனை படைத்தோம். உதைபந்தாட்டத்திலும், கிரிக்கெற்றிலும், வலைப்பந்திலும் எமது மாணவர்கள் மாவட்டத்தில் பல சாதனைகளைப் படைத்தனர். மாணவர் மன்றம், தமிழ் மன்றம், இன்ரெட்கழகம், சாரணர் என பல கழகங்களிலும் எமது மாணவர்கள் ஈடுபாட்டுடன் செயற்பட்டனர். இன்ரெட்கழகத்தின் மூலம் நாம் ஒரு புத்தகத்தையும் வெளியிட்டோம். எமது காலத்தில் விளையாட்டுப்போட்டி, பிரிவு உபசார வைபவம் என அனைத்தும் இப்பாடசாலையிலேயே நடைபெற்றது. மிகவும் மகிழ்ச்சியான காலம். எனினும் மனதில் ஒரு சிறு கவலை மகாஜனாவின் பூர்வீக மண்ணில் கற்க முடியவில்லையே என்ற ஆதங்கம் எம்மை வருத்துவதுண்டு. உயர்தர வகுப்பிற்காவது மகாஜனா செல்லலாம் என்ற கனவு, கனவாகவே போனது. எனினும் துர்க்காபுரத்தின் பின் நின்று அம்பனை வயலின் ஊடாக தூரத்தே தெரியும் வானுயர்ந்து நிற்கும் துரையப்பா மண்டபத்தின் அழகைக்கண்டு பெருமூச்சுவிடுவதும் எம் வாழ்வாக அமைந்தது.

இத்தனை செயற்பாடுகளுக்கும் மூலகர்த்தாவாக திகழ்ந்தவர் எமது பாடசாலையின் அதிபர் திரு. நாகராசா அவர்கள். கிட்டத்தட்ட 10 வருடங்களுக்கு மேல் அவர் அதிபராக கடமையாற்றினார். அவர் கடமையாற்றிய காலம் மிகவும் இக்கட்டானதாக இருந்தது. பல இடப்பெயர்வுகளை நாம் சந்தித்த காலம். யுத்தம் உக்கிரமடைந்தகாலம், மகாஜனாவை அதன் சொந்த இடத்தில் நடத்தமுடியாத சூழலிலும் பாடசாலையை அழிந்துவிடாது காப்பாற்றிய பெருமை அவரைச்சாரும். இடப்பெயர்வினால் பல பாடசாலைகள் நிலைகுலைந்து போன சூழலில் தனக்கென ஒரு தனி இடத்தை எடுத்து புதுப் பாடசாலையை அமைத்து மருதனார்மடத்தில் மகாஜனா தலைநிமிர்வதற்கு காரணமானவர். 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் மருதனார்மட மகாஜனாவில் கற்றார்கள். 300 க்கும் மேற்பட்ட மாணவர்கள் உயர்தரப் பிரிவில் கல்வி கற்றார்கள். மிகச்சிறந்த ஆசிரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளத்தை கொண்ட பாடசாலையாக மகாஜனா இருந்ததால் அருகிலுள்ள பல பாடசாலை மாணவர்களும் எமது பாடசாலையில் இணைந்தனர். அருகில் இராமநாதன் கல்லூரி, உடுவில் மகளிர் கல்லூரி, தெல்லிப்பளை யூனியன் கல்லூரி (இடம்பெயர்ந் து மருதனார்மடத்தில் இருந்தது) என பல பெரிய பாடசாலைகள் அருகில் இருந்தபோதும் மகாஜனா தலைநிமிர்ந்து சாதனைப் பயணத்தைத் தொடர வழிவகுத்தவர் அதிபர் நாகராசா அவர் மகாஜனாவின் நவயுக சிற்பி என்றே கூறவேண்டும். மகாஜனாவின் வரலாற்றை எழுதுபவர்கள் எவரும் இந்த மருதனார்மட மகாஜனாவை மறந்துவிட முடியாது. இதைவிடுத்து மகாஜனாவின் வரலாறு எழுதப்படுமானால் அது முழுமையற்றதாகவே அமையும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனாவின் இடம்பெயர்வு

தங்கராசா கிருஷ்ணராஜா

எமது மகாஜனக் கல்லூரியின் இடம்பெயர்வின் சில நினைவுகளை எமது இந்த வெளியீட்டினூடாக பகிர்ந்து கொள்ளலாம் என நினைக்கிறேன். அந்த வகையில் அன்றைய காலங்களில் (1994/1995) மாணவர்களுக்காக குரல் கொடுக்கும் ஒழுக்கத்திற்கு பொறுப்பாசிரியராக இருந்த திரு.சிற்றம்பலம் கணேசலிங்கம் ஆசிரியருடன் எமது 94,95 ஆம் ஆண்டு உயர்தரப் பிரிவு மாணவர்கள் ஓரணியாக பாரவூர்தியுடன் போர் மேகங்கள் சூழ்ந்த வேளையில் மகாஜனாவை நோக்கிப் புறப்பட்டோம் துப்பாக்கிப் பிரயோகம் எறிகணை வீச்சுக்கு மத்தியில் பதற்றத்துடன் பாடசாலையை அடைந்தோம் அங்கு நாம் கண்ட காட்சி எம்மை அதிர்ச்சிக்கும் வேதனைக்கும் உள்ளாக்கியது ஏனெனில் அங்கு அதிபர் காரியாலயத்துடன் இருந்த பிரதான கட்டடத்தின் கீழ்த்தளத்தில் பெரியளவான குழிகள் தோண்டப்பட்டு வெடி மருந்துகள் நிரப்புவதற்கு தயார்படுத்தப்பட்டுக் கொண்டிருந்தது ஆனால் எமது பிரார்த்தனையின் பயனால் பின்னாளில் அவ்வாறான துன்பியல் நிகழ்வுகள் ஏதும் நிகழாது இன்று பாடசாலை கம்பீரமாக நிமிர்ந்து நிற்கின்றது.

நாம் பாடசாலை சென்ற நோக்கம் எமது பாடசாலையின் தளபாடங்கள், ஆவணங்களை பாதுகாப்பாக மீட்டு நகர்த்துவதற்காகவே திரு.சிற்றம்பலம் கணேசலிங்கம் ஆசிரியரின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டலுடன் முடிந்தளவு தளபாடங்களை ஏற்றிக் கொண்டு எமது குழு அங்கிருந்து இறுதி ஏக்கத்துடன் ஒரு முறை பாடசாலையை பார்த்துவிட்டு வெளியேறியது.

இவ்வாறு கொண்டு செல்லப்பட்ட தளபாடங்களுடன் எமது பாடசாலை இணுவில் மத்திய கல்லூரியில் மாலை நேரப்பாடசாலையாக இயங்கிக் கொண்டிருந்தது அந்த நாட்களில் நாம் மதியம் பாடசாலை சென்று நித்திரை கொள்ளாது படித்த நாட்கள் குறைவு இந்த நிலையில் மருதனார்மடம் பகுதியில் காணி ஒன்றை பெற்று அதிலே பெரியளவான கொட்டகைகள் அமைத்து பாடசாலையை தனியாக இயங்க வைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டது. அதற்கு தேவையான நிதியினை திரட்டுவதற்காக இசை நிகழ்ச்சி ஒன்றை நடாத்த தீர்மானித்து அதற்கான பற்றுச்சீட்டு அச்சிடப்பட்டு ஒவ்வொரு பிரிவாக கிராமங்கள் தோறும் வீடு வீடாகச் சென்று விற்பனை செய்தோம் இந்த சந்தர்ப்பங்களில் நடைபெற்ற பல சுவாரசியமான சம்பவங்கள் பலருக்கும் நினைவிருக்கும். இவ்வாறு திரட்டிய நிதியில் மருதனார்மடத்தில் தனி ஒரு பாடசாலையாக இயங்கிய வரலாறு என்றும் எமக்கே உரியது.

இந்த வகையில் கல்விப் பாதையில் நிமிர்ந்து நின்றதைப் போன்று நாம் சளைக்காது எமது விளையாட்டுத்துறையையும் கல்வியுடன் இணைத்து கொண்டு சென்றதும் எமது சாதனையாகும் அதற்காக இணுவில் மண்ணிலே தனியார் காணி ஒன்றினைப்பெற்று அதனை எமது அனைவரது முயற்சியினாலும் பூரணமாக திருத்தம் செய்து பெரியதொரு விளையாட்டு மைதானமாக மாற்றி இடம் பெயர்ந்து இருந்த காலத்திலும் விளையட்டுத்துறையை வளர்த்ததும் பெருமைக்குரியதாகும். நாம் மருதனார்மடத்திலிருந்து விளையாட் டுப் போட்டி நடைபெறும் காலங்களில் வீதிகள் குன்றும் குழியுமாக இருந்தபோதும் மிகவும் சிரமத்துடன் கால் நடையாகவும் துவிச்சக்கர வண்டிகளிலும் ஆசிரியர்களின் ஒழுங்கமைப்புடனும், வழிகாட்டுதலுடனும் வீதியின் ஓரமாக அணிவகுத்து மைதானத்தை சென்றடைந்து அங்கு பயிற்சியினை நிறைவு செய்து மீண்டும் பாடசாலையை வந்தடைந்து கற்றல் செயற்பாட்டினைத் தொடர்வோம். இவ்வாறு சென்று திரும்பும் சந்தர்ப்பங்களில் மாணவர்களின் சந்தோசமான நகைச் சுவையான சம்பாசனைகளுடன் முடிந்த அந்த பசுமையான நினைவுகள் இன்றும் எமது மனங்களில் நிழலாடுகின்றது.

இவ்வாறாக இடம்பெயர்ந்து கல்வி கற்ற காலங்களில் நாம் கட்டிக்காத்த எமது கல்லூரியின் பெருமைகளை என்றும் நாம் மறக்கமுடியாது. இங்கு கல்வி கற்ற எமது நண்பர்கள் நண்பிகள் புலம்பெயர் நாடுகளிலோ அல்லது தாயகத்திலோ நல்லதொரு நிலையில் இன்று விளங்குவது எமக்கும் கல்லூரிக்கும் பெருமைக்குரியதாகும். போர் மேகங்கள் கலைந்து நிலமைகள் ஓரளவு சீரடைந்து பாடசாலையை மீண்டும் சென்றடையும் சந்தர்ப்பம் கிடைத்தது மிக்கமகிழ்ச்சியே என்றாலும் சொந்த இடத்தில் கல்வி நடவடிக்கைகள் தொடர்வதில் சில சுயநலன் சார்ந்த செயற்பாடு கள் காரணமாக தடைகள் வந்தபோதும் அவற்றையெல்லாம் தாண்டி சொந்தக் கட்டடத்தில் இன்று இவ்வாறு கம்பீரமாக மிளிர்ந்து நிமிர்ந்து நின்று அனைவரையும் கவர்ந்திழுக்கும் அழகோ தனி அழகு இவை அனைத்தும் என்றென்றும் குறைவடையாது நிலைத்து நீடிக்க அங்கு வீற்றிருக்கும் நடராஜப்பெருமான் அருள் புரிவாராக.

நன்றி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1993 காலப்பகுதியும் மாணவர்களின் நெறியாழ்மையும் 1995 ஆண்டு மாணவர்களுக்கு கிடைத்த வரபிரசாதமும்.

சிவராசா பிரபாகரன்

இணுவில் பகுதியிலும், கோண்டாவில் பகுதியிலும் திக்குத்திக்காக பிரிந்து கிடந்த பாடசாலை ஒரு பகுதி காலை, ஒரு பகுதி மாலை என யாரையும் சந்திக்க முடியாத நிலைமை. இது அன்றைய நாட்டு நிலைமையால் எழுச்சி அடைந்து இருந்தது. அப்போது தான் 95 A/L கற்பதற்கு என பெருந்தொகையான மாணவ மாணவிகள் எமது பாடசாலை நோக்கி நகர்ந்து இருந்தனர். அப்போது பாடசாலை வளாகத்தில் இனந்தெரியாத பல முகங்கள், எல்லோர் முகங்களும் பல்வகை களைப்புடன் ஏக்கத்துடன் சேர்ந்து இருந்தது.

அவ் எதிர்பார்ப்பை அடைவதற்கு எமக்கு இடையூறாக பாடசாலை என்னும் பெரியதொரு பொறுப்பை நாம் சுமக்க வேண்டி இருந்தது. அப்போது தான் இணுவில் பகுதியில் ஓர் ஒதுக்கப்பட்ட இடம் எமக்கு கிடைத்தது. அதை நாம் எமது மைதானமாக அமைத்து அதில் எல்லா மாணவர்களையும் சந்திக்கும் இடமாக அமைந்தது. அப் பகுதியில் பயிற்சி எடுத்து எமது மாணவர்கள் உதைபந்தாட்டம், உடற்பயிற்சி நிகழ்வு (PT ஸ்கொட்), துடுப்பாட்டம், மெய்வல்லுனர் என மாவட்ட ரீதியான வலைப்பந்தில் வெற்றியும் பெற்றுக் கொண்டனர்.

அப்போது தான் மாணவர்களுடன் கலந்துரையாடி பாடசாலையை நிலை நாட்ட எமக்கு பணம் தேவைப்பட்டது. அதற்காக நிகழ்வை நடாத்தி அதற்கு பற்றுச்சீட்டு மூலம் வரும் பணத்தைக் கொண்டு பாடசாலை அமைக்க உதவியாக இருக்கும் என நிகழ்வு நடத்தப்பட்டது. அதற்காக பற்றுச்சீட்டை 1994/1995 மாணவர்கள் எல்லோரும் சளைக்காதவர்கள் என்பற்கு அமைய யாழ் மாவட்டத்தில் வடமராட்சி, தென்மராட்சி என அவர்களின் துவிச்சக்கர வண்டிகள் செல்லாத பாதைகள், நாடாத வீடுகள் இல்லை. அவ்வாறு பற்றுச்சீட்டை ஆண் பெண் என இருவருமே ஒற்றுமையாகவும் பெருமையாகவும் செய்து முடித்தனர்.

பாடசாலை அமைப்பதற்கு மருதனார்மடம் தெரிவு செய்யப்பட்டது. அதற்கு பெரியதொரு முட்டுக்கட்டையாக தளபாடம் இருந்தது. அப்போது சக மாணவர்களின் சில சாத்தியமான சிந்தனையால் அப்போது நிறுவனத்தில் பதவியில் இருந்த ஒரு மாற்றுத்திறனாளியின் உதவியால் தான் இருநூறு பனை மரமும், வாகன உதவியும், எரிபொருள் உதவியும் கிடைத்தது. மற்றொரு உதவியாக ஒரு மாணவனினால் பனை மரம் கிடைத்தது. தெல்லிப்பழை பலநோக்கு கூட்டுறவு சங்கத்தின் உதவியால் வாகனமும், தனிப்பட்ட நபரின் உதவியாக உழவு இயந்திரமும் கிடைத்தது. எனவே வேலை ஆரம்பமானது.

சில மாணவர்கள் தம் திறமையால் பளைக்கு சென்று அங்கு உள்ள நிறுவனம் ஒன்றின் உதவியுடன் அப்பகுதியில் ஒரு வீட்டில் கிடுகு ஓலை நன்கொடையாக பெற்றனர். அதில் நடந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுவாரசியமான சம்பவம் என்னவென்றால் ஒரு ஏழை பாட்டியிடம் கிடுகைப்பெற்ற போது அவர் கூறினார் நான் பாடசாலை செல்லவில்லை, எனது வீட்டு கிடுகு ஓலையாவது பாடசாலை செல்லட்டும் என கூறினார். அதனை என்னால் இன்றுவரை மறக்கமுடியவில்லை. இன்னொரு சம்பவமாக என் கண்முன்னே நடந்த சம்பவமாக இருநூறு பனைகளை மாணவர்கள் வெட்டி வீழ்த்தினார்கள். இதன் போது பனைமரத்தின் உரிமையாளர் கடுமையாக சாடினார். எனினும் அவர் பக்கம் நியாயம் இருந்தது எனினும் ஒரு பாடசாலையை நிலைநாட்டுவதிலேயே எமது ஆர்வம் காணப்பட்டது. இதனால் அம் மாணவன் நாட்டை விட்டே சென்றுவிட்டார்.

இவ்வாறு எமது பாடசாலை சிகரத்தை தொடும்வரை வளர்ச்சி அடைந்தது. அச்சிகரத்தின் நன்மைக்கு ஏற்ப மாணவ மாணவிகள் இன்று நல்லதொரு பதவியினை வகித்து வருகின்றனர். அவர்களின் கனவுகள் இன்று நனவாகி தங்கள் முன் மலர்ந்துள்ளனர். சில மாணவர்கள் நாம் நின்மதியாகவும் சந்தோசமாகவும் எமது கனவுகள் நனவாக தம்மையே அர்ப்பணித்து சென்றுள்ளனர். இன்றுவரை எமது கண்ணுக்குள் வசித்து வரும் தோழர் தோழிகளை என்றுமே நாம் இருகரம் கூப்பி பாதம் பணிந்து நிற்கின்றோம். மேலும் சில மாணவர்கள் நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலை காரணமாக துன்பங்களையும் துயரங்களையும் சுமந்து வாழ்ந்துகொண்டு இருக்கின்றார்கள். அவர்களின் வாழ்வு நலம்பெற வேண்டும்.

நாட்டின் அசாதாரண நிலை காரணமாக பல தேசங்கள் சென்று கல்வி கற்பதற்கும், வாழ்க்கைக்கும் தொடர்பு இல்லாது இன்னல்பட்டு வாழ்க்கை செல்லும் திசை தெரியாமல் முடிவும் தெரியாது 95 மாணவர்களின் பழைய நினைவுகள் எல்லோர் மனதிலும் நீங்கா இடம் பிடித்துள்ளன. அவ் நினைவுகளை அசை போட்டபடி சிரித்து வாழும் வெளிநாட்டு வாழ்க்கை கொண்டு செல்லும் மாணவர்கள் எதிர்காலத்தில் நன்மை பெறுவார் என்று நம்புகின்றேன்.

அன்று கண்ணகி தன்னுடைய நேர்மையை காட்டுவதற்கு தனது முத்துக்கள் பத்தித்த காற் சிலம்பை அரண்மனையில் வீசி எறிந்தாள். அப்போது காற் சிலம்பில் இருந்த முத்துக்கள் அரண்மனை எங்கும் சிதறி வீழ்ந்து அவளின் உண்மைத்தன்மையை பறைசாற்றின. அதே போல 95 மாணவர்களின் மருதனார்மடத்தில் வீசப்பட்ட மாணவர்களின் கல்வி எனும் காற்சிலம்பு வெடித்து உலகத்தின் எல்லாக் கண்டங்களிலும் ஒளி வீசிக்கொண்டு இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*தோழமையோடு 94ஆம் ஆண்டு மாணவர்களுக்கு 95ஆம் ஆண்டு மாணவர்களின் நன்றிகள்*

# நாமும் எமது இளவல்களும்!

1994 உயர்தரப் பிரிவு மகாஜனர்கள்!

இலங்கையின் இருபதாம் நூற்றாண்டு கல்வி வரலாற்றிலே முத்திரை பதித்து உயர்ந்து நின்ற பாடசாலைகளில் மகாஜனக்கல்லூரியும் ஒன்று! கல்வியில் மட்டுமல்லாது விளையாட்டு, கலை முதலிய கல்விசாரா செயற்பாடுகளிலும் மகாஜன அன்னை கொடிகட்டிப் பறந்து கொண்டிருந்தாள். இவை அனைத்தோடும் தனது செல்வங்களுக்கு அன்பு, அடக்கம், நட்பு, ஒற்றுமை முதலான நற்பண்புகளையும் கற்றுத்தரத் தவறவில்லை.

1982 ஆம் ஆண்டு அவர்கள் பாலர்வகுப்பில் சேர்ந்த காலத்திலிருந்து எமக்கும் எமது இளவல்களுக்கும் இடையே புரிந்துணர்வு, நட்பு, பாசம் எல்லாம் வேர்விட்டு முளைக்கத் தொடங்கியிருந்தன. சகோதரர்கள், உறவினர்கள், அயலவர்கள் எனத் தெரிந்திருந்தவர்கள் மட்டுமல்லாது பல்வேறு நட்புகள் உருவாகுவதற்கான சூழலை மகாஜன மாதா ஏற்றபடுத்திக் கொடுத்திருந்தாள். இல்ல விளையாட்டுப் போட்டிகள், குருளைச் சாரணர், சிறு தோழியர் பாசறைகள், கலை நிகழ்ச்சிகள், எனப் பல சந்தர்ப்பங்கள் ஆரம்பப்பாடசாலைக் காலத்திலேயே எமக்கும் எமது இளவல்களுக்கும் இடையிலான நட்பினை வலுப்படுத்தின. அதன் பின்னர் சாரணர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கம், வழிகாட்டிகள், காற்பந்து, வலைப்பந்து மற்றும் துடுப்பாட்ட அணிகள், உடற் பயிற்சிக் குழுக்கள், கோவில் விழாக்கள், இன்ரறக்ட் கழகம், உயர்தர மாணவர் மன்றங்கள் என மேலதிக சந்தர்ப்பங்களும் நட்புக்கு வலுச்சேர்த்தன.

பல்வேறு சிறப்புகளுடன் மகாஜன அன்னை சிறப்படைந்திருந்த காலத்தில் நாட்டின் சூழ்நிலையால் பாதுகாப்புக் கருதி ஆயிரத்துத் தொளாயிரத்துத் தொண்ணூறுகளில் இடப்பெயர்வுகளைச் சந்திக்க நேர்ந்தது. இந்த இடப்பெயர்வுகளின் போது பாடசாலைச் சமூகத்தின் ஒன்றுமையும் வினைத்திறனும் பாடசாலையின் செயற்பாடுகளைத் தொடர்வதற்கு உறுதுணையாக இருந்தன. 1992 ஆம் ஆண்டு நடுப்பகுதியில் யுத்தம் தீவிரம் அடைந்ததால் பாடசாலைக்குச் சென்றுவருவது உயிராபத்து என்ற நிலை வந்தவுடன் பாடசாலையில் இருந்த ஆவணங்களையும் உபகரணங்களையும் காப்பாற்ற எண்ணி அதிபரும் ஆசிரியர்களும் பாடசாலைக்கு மிகவும் அவதானமாகச் சென்று அவற்றைக் கைகளிலும் தோள்களிலும் சுமந்து வந்து அம்பனைச் சந்திக்கும் பாடசாலைக்கும் இடையில் இருந்த பார ஊர்தியில் ஏற்றி எடுத்து வந்தனர். எமது இளவல்களும் இந்த முயற்சிக்கு முழுமூச்சுடன் பங்களித்திருந்தனர். இந்த இடப்பெயர்வுகளின் முடிவில் இணுவில் சைவமகாஜனாவிலும் இணுவில் அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையிலும் மாலை நேரப் பாடசாலையாக எமது கல்லூரி இயங்க ஆரம்பித்தது. மாலை நேரப் பாடசாலை நடாத்துவதில் பல்வேறு சவால்கள் காணப்பட்டன. மாணவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடையத் தொடங்கியது. அன்றைய அதிபரதும் ஆசிரியர்களதும் அயரா முயற்சியால் உயர்தர வகுப்புகள் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் நிரு தனியார்கல்வி நிறுவனத்திலும் காலை வகுப்புகளாக ஆரம்பிக்கப்பட்டன. 1993, 1994, மற்றும் 1995 உயர்தரப் பிரிவு மாணவர்கள் அந்தக் காலத்தில் உயர்தரம் பயின்றேம். அந்தக்காலத்தில் பாடசாலையில் இருக்கவேண்டிய பல அடிப்படை வசதிகளை மாணவர்கள் பெற்றுக் கொள்ளமுடியாமல் இருந்தது. இந்த நேரத்தில் மூத்த மாணவர்களாக அமைந்த எமது வகுப்பு மாணவர்கள் பாடசாலை முழுவதும் காலை நேரப் பாடசாலையாக இயங்க வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை பாடசாலை நிர்வாகத்திடம் முன்வைத்து அவர்களின் சம்மதத்தைப் பெற்றுக் கொண்டோம். தனியாக காலை நேரப் பாடசாலையை இயக்குவற்காக மேற்கொண்ட செயற்பாடுகளும் அந்தப் பயணத்தின் சவால்களும் சாதனைகளும் நாம் 2019 ஆம் ஆண்டு வெளியிட்ட "நாம் வாழ்ந்த மகாஜனா" நூலில் விளக்கமாகப்பதிவு செய்யப்பட்டுள்ளன.

இந்த வரலாற்று முயற்சியில் எம்மோடு தோளோடு தோள்நின்று உழைத்தவர்கள் எமது இளவல்களான 1995 உயர்தர வகுப்பு மாணவர்கள். கலை நிகழ்ச்சி ஒன்றின் மூலம் நிதி சேகரித்து கொட்டில்கள் அமைத்துப் பாடசாலையை ஒரே இடத்தில் நிகழ்த்துவதே குறிக்கோள். இந்த நிகழ்ச்சிக்கான நுழைவுச் சீட்டுகளை விற்பனை செய்வதற்கு உயர்தர வகுப்பு மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து பாடசாலை நேரம் தவிர ஏனைய நேரங்களில் நுழைவுச் சீட்டுகளை வீடு வீடாக, ஊர் ஊராக யாழ்ப்பாண மாவட்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் சென்று விற்பனை செய்தார்கள். இந்த முயற்சியில் எம்மோடு சேர்ந்து எமது இளவல்களும் தமது முழுப் பங்களிப்பை வழங்கினார்கள். நிகழ்வு நடத்த தீர்மானித்த நாளில் கடும் மழை. நிகழ்ச்சிக்கான ஆயத்தங்கள் பெரும்பாலும் முடிந்திருந்தது. ஆனால் நிகழ்ச்சி நடக்கவிருந்த திடல் வெள்ளக்காடாகக் காட்சியளித்தது. ஈழத்து மகாகவியின் மீண்டும் தொடங்கும் மிடுக்கு கவிதையில் கூறியது போல் கொள்ளை போல் வந்து கொடுமை விளைவித்திருந்தது அம்மழை. எனினும் அவரது கவியில் சொன்னது போலவே, சற்றும் மனந்தளராது தீர்க்கமான முடிவுகளை மேற்கொண்டு மாணவர்கள் அந்தக் கலை நிகழ்ச்சியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்கன் மிஷன் பாடசாலை மண்டபத்தில் அன்றே நடத்தி முடித்தார்கள். மின்சார வசதியற்ற அந்தக் காலத்தில் மின்பிறப்பாக்கிகள் ஒலி, ஒளி அமைப்புகள் எல்லாவற்றையும் குறுகிய நேரத்தில் மாற்றுவற்கும் எம்மோடு தோள் கொடுத்து நின்றனர் எம் இளவல்கள். நிகழ்ச்சியின் மூலம் ஆறு இலட்சம் ரூபாய்களுக்கு மேல் நிதி சேகரிக்கப்பட்டது. இந்த நிதியினைக்கொண்டு மருதனார்மடத்தில் எமது பாடசாலைக்கான கொட்டகைகள் தெல்லிப்பழையில் மகாஜனக் கல்லூரி கொண்டிருந்த சில தனித்துவ அமைப்புகளை உள்வாங்கி அமைக்கப்பட்டன. கொட்டகைகள் அமைப்பதற்கும் மாணவர்கள் எம்மாலான சரீர உதவியை வழங்கினோம். அப்போதும் எமது இளவல்கள் எம்மோடு கைக்கோர்த்திருந்தார்கள்.

இந்தக் கூட்டு முயற்சிகள் தந்த அனுபவம் இந்த இரு வகுப்பு மாணவர்களிடையேயும் பரஸ்பரம் புரிந்துணர்வு, நம்பிக்கை மற்றும் நட்பினை மிக ஆழமாக ஏற்படுத்திக் கொடுத்திருந்தது. எமது வகுப்பு மாணவர்கள் இல்லத் தலைவர்களாக இருந்தபோது ஒவ்வொரு இல்லங்களிலும் பல துணைப் பொறுப்புகளை எடுத்திருந்த எம் இளவல்கள் முழு மூச்சுடன் உழைத்ததும் பின்னர் அவர்கள் இல்லத் தலைவர்களாக இருந்தபோது அவர்களுக்கு உதவியாக எமது வகுப்பு மாணவர்கள் மைதானத்தில் இறங்கியதும் எம்மிரு வகுப்புகளின் ஒற்றுமையை எடுத்துக்காட்டும் பல்வேறு நிகழ்வுகளில் ஒன்று. எமது உயர்தர மாணவர் ஒன்று கூடலுக்கான ஆயத்தப்பணிகளுக்கு உதவியதுடன் அந்நிகழ்வுக்கு உணவு பரிமாறியிருந்தீர்கள்!

நாங்களும் இளவல்களும் இணைந்து சென்ற வடமராட்சி கிழக்குப் பகுதிக்கான எமது சுற்றுலா என்றும் மறக்கமுடியாத ஒரு நிகழ்வு! பாடசாலைக் காலத்தில் பல்வேறு செயற்பாடுகளில் ஒன்றாகப் பயணித்து பல்வேறு விடயங்களைச் சாதித்த எமது நட்பு கடல்கடந்து உலகின் மூலை முடுக்கெல்லாம் பரந்து வாழ்கின்ற போதும் பல்வேறு செயற்பாடுகளில் தொடர்ந்து வருகிறது. இந்த நட்பு என்றென்றும் தொடர்ந்து பல்வேறு ஆக்கபூர்வ முயற்சிகளிற்கு அத்திவாரமாக அமையும் என்பதில் ஐயமில்லை.

இவ்வாறாக எமது பாடசாலைக் காலத்தில் எம்மோடு ஒன்றிணைந்து செயற்பட்ட எமது இளவல்களும் கல்வி விளையாட்டுகளில் பலவேறு சாதனைகள் செய்து பாடசாலைக்கு பெருமை சேர்த்துத் தந்திருந்தார்கள். இன்றும் பாடசாலை வளர்ச்சிக்காக உழைத்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மீண்டும் பாடசாலை சென்று நினைவுகளை மீட்டுகிறார்கள். இந்நிகழ்வு நன்நிகழ்வாக அமைய எமது மனமார்ந்த வாழ்த்துகள்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜன அன்னைக்கோர் வாழ்த்து

நல்லதோர் வாழ்வினைத் தந்த எம் தாயெனும்
மகாஜன மாதாவைப் போற்றிடுவோம்
வல்லவர் ஆக்கியே உலகெலாம் வலம்வர
வைத்ததாம் ஆற்றலை வாழ் த்திடுவோம்.

உனை நீ அறியெனும் உயரிய தத்துவம்
தந்தெமை அறிந் திட வைத்தவளாம்
பன்னரும் பாவலர் துரையப்பா பிள்ளையின்
பணியினால் வந்தெமைக் காப்பவளாம்

நீ தந்த கல்வியால் நீணிலத்து உயர்ந்ததை
நெஞ்சினில் நன்றியுடன் நினைப்போம்
போமிடம் எங்கணும் உந்தனின் புகழ் சொல்லி
உலகமே உன்னை அறிய வைப்போம்

கற்பித்த தெய்வங்கள் சொற்படி நடப்போம்
கல்வியை நல்வழி பயன் படுத்தி
அற்புதமானது மகாஜன சமூகமென்று
அடுத்தவர் போற்றிட வாழ் ந்திடுவோம்.

கவிஞர். பா. மகாலிங்கசிவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# நினைவுகளின் நினைவுகள்

VP. **வாசுகன்**

மகாஜனா கல்லூரியின் வாசகம் – " உனை நீ அறி " (Know Thyself) அவ்வாசகமே எம்வாழ்வின் பல்வேறு தருணங்களிலும் புத்திமதி கூறும் பொன்மொழி. கல்லூரியின் வளர்ச்சிப்போக்கில் எமக்கும் கல்லூரிக்கும் ஆசிரியர்களுக்கும் சக மாணவர்களுக்கும் இடையிலான காத்திரமான உறவும், பசுமையான நினைவுகளும்.

விசிறி வாழை 'மடகஸ்கா' தீவின் பூர்வீகம். இத்தாவரம் எங்காவது தென்பட்டால் பாடசாலை எண்ணங்கள் சூழ்ந்துகொள்ளும். ஸ்தாபகர் துரையப்பா கட்டடத்திற்கு முன்னால் விரிந்த விசிறி வாழை பாடசாலைக்கே உரிய சின்னமாக பதிந்துவிட்டது மனதில். விசிறி வாழைக்கு முன்னால், ஓவியர் சிவப்பிரகாசம் அவர்களால் கருஞ்சாம்பல் நிறத்தில் நேர்த்தியாக வடிவமைக்கப்பட்ட ஸ்தாபகர் துரையப்பாவின் சிலை, கம்பீரம் தான். தட்டி வானில் பிரயாணிக்கையில் கல்லூரியை நோக்குவோமானால், முன்னால் துரையப்பா பின்னால் விசிறி வாழை – மயில் தோகை விரித்தாடுவது போல் காட்சி தரும். பாடசாலை வளாகத்தில் விசிறி வாழை அசோகமரம் தேக்கு மா பலா தென்னை நெல்லி புளி சவுக்கு போன்ற மரங்கள் பாடசாலையின் சுயசரிதையை கேட்டால் சொல்லும். வாழையடி வாழையாக எனது பாட்டனார் (அப்பு – அம்மாவின் தகப்பனார்) அம்மா மாமா நான் சகோதரிகள் உற்றார் அயலவர்கள் பலரும் மகாஜனாவின் மாணவர்களே. தொண்ணூறுகளின் இறுதியில் உலங்குவானூர்தி தரையிறங்குவதை தடுப்பதற்காக திறந்த வெளியரங்குகள் எங்கும் பட்ட மரங்கள் நடப்பட்டன. எமது மைதானத்திலும் தென்னை பனை கமுகு போன்ற பட்ட மரங்கள் நடப்பட்டு விளையாட்டு பாடம் ஸ்தம்பிதமானது. நாம் விடவில்லை, பட்ட மரங்களுக்கு நடுவே ஓடிப் பிடித்து விளையாடினோம். விளையாடுகையில் பட்ட மரத்தில் மோதி மூக்கு அடிபட்ட நோவோடு இடப்பெயர்வு. (Recreation of Post-War) காட்சிகள் மாறினாலும் நினைவுகள்.!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சயிக்கிள் காலமான எண்பதுகளின் நடுப்பகுதி மகாஜனாவின் 75து ஆண்டு பூர்த்தியை எட்டியிருந்த காலம். அக்கால பகுதிகளில் பாடசாலை வளாகத்தில் நிகழ்ந்த நிகழ்வுகள் மாணவர்களாகிய எமக்கு பாடப்புத்தகங்களை தாண்டிய சிந்தனைக்கு ஊற்றாகின. அந்நிகழ்வுகளுள் மூன்று ஓவியக் கண்காட்சிகள் அடிக்கோடிடப்பட வேண்டியவை. அதில் ஒன்று மாணவ இளைஞர் பொது மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்டு, மகாஜனாவில் முதல் காட்சியும் தொடர்ந்து வேறு பாடசாலைகளிலும் காட்சிப்படுத்தப்பட்டன. பஞ்சநாதன் மாஸ்டரின் விஞ்ஞானாக்கூடத்திற்கு அருகில் அமைந்த உயர்தர வகுப்பில் ஆரம்பித்தது கண்காட்சி. மேசையில் வைத்து சுவரில் சாத்தப்பட்டு கித்தானில் (Canvas) வரையப்பட்டிருந்த ஓவியங்களில் ஒன்று என் மனக்கண்ணில் இன்றும். கறள் பிடித்த இரும்புத்தொப்பி ஒன்று நிலத்தில் சற்று புதைந்து வெடித்த நிலையில், அவ்வெடிப்பினூடு ஒரு சிறு செடி வெளியே வந்து சூரியனைப்பார்த்து சிவப்பு பூ பூத்திருந்தது. புவியில் அரங்கேறும் சமகாலத்து சமர்களுக்கும் பொருத்தமான ஓவியம். அவ்வோவியத்தின் உந்துதலால் 2005ம் ஆண்டு கித்தானில் வரைந்து பாரிஸில் காட்சிப்படுத்தியிருந்தேன். தற்போது கனடா ஒன்ராரியோவில் தனியார் சேகரிப்பில் காட்சிப்பொருளாக...

திண்ணைப்பள்ளியாக துரையப்பாபிள்ளை அவர்களின் வீட்டில் ஆரம்பித்து சரஸ்வதி வித்தியாலயமாக பின் மகாஜனாவாக வியக்கத்தகு வளர்ச்சி – நேற்றும் இன்றும் நாளையும். பாடசாலையின் கட்டடக்கலையை விபரிக்காத கட்டுரைகள் இல்லை, அதுவும் உண்மைதான். துரையப்பா, சின்னப்பா, ஜெயரட்ணம் போன்ற மகான்கள் மேற்கத்திய கீழைத்தேய பண்பு களை உள்வாங்கி நமது பண்பாட்டையும் சேர்த்துக் குழைத்த கலவை அது, நமது பள்ளி. சிந்தனைப்போக்குடன் ஒவ்வொரு கூரைகளும் செப்பனே திட்டமிடப்பட்டு அமைக்கப்பட்டன. நுண்கலைக்கான பிரத்தியேக வகுப்புகள் இன்று நினைத்தாலும் விசித்திரமானவை. அவை எங்கே. நடன வகுப்பு சங்கீத வகுப்பு தண்ணீர் குடிக்கும் இடம் பாலர் வகுப்பு தச்சுவேலை சித்திரவகுப்பு சமையல் வகுப்பு முன்னால் வரிசையாக கமுகமரங்களும் பூத்த செவ்வரத்தையும், அழகியல் தான். நான் அனுபவித்த சித்திரவகுப்பு என் ஓவிய வாழ்வின் அத்திவாரம். வகுப்பறையின் கிழக்குச்சுவரின் சதுர இரும்புக் கம்பிகள் ஊடாக பாயும் சூரியக்கதிர்களும், ஓவிய ஆசிரியரான தியாகராஜ மாஸ்டரின் அமைதியும் அன்பும் ஊக்குவிக்கும் பண்பும் என் ஓவிய ஆர்வத்தை வளர்த்திற்று. சித்திரமாணவர்களுக்கு பயிற்சிகள் தருவதோடு சேர்ந்து தானும் நேர்த்தியான ஓவியங்கள் வரைவது நமக்குள் புத்துணர்ச்சியை ஊட்டின. வகுப்பறையின் சுவர்களில் தொங்கிய மாணவர்களது ஓவியங்களும் ஆசிரியரின் மேசைக்கு பின்னால், சிறிய ஓவிய களஞ்சியத்தில் சேகரிப்பில் இருந்த மாணவர்களது ஓவிய சுருள்களும் வகுப்பறைக்குள் நுழையும் போது நீர் வர்ணத்தின் மணமும் ஓவிய கூட்டத்திற்கே உரிய ஓர் உணர்வை உணர்த்திற்று. தியாகராஜ மாஸ்டர் என் ஓவிய ஆர்வத்தை உளமறிந்து பாடசாலையில் நிகழ்ந்த சில நிகழ்வுகளுக்கு 'பிரிஸ்டல் போர்டில்' (Bristol board) ஓவியங்கள் வரைய பணித்தார். சிறியளவு ஓவியங்களில் இருந்து பெரிய அளவு ஓவியங்களுக்கான உத்திகளைக் கற்பித்தார் – கற்றுக்கொண்டேன். ஓவிய ஊடகங்களை தேர்வதிலும் பயிற்றப்பட்டேன். மறுமலர்ச்சிக் கால ஓவியர் டாவின்சி, நவீன ஓவிய புரட்சிக்காரர் பிகாசோ பற்றி அறிந்தேன். பிக்காசோவின் கியூபிச பாணி(Cubism) ஓவியங்களைத் தாங்கிய நூலைத் தியாகராஜ மாஸ்டரின் கைகளில் பார்த்து வியந்தேன், நகல் எடுத்தேன். ஒரு தினம் சித்திரவகுப்பில் எமக்கு விரும்பியதை வரையுமாறு பணித்தார், பண்பியல் ஓவியம் (Abstract painting) ஒன்றை சூடான வர்ணங்களைப் பிரயோகித்து வரைந்ததை, மிகவும் மெச்சினார். அவரின் மெச்சலே நான் பெற்ற ஓவிய அங்கீகாரம். அவர் ஓய்வு பெற்று சென்ற பின் தொடர்ந்துவந்த சில ஓவிய ஆசிரியர்களும் மகத்தானவர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



*எமது காலத்து மகாஜனாக் கல்லூரியின் அடையாள அட்டை*

சாரணியத்திலும் தியாகராஜா மாஸ்டரே எங்களோடு. அவரது காலத்தில் சாரணியம் பல விருதுகளை தனதாக்கின. சாரணியத்தில் மகாஜனாவிற்கென்றொரு தனித்துவம் உண்டு, வடமாகாணத்தில். கம்பீர நடையும் அயராத உழைப்பும் சேவைமனப்பாண்பும் கண்டிப்பான பார்வையும் மகாஜனாவின் பழைய மாணவருமான திரு போஜன் அவர்களே கே. கே. எஸ். ற்கு பொறுப்பாகவும் பின் யாழ்மாவட்டம் தொடர்ந்து வடமாகாணத்தின் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டார். குருளைச்சாரணியம், சாரணியம் என தொடர்ந்து ஆண்டு 9 வரைக்கும் பயணித்தேன். சாரணியத்தில் – உதவி புரியும் மனப்பாங்கு சகமனிதப்பண்பு அவசர சிகிச்சை பயணப்படுத்தல் சூழலியம் சமத்துவம் சகோதரத்துவம் பொதுச்சேவை போன்ற பண்பியல்கள் வித்தாகின என்னுள். சக பாடசாலைகளுக்கு செல்வது, நமது பாடசாலைக்கு சக பாடசாலைகள் வருவது, பாசறைகள் அமைத்து, இரவில் தங்கி பல பணிகளை பழகியது, பயன்தரு அனுபவமும், சுவையான நினைவுகளும். 'இந்திய அமைதி காக்கும் படை' எம் மண்ணில் கால் வைப்பதற்கு முன்னைய காலங்களில் சாரணச்சீருடையில் சில சிரமதானப் பணிகளில் ஈடுபட்ட ஞாபகங்களும் உண்டு. வாழைக்குத்தியின் இருமருங்கிலும் கயிறு கட்டி நமது பாடசாலை மைதானத்தில் நெருஞ்சி முள்ளு அப்புறப்படுத்தியது, பள்ளியின் மேற்குப்பக்க வெளிச்சுவரோரமும், பாடசாலை தங்கு விடுதியின் பின் சுவரோரமும் உழவாரம், தெருவேலை (தெருவலகு) மண்வெட்டியால் புல் செதுக்கியது, பன்னாலை வாசிகசாலை, வறுத்தலைப் பிள்ளையார் கோவில் வெளிவீதி துப்பரவாக்கியது , அம்பனைச் சந்தி பேருந்து தரிப்பு நிலையத்திற்கு (அம்பனை பஸ் ஸ்டாண்ட்) நமது பாடசாலை வர்ணமான மண்நிறம் பூசியது வரலாறு. 35 ஆண்டுகளுக்குப்பின் புதிய வர்ணம் பூசியதை சில காலத்துக்கு முன் முகநூலில் பார்த்து அறிந்து கொண்டேன். அம்பனை பஸ் ஸ்டாண்ட்டும் பின்னொரு பொழுதில் அமைதிப்படையின் பாதுகாப்பு அரணாகவும் (சென்றி பொய்ன்ட்) அதன் முன்னால் 'தம்பி மாமா கிளினிக்' (பிரகஸ்பதி) ராணுவ முகமாகவும் அமைந்த காட்சியை சித்திர வகுப்பில் நான் வரைந்தது பதிவு. அளவெட்டியில் இருந்து பாடசாலைக்கு வெள்ளைக்கொடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிய சைக்கிளில் செல்லும்பொழுது 'சென்றி போய்ன்ட்' முன்னால் இறங்கி சைக்கிளை உருட்டி முகாமை தாண்டும் வரை நடந்து சென்று அம்பனை சாப்பாட்டுக்கடையை கண்டதும் ஏறி இரண்டு மிதியில் பாடசாலை படலையை அடைந்து விடுவோம். எமது பாடசாலையின் இரு வாசலின் முன் வளைவுகளும் நமது பண்பாட்டுடன் தொடர்புடைய அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டு பல தசாப்தங்களுக்கு மேலாக நிமிர்ந்து நின்று பாடசாலையின் அடையாளமாகவே எம்மனக்கண்களில். ஜெயரட்ணம் மண்டபத்துக்கு பின்னாலும் துரையப்பா மண்டபத்துக்கு பின்னாலும் மாணவர்களது சைக்கிள் எறும்புகள் போன்று வரிசையாக தேக்குமரங்களோடு சாய்ந்து நிறுத்தப்பட்டிருக்கும் காட்சி எண்பதுகளின் சாட்சி. அக்காலத்தில் சைக்கிள்கள் ஒழுங்கைகளெல்லாம் ஓவியம் வரைந்தன.

இந்தியக் கண்டம் பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஆபிரிக்கக் கண்டத்தின் தென்கிழக்கு பகுதியில் இருந்து பிரிந்து நகர்ந்து ஆசிய கண்டத்துடன் மோதி இமயமலைத் தொடரை உருவாக்கிற்று. கண்ட நகர்வுகளின் புரிதல், நீரில் இருந்து உருவாகிய உயிரினங்களின் பரிணாம வளர்ச்சி, ஊர்வன விலங்குகள் டைனோசர்கள் பறவைகள் மனிதன் நெருப்பு குகைஓவியம் விவசாயம் சக்கரம் மொழி மதம் விஞ்ஞானம் வரைக்குமான காலவரிசையின் எச்சங்களையும் சான்றுகளையும் அறிய அருங்காட்சியகம் செல்லும்போதெல்லாம் மகாஜனாவில் பாலர்வகுப்புக்கு முன்னால் இருந்த விஞ்ஞான கூடமே ஞாபகம் வரும். கர்ப்பப்பையில் இறந்த குழந்தைகள் மற்றும் ஊர்வன போன்றவை இரசாயன திரவத்தோடு நிரப்பிய கண்ணாடி குவளைக்குள் பார்த்த காட்சியும் மணமும் இன்றும் மூக்கில். உயர்தர மாணவர்கள் தவளையை வெட்டி பரிசோதனை செய்கையில் திறந்த ஜன்னல் வழியாக நாம் எட்டிப் பார்த்தோம், ஆர்வத்தோடு. விஞ்ஞான கூடத்துக்கு முன்னால் தடியூண்டிப்பாய்தல் உயரம்பாய்தல் நீளம்பாய்தலுக்காக பரப்பிய மணல் மண்ணில் விளையாடினோம். அதனருகே உயர்ந்து வளர்ந்த மரத்திலிருந்து சொரியும் றோஸ் நிற கோண வடிவ பூக்களை சக மாணவர்களோடு சண்டையிட்டு பிடிப்பதும், அவ்வாறு மண்ணில் விழாமல் பிடித்த பூக்களை கசக்கி ரோட்டில் எறிந்தால் பரிசுப்பொருள் கிடைக்கும் என்றொரு கட்டுக்கதையை நம்பியதும், சிறுவயது சில்லறைச் செயல்கள். உலகப்புகழ் பெற்ற கராத்தே வீரரான ' புரூஸ்லீயின்' முகம் பதித்த 'ஸ்டிக்கரை' சட்டை பொத்தானில் ஓட்டி அழகு பார்ப்பதும் நமக்கு கைவந்த கலை. யுத்தத்தின் மத்தியிலும் சோலாப்புரி செருப்பு போன்ற சில கவர்ச்சி தரு பொருட்களில் கவரப்பட்டது, கால ஓட்டத்தில், சிறார்களாகிய எமது நாகரிகத்தின் வெளிப்பாடு.

நைட் ரைடர் Knight Rider, ஓடோமான் Automan ஸ்டார் ட்ரேக் Star Trek மனிமல் Manimal ஜெமினி மன் Gemini Man பக் ரோஜஸ் Buck Rogers போன்ற ஆங்கில தொலைக்காட்சித்தொடர்கள் 80 களில் பிரபல்யமானவை. தொலைக்காட்சித்தொடர்களில் சில காட்சிகளில் வரும் தாக்கி அழிக்கக்கூடிய ஒளிக்கீற்று (Laser) தற்போதைய போர்களில் பாவிக்கப்படுகின்றன. சென்ற ஆண்டு இறுதியில் சக்தி வாய்ந்த இரு நாடுகளின் செயற்கைக்கோள்களுக்கு இடையிலான அரசல்புரசலான மோதல் நாமறிந்ததே. வானவியல் பற்றிய புரிதலின் போதெல்லாம் பாடசாலையின் விம்பம் மனதில். சந்திர மண்டலத்துக்கு செல்லும் விண்கலத்தின் மாதிரி உரு, எம்மிலும் சற்று உயரமான அளவில் கண்டு வியந்தேன் பாடசாலையில். பாடசாலையிலின் பெண்களுக்கான நுழை வாயிலின் வலது புற கட்டடத்தின் வெளி விறாந்தையில் நீண்ட காலமாக அசைவற்றிருந்தது அக்கலம். ஏன் தயாரித்தார்கள் , யார் தயாரித்தார்கள், எவ்வாறு தயாரித்தார்கள். இப்போ அவ்விண்கல மாதிரி உரு எங்கே?.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தைத்திருநாள் வாழ்த்து மடல், முத்திரை, சில்லறைக்காசு, சூடான சுவரொட்டிகள் சேகரித்தல் தற்கால இலங்கையில் தட்டுப்பாடான 'நெஸ்பிறே' பெட்டிக்குள் 80களில் கவாஸ்கர், கபில் தேவ் போன்ற துடுப்பாட்ட வீரர்களின் புகைப்படங்களை சேகரித்தல், கச்சாப்பொருட்கள், செய்தித்தாள் கட்டுரைகளை வெட்டி ஓட்டுதல் என்பன ஆவணப்படுத்துதலின் ஆரம்ப கல்வியாக பார்க்கலாம். நமது காலத்திலேயே ஒப்படை என்றொரு பாடம் நமது பாடத்திட்டத்தில் இருந்து நீக்கப்பட்டது. எனக்கு கவலையை அளித்தது. அதன் தொடர்ச்சியை நாம் சாரணியத்தில் பின்பற்றினோம். CR கொப்பியில் கீறுதல் எழுதுதல் வெட்டி ஒட்டுதல் கச்சாப்பொருட்களை சேகரித்தல் என்பன. யாழ்நூலக நினைவுகளோடு ஆவணப்படுத்துதலின் அவசியம், நம்மவரின் இருத்தலின் தேவை. அதன் தொடர்ச்சியும் நீட்சியுமே இந்நூலை மலர்க் குழுவுடன் இணைந்து தயாரிப்பதில் ஆர்வமும் தேடலும் ஆவணப்படுத்துதலும்...

நினைவு தெரிந்த காலத்திலிருந்து மகாஜனா பாலர் வகுப்பில் சேர்வதற்கு முன்பாக பாடசாலையின் பெருமை பற்றி செவிமடுத்து பாடசாலையில் இணைவதற்கு ஆவலுடன் காத்திருந்த காலத்தின் நினைவுகளும் கனவுகளும். 1982ல் பாலர் வகுப்பில் ரோகினி ரீச்சரின் அரவணைப்பில் ஆரம்பித்தபின் பள்ளி வளாகத்தில் எனது வளரும் பருவத்தை நினைத்து கண்ட கனவுகளும், நினைவுகளும். 1990ன் இறுதியில் கல்லூரியை விட்டு விலகி தொடர் கல்வியை கொழும்பு இந்துக்கல்லூரியிலும் மேலும் ஹோட்டல் முகாமைத்துவ உயர்கல்வியையும் ஓவியக் கல்வியையும் கிரேக்க நாடான சைப்ரஸ் நாட்டில் கற்று அங்கேயே தொழில் புரிந்த அனுபவமும். அகதி அந்தஸ்து கோரி 2001 ஆரம்பத்தில் பிரான்ஸ் நாட்டை வந்தடைந்த பின்பும் பல்கலைக்கழகம் பாரிஸ் 13ல் (வில்த்தனொஸ்) ஆவணப்படம், ஓவியக் கல்வியையும் கற்றுக்கொண்டேன். தலைநகரான பாரிஸ் நகர வாழ்வில் விசா தொழில் ஓவியக்கண்காட்சிகள் பிரெஞ்சுமொழி அடையாளம் காதலி திருமணம் மனைவி மகன் அப்பா ஓவியப்பயணம் வாழ்வு என கடுகதியில் கரையும் வாழ்வில், மகாஜனக் கல்லூரியின் நினைவுகளும், நினைவுகளின் நினைவுகளும் என்னோடு.

ஊர் கடந்து நகரம் கடந்து கடல் கடந்து கண்டம் கடந்து சீமையில் வாழ்ந்தாலும் இன்றும் எம்மை செப்பனிடும் பணியில் மகாஜனாவுக்கு பெரும் பங்கு உண்டு. மருத நிலத்தோடும் செம்மண்ணோடும் அமைந்த பாடசாலை எவ்வளவு நினைவுகளை புதைத்து விடுகிறது எம்முள். ஸ்தாபகர், அதிபர்கள், ஆசிரியர்கள் எமது பொக்கிஷம். மகாஜனா ஒரு பாடசாலை அல்ல நமக்கோர் பல்கலைக்கழகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யா / மகாஜன கல்லூரி

தெல்லிப்பளை.

# மாணவர் முன்னேற்ற அறிக்கை

1984

பெயர் : ..........

சேர்விலக்கம் : 12234

வகுப்பு : ..........

பிறந்த தேதி : 03-01-77

இல்லம் : ..........



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலைக்காக வாழ்நாளை அர்ப்பணித்தவர்கள்



இராசா தெய்வேந்திரம்



தம்பு கனகேஷ்வரன்



நாகேந்திரம்



சின்னராசா

*மகாஜனாக் கல்லூரியின் 95ஆம் ஆண்டு மாணவர்களின் நன்றிகள்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## பாடசாலைக்காக வாழ்நாளை அர்ப்பணித்து உயிர் நீத்த பணியாளர்கள்




அமரர். கந்தப்பிள்ளை சங்கரப்பிள்ளை



அமரர். வல்லிபுரம் சிவபாதம்




அமரர்.ஆளூரையா நவரட்ணராஜா



அமரர். சுப்பிரமணியம் சுந்தரமூர்த்தி



அமரர். செல்லப்பு சிவலிங்கம்



அமரர். சீனிவாசகம் கிருஷ்ணமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணித்த 95ஆம் ஆண்டு மாணவர்கள்



பரஞ்சோதிநாதன்
அருட்செல்வன்
05/08/1976
23/09/1996
கூட்டுறவு வைத்தியசாலை
அருகாமை, தெல்லிப்பழை



இராஜேந்திரன்
இளஞ்செல்வன்
29/08/1976
28/02/2007
இலக்கம் 83, கண்டி வீதி,
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி



மாசிலாமணி குகதாசன்
27/01/1975
05/05/1998
கிளானை,
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை



போஜன் உபாசனன்
03/05/1976
03/08/1997
கொல்லங்கலட்டி
தெல்லிப்பழை



திருநாவுக்கரசு சிவகுமார்
15/04/1976
25/12/1996
பிரதேசசபை வீதி,
மயிலிட்டி



சிவஞானம் சிவபாலன்
01/05/1976
13/12/1993
நாவலடி, பன்னாலை,
தெல்லிப்பழை.



சுப்பிரமணியம் சுமித்திரன்
18/11/1976
27/09/1998
தெல்லிப்பழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுதர்சனா கதிரமலை
//1976
01/01/2022
அம்பனை
தெல்லிப்பழை



செல்லையா புஸ்பமலர்
19/09/1976
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை



பத்மநாதன் பத்மலோஜன்
26/02/1976
16/06/2001
கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை



விஜயகுமார்



நிரூபன்



கஜன் சிவகுமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது நிகழ்விற்கு பங்களிப்புச் செய்தோரின் நிதி விபரம்

| இல. | பெயர் | நாடு | தொகை(SRs) |
|---|---|---|---|
| 1 | ராஜசந்திரிகா சுபாகர் | கனடா | 100000.00 |
| 2 | முருகையா கிரிதரன் | இலங்கை | 10000.00 |
| 3 | தம்பிராசா பிரகாசன் | இலங்கை | 25000.00 |
| 4 | உமா தம்பிஐயா | சிங்கப்பூர் | 114261.41 |
| 5 | ஐசாக் பத்மநாதன் பிரதீஸ் | ஐக்கிய இராச்சியம் | 25000.00 |
| 6 | கவிதா நந்தகுமார் | பிரான்ஸ் | 50000.00 |
| 7 | செந்தில்நாதன் பாமினி | சுவிற்சர்லாந்து | 26700.00 |
| 8 | கணபதிப்பிள்ளை கோகிலன் | இலங்கை | 25000.00 |
| 9 | கௌ. தூசைராஜா | ஆஸ்திரெலியா | 179800.00 |
| 10 | அனுஷா ராமசாமி | ஐக்கிய இராச்சியம் | 50000.00 |
| 11 | வேலாயுதபிள்ளை செவ்வேள் குமரன் | இலங்கை | 50000.00 |
| 12 | காயத்திரி நோட்டன் அலெக்ஸ் | பிரான்ஸ் | 150000.00 |
| 13 | சிவபாலன் செந்தில்வாசன் | ஐக்கிய இராச்சியம் | 400000.00 |
| 14 | அல்பிரட் அலிஸ்டன் உதயராஜா | இலங்கை | 25000.00 |
| 15 | பாமினி மகிந்தன் | பிரான்ஸ் | 103170.00 |
| 16 | கந்தரட்ணம் இராதேயன் | ஐக்கிய இராச்சியம் | 50000.00 |
| 17 | தர்சினி எமில்டன் | ஐக்கிய இராச்சியம் | 100000.00 |
| 18 | சச்சிதானந்தன் சுஜாதரன் | ஐக்கிய அமெரிக்கா | 30000.00 |
| 19 | ஜமுனா நந்தகுமார் | ஐக்கிய இராச்சியம் | 50000.00 |
| 20 | மகாலிங்கசிவம் மதிதரன் | ஐக்கிய இராச்சியம் | 105000.00 |
| 21 | வாசுகி யாதவன் | தென் ஆபிரிக்கா | 82350.00 |
| 22 | பாலரட்ணம் கணேஷானந்தன் | இலங்கை | 10000.00 |
| 23 | ரீமா சதீஸ்குமார் | கனடா | 62500.00 |
| 24 | தயாசுகி நவசோதி | ஐக்கிய இராச்சியம் | 100000.00 |
| 25 | புண்ணியமூர்த்தி வசந்தரூபன் | பிரான்ஸ் | 100000.00 |
| 26 | சகிலா பிரபாகரன் | கனடா | 53200.00 |
| 27 | லோகேஸ்வரன் அருமைநாதன் | கனடா | 100000.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 19 | ஜமுனா நந்தகுமார் | ஐக்கிய இராச்சியம் | 50000.00 |
| 20 | மகாலிங்கசிவம் மதிதரன் | ஐக்கிய இராச்சியம் | 105000.00 |
| 21 | வாசுகி யாதவன் | தென் ஆபிரிக்கா | 82350.00 |
| 22 | பாலரட்ணம் கணேஷானந்தன் | இலங்கை | 10000.00 |
| 23 | ரீமா சதீஸ்குமார் | கனடா | 62500.00 |
| 24 | தயாசுகி நவசோதி | ஐக்கிய இராச்சியம் | 100000.00 |
| 25 | புண்ணியமூர்த்தி வசந்தரூபன் | பிரான்ஸ் | 100000.00 |
| 26 | சகிலா பிரபாகரன் | கனடா | 53200.00 |
| 27 | லோகேஸ்வரன் அருமைநாதன் | கனடா | 100000.00 |
| 28 | சசிகலா ஆனந்தலிங்கம் | ஐக்கிய இராச்சியம் | 100000.00 |
| 29 | ஜெயந்தி லம்போதரன் | இலங்கை | 10000.00 |
| 30 | சிவசுபாங்கினி வேந்தன் | ஐக்கிய இராச்சியம் | 50100.00 |
| 31 | சிவாஜினி கிரிதரன் | கனடா | 32100.00 |
| 32 | சாந்தகுமாரி சிவசிதம்பரம் | சுவிற்சர்லாந்து | 34900.00 |
| 33 | டயானி தர்மசீலன் | ஐக்கிய இராச்சியம் | 50000.00 |
| 34 | கந்தையா மோகனதாஸ் | ஐக்கிய இராச்சியம் | 30000.00 |
| 35 | மாலினி ரவி | ஐக்கிய இராச்சியம் | 67925.00 |
| 36 | மேகலா பிரபாகரன் | ஐக்கிய இராச்சியம் | 50000.00 |
| 37 | கோமதி கருணாகரன் | கனடா | 50100.00 |
| 38 | ஜெயந்தினி ஞானகுமரன் | கனடா | 75000.00 |
| 39 | மேகலா பார்தீபன் | கனடா | 50000.00 |
| 40 | ஜெயந்தினி ராமலிங்கம் | பிரான்ஸ் | 50006.09 |
| 41 | தங்கராஜா பகிதரன் | கனடா | |
| 42 | மிதுலாகரன் பாலசிங்கம் | ஆஸ்திரெலியா | |
| 43 | பூவிலிங்கம் சசிதரன் | ஐக்கிய இராச்சியம் | |
| 44 | தெட்சணாமூர்த்தி தயாபரன் | ஐக்கிய இராச்சியம் | |
| 45 | பாலசிங்கம் பகிரதன் | இலங்கை | 495000.00 |
| 46 | நாகேந்திரம் சுரேஷ்குமார் | ஐக்கிய அமெரிக்கா | |
| 47 | கந்தையா காசிநாதன் | இலங்கை | |
| 48 | நவரட்ணம் சுஷாகரன் | இலங்கை | |
| 49 | ஞானசிவம் கமலச்சந்திரன் | இலங்கை | 20000.00 |
| 50 | செந்தில்நாதன் சியாமளா | இலங்கை | 10000.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | | |
|---|---|---|---|
| 51 | நவரட்ணம் பாலமுரளி | இலங்கை | 10000.00 |
| 52 | அப்புத்துரை துஷ்யந்தன் | இலங்கை | 19.95 |
| 53 | சுதாஜினி சிவராசா | இலங்கை | 5000.00 |
| 54 | ஏரம்பமூர்த்தி பகிரதன் | இலங்கை | 10000.00 |
| 55 | தங்கராசா கிருஷ்ணராஜா | இலங்கை | 10000.00 |
| 56 | ராஜரட்ணம் தயாபரன் | இலங்கை | 20000.00 |
| 57 | விஜயா சனாதனன் | இலங்கை | 50000.00 |
| 58 | மேனகா ராஜ்குமார் | இலங்கை | 5000.00 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிகழ்வு நெறிப்படுத்துதல் குழு

முருகையா கிரிதரன்

தம்பிராசா பிரகாசன்

உமா தம்பிஐயா

தங்கராசா கிருஷ்ணராஜா

சிவபாலன் செந்தில்வாசன்

பாமினி மகிந்தன்

ஜெயந்தி லம்போதரன்

சியாமளா செந்தில்நாதன்

ராஜசந்திரிகா சுபாகர்

தங்கராஜா பகிதரன்

ராஜரட்ணம் தயாபரன்

கணபதிப்பிள்ளை கோகிலன்

## மலர்க்குழு

VP வாசுகன்

உமா தம்பிஐயா

பாமினி மகிந்தன்

விஜயா சனாதனன்

வேலாயுதபிள்ளை செவ்வேள் குமரன்

ராஜரட்ணம் தயாபரன்

செல்வஸ்கந்தநாதன் சதீஸ்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனர்கள் 95 மலரில்...

மகாஜனக் கல்லூரியின் நீண்ட வரலாற்றுப் பின்னணியில் ஆவணப் பதிவுகளும் மலர் வெளியீடுகளும் ஏராளம். 1910ம் ஆண்டு பாவலர் இல்லத்தில் ஒரு திண்ணைப் பள்ளியாக ஆரம்பிக்கப்பட்டு சரஸ்வதி வித்தியாலயமாக, மகாஜன கல்லூரியாக இன்று 2022 வரைக்கும் 200க்கும் மேற்பட்ட ஆவணப் பதிவுகள் உள்ளதாக கூறுகிறது "நூலகம்". அவ்வொழுங்கில் இம்மலரும் ஒரு துளியே.

பாலர் வகுப்பு – 1982 தொடக்கம் உயர்தர வகுப்பு 95 வரை காலப்பகுதிகளில் கல்வி கற்ற மாணவர்களின் நினைவலைகள். உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பரந்துவாழும் எங்களினதும் எமது ஆசிரியர்களினதும் ஒரு கூட்டு முயற்சியின் வெளிப்பாடே இம்மலர். தேச முரண்களாலும் இடப்பெயர்வுகளாலும் சிதறுண்ட மாணவர்களில், ஒரு சில ஆண்டுகள் கல்வி கற்ற மாணவர்களும் பாலர்வகுப்பிலிருந்து உயர்தரம் வரைக்கும் கல்வி கற்ற மாணவர்களும், கால் நூற்றாண்டு இடைவேளைக்குப்பின் சமூக வலைத்தளங்களால் ஒன்றுகூடியதன் வெளிப்பாடே ...

எமது ஆசிரியர்களும் அதிபர்களும் சிற்பிகள் ஆனார்கள், அவர்களது கைதேர்ந்த செதுக்கலிலே நாம் அறிவார்ந்த நடைச்சிற்பமானோம். நடைச்சிற்பங்கள் ஒன்றுகூடி சிற்பிகளுக்கு எடுக்கும் பெருவிழாவே, 07.08.2022 இன்று நிகழும் "ஆசிரியர் கௌரவிப்பு விழா". சமூக வலைத்தளங்களால் ஒன்றுகூடியதன் வெளிப்பாட்டில் உருவான பிரதான நோக்கமே "ஆசிரியர் கௌரவிப்பு விழா". எமது கல்லூரிக்கால நினைவுகளையும் இடப்பெயர்வுகளையும் ஆவணப்படுத்தி மலராக்குவது மற்றுமொரு நோக்கம். உலகெங்கும் வாழும் எமது வகுப்பு மாணவர்கள் "ஆசிரியர் கௌரவிப்பு" நிகழ்வை ஒட்டி மகாஜன துரையப்பா மண்டபத்தில் ஒன்றுகூடி நமது ஆழ்மனதில் உறைந்து இருக்கும் பழைய நினைவுகளை எமது ஆசிரியர்களோடும் சமகால மாணவர்களோடும் மீட்டுதலும் பகிருதலும் இன்றுமொரு நோக்கம். உலகை உலுக்கிய கோவிட் 19 முடக்க காலத்திற்குப் பிறகு தற்போது திட்டமிடப்பட்டு இலங்கையில் தலைவிரித்தாடும் பொருளாதார வீழ்ச்சிக்கு மத்தியிலும் நாம் முன்கூட்டியே திட்டமிட்டபடி முதிர்வயதை எட்டிய எமது ஆசிரியர்களை கௌரவிப்பதும் இம்மலரை அச்சிலேற்றுவதும் எதிர்நீச்சல் தான். 95 மாணவர்களுக்கு எதிர்நிச்சல் புதிதல்ல. 95ம் ஆண்டு எமது ஆசிரியர் ஒருவர் கூறியது போல் – 95 வகுப்பு பெடியங்களோ "அவங்கள் அட மழையிலயும் தீப்பந்தம் கொண்டுபோவாங்கள்" இவை தவிர ஒவ்வொரு மாணவர்களின் நோக்கங்கள் பலகோடி. அவற்றில் வடிகட்ட வேண்டியவை பல எதிர்காலங்களில் ஒன்றுகூடி செய்ய வேண்டியவையும் பல.

புவியின் எட்டுத்திக்கும் பரந்து வாழும் 95 ம ாணவர்கள் பலதுறைகளில் தேர்ச்சி பெற்று கல்லூரியோடு உறவையும் அதன் பெருமையையும் நிலை நாட்டுகின்றனர். சமூக வலைத்தளமனா ஸூம் (zoom)ல் மாதாந்த உரையாடலின்போது, நமது வகுப்பில் 500 அல்லது 600 மாணவர்கள் கல்வி கற்றிருக்கலாம் என பேசிக்கொண்டோம். ஆனாலும் தற்போது வலைத்தள தொடர்பு ஊடகமான வைபர் (Viber) குழுவில் 125 மாணவர்களே உள்ளோம். சென்ற ஆண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2021 கடைசி மாதத்தில் தீர்மானித்த திட்டத்தில் இவ்வேட்டை வடிவமைக்க ஆரம்பித்தோம். அரை ஆண்டில் ஆவண நூலை தயாரிப்பது விஷப்பரீட்சை தான். நேர்கொண்டோம். நாம் ஒன்றுகூடி கைகோர்த்து, அப்பாலும் எமது ஆசிரியார்களும் எமக்கு முன்னும் பின்னும் கல்விகற்ற மாணவர்களும் உதவினர், உதவியும் அர்ப்பணிப்பும் சொல்லிலடங்கா, நன்றிகள். நூலை ஆரம்பிக்கும் போது ஆலோசனைக்காக அணுகிய 60 வயதை தாண்டிய இலக்கிய ஆர்வலர்கள், படைப்பாளிகள் ஆன மகாஜனா மைந்தர்களும் நன்றிக்குரியவர்கள். உலகம் முழுவதிலும் உள்ள மகாஜன பழைய மாணவர் சங்க உறுப்பினர்கள் சிலரது ஆவண பரிந்துரையும் எமக்கு கை கொடுத்தது, அவர்களோடும் கைகுலுக்குகிறோம். மற்றும் பெற்றோர்கள் நண்பர்கள் சகோதரர்கள் நூலில் ஆர்வம் கொண்டு கைகோர்த்தவர்கள் சகலருக்கும் கைகூப்பிக்கிறோம். இம்மலரை ஒழுங்கமைத்து அழகுபடுத்திய இரவு பகல் தொடர்ந்து கணனியில் வேலை பார்த்து அச்சுருவாக்கிய சாவகச்சேரி மிக்கி அச்சகத்திற்கும் நமது மனமார்ந்த நன்றிகள். இப்புத்தகத்துக்கு உதவிய சகலருக்கும் கோடான கோடி நன்றிகளும், மகாஜன வணக்கங்களும்.

இப்பனுவலில் மிகக் குறுகிய காலத்தில் நம்மால் முடிந்ததையே கூட்டி அள்ள முடிந்தது. கால அவகாசம் “ஆசிரியர்களது கௌரவிப்பு நிகழ்வு” நாளன்று முடிவதால் நம்மால் முடிந்ததே உங்கள் கையில். 45 வயதில் உருவாக்கும் இந்த நூலின் இன்னொரு வெளிப்பாடாக எமது 50து வயதில், இதில் விடுபட்ட விடயங்களை இன்னும் நேர்த்தியாக செதுக்க எண்ணம் பிறந்துள்ளது. அதனை செப்பனே செதிக்கிட உங்களது ஆவணங்களை வேண்டுகிறோம் தொடர்புகளுக்கு 95mahajanastudent@gmail.com

குகை ஓவியங்கள் எமது மூதாதையரின் வாழ் தடத்தின் ஆவணம்.கூற முடியாத காரணங்களால் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி இணுவில் மத்திய கல்லூரி போன்று வெறும் பல பள்ளிச்சாலைகளிலும் மகாஜன மாணவர்கள் சென்று கல்வி கற்றது ஞாபகம் நமக்கு எக்கச்சக்கமாக உண்டு. அச்சூழலில் எம்மை அரவணைத்த சகல பள்ளிச்சாலைகளுக்கும் கோடான கோடி நன்றிகளும் வாழ்த்துக்களும் *. 95ம் ஆண்டு இடப்பெயர்வில் மருதனார்மடத்தில் மகாஜன வடிவமைப்பிலேயே கொட்டகை போட்டு கல்வி கற்கப்பட்டு விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றது மிக முக்கியமான ஆவணப்பதிவு. அக்காட்சிகளை எழுத்தில் வடித்திடுவதும் இம்மலரின் பிரதான நோக்கம். மேலும் அக்காலத்து ஆவணக்கங்களை எமது இணையத்தில் mahajana95.weebly.com ஆவணப்படுத்த உத்தேசம். நமது வகுப்பில் படித்தவர்கள் மட்டுமல்ல வேறு ஆண்டுகளில் படித்த மாணவர்களின் ஆவணங்களும் உள்வாங்கப்படும், அனுப்பிவையுங்கள்.

செத்தல் தேங்காய் போல் தலையில் விழுந்த குண்டுகள் ஆயிரம், வானிலிருந்து காற்றைக் கிழித்து வந்த சன்னங்கள் பல கோடி., செல்லடிப்பான் தொல்லையும். அதுபோக, எமது காலத்திலே கருப்பு சப்பாத்துக்கள் ஹிந்தி பேசியது. "நாய்கள் குரைக்குது ராவினிலே மாட்டுக்கொழுப்பு மணமும் போகுது வீதியிலே". அம்பனை நெல் வயலில் சேத்துக்குள் செல்லடித்து உருவாக்கிய குட்டிக்கிணறை மறுநாள் பாடசாலை போகும்போது நாம் பார்த்தது ஞாபகம். சைக்கிளைத் தலைகீழாக நிறுத்தி கைகளால் பெடல்களை சுற்றி டைனமோவில் வானொலி இயக்கினோம். கற்பகதரு தந்த பன்னாட்டு கடித்து ஆங்கிலேயன் அறிமுகப்படுத்திய தேநீர் அருந்தினோம். ஜாம் போத்தலில் மெழுகுவர்த்தி நட்டு நீருற்றி விளக்கேற்றினோம். பதுங்கு குழியில் பாடப்புத்தகத்தோடும் பாம்புகளோடும். வடக்கு அணி வடக்கு நோக்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும் தெற்கு அணி களமிறங்கியது. இம்முறை உதைபந்தாட்டம் சூடுபிடித்தது.சமர்கள் மாறினாலும் சனங்களின் கூட்டு வாழ்வும் வைராக்கியமான நெஞ்சங்களும் எதையும் எதிர்கொள்ளும் மனங்களின் மத்தியில் மாணவர்களாக நாம் கற்றுத்தேர்ந்தது அதிசயம் தான். இறுக்கமான வாழ்வியலிலும் இன்பம் இழையோடியது இன்றும் அது இதயத்தில் கனக்கிறது. அருங்காட்சியகங்கள் இல்லா ஊரில் ஆவண படம் பார்க்க முடியாத நகரில் ஓவியக் கூடங்கள் இல்லாத தேசத்தில் நமக்கிருந்த யாழ் நூலகம் மாபெரும் பொக்கிஷம் தான். சமகாலத்தில் எவையெல்லாம் விலை உயர்ந்துள்ளதோ அவையெல்லாம் எமது காலத்தில் தட்டுப்பாடாகவே இருந்தது தாய்நிலத்தில். இடப்பெயர்வுகள் பல. அச்சாட்டில் பல ஊர்களை பார்த்தோம் புதிய நட்புகளை உருவாக்கினோம் அங்கு பெற்ற அனுபவங்களும் புதியவை தான். சிந்தனைப் போக்குடன் சிதறுண்டவர்கள், நாங்கள். சில்லறைத்தனமாக சிந்தித்ததில்லை, மகாஜன மாதா நமக்கிட்ட கட்டளை அப்படி. கல்வியும் கல்லூரியுமே நமக்கான ஆதாரம்.

மகாஜன மாதாவின் அட்சய பாத்திரத்தில் மாணாக்கராகிய நாங்கள் சற்று அளவுகணக்கு இல்லாமல் அறிவையும் அனுபவத்தையும் வாழ்வியலையும் நட்புகளையும் ஆனந்தத்தையும் அறத்தையும் அள்ளிக்கொண்டோம். மகாஜனா கல்லூரி ஆம் அது எமக்கொரு பல்கலைகழகம் தான். கல்லூரி செய்த "மெத்தப் பெரிய உபகாரத்திற்கு" நாம் என்ன கைமாறு செய்ய?

நன்றி கூறி சிறுமைப்படுத்த முடியவில்லை...

இம்மலரே சமர்ப்பணம்.

பாவலருக்கும், சிற்பிக்கும் சிரம் தாழ்த்திய 95

வணக்கம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 95ம் ஆண்டு மாணவர்கள் விபரம்

விபரம் அமைந்துள்ள வரிசை

- பெயர்
- பாடசாலைக் காலம்
- உயர்தரப்பிரிவு
- பிறந்த இடம்
- தற்போதைய இடம்



- அஜந்தன் புவநேசதாசன்
- *1987-1990*
- கலைப்பிரிவு
- அளவெட்டி
- ஜேர்மனி



- அலோசியஸ் பொன்னையா
- *1993-1995*
- கலைப்பிரிவு
- மல்லாகம்
- சுவிற்சர்லாந்து



- திருமதி அனுஷா ராமசாமி (செல்வி அனுஷா துரைசிங்கம்)
- *1985-1995*
- கணிதப்பிரிவு
- தெல்லிப்பழை
- ஐக்கிய இராச்சியம்



- அனுஷியா கமலக்கண்ணன்
- *1993-1995*
- தெல்லிப்பழை கிழக்கு, இலங்கை



- திருமதி ஆரணி ரகுராஜ் (செல்வி ஆரணி ஜெகநாதன்)
- *1982-1993*
- உயிரியல் பிரிவு
- பன்னாலை, தெல்லிப்பழை
- ஆஸ்திரெலியா



- திருமதி பபிதா அன்ரன் (செல்வி பபிதா நவரட்ணம்)
- *1993-1995*
- கலைப் பிரிவு
- மாவிட்டபுரம்
- தெல்லிப்பழை
- கனடா



- பாலசிங்கம் பகிரதன்
- *1988-1995*
- கணிதப்பிரிவு
- சிறுவிளான்
- இலங்கை



- நவரட்ணம் பாலமுரளி
- *1994-1995*
- கலைப் பிரிவு
- இணுவில்
- கொக்குவில், இலங்கை



- திருமதி செந்தில்நாதன் பாமினி (செல்வி பாமினி குலசிங்கம்)
- *1982-1995*
- வர்த்தகப் பிரிவு
- தெல்லிப்பழை கிழக்கு
- சுவிற்சர்லாந்து



- திருமதி பாமினி மகிந்தன் (செல்வி பாமினி சங்கரப்பிள்ளை)
- *1982-1995*
- கலைப் பிரிவு
- அம்பனை, தெல்லிப்பழை
- பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- திருமதி கல்யாணி செந்திற்குமரன் (செல்வி கல்யாணி சுப்பிரமணியம்)
- *1993-1995*
- உயிரியல் பிரிவு
- வவுனியா
- இலங்கை



- வரப்பிராசிங்கம் சந்திரபவான்
- *1982-1992*
- கல்லுப்பிடுங்கி, கொல்லங்கலட்டி தெல்லிப்பழை
- தாவளை இயற்றாலை வரணி
- இலங்கை



- சச்சிதானந்தன் சுஜாதரன்
- *1982-1995*
- வர்த்தகப் பிரிவு
- வித்தகபுரம், தெல்லிப்பழை
- ஐக்கிய அமெரிக்கா



- திருமதி டயானி தர்மசீலன் (செல்வி டயானி கனகரட்ணம்)
- *1993-1995*
  கணிதப்பிரிவு
- ஐக்கிய இராச்சியம்



- திருமதி துஷ்யந்தி குமரகுருபரன் (செல்வி துஷ்யந்தி விவேகானந்தன்)
- *1986-1991*
- மல்லாகம்
- ஐக்கிய இராச்சியம்



- பாலரட்ணம் கணேஷானந்தன்
- *1982-1996*
- உயிரியல் பிரிவு
- பன்னாலை, தெல்லிப்பழை
- வவுனியா, இலங்கை



- திருமதி காயத்திரி நோட்டன் அலெக்ஸ் (செல்வி காயத்திரி அருமைத்துரை)
- *1982-1991*
- தெல்லிப்பழை
- பிரான்ஸ்



- கௌசல்யா சூசைராஜா
- *1993-1995*
- உயிரியல் பிரிவு
- இளவாலை
- ஆஸ்திரேலியா



- திருமதி ஜமுனா நந்தகுமார் (செல்வி ஜமுனா பாலசுப்பிரமணியம்)
- *1982-1989*
- மல்லாகம்
- ஐக்கிய இராச்சியம்



- திருமதி ஜெயந்தி லம்போதரன் (செல்வி ஜெயந்தி முத்துக்குமாரு)
- *1983-1995*
- வர்த்தகப் பிரிவு
- மாவிட்டபுரம், தெல்லிப்பழை
- இலங்கை



- ஜிவாகரன் சந்திரராஜா
- *1986-1991*
- சிறுவிளான்
- பிரான்ஸ்



- கதிர்காமநாதர் ஜெயகுமார்
- *1993-1995*
- மல்லாகம்
- இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- திருமதி ஜெயந்தினி ஞானகுமரன் (செல்வி ஜெயந்தினி சங்கரப்பிள்ளை)
- 1987-1995
- கலைப் பிரிவு அளவெட்டி வடக்கு, அளவெட்டி
- கனடா



- திருமதி ஜெயந்தினி ராமலிங்கம் (செல்வி ஜெயந்தினி கார்த்திகேசு)
- 1982-1991
- தெல்லிப்பழை
- பிரான்ஸ்



- திருமதி கலைவாணி விக்னேஸ்வரன்
- (செல்வி கலைவாணி கதிரித்தம்பி)
- 1982-1995
- கலைப் பிரிவு
- பன்னாலை, தெல்லிப்பழை
- இலங்கை



- ஞானசிவம் கமலச்சந்திரன்
- 1983-1995
- கணிதப்பிரிவு
- கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை
- கொழும்பு 06, இலங்கை



- ராசேந்திரம் கமலக்கண்ணன்
- 1993-1995
- தெல்லிப்பழை கிழக்கு,
- இலங்கை



- கந்தையா காசிநாதன்
- 1993-1995
- கணிதப்பிரிவு
- மாரீசன்கூடல், இளவாலை
- இலங்கை



- திருமதி கவிதா நந்தகுமார் (செல்வி கவிதா சிவானந்தன்)
- 1982-1993
- உயிரியல் பிரிவு
- பன்னாலை
- பிரான்ஸ்



- முருகையா கிரிதரன்
- 1982-1995
- வர்த்தகப் பிரிவு
- பன்னாலை, தெல்லிப்பழை
- இலங்கை



- கணபதிப்பிள்ளை கோகிலன்
- 1982-1995
- உயிரியல் பிரிவு
- இணுவில்
- வவுனியா, இலங்கை



- திருமதி கோமலதா (செல்வி கோமலதா பொன்னம்பலம்)
- 1984-1995
- உயிரியல் பிரிவு
- கிளானை, கொல்லங்கலட்டி,
- தெல்லிப்பழை
- இலங்கை



- கோமதி கருணாகரன்
- 1993-1995
- வர்த்தகப் பிரிவு
- சுன்னாகம்
- கனடா



- தங்கராசா கிருஷ்ணராஜா
- 1990-1995
- வர்த்தகப் பிரிவு
- கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை
- இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- திருமதி குமுதினி ஜெயரூபன் (செல்வி குமுதினி சக்திவேல்)
- *1982-1991*
- தெல்லிப்பழை
- இலங்கை



- திருமதி சிவபாலன் குமுதினி
- *1984-1992*
- பன்னாலை, தெல்லிப்பழை
- இலங்கை



- லதா வைத்திலிங்கம்
- *1984-1995*
- வர்த்தகப் பிரிவு
- கொழும்பு 04
- இலங்கை



- ஜோன் துரைராஜா லெஸ்லீ நிஜி
- *1987-1995*
- கலைப் பிரிவு
- ஏழாலை, தெற்கு, சுன்னாகம்
- இலங்கை



- லோகேஸ்வரன் அருமைநாதன்
- *1989-1995*
- கலைப் பிரிவு
- கனடா



- திருமதி மாலினி ரவி (செல்வி மாலினி மகாதேவன்)
- *1987-1995*
- வர்த்தகப் பிரிவு
- கட்டுவன், தெல்லிப்பழை
- ஐக்கிய இராச்சியம்



- மகாலிங்கசிவம் மதிதரன்
- *1887-1995*
- வர்த்தகப் பிரிவு
- விழிசிட்டி, தெல்லிப்பழை
- ஐக்கிய இராச்சியம்



- திருமதி மேகலா பார்தீபன் (செல்வி மேகலா விஸ்வநாதன்)
- *1984-1995*
- வர்த்தகப் பிரிவு
- கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை
- கனடா



- திருமதி மேகலா பிரபாகரன் (செல்வி மேகலா துரைராஜா)
- *1982-1995*
- வர்த்தகப் பிரிவு
- பன்னாலை, தெல்லிப்பழை
- ஐக்கிய இராச்சியம்



- திருமதி ராஜ்குமார் மேனகா (செல்வி மேனகா சிவலிங்கநாதன்)
- *1987-1995*
- வர்த்தகப் பிரிவு
- மல்லாகம்,
- வவுனியா, இலங்கை



- மிதுலாகரன் பாலசிங்கம்
- *1992-1995*
- கணிதப்பிரிவு
- வசாவிளான்
- ஆஸ்திரேலியா



- பாலசுப்பிரமணியம் மோகன்
- *1982-1992*
- வடக்கு அளவெட்டி
- அளவெட்டி
- இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- கந்தையா மோகனதாஸ்
- *1982-1995*
- கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை
- ஐக்கிய இராச்சியம்



- திருமதி நந்தினி கணேசலிங்கம் (செல்வி நடராசா நந்தினி)
- *1985-1995*
- கலைப் பிரிவு
- பன்னாலை
- இலங்கை



- திருமதி ஆனந்தகுமார் நாவரசி (செல்வி தவப்பிரகாசம் நாவரசி)
- *1986-1995*
- உயிரியல் பிரிவு
- அளவெட்டி
- யாழ்பாணம், இலங்கை



- இராஜதுரை நிரஞ்சன்
- *1987-1995*
- வர்த்தகப் பிரிவு
- வறுத்தளைவிளான், தெல்லிப்பழை
- பிரான்ஸ்



- உருத்ரமூர்த்தி நிருபானந்தன்
- *1982-1995*
- வர்த்தகப் பிரிவு
- அம்பனை
- இலங்கை



- நிஷாந்தி பார்த்தீபன்
- *1989-1995*
- வர்த்தகப் பிரிவு
- ஐயனார் கலட்டி வீதி , பருத்தித்துறை,
- இலங்கை



- சிவநாதன் பகிதரன்
- மடத்தடி கொல்லங்கலட்டி சிவகுருநாதர் கோயிலடி,
- இலங்கை



- பொன்னுத்துரை பகீரதன்
- *1993-1995*
- வர்த்தகப் பிரிவு
- கட்டுவன் மேற்கு, தெல்லிப்பழை பண்ணாகம் சுழிபுரம், யாழ்பாணம்,
- இலங்கை



- தங்கராஜா பகிதரன்
- *1985-1995*
- கணிதப்பிரிவு
- பன்னாலை
- கனடா



- தம்பிராசா பிரகாசன்
- *1982-1995*
- உயிரியல் பிரிவு
- அளவெட்டி வடக்கு
- இலங்கை



- ஐசாக் பத்மநாதன் பிரதீஸ்
- *1986 -1995*
- வர்த்தகப் பிரிவு
- ஏழாலை வடக்கு
- ஐக்கிய இராச்சியம்



- புஸ்பலதா பொன்னம்பலம்
- *1984-1991*
- கலைப் பிரிவு
- கொல்லங்கலட்டி கோப்பாய் மத்தி,
- இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- இராமநாதன் இரகுராமன்
- *1985-1995*
- கலைப் பிரிவு
- பெரிய விளான், இளவாலை
- பிரான்ஸ்



- திருமதி ராஜசந்திரிகா சுபாகர் (செல்வி ராஜசந்திரிகா இராஜகுலேந்திரன்)
- *1982 -1995*
- கலைப் பிரிவு அளவெட்டி
- கனடா



- கந்தரட்ணம் இராதேயன்
- *1985-1991*
- அளவெட்டி
- ஐக்கிய இராச்சியம்



- சாகல்யா சிவராசா
- *1987-1995*
- உயிரியல் பிரிவு
- வீமன்காமம்
- இலங்கை



- திருமதி சகிலா பிரபாகரன் (செல்வி சகிலா மகாலிங்கம்)
- *1985-1995*
- கணிதப்பிரிவு
- அளவெட்டி வடக்கு
- கனடா



- திருமதி சாந்தகுமாரி சிவசிதம்பரம் (செல்வி சாந்தகுமாரி தர்மலிங்கம்)
- *1985-1995*
- வர்த்தகப் பிரிவு
- கொல்லங்கலட்டி
- சுவிற்சர்லாந்து



- திருமதி சசிகலா ஆனந்தலிங்கம் (செல்வி சசிகலா சண்முகசுந்தரம்)
- *1984-1995*
- வர்த்தகப் பிரிவு
- பன்னாலை, தெல்லிப்பழை
- ஐக்கிய இராச்சியம்



- பூவிலிங்கம் சசிதரன்
- *1992 -1995*
- கணிதப்பிரிவு
- அளவெட்டி தெற்கு, அளவெட்டி
- ஐக்கிய இராச்சியம்



- செல்வஸ்கந்தநாதன் சதீஸ்குமார்
- *1987-1995*
- உயிரியல் பிரிவு
- பன்னாலை, தெல்லிப்பழை
- இலங்கை



- ராசையா சதீஸ்குமார்
- பன்னாலை,
- தெல்லிப்பழை
- இலங்கை



- சோமசுந்தரம் சத்தியசீலன்
- *1993-1995*
- வர்த்தகப் பிரிவு
- கருகம்பானை, காங்கேசன்துறை
- இலங்கை



- சயந்தன் குலசேகரம்
- *1990-1995*
- கனடா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- திருமதி செங்கமலச்செல்வி செந்தூரன் (செல்வி செங்கமலச்செல்வி குமாரசாமி)
- 1993-1995
- உயிரியல் பிரிவு
- முள்ளானை, இளவாலை தாவடி,
- இலங்கை



- சிவபாலன் செந்தில்வாசன்
- 1983-1995
- வர்த்தகப் பிரிவு
- கொல்லங்கலட்டி
- ஐக்கிய இராச்சியம்



- வேலாயுதபிள்ளை செவ்வேள் குமரன்
- 1990-1995
- கலைப் பிரிவு
- கல்முனை, அம்பாறை,
- இலங்கை



- திருமதி சர்மிளா விக்னேஸ்வரன் (செல்வி சுப்பிரமணியம் சர்மிளா)
- 1987-1995
- வர்த்தகப் பிரிவு
- பன்னாலை, தெல்லிப்பழை
- இலங்கை



- சர்மினி சதீஷ்
- 1982-1992
- சம்பியன் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில், யாழ்பாணம்,
- இலங்கை



- திருமதி சிவாஜினி குமாரதாஸ் (செல்வி சிவாஜினி சுந்தரலிங்கம்)
- 1987-1995
- கலைப் பிரிவு
- சிறுவிளான், இளவாலை
- ஜேர்மனி



- திருமதி சிவாஜினி கிரிதரன் (செல்வி சிவாஜினி சிவராஜா)
- 1993-1995
- கலைப் பிரிவு
- கனடா



- பத்மநாதன் சிவகுமார்
- 1993-1995
- வர்த்தகப் பிரிவு



- சிவகுரு சிவரஞ்சிதன்
- 1993-1995
- இளவாலை பிரவுன் வீதி, யாழ்பாணம்,
- இலங்கை



- திருமதி சிவசுபாங்கினி வேந்தன் (செல்வி சிவசுபாங்கினி தர்மலிங்கம்)
- 1983-1990
- மல்லாகம்
- ஐக்கிய இராச்சியம்



- திருமதி சியாமளா செந்தில்நாதன் (செல்வி சியாமளா நாகராஜா)
- 1987-1995
- வர்த்தகப் பிரிவு
- சிறுவிளான், இளவாலை
- இலங்கை



- சின்னையா சுபாஸ்கரன்
- 1982-1995
- அம்பனை, தெல்லிப்பழை
- இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- திருமதி சுகந்தினி கோணேஸ்வரன் (செல்வி பாலசிங்கம் சுகந்தினி)
- *1986-1992*
- பன்னாலை தெல்லிப்பழை
- இலங்கை



- திருமதி சுமங்கலி குமாரஷரூபன் (செல்வி சுமங்கலி செல்வராசா)
- *1985-1995*
- கலைப் பிரிவு
- அழகொல்லை, அளவெட்டி மத்தி, அளவெட்டி.
- இலங்கை



- நாகேந்திரம் சுரேஷ்குமார்
- *1994-1995*
- கணிதப்பிரிவு
- ஐக்கிய அமெரிக்கா



- நவரட்ணம் சுஷாகரன்
- *1993-1995*
- கணிதப்பிரிவு
- மாதகல்
- இலங்கை



- திருமதி சுதாஜினி சிவராசா (செல்வி சுதாஜினி தங்கராசா)
- *1982-1995*
- வர்த்தகப் பிரிவு
- தெல்லிப்பழை மல்லாகம்
- இலங்கை



- சுதர்ஜினி சர்வேஸ்வரன்
- வர்த்தகப் பிரிவு
- முல்லானை, இளவாலை
- கனடா



- திருமதி ரீமா சதீஸ்குமார் (செல்வி ரீமா மாணிக்கவாசகன்)
- *1993-1995*
- வர்த்தகப் பிரிவு
- மாரீசன்கூடல், இளவாலை
- கனடா



- திருமதி தர்சினி எமில்டன் (செல்வி தர்சினி கனகரட்ணம்)
- *1985-1995*
- கலைப் பிரிவு
- தெல்லிப்பழை
- ஐக்கிய இராச்சியம்



- ராஜரட்ணம் தயாபரன்
- *1984-1995*
- உயிரியல் பிரிவு
- கயந்தப்பை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை மல்லாகம்,
- இலங்கை



- தெட்சணாமூர்த்தி தயாபரன்
- கணிதப்பிரிவு
- சித்திரமேழி இளவாலை யாழ்ப்பாணம்
- ஐக்கிய இராச்சியம்



- திருமதி தயாசுகி நவசோதி (செல்வி தயாசுகி பத்மநாதன்)
- *1984-1995*
- வர்த்தகப் பிரிவு
- கயந்தப்பை, கொல்லங்கலட்டி, தெல்லிப்பழை
- ஐக்கிய இராச்சியம்



- திருமதி துளசாஞ்சனி சுதாஜி (செல்வி துளசாஞ்சனி சபாபதி)
- *1982-1995*
- கலைப் பிரிவு
- அம்பனை, தெல்லிப்பழை
- இலங்கை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



- உமா தம்பிஜயா
- *1982-1995*
- உயிரியல் பிரிவு
- அம்பனை, தெல்லிப்பழை
- சிங்கப்பூர்



- நடராசா வைகுந்தன்
- *1982-1995*
- வர்த்தகப் பிரிவு
- வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவில்,
- இலங்கை



- வசந்தராணி திருநாவுக்கரசு
- *1988 -1995*
- வர்த்தகப் பிரிவு
- மாவிட்டபுரம், தெல்லிப்பழை
- இலங்கை



- புண்ணியமூர்த்தி வசந்தஷரூபன்
- *1982-1992*
- பன்னாலை, தெல்லிப்பழை
- பிரான்ஸ்



- பூபாலசிங்கம் வாசுகன்
- *1982-1990*
- அளவெட்டி
- பிரான்ஸ்



- திருமதி வாசுகி யாதவன்
  (செல்வி வாசுகி கணேசதுரை)
- *1986-1995*
- கணிதப்பிரிவு
- சிறுவிளான்
- தென் ஆபிரிக்கா



- திருமதி விஜயா சனாதனன்
  (செல்வி விஜயா நீலகண்டசர்மா)
- *1987-1995.*
- கலைப் பிரிவு
- அளவெட்டி சாவகச்சேரி
- இலங்கை



- வரதன் கேதாரன்
- *1982-1992.*
- செதுக்கப்புலம், தெல்லிப்பழை.
- இலங்கை



- சீலன்



- வெற்றிவேல் விஜயறஞ்சன்
- கிளானை, கொல்லங்கலட்டி. புகையிரத நிலைய வீதி, தெல்லிப்பழை,
- இலங்கை



- திருமதி விமலரஞ்சினி சண்முகராஜா
  (செல்வி விமலரஞ்சினி ஜெயராசா)
- *1982-1991*
- தெல்லிப்பழை
- இலங்கை



- ராசரத்தினம் சசிகுமார்
- *1993-1995*
- கலைப் பிரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஏரம்பமூர்த்தி பகிரதன்
- *1982-1995*
- உயிரியல் பிரிவு
- பன்னாலை
- இலங்கை

- அப்புத்துரை செந்தூரன்
- *1993-1995*
- வர்த்தகப் பிரிவு
- நல்லூர், யாழ்பாணம்
- இலங்கை

- சிவகௌரி வைரவன்
- *1993-1995*
- கருகம்பானை வீதி, கீரிமலை
- இலங்கை

- மகேந்திரவர்மன் வர்மேந்திரன்
- *1987-1995*
- உயிரியல் பிரிவு
- திருகோணமலை,
- இலங்கை

- அப்புத்துரை துஷ்யந்தன்
- கணிதப்பிரிவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மலரின் தலைப்பு – மகாஜனர்கள் 95

  7.8. 2022 – 95ம் ஆண்டு மாணவர்களின் ஆசிரியர் கௌரவிப்பு நிகழ்வை ஒட்டி வெளியிடப்பட்ட மலர்
- வெளியீட்டு உரிமை – மகாஜனா 95ம் ஆண்டு மாணவர்கள்
- அச்சிடப்பட்ட ஆண்டு – july 2022
- வெளியிடப்பட்ட இதழ்களின் தொகை – 230
- பக்கங்கள் – 224
- தொடர்புகளுக்கு – 95mahajanastudent@gmail.com
- மலரில் உள்ள கட்டுரைகள் இணையத்தில் – mahajana95.weebly.com
- இடப்பெயர்வு மகாஜனா மருதனார்மட வரைபடம் – மகாஜன 94ம் ஆண்டு மாணவர்கள்
- தட்டச்சு ஆக்கத்திற்கு பணிபுரிந்தவர்கள் – புஸ்பலதா பொன்னம்பலம், கவிதா நந்தகுமார், ஜமுனா நந்தகுமார், முருகையா கிரிதரன், தங்கராசா கிருஷ்ணராஜா, ராஜசந்திரகா சுபாகர்
- ஓவியங்கள் – V.P. வாசுகன்
- மலர் ஒருங்கமைப்பு – உமா, பாமினி, வாசுகன்
- அச்சகம் – சாவகச்சேரி மிக்கி அச்சகம்


Mickey Printing Specialist



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுபட்ட விபரங்கள் எமது இணையத்தில்..

mahajana95.weebly.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MAHAJANA
95
மாணவர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகாஜனர்கள் 95



திருமதி தையல்நாயகம் துரையப்பாபிள்ளை

வள்ளுவர் ஆண்டு 2053

2022

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org